# கவின் தமிழ் 2004



வடக்கு கிழக்கு மாகாண
தமிழ்மொழித்தின விழா சிறப்பு மலர்

0.344
LK
LIPR

# கவின்தமிழ்

## வடக்கு – கிழக்கு மாகாணம்

# தமிழ் மொழித்தினம்

# 2004

**2004ஆம் ஆண்டு**

**செப்ரெம்பர் 19ஆம் திகதி**

**வடக்கு - கிழக்கு மாகாண**

**கல்வித் திணைக்களம்**

**திருக்கோணமலை**

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | கவின்தமிழ் |
| வகை | : | இலக்கிய ஆக்கங்களின் தொகுப்பு |
| இதழாசிரியர் | : | ந. அனந்தராஜ் |
| வெளியீடு | : | தமிழ்மொழித்தினக் குழு<br>மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடக்கு கிழக்கு மாகாணம் |
| முகப்பு ஓவியம் | : | 5வது உலகத் தமிழாராய்ச்சி<br>மாநாட்டு மலரிலிருந்து |
| பதிப்பு | : | செப்ரெம்பர் - 2004 |
| பக்கங்கள் | : | xviii + 150 |
| பிரதிகள் | : | 500 |
| அச்சுப்பதிப்பு | : | ரெயின்போ மினிலாப்<br>நீதிமன்ற வீதி,<br>திருக்கோணமலை<br>026-2223454, 0777-303938 |
| ISSN | : | 1800-0088 |


முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின்
நினைவாகக் கொண்டாடப்படும் தமிழ் மொழித்திறன்
விருத்தித் தினங்களினூடாக எமது குழந்தைகளின்
மொழி அறிவை விருத்தி செய்வோமாக.

– மலர்க்குழு –



# "கவின்தமிழ் 2004"

## மலர்க்குழு

திரு. வீ. இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

திரு. ந. அனந்தராஜ்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்மொழிப்பிரிவு)
மாகாண நூலக இணைப்பாளர்

திரு. ஏ. ஆர். மைக்கல்
பொப்லெப் மாகாண மேற்பார்வையாளர்

திரு. வி. தங்கவேல்
ஓய்வு பெற்ற அதிபர்

## இதழ் ஆசிரியர்

திரு. ந. அனந்தராஜ்

**முகப்பு ஓவியம்**
5வது உலகத் தமிழாராய்ச்சி மாகாநாட்டு
மலர்க் குழுவினருக்கு எமது நன்றிகள்

# தமிழ்த்தாய் வணக்கம்



நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

-மனோன்மணியம்-

சுந்தரம்பிள்ளை

# வடக்கு கிழக்கு மாகாண
# தமிழ் மொழித்தின விழா-2004

## விழாக் குழுவினர்

**காப்பாளர்**

**திரு. ஆர். தியாகலிங்கம்**

செயலாளர்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,

இளைஞர் விவகார அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாணம்

**தலைவர்**

**திரு. இ. விசாகலிங்கம்**

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்கு கிழக்கு மாகாணம்

**இணைப்பாளர்**

**திரு. வீ. இராசையா**

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்

**செயலாளர்**

**திரு. ந. அனந்தராஜ்**

உதவிக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்

**பொருளாளர்**

**திரு. ஜே.ரி. புவிராஜ்**

பிரதம கணக்காளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினம் - 2004
## விழா சிறப்புற உதவியவர்கள்

**திரு. ரீ. பொன்னம்பலம்**
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்

**திரு. வீ. மகேந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**ஜனாப். யூ.எல். அலியார்**
கல்விப் பணிப்பாளர்

**திருமதி. அ. வேதநாயகம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஏ.விஜயானந்தமூர்த்தி**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. பீ. செல்வின் இரேனியஸ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. கே. முருகுப்பிள்ளை**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.மு. ராதாகிருஸ்ணன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வீ. ஸ்ரீஸ்கந்தராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**செல்வி. அ. கனகசூரியம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. க. நடராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வீ. தங்கவேல்**
ஓய்வுபெற்ற அதிபர்

**திருமதி. எஸ். கணேசலிங்கநாதன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வீ. சௌந்தரராஜன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஏ.ஆர்.மைக்கல்**
"பொப்லெப்" மேற்பார்வையாளர்

**திரு. இ. இராஜேஸ்வரன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**ஜனாபா எம்.எம். ஆலீப்**
நிருவாக உத்தியோகத்தர்

**திரு. ஜீ. ர. பிரான்சிஸ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. பு. தண்டாயுதபாணி**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**செல்வி. உ. சிவஞானம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. எஸ். சந்திரமோகன்**
பிரதம எழுதுநர்

**மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதிப்பிரிவு அலுவலர்கள், எழுதுவினைஞர்கள், தட்டச்சாளர்கள், கணனி இயக்குனர்கள், சாரதிகள், ஊழியர்கள்**

**வடக்குக் கிழக்கு மாகாணக்**
**கல்வி, பண்பாடட்லுவல்கள்,**
**விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்**
**திரு. ஆர். தியாகலிங்கம் அவர்களின்**

# ஆசிச்செய்தி

செழுமை மிக்க வாழும் மொழி என உலக மொழி ஆய்வாளர்களினால் போற்றி வளர்க்கப்படுகின்ற செம்மொழியான தமிழ்மொழியைப் பேசுபவர்கள் என்ற வகையில் நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டும்.

வரலாற்று ரீதியாக பல ஆயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி பெற்று வந்த தமிழ் மொழிக்கான ஆய்வுகள் இன்று ஐரோப்பியர்களினால் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருவது, தமிழ்மொழியின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய பெருமைக்குரிய தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் மாணவர்களிடையே மொழித்திறன் விருத்தியையும், கலைத்திறன் விருத்தியையும் ஒன்றாக வளர்தெடுக்கும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணம் ஆண்டுதோறும் தமிழ்மொழித்திறன் போட்டிகளை நடத்தி வருகின்றது.

இத்தகைய போட்டிகளினூடாக மாணவர்களிடையே வாசிப்புத் திறன் விருத்தியும், ஆக்கத்திறனும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதே எம் ஒவ்வொருவரின் எதிப்பார்ப்புமாகும்.

மாணவர்களிடையே தமிழ்மொழித் திறன் போட்டிகளை நடத்துகின்ற அதே வேளையில், எமது இனத்திற்கே உரித்தான பாரம்பரிய நாட்டுக் கூத்துக் கலைகளை இளம் சந்ததியினரிடையே வளர்த்தெடுக்கும் நோக்கில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நாட்டுக் கூத்துப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய போட்டிகளினூடக மாணவர்களிடையே நற்பண்புகள், குழுவாகச் சேர்ந்து இயங்கும் தன்மை, பொறுமை, போன்ற உயரிய நற்குணங்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

தமிழ்மொழித்தின விழாவும், நாட்டுக்கூத்து விழாவும் சிறப்புற நடந்தேறவும், அது தொடர்பாக வடக்குக் கிழக்கின் பாரம்பரிய, வரலாறுகளை ஆவணப்படுத்தும் வகையில் வெளியிடப்படும் **கவின் தமிழ் - 2004** சிறப்புறவும் எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

# விழாவும் மலரும் சிறக்கட்டும்!

கால்லூரிக்காலத்திலேயே மாணவர்கள் மத்தியில் இனிய தமிழ் மொழியின் சிறப்புக்களைத் தேடித்தெரிந்து கொள்வதை ஊக்குவிக்கவும் மொழிக்கு வளம் சேர்த்த அறிஞர் பெருமக்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தை அதிகரிக்கவும் தமிழ்மொழிதினம் வழிவகுத்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட தமிழ் மொழித்தினம் அண்மைக்காலமாக பல்வகைச் சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகவும் பரந்த அளவில் பலர் பங்கேற்கத்தக்க வகையிலும் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருவதற்கு வடகிழக்கு மாகாணத்தின் பங்ளிப்பும் ஒரு காரணமாகும்.

இவ்வாண்டும் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின விழா சிறப்பாக நடைபெறவும் அதையொட்டிய மலர் சிறப்பாக வெளிவரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத்தருகிறது

விழாவும் மலரும் சிறக்க மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

S. Thillainadarajah

**எஸ். தில்லைநடராசா**
மேலதிக செயலாளர்.
கல்வி அமைச்சு,
இசுருபாயா, பத்தரமுல்லை

# வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. இ.விசாகலிங்கம் அவர்களின்

# ஆசிச்செய்தி

தமிழ் மொழியையும் அவர்களின் கலை, பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாத்து வருவதில் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

நீண்டதொரு பாரம்பரியத்தையும், வரலாற்றையும் கொண்டு விளங்கும் வடக்கு கிழக்கு மாகாணம், தமிழ் பேசும் மக்களின் தாயகமாக விளங்குகின்றது. அந்த வகையில் தமிழ் மொழித்தின விழாவை ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருவது நமக்கெல்லாம் பெருமையைத் தருகின்றது.

தமிழ் மொழிக்கு எடுக்கப்படும் விழாவினூடாக தமிழ் மொழியின் பெருமைகளையும், எமது கலை, பண்பாட்டு விழுமியங்களையும் உலகறியச் செய்வதுடன் இளம் சமுதாயத்தினரிடையே மொழிப்பற்றையும், இனஉணர்வையும் வளர்க்க முடிகின்றது.

மாணவர்கள் மத்தியில் மொழித்திறன், கலைத்திறன் விருத்திப் போட்டிகளை நடத்துவதனூடாக அவர்களிடையே எழுத்தாக்கத்திறன், பேச்சு, ஆக்கம், நடிப்பு, போன்ற திறன்கள் வளர்தெடுக்கப்படுகின்றன.

தமிழ்மொழித் திறன் போட்டிகளை நடத்தும் அதே வேளையில் எமது பாரம்பரியக் கூத்துக் கலையை வளர்தெடுப்பதற்கும், இளம் சந்ததியினரிடையே பாரம்பரியக் கூத்துக் கலையின் மீதான நாட்டத்தை ஏற்படுத்தும் வகையிலும், நாட்டுக் கூத்துப் போட்டிகளையும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் கடந்த பல வருடங்களாக நடத்தி வருகின்றது.

தமிழ்மொழித் திறன் போட்டிகளை மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்தியும், நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தும் செயற்பட்டு வரும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், ஏனைய அனைத்து அலுவலர்கள், வலயக் கல்விப் பணிமனைகளின் அலுவலர்கள் , அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

தமிழ் மொழித்தினம் தொடர்பாக ஆண்டுதோறும் வெளியிடப்படும் **"கவின் தமிழ் - 2004"** சிறப்பு மலரும், தமிழ்மொழித்தின விழாவும், நாட்டுக்கூத்து விழாவும் சிறப்புற எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ. விசாகலிங்கம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல.**

**தமிழ்மொழிப்பிரிவு பணிப்பாளர்**

**திரு. ந. நடராசா அவர்களின்**

# ஆசிச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் மாகாண மட்டத் தமிழ் மொழித்தினப் போட்டி நிகழ்வு சம்பந்தமாக வெளியிடும் 'கவின் தமிழ்' மலருக்கு ஆசியுரை வழங்குவதில் சந்தோசமடைகின்றேன்.

தமிழ்மொழி பல்லாண்டு வளர்ந்து மிளிரும் வடக்கு கிழக்கு மாகாணத்தின், உயரிய வழிவழிப் பண்பாட்டு நிகழ்வு, மாகாண மட்டத்திலே நடைபெறும் தமிழ்மொழித் தினவிழாவாகும். பாடசாலைச் சிறார்களும் அவர்தம் பெற்றோரும் ஒற்றுமையாக இணைந்து, இந்நிகழ்வுகளில் பங்குபற்றுவது மிகவும் சிறப்பானதொரு அம்சமாகும். இன ஒற்றுமையை விதைப்பதற்கு ஈதோர் அன்புநெறி தமிழ்மொழித் திறன்களின் வெளிப்பாடு ஊடாக, இனங்கள் யாவும் இணையும் ஓர் உன்னத நிகழ்வு இது.

தெய்வீகப் புகழ்பெற்ற திருக்கோணமலைத் தலத்திலே, முத்தமிழ்த்திறனை வெளிப்படுத்தும் விழா சிறப்பாக அமைதல் வேண்டும். விழாவினை ஒட்டி மலரவிருக்கும் 'கவின் தமிழ்' மலர் சிறப்புற அமைதல் வேண்டும் என்னும் அவா எமக்கும் உண்டு.

மாகாண மட்டப் போட்டியினையும் விழாவினையும் நடாத்தும் பெரும் பொறுப்பினை வகிக்கும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயலாளர் மாகாண கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், தமிழ்மொழி இணைப்பாளர் மற்றும், ஏனைய அலுவலர்களுக்கும், இவ்விழாச் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரினதும் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை.

வரலாறு, இலக்கியம், கவிநயம் எனப் பல்வேறு சிறப்பம்சங்கள் பொருந்திய "கவின்தமிழ்" சிறப்புற மலர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

# தமிழ் மொழித்தின விழா இணைப்பாளரின் இதயத்திலிருந்து. . . .

தமிழ்மொழியின் பாரம்பரியம், கலாச்சாரம் மேலோங்கும் வகையில் அதன் முத்தமிழ் படைப்புகளால் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் புலம் தமிழுக்கு விழாவெடுக்கின்றது. இவ்விழா பின்வரும் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

- வருடாந்த நிகழ்வுகளில் தமிழ்மொழித்தினம் முதன்மை நிகழ்வாகத் திகழ்கின்றமை.
- பெரும்பாலான பாடசாலைகளும், மாணவர்களும் பங்கு கொள்கின்றமை.
- தமிழின் பெருமைகளை அணிசெய்யும் சிறந்த படைப்புகள் விழாவில் இடம்பெறுகின்றன.
- இளைய தலைமுறையினரை தமிழின் மீது ஈடுபாடு கொ்ணடவர்களாக ஆக்குகின்றமை.
- புதிய சவால்களுக்கு ஏற்ப நவீன இலக்கியப் படைப்புகளுக்கு வழி அமைக்கின்றமை.
- ஆர்வமும், ஆற்றலும் கொண்ட கல்விப்புலம் சார்ந்த சிற்பிகளின் ஆய்வு, திறன் விருத்திக்கு வழி சமர்ப்பிக்கின்றமை.
- தமிழ்மொழி மீது பற்றுக் கொண்ட பெரியோர்களைக் கவர்ந்து உற்சாகப்படுத்துகின்றமை.

சுவாமி விபுலானந்தரின் நினைவோடு சம்பந்தப்பட்ட இவ்விழா இம்முறை திருகோணமலையில் நடைபெறுகின்றது. இவ்மாகாண நிலை விழாவின் சிறப்பிற்கு உதவிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் உட்பட்ட அனைத்து கல்விப்புலம் சார்ந்த/ சாராத பெருமக்களையும் பாராட்டுகின்றேன்.

**வீ. இராசையா,**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்.
திருகோணமலை.

# இதழாசிரியரின் எண்ணத்திலிருந்து...



"தாய் மொழியைப் பழித்தவனைத்
தாய் தடுத்தாலும் விடேன் . . ."

என்று ஒரு கவிஞன் எழுதிச் சென்ற வாக்கியங்கள் தமிழ்மொழி பேசும் ஒவ்வொருவர் அடிமனத்தையும் கிளர்ந்தெழச் செய்யும்.

தமிழ் எமது தாய் மொழி மட்டுமல்ல. எம்மை வாழ வைக்கும் மொழி . . . அனைத்துலகத்தில் தமிழைச் செம் மொழியாக்கி அரசோச்சி எம்மைத் தலைநிமிர வைத்த மொழி என்ற வகையில் தமிழனாகப் பிறந்த நாம் பெருமைப்படாமல் இருக்க முடியாது. குடியிருந்த மனைவிட்டு, ஊர்விட்டு, தேசம் விட்டு, ஊர்நினைவோடு புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களுக்கும், அந்நிய நாடுகளில் காலம் காலமாக வாழ்ந்து வரும் தமிழர்களுக்கும் தாய்நிலமாகவும், தலைநிமிர வைக்கும் மண்ணாகவும் விளங்கும் வடக்கு கிழக்கு மாகாணம் இன்று அதன் தலைநகரிலே தமிழ் விழாவைக் கொண்டாடுகின்றது.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலம் என்று பெருமைப்படுத்தப்படும் வடக்கு கிழக்கு மண்ணிலே தமிழ் ஒலிப்பதற்கும், தமிழ் மணம் கமழவும் உழைத்த கல்வியியலாளர்களையும், தியாகிகளையும் நினைவு கூர்வதனூடாக எதிர்காலத்தில் தமிழுக்காய் உழைப்பதற்கான ஒரு புதிய சந்ததியைத் தோற்றுவிக்க முடியும்.

இத்தகைய வாழும் வளர்மொழியைப் பாடசாலை மட்டத்தில் வளர்க்கும் நோக்குடனேயே, அகில இலங்கை ரீதியாகத் தமிழ் மொழித்தின விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. தமிழ் மொழித் திறன் போட்டிகள் ஒரு குறிப்பிட்ட சில மாணவர்களுக்காகவன்றி பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் பங்குபற்றி தமது மொழித்திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென்பதே தமிழ்மொழித்தின விழாவின் முக்கிய இலக்கு என்பதைப் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர் களும் புரிந்து செயற்பட வேண்டும்.

தமிழ் மொழித்தின விழாவினூடாகப் பின்வரும் குறிக்கோள்கள் நிறைவு செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* மொழி வளர்ச்சி, மனிதப் பண்பாட்டு வளர்ச்சியின் மூல வேர் என்ற உண்மையினை உணர்தல்.
* தமிழ்மொழியின் தனித்துவமான பண்புகளையும், சிறந்த விழுமியங் களையும் அறிதல்.
* எண்ணங்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதற்குத் தமிழ் மொழியினை ஒரு கருவியாகக் கையாளும் திறனைப் பெறுதல்.
* தமிழ் மொழி மூலம் பெறப்படும் மொழித்திறன்களும் ஆக்கத்திறன் களும் புகழோடு பொருளையும் தரவல்லது என்ற உண்மையை உணர்த்தல்.
* உண்மை, நன்மை,அழகு, ஆகிய தெய்வாம்சங்களை மொழித்திறன், கலைத்திறன் ஊடாக வளர்த்துக் கொள்ளல்.
* அகில இலங்கையிலும் வாழ்ந்து வருகின்ற அனைத்து தமிழ் பேசும் பிள்ளைகளினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
* யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பழந்தமிழ்ப் பண்பாட்டினை உணர்ந்து உலகத்தோடு ஒட்டி வாழும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.

* ஒருவர் ஒருவரோடு இணைந்து வாழ்வதற்கு உதவுவதே மொழியென்ற உண்மையினைத் தாம் உணர்வதும் பிறருக்கு உணர்த்துவதும்.

என்ற உயரிய நோக்கங்களைப் பாடசாலை மட்டத்தில் நிறைவு செய்யும் வகையில் பாடசாலை, வலய, மாகாண, தேசிய தமிழ் மொழித்தினங்கள் கொண்டாடப்பட வேண்டும்.

தமிழ்மொழித்தின விழாவை சிறப்பிக்கும் வகையில் வெளியிட்டு வைக்கப்படும் **கவின் தமிழ் இதழ்** வடக்கு கிழக்கின் பாரம்பரியப் பெருமைகளையும், தமிழ் மொழியின் சிறப்பையும் பேண வேண்டும் என்ற இலக்கை நோக்கியே அமைந்துள்ளதை கடந்த கால கவின்தமிழ் இதழ்களைக் கொண்டு புரிந்து கொள்ள முடியும்.

கவின்தமிழ் இதழைச் சிறப்பு வாய்ந்த ஒரு ஆவணக் கருவூலமாக வெளியிட வேண்டுமென்பதற்காக பத்திரிகைகள், வானொலி, சுற்றறிக்கைகள் மூலமாகவும் நேரிலும் ஆக்கங்கள், ஓவியங்களை அனுப்பி வைக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை மதித்து ஆக்கங்களை அனுப்பி வைத்த அறிஞர் பெருமக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளை ஓவியங்களை எவரும் அனுப்பி வைக்காத நிலையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஓவியர்களுக்கான வெறுமை ஏற்பட்டு விட்டதோ என்று எண்ணும் வகையில், எம்மால் கவின்தமிழ் இதழுக்குரிய முகப்பு ஓவியத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அந்த வெறுமையைப் போக்க இம்முறையும், அனைத்துலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சிறப்பு மலரை நாடவேண்டிய நிலையில் அட்டைப்படத்தை அமைக்க வேண்டியதாயிற்று. இதற்காக 5வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழுவினருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழித் திறன் விருத்திப் போட்டிகளும், கிராமியக் கூத்துப் போட்டிகளும் கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டிகளை ஊக்குவிக்கும் வகையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் பாடசாலைகளுக்குரிய பரிசுத்தொகையை மனமுவந்து அளித்த கல்விச் செயலாளர் திரு.ஆர்.தியாகலிங்கம் அவர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலருக்கு அணி செய்யும் வகையில் தமது ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திளையும் வழங்கிய கல்விச் செயலாளர் திரு.ஆர்.தியாகலிங்கம் அவர்களுக்கும், மேலதிகச் செயலாளர் திரு.உடுவை எஸ்.தில்லை நடராஜா அவர்களுக்கும், கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு பணிப்பாளர் திரு.ந.நடராஜா அவர்களுக்கும் எமது நன்றி.

தமிழ்மொழித்தின விழா பல்வேறு மட்டங்களிலும் நடைபெற உழைத்தவர்களுக்கும், மாகாண மட்டத்தில் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பையும், உழைப்பையும் வழங்கிய மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள், கல்வி அமைச்சின் செயலாளர், அலுவலர்கள், வலயக் கல்விப் பணிமனைகளின் பணிப்பாளர்கள், அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் இம்மலரை அழகாகவும், விரைவாகவும் அச்சிட்டுத் தந்த திருக்கோணமலை றெயின்போ மினிலாப் நிறுவனத்தினருக்கும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள தமிழ்மொழித் தினக். குழு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**- ந.அனந்தராஜ் -**
**கவின்தமிழ் இதழ் ஆசிரியர்.**
**செயலாளர், தமிழ்மொழித் தினக் குழு,**

# நாட்டுக்கூத்து விழா - 2004

*காலம்* 18-09-2004 (சனிக்கிழமை) பி.ப. 5.00 மணி

*இடம்* சென் மேரிஸ் கல்லூரி, திருக்கோணமலை
கேட்போர் கூடம்

*தலைமை* திரு. தி. பொன்னம்பலம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணம்

*முதன்மை விருந்தினர்*

திரு. ந. நடராஜா
கல்விப் பணிப்பாளர், தமிழ்மொழிப்பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல

*நிகழ்ச்சிகள்*

நாட்டுக்கூத்துப் போட்டிகளில் வெற்றியீட்டிய நாட்டுக்கூத்துக்கள், சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு.

# தமிழ் மொழித்தின விழா - 2004

*காலம்* 19-09-2004 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப. 5.00 மணி

*இடம்* சென் மேரிஸ் கல்லூரி, திருக்கோணமலை,
கேட்போர் கூடம்

*தலைமை* திரு. இ. விசாகலிங்கம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்

*முதன்மை விருந்தினர்*

திரு. இ. தியாகலிங்கம்
செயலாளர், வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு

*பரிசில் வழங்குவோர்*

திருமதி. ஹேமந்தராணி தியாகலிங்கம்

*நிகழ்ச்சிகள்*

தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறப்பு நிகழ்ச்சிகள், பரிசளிப்பு,
கவின்தமிழ் மலர் வெளியீடு.

# கவின் தமிழை அலங்கரிப்பவை..................


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | கவின்தமிழ் அட்டைப்பட விளக்கம் | | |
| 2. | பெரிய புராணத்தில் பேரன்பு | – சிவசண்முகவடிவேல் | 1 |
| 3. | முத்தமிழ் வளர்த்த விபுலானந்த அடிகள் | – செல்வி. க. விஜிதா (பி.ஏ) | |
| 4. | நாம் வாழும் நாக நாடு | – ஞா. ஜெகநாதன் (பி.ஏ) | 5 |
| 5. | எம்மடியில் துயிலடியோ | – மூதூர் கலைமேகம் | 8 |
| 6. | தமிழ்க்கவிதைக்கு காரைக்காலம்மையாரின் பங்களிப்பு | – ந. பார்த்திபன் (எம்.ஏ) | 9 |
| 7. | கூர்வாள் | – ஆனந்தி (எம்.ஏ) | 12 |
| 8. | சேதுபந்தனம் | – கலாநிதி. சொக்கன் | 15 |
| 9. | நவீன நாடகத்தின் சிறப்பு | – கலாபூஷணம். அரலியூர் ந.சுந்தரம்பிள்ளை | 23 |
| 10. | அகதியின் முற்றத்து மழை | – முகமட் அபார் | 26 |
| 11. | வழிகாட்டல் ஆலோசனைச் சேவையில் ஆரம்ப அமுலாக்கல் திட்டம். | – ப.இராஜேஸ்வரன் | 27 |
| 12. | தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள் | – பேராசிரியர். கா. சிவத்தம்பி | 32 |
| 13. | தாய்மொழிக் கல்வியில் பரிகாரச் செயற்பாடு | – க. முருகதாசன் | 43 |
| 14. | எண்ணங்களின் வண்ணங்கள் | – பரதன் கந்தசாமி (எம். ஏ) | 47 |
| 15. | மழையே மழையே நீ பொழிவாய் | – வி.குணபாலா | 51 |
| 16. | அரங்க விளையாட்டுக்களும் சிறுவர் அரங்குகளும் | – முத்து இராதா கிருஷ்ணன் | 52 |
| 17. | அஞ்சலித்தேன் | – கவிமணி. அ. கௌரிதாசன் | 54 |
| 18. | தேசிய உணர்வை உருவாக்கும் கல்வி முறையிலான கட்டமைப்பு | – வல்வை. ந. அனந்தராஜ் | 55 |
| 19. | வெங்காயத்தின் மகத்துவம் | – கதிரவன் | 75 |
| 20. | எரிந்து போன கிராமம் (கவிதை) | – க. அன்பழகன் | 76 |
| 21. | இஸ்லாமியரின் பாரம்பரியங்களும் வழக்காறுகளும் | – கே.எம்.எம். இக்பால் | 77 |
| 22. | தமிழில் புலம் பெயர் இலக்கியமும் அதன் எதிர்காலமும் | – முல்லைமணி | 80 |
| 23. | மட்டக்களப்பு தமிழரின் பூப்புனித நீராட்டு விழா | – கு. சண்முகம். பி.ஏ. | 83 |

24. கார்த்திகைப்பூ (கவிதை) – வித்தியாசன். பூ.புலேந்திரராஜா 86

25. காக்கைச் சிறகினிலே – தமிழ்மணி அகளங்கன் 87

26. எப்போது விடியும்? (கவிதை) – முகைசிரா முகைதீன் 91

27. மறக்குல மகளிர் அன்றும் இன்றும் – ராணி சீதரன் 92

28. விஜயனின் நாகரிகம் (வரலாற்றுத்தகவல்) – மகாவம்சம் 94

29. தமிழரின் பண்பாட்டை உணர்த்தும் வன்னியின் தொல் பொருட் சான்றுகள்
– கு.மேகநாதன் பி.ஏ. 95

30. நாவல் இலக்கியமும் முஸ்லிம்களும் – ஏ.எஸ். உபைதுல்லா 98

31. நூலகப்பாரம்பரிய சேவை துறையில் முறைமையின் தாக்கம்.
– மைதிலி விசாகரூபன் (MLISC) 103

32. தீர்மானம் (கவிதை) – பு. திலிப்காந்த் 107

33. வள்ளுவர் நோக்கில் பெண் – திருமதி ஆர்.ராமதாஸ் 108

34. இன்னுமேன் மௌனிகளாக (கவிதை) – Dr. தி. சுதர்மன் 112

35. நாட்டார் பழமொழிகள் – நிசல்ல அகமத் 113

36. ஆக்கிரமிப்பு ( கவிதை ) – நல்லை அமிழ்தன் 118

37. பிறவாமை (கவிதை) – நெல்லை மகேஸ்வரி 118

38. தம்பலகமம் தந்த மாபெரும் கலைஞர்
க. வேலாயுதம் – சித்தி அமரசிங்கம் 119

**மாணவர் பக்கம்** 131

39. எண்ணத்தடாகத்தில் (கவிதை பிரிவு 4) – செல்வி. க.அனுஷானி 132

40. சமூக முன்னேற்றத்தில் ஊடகவியலாளரின் பங்கு (கட்டுரை பிரிவு – 4)
– செல்வி. வா. தர்மிஷா 134

41. மரணிக்கும் மனித நேயங்கள் (கவிதை பிரிவு – 5) – செல்வி.மு. ரசீத் ஜுஸ்லா 136

42. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு (கட்டுரை பிரிவு 2) 138
பிறருக்கு உதவிசெய் (கடிதம்) – செல்வி. எச். இஸ்ஸத் சமிகா 139

43. கல்லறைக்காவியம் (சிறுகதை) (பிரிவு – 5) – ரா.ப.அருஸ் 140

44. கணனி இன்றேல்...........உலகம்? (கட்டுரை பிரிவு 3) செல்வி.ப. யசிந்தா 144
2003 மகாணநிலைத் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் 147
2004 தேசிய நிலைத் தமிழ்த் தினப்போட்டி முடிவுகள் 149



வடக்குக் கிழக்கு மாகாண தமிழ்மொழித்திறன் போட்டிகளும், நாட்டுக்கூத்துப் போட்டிகளும், இருநாள் பெரு விழாக்களும் சிறப்புற நடைபெற தம் உடல் உழைப்பை மனமுவந்து அளித்து எம்முடன் தோள் கொடுத்து உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி.

என்றும் உங்களுடன்.
தமிழ் மொழித்தினக்குழு
வடக்கு கிழக்கு மாகாணம்.




# கவின்தமிழ் அட்டைப்பட விளக்கம்

ஆபத்து நேரங்களில் உதவுவதில் தோழனும், தம்பியும் கூடவே துணை நிற்பார்கள் என்பது வரலாற்று ரீதியாக, வாழ்வியலினூடாகக் கண்டறிந்த உண்மை. இதனை ஒரு திரைப்படத்தின் உரையாடல் ஒன்று, மிக அற்புதமாக எடுத்துக் கூறுகின்றது.

"சீர் கொண்டு வந்தால் சகோதரி
கொண்டு வந்தாலும், வராவிட்டாலும் தாய்
கொலையும் செய்வாள் பத்தினி
உயிர் காப்பான் தோழன்"

தூக்குத் தூக்கி திரைப்படத்தினூடாகச் சொல்லப்பட்ட இந்தக் கருத்தினூடாக தோழனின் பெருமை பேசப்படுகின்றது.

அன்று இராமாயணக் காவியத்தில் இராமன், சிற்றன்னை கைகேயியினால் காடாள அனுப்பி வைக்க, துணை இழந்து தவித்த போது இராமனுக்குத் தோள் கொடுத்து உதவிய குகனை இராமன் "தோழா" என்று முதலில் விழித்து, அதன் பின்னரே "நீ என் தம்பி" என்று சொந்தம் கொண்டாடுவதையும், "எனது மனைவி உனக்கு மைத்துனி" என்று உறவு கொண்டாடுவதையும் கம்பராமாயணப் பாடலினூடாகப் பின்வருமாறு மிக அழகாக எடுத்துக் கூறப்படுகிறது.

**"நீ தோழன்;**
**எம்பி நின் தம்பி !**
**மங்கை கொழுந்தி"** என இராம பிரானால் உறவு கொள்ளப்பட்ட, ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடன் குகன், அந்த மனமகிழ்வில் புதிய வலிமை உடலிலும், உளப் புழகாங்கிதம் முகத்திலும் ஒன்று சேரத் தன் ஓடத்தை வேகமாகச் செலுத்தத் தொடங்கினான். அந்தக் காட்சி முகப்பு ஓவியமாகக் "கவின் தமிழை" அலங்கரிக்கின்றது.

குகனின் சிறப்பைக் காட்டும் வகையில் கம்பர், தனது இராமாயணத்தின் பாடல் ஒன்றின் மூலம், பின்வருமாறு புலப்படுத்துகின்றார்.

**"காழம் இட்ட குறங்கினன், கங்கையின்**
**ஆழம் இட்ட நெடுமையினாள், அரை**
**தாழ விட்ட செந்தோலன், தயங்குறச்**
**சூழ விட்ட தொடுபுலி வாலினான்.**

(கம்ப: அயோ.குகப்.4)

ஆம்.... நாம் எப்பொழுதும் நல்ல நண்பர்களைத் தெரிவு செய்ய வேண்டும்..... அது எங்கள் வாழ்நாள் வரை நிலைத்து நிற்குமல்லவா?

# வாழ்க தமிழ்மொழி

-நெடுந்தீவு மகேஷ்-

வாழ்க எழில்நிறை வையக மெங்கணும்
வழங்கிடு நற்றமிழே.

வளர்கலை வீரம் விளங்கிட நல்லறம்
வளர்த்திடு தண்மொழியே.

மூழ்பகை தீய்ந்து முறைமுறை நற்பணி
முயன்றுழை செந்தமிழே.

நீள்கஇன் னன்பு நிலைக்க ஒளிதரு
நீதியின் தாய்மொழியே.

தூள்படத் தொல்லை தொடரிடர் துன்பம்
தொலைத்திட வாழ்மொழியே.

யாழ்வன்னி திருமலைமட்டு அம்பாறை
மலையகம் ஆள்மொழியே.

வாழ்கநின் தொன்மை வசந்தம் இளமைசீர்
வளந்தரு தேன்மொழியே.

சூழ்கடல் ஆர்க்கச் சுதந்திரம் பூக்க
சுடர்க தமிழ்மொழியே.



# பெரிய புராணத்தில் பேரன்பு

சிவ. சண்முகவடிவேல்.
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

பெரியபுராணம் முடிவற்ற அன்பிற்கு முடிவு காட்டும் பெருமையுடையது. அன்பு அறத்தோடு அமைவது அல்ல. மனத்திற்கும் துணை நிற்பது. உலகம் அன்பையே அடிப்படையாகக் கொண்டு உருளுகின்றது. அந்த அன்பு உயிர்ப்புள்ள, உயிர்ப்பற்ற பொருள் அனைத்திலும் ஊடுருவி நிற்பது.

அன்பு தாயிடத்தில் பிறப்பது. தந்தையிடத்தில் செலுத்தப்படுவது. உற்றார், உறவினர், நண்பர், அயலவர், பகைவர், உலகத்தவர் அனைத்து உயிர்களிடத்திலும் ஊடுருவி நிற்பது. அன்பிற்கு நண்பர்கள் பகைவர் என்ற வேறுபாடு கிடையாது. ஒருவன் முதலில் தன்னிடத்தில் அன்பு வைக்க வேண்டும். தன்னிடத்தில் அன்பு செலுத்தாத ஒருவன், பிறர்மாட்டு அன்பு வைக்காதவன் பிறரிடத்தில் அன்பு செலுத்துவேன் என்பது பச்சைப் பொய்யாகும். ஒருவனுடைய உள்ளமே அன்பின் பிறப்பிடம் எனலாம். அன்பின் வெளிப்பாடு கண்ணீர். அன்பின் வரைவிலக்கணம் அறிவின் நெகிழ்ச்சி.

பெரியபுராணம் பேசும் அன்பு பேரன்பு; ஆராஅன்பு; இறவாத அன்பு. அந்த அன்பிற்கு உலகியல் அன்பு சமானமாக மாட்டாது. அது தன்னை மறந்து தலைவனான சிவபிரானிடத்தில் பற்றும் அன்பு. சிவபிரான் பற்றற்றவர். ஆன்மாவும் தன்னிடத்திலுள்ள பற்றுக்களையும் உலகத்தில் வைத்த பற்றுக்களையும் உதறிவிட்டு இறை அன்பு ஒன்றையே பற்றிக்கொள்ளும் அன்பு. அந்த அன்பு இன்பத்திலோ அல்லது துன்பத்திலோ பலனை எதிர்பாராத அன்பு. காரைக்காலம்மையார் அத்தூய அன்பை அற்புதத் திருவந்தாதியில் வெளிப்படுத்துவார்:

''இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பருக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பரு தென்னெஞ் சவர்க்கு.''

காரைக்காலம்மையாரின் தூய அன்பு, இறைவன் கருணை புரிந்தாலும் புரியாதொழியினும் பரத்தைப் பற்றிய பற்றறா அன்பு. அந்த மேலான அன்பு உருவாவதற்கு உண்மைத் தெளிவு உதயமாக வேண்டும்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட மணிவாசகனார் தமது இறை அன்பைப் பொய் என்பார்.

யானே பொய், என் நெஞ்சம் பொய், என் அன்பும் பொய் என்றும், பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் என்றும் பொய்யன்பினை மெய்மையாக எடுத்து விளம்புவார்.

அன்பை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று பொய் அன்பு. மற்றது மெய்யன்பு, பொய்யன்பு மெய்யன்பு போலத் தோன்றினாலும் அது உண்மையாகாது. அது உலகியல்

வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஒன்றே. அந்த அன்பு ஒரு தேவையைக் கருதிச் செலுத்தப்படுவது. தேவை நிறைவேற அந்த அன்பும் தானாக அகன்றுவிடும் பொய்யன்பு அழியும் தன்மையுடையது.

மெய்யன்பு அழிவில்லாதது எந்த வேளையிலும் எந்த நெருக்கடியிலும் தன்னிலை தளராது சுடர்வது. காரண காரிய தேவையைக் கடந்தது. கடவுளிடத்தில் களங்கமின்றிச் செலுத்தப்படும் அன்பு. அந்த அன்பின் வளர்ச்சியை, 'பேரா அன்பு பெருக்கினார்' என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடுவார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பஞ்சப் புலன்களால் பற்றப்படாத அன்பு. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட அன்பு. உலகப்பற்று எதுவாக இருந்தாலும் அவற்றை எல்லாம் உதறி எறியத்தக்க அன்பு. இறைவனுடைய திருவடி ஒன்றையே பற்றுக் கோடாகப் பற்றும் மெய்யன்பு அது.

மெய்யன்பு மெயப்பொருளிடத்தில் இரண்டறக்கலக்கும். என்றும் அழிவில் வீடுபேறு அடைந்து இன்புற்றிருக்கும். தூய்மை ஒன்றைத் தவிர இன்பதுன்ப கலப்பற்ற அன்பு. உலகப் பற்று, பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு இறை அன்பு ஒன்றையே ஆராதிப்பதால் ஆரா அன்பு. அந்த அன்பின் தலைப்பட்டவர்க்கு மண், பெண், பொன், ஆசைகள் எல்லாம் தூசாகி விடும். திருநாவுக்கரசு நாயனார் பூம்புகலூரில் மணிகளைக் கல்லோடு அள்ளிக் குளத்தில் எறிந்தார். தேவப் பெண்களுடைய சிருங்காரங்கள் நாயனார் எதிரில் செயலிழந்தன. வானக மின்னுக் கொடிகள் போன்று வந்த வனிதையர்கள் வாகீசரை வணங்கிச் சென்றார்கள். முற்றிப் பழுத்த சிவ அன்பின் முன் அறமாக இருந்தாலும் மறமாக இருந்தாலும் எதிர் நிற்க இயலாது.

சண்டேசுவரர் தயாபரனிடத்தில் கொண்ட தூய அன்பினால் தந்தையினுடைய தாளைச் சாய்த்துவிட்டார். மகாதேவரிடத்தில் வைத்த மாறா அன்பினால் இயற்பகையார் மகிழ்ச்சிக்குரிய மனைவியாரையே மாதவருக்கு மகிழ்ந்து கொடுத்தார்.

தில்லைக்கூத்தப் பிரானிடத்தில் வைத்த சீரிய அன்பால், நாயனாள் திருநீல கண்ட ஆணையைப் போற்றி மனையாள் உடனிருந்தும் இளமையைத் துறந்தார். கடவுளிடத்தில் கொண்ட களங்கமற்ற காதலால் காளத்தி அப்பருக்குக் கண் இடந்து அப்பினார் கண்ணப்பர் என்னும் திண்ணனார்.

மெய்ப்பொருளிடத்தில் வைத்த மெய்க் காதலால் உயிருக்கு உலைவு வந்த போதும் சிவசின்னத்தைத் தாங்கியவனுக்கு உயிர் அளித்தார், மலாடர் தேச மன்னவனார்.

தலையாய் தம்பெருமான் தாளில் தலைப்பட்ட தலையாய அன்பால் தனயன் உயிரைத் தடியத் துணிந்தார் சிறுத்தொண்டர்.

அரசனிடத்தில் வைத்த அயரா அன்பினால் அரசமாதேவியின் கைதடிந்தார் காவலர் கழற்சிங்கர். கோட்புரியார் படியமுதுக்கான நெல்லை உணவாக்கிக் கொண்ட உறவினர் சுற்றத்தவரை எல்லாம் வாள் கொண்டு வலி இழக்கச் செய்தார்.

இவைபோல்வன தூய சிவ அன்பின் சிறப்பால் உயிரோவியமான உண்மை வரலாற்றுச் செய்திகளைச் சேக்கிழார் பொங்கு தமிழால் பெரிய புராணத்தில் போற்றியிருப்பதைக் காணலாம். களிக்கலாம். கசிந்து கண்ணீர் விடலாம்.

அவை சிவ அன்பின் தூய்மையையும், உலகியல் அன்பின் பொய்மையையும் என்றும் பறை சாற்றி நிற்பன.

பொய் அன்பு தற்காலிக இன்பத்தைத் தரமுயல்வன. மெய்அன்பு அழிவில்லாத வீட்டின்பத்தை அளிக்க வல்லன. பொய் அன்பு உடலோடு ஒடுங்கி விடும். மெய் அன்பு என்றும் நின்று நிலாவுவது.

பொய் அன்பு உலகிற்கு நலம் பயவாது, மெய் அன்பு உலகை வாழ்விக்கும். பஞ்ச பூதங்களைப் பேணுவன. அதனால் இயற்கையின் சீற்றம் தணிக்கப்படும்.

வயல் விளையும், வானம் மழை தரும், காமம், குரோதம், கோபம் தலை தூக்க அஞ்சும், பொங்கு தமிழ் புகழ் பெறும். சைவம் தழைக்கும். தீமை ஆழும் நன்மை ஆளும்.

மிடி என்று ஒரு பாவி வெளிப்படாது.

இவை போல அனேக நன்மைகளை நல்கும். அவையாவும் இறைவனிடத்தில் செலுத்தப்படும் ஆரா அன்பு அருளவல்லது. அவ்வன்பை இறவாத அன்பு என்று பெரிய புராணம் பொங்கு தமிழால் போற்றும். தமிழ் மொழியின் சிறப்பு அன்பு. அந்த அன்பு இதுவேயாகும்.

பெரிய புராணம் உலகிற்கு உணர்த்தும் அரும் பெரும் உண்மைகளில் 'பேரன்பு தலையானது' என்றால் அது மிகையாகாது.

''ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ

**(பெரிய புராணம்)**

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமும்
குறையும் இல்லாமல், சம்பளத்தையும்
வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக்
கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே
நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல்,
சோர்வு கொள்ளாமல், அவை நமக்கு அறிவு
கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும்
மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெரும்
தீங்கு செய்தாலும் வசைமொழி கூறாமல்
உங்கள் அறியாமையைக் கண்டு
நகைக்காமல் கற்பிப்பனவும் நூல்களே.

- றிசேட். டி. பியூறி -

# முத்தமிழ் வளர்த்த விபுலானந்த அடிகள்



இயற்கை வளம் நிறைந்திருக்கும் ஈழத்திருநாட்டின் கண்
தயக்கமின்றி தமிழுக்காய் உழைத்தவர்கள் வரிசையிலே
செயற்கரிய செயற்றிறனால் நூண்மான் நுழைபுலனால்
வியப்புற விளங்கியவர் விபுலானந்த அடிகளார்.

மட்டுரும் பூம்பொழில்சேர் மாண்புமலி பெரும்பதியாம்
மெட்டின்றி மீன்பாடும் மேன்மை மலி நல்லூராம்
மட்டக்களப்பதனில் காரேறு மூதூரில்
சுட்டெரிக்கும் சூரியனின் சுடரொளியாய் வந்துதித்தார்.

சமயநெறி பேணிநின்ற சாமித்தம்பியாரும்
தமக்கன வாழ்ந்திடாக் கண்ணம்மைதானும்
நமக்குக் கிடைத்திட்ட நற்பேறு இதுவென்று
நாமம் சூட்டினரே மயில்வாகனம் என்று.

இங்குற்ற அனைவரிலும் முதலாம் இலங்கையராய்
பங்குகொண்டு சித்திபெற்றார் பண்டிதராய்ப் பெயர் பெற்றார்
ஆங்கில மொழியிலும் ஆசிரியப் பயிற்சி பெற்றார்
இங்கிலாந்து கலைக்கழக விஞ்ஞான மாணியானார்.

ஆசானாய் அதிபராய் அறிவுப்பணியாற்றிவிட்டு
ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து இரண்டுதனில்
ஆசைகள் தனைத்துறந்து அசையாத மனத்துடன்
ஆன்மீகப் பணிநாடி மயிலாப்பூர் சென்றிட்டார்.

இராமகிருஷ்ண மடத்தினிலே சீடனாகச் சேர்ந்திட்டார்
பிரபோத சைதன்யர் என்ற பெயர் பெற்றிட்டார்
உள்ளத்தை உள்ளன்போடு அர்ப்பணித்து வாழ்தலே
உயரிய வாழ்வாம் என்றுணர்த்திட்டார் அனைவருக்கும்.

இசைக்கொரு யாழ்நூல் இயற்றியும் அவர் வைத்தார்
திசைக்கொரு கலைக்கூடம் தான் அமைத்திட்டார்
அசைகின்ற இசைத்தமிழாம் நாடகத் தமிழையும்
வசையின்றி ஒரு நூலில் உலகிற்குத் தந்திட்டார்.

முத்தமிழ் வித்தகராய் முதுபெரும் கலைஞராய்
தத்துவத் தமிழ்மகளின் தவத்திரு மகன் தானாய்
இத்தரணி போற்றிட இசைவாழ்த்த மொழிவாழ்த்த
வித்துடலாய்த் தமை விதைத்த விபுலானந்தர் புகழ் வாழ்க.

செல்வி.விஜிதா கனகராஜா (பீ.ஏ)
ஆசிரியை,
தி/கும்புறுபிட்டி மெ.மி.த.க. பாடசாலை,
திருக்கோணமலை.

இலங்கையின் வரலாற்று மரபு பற்றிய கோட்பாட்டின் படி, எமது பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர் சமூகத்தினரே கொள்ளப்படுகின்றனர். இவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே இங்கு வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இலங்கையில் குறுணிக்கற்கால யுகத்தினை முடிவுக்குக் கொணர்ந்து, பெருங்கற்கால யுகத்தினை தொடக்கி வைத்த மக்கள் நாகர்கள் என 'சிரான் தெரணியகல' போன்ற தொல்லியலாளர்கள் கூறுகின்றனர்.

கி.மு. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, விந்தியமலைக்குத் தெற்கே 'இலெமூரியாக்கண்டம்' என்ற மாபெரும் நிலப்பரப்பு இருந்தது. இக்கண்டத்தின் துணைக் கண்டமாக குமரிக்கண்டம் விளங்கியது. இலெமூரியாக் கண்டத்தின் தென் எல்லையாகத் தென் துருவமும், மேற்கு எல்லையாக ஆபிரிக்காவும், கிழக்கு எல்லையாகக் கிழக்கிந்திய தீவுகளும், தென் கிழக்கு எல்லையாக அவுஸ்திரேலியாவும் விளங்கின.

இக்கண்டத்தின் மத்திய பகுதிகளில் இயக்கர் சமூகத்தினரும், ஏனைய பகுதிகளில் பெரும்பான்மையாக நாகர் சமூகத்தினரும் வாழ்ந்தனர். இவர்கள் தமக்கெனப் பல சிற்றரசுகளை ஏற்படுத்தி, தமக்கே உரித்தான திராவிட கலாசாரத்தில் மேலோங்கி நின்றனர்.

காலத்திற்குக் காலம் ஏற்பட்ட கடல்கோள்களினால் இக்கண்டத்தின் நிலப்பரப்பு பிரிவடையத் தொடங்கியது. 'டெனற்' என்ற மண்ணியலாளரின் கூற்றுப்படி, கி.மு. 2378 இல் ஏற்பட்ட கடல் கோளினால் இலங்கை இந்தியாவில் இருந்து ஒரு நிலத்திணிவாக, அதில் வாழ்ந்த பூர்வீக மக்களுடனே, பிரிந்தது எனக் கூறப்படுகிறது.

# நாம் வாழும் நாகநாடு

ஞா. ஜெகநாதன் B.A. Dip in Edn.
அதிபர், வ/பிறமண்டு வித்தியாலயம்,
தாண்டிக்குளம்
வவுனியா

எனவே, எமது பூர்வீகத்தவர்கள் இன்னொரு நாட்டில் இருந்து கடல்கடந்து இங்கு வரவில்லை; இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்க வரவில்லை; அடிமைகளாக வரவில்லை; **தமது சொந்த மண்ணுடனேயே பிரிந்து வந்தனர்; அன்று முதல் இன்றும் தமது தாயக மண்ணிலேயே வாழ்ந்தும் வருகின்றனர்.** இதனால், நாம் வரலாற்று ரீதியாகப் பெருமை அடைகிறோம்.

கி.மு. 306 அளவில் ஏற்பட்ட கடல்கோளினால் இலங்கையின் 11/12 பகுதி கடலுள் தாண்டது. இந்த அழிவுகளின் போதே கோணேசர் ஆலயமும் கடலுள் அமிழ்ந்து விட்டது என ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர். தற்போதைய இலங்கையைப் போன்று பத்துப் பன்னிரண்டு மடங்கு பெரிய அளவிலான இலங்கைப் பட்டத்தை, சீன தேசத்தின் மக்கோ மாநிலத்தில் உள்ள ஒரு தொல் பொருட்காட்சிச் சாலையில் நான் நேரில் பார்த்துப் படமும் எடுத்து வந்துள்ளேன். மறைந்திருக்கும் பெருமைகளை வெளிக்கொணரும் பொறுப்பு நமது வருங்கால சந்ததியினரின் கைகளிலேயே உள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும் பல நாக அரசுகள் இருந்ததாக வரலாறுகள் உண்டு. இயக்கர் குல மாமன்னன் இராவணேசன் மாதோட்ட மாநகர் நாக இளவரசியாகிய மண்டோதரியை மணந்தான். இயக்கரும் நாகரும் திராவிட மொழி பேசிய, சைவ சமயத்தைத்

தழுவிய சமூகத்தினர் ஆவர். புத்தபிரான் நாகர்குல இளவரசன் என 'ஒல்ட்காம்' என்ற ஆய்வாளர் கூறியுள்ளார். நாகரின் தாய்மொழி தமிழ்! ஈழநாட்டுத் தமிழர்கள் நாகர்குலத்தைச் சேர்ந்தவர்கள்.

கி.மு. 6ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளில் நாக அரசுகள் இருந்தன. மணிபல்லவம், மாதோட்டம், பூநகரி, களணி, திருகோணமலை போன்ற இடங்களில் நாக அரசுகளின் தொல்பொருட் சான்றுகள் உள்ளன. இச்சான்றுகள், நாகர்களின் மொழி தமிழ் எனவும், சமயம் சைவம் எனவும் நிரூபித்து நிற்கின்றன.

அத்துடன், இந்தியாவில் உள்ள பெருங்கல் பண்பாட்டுக் கால எச்சங்களைப் போன்ற தொல் பொருட்சான்றுகள் இன்றும் இலங்கையின் வடபகுதியில் உள்ள மாதோட்டம், சின்னத்தம்பனை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் போது, பெருங்கல் பண்பாட்டுக் காலத்தின் பின்பு ஏற்பட்ட கடல் கோளினாலேயே இலங்கை இந்தியாவை விட்டுப் பிரிந்திருக்கிறது என ஆய்வாளர்கள் ஏற்றுள்ளனர்.

வரலாற்றுக்கு முந்திய காலம் தொடக்கம் இலெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளாகிய நாகர்கள் ஆதியில் பேசிய மொழி 'எழுமொழி' என மொழியியல் ஆராய்ச்சியாளர் டாக்டர் சேவியர் கூறுகிறார். இது ஆதித் திராவிட மொழியாகும். (Proto Dravidian Language) இம்மொழி கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் செந்தமிழ் ஆகியது. எழு மொழியானது பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுடன் கலந்து சிங்கள மொழி உருவாகிற்று. எழு மொழி பேசிய மக்கள் வாழ்ந்த நாடு 'எழுஅகம்' என அழைக்கப்பட்டது. அப்பெயர் ''ஈழகம்'' எனவும்'' பின்னர் 'ஈழம்' எனவும் மாறியது. எழு மொழி பேசிய மன்னர்களின் வழித்தோன்றலாக வந்தவனே 'எழுஆளன்' எனப்பட்ட எல்லாளன் ஆவான்.

கி.பி. 785இல் யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி தொடங்கும் வரை இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நாக சிற்றரசுகள் நிலை பெற்றிருந்தன. அதுவுமின்றி, தொலமியால் வரையப்பட்ட இலங்கைப் படத்தில் நாகர்களின் நாகநாடு குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கே மணிபல்லவமும், கிழக்கே மட்டக்களப்பும், தெற்கே மகவிலச்சிய (மதவாச்சி), கடம்ப நதி போன்றனவும், மேற்கே புத்தளமும் நாகநாட்டின் எல்லைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நாக நாட்டில் அரசாண்ட இரு சிற்றரசர்களின் பிணக்குகளைத் தீர்ப்பதற்காகப் புத்தபிரான் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

ஆதியில் இருந்து இயக்கரும் நாகரும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர்; இடையிடையே மோதலிலும் ஈடுபட்டனர். கி.மு. 5ம் நூற்றாண்டில், விஜயன் இலங்கைக்கு வந்தபோது, இலங்கை தாமிரபரிணி, நாகநாடு என இரு பிரிவுகளாக இருந்தது. விஜயன் நாடுகடத்தப்பட்டவனாக வந்து, சூழ்ச்சியால் தாமிரபரிணி மன்னனைக் கொன்று தாமிரபரிணியை ஆக்கிரமித்துக் கொண்டான்.

புராண, இதிகாச, இலக்கியச் சான்றுகளின் படி, அந்நிய ஆக்கிரமிப்பு, ஊடுருவல்களில் இராம இராவண யுத்தம், அர்ச்சுனன் அல்லிராணியைக் கவர்தல், ஸ்கந்தன் வள்ளியைக் கவர்தல் என்பனவும் நடந்தேறியுள்ளன.

விஜயனின் ஆட்சி தென்னிலங்கையில் ஏற்பட்ட பின்பு இயக்கர்களுடன் ஆரியக்கலப்பு ஏற்பட்டது. பௌத்தம் இலங்கையில் பரவிய போது நாகர்களும் பௌத்தத்தைத் தழுவினர். புத்தபிரானும் நாகர்குலத்தைச் சேர்ந்தவரானபடியால் நாக அரசர்கள் அதை ஏற்றுக் கொண்டனர்.

சோழர் ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டபோது சைவம் தழைத்தோங்கியது. நாக சிற்றரசுகளின் பலம் குன்றின. எனினும், மணிபல்லவம், மட்டக்களப்பு, புத்தளம்

தவிர்ந்த நாகநாட்டின் ஏனைய பகுதிகளில் நாக சிற்றரசுகள் நிலைபெற்றிருந்தன.

கி.மு. 1ஆம் நூற்றாண்டில் நாகநாட்டின் மீது தக்கணதேசம் எனப்பட்ட இலங்கையின் தென்பகுதி அரசர்களின் முதலாவது படையெடுப்பு நடைபெற்றது. இதுவே நாகநாட்டின் மீதான முதலாவது ஆக்கிரமிப்புப் போராகும். அதன்பின், கி.பி. 1ஆம், 2ஆம், 3ஆம், 7ஆம் நூற்றாண்டுகளிலும் உத்தரதேசம் எனப்பட்ட நாகநாட்டின் மீது தென்னாட்டு ஆக்கிரமிப்புக்கள் இடம் பெற்றன. இக்காலத்தில், வடபகுதியின் ஊர்ப்பெயர்கள் அநேகமாகச் சிங்கள நாமம் பூண்டன. ஆயினும், நாகநாட்டின் மையப்பகுதி ஆக்கிரமிப்புக்கு உட்படவில்லை.

கி.மு. 50ம் ஆண்டு தொடக்கம் கி.பி. 100ம் ஆண்டுவரையான காலங்களில் இந்தியாவில் இருந்து வன்னியர்கள் இங்கு வந்து குடியேறினர். கி.பி. 1070 களில் நாகநாட்டில் வன்னியராட்சி ஏற்பட்டது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் தவிர்ந்த நாகநாட்டின் ஏனைய பகுதிகள் 'வன்னிநாடு' என அழைக்கப்பட்டது. நாகர்களும் வன்னியர்களும் ஒன்றிணைந்து, எதுவித ஆக்கிரமிப்புக்களுக்கும் உட்படாமல் கி.பி. 1803 வரை, 'அடங்காப்பற்று' என்ற பெயருடன் வன்னிநாட்டை ஆண்டனர். கி.பி. 1811ல், வன்னி மன்னன் பண்டாரவன்னியன் இறந்த பின்பு, வன்னிநாடு ஆங்கிலேயரால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஏற்கனவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரால் ஆக்கிரமிக்கப்பட்ட நாகநாட்டின் ஏனைய அரசுகளும், வன்னியரசும் நிருவாக வசதிகளுக்காக தக்கண தேசத்துடன் இணைக்கப்பட்டன.

தக்கணதேசத்தையும், உத்தரதேசத்தையும் ஆக்கிரமித்த அந்நியர் 1948இல் நாட்டைவிட்டு வெளியேறினர். இந்நிகழ்வு சுதந்திரம் எனக்கூறப்படுகிறது. அடிமையாக இருப்பவர்களுக்குக் கிடைக்கும் விடுதலையே சுதந்திரம் என அரசியல் தத்துவ-ஞானிகள் கூறுவர். மனிதனின் மன உணர்வுகளும் வாழ்க்கை முறைகளும் ஒன்றுபட்டுள்ள நிலைமை அடிமை நிலை ஆகாது. இறைமையுள்ள ஒரு நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டவர்கள் நாட்டைச் சுரண்டிக் கொண்டு வெளியேறும் நிகழ்வானது சுதந்திரம் வழங்குதல் ஆகாது.

இதன்படி நோக்கின், இன்று **ஈழநாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வரும் தமிழர்கள் தமது சொந்த நாட்டிலேயே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தம்மைத் தாமே ஆண்டு, வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஒரு போதும் அடிமைகளாக மாறியதுமில்லை. சுதந்திரம் பெற வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கவுமில்லை.**

இதனால், ஈழநாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசம் தனித்தன்மைவாய்ந்த புகழ்பூத்த பூமியாக மிளிர்கிறது. அத்துடன், இப்பிரதேசத்தின் பிரசைகள் பெருமையடையக் கூடிய, பாரம்பரிய, செழுமைமிகு தமிழ் கலாசாரத்தையும், தொன்மை மிகு வரலாற்றையும் கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். ஆயினும், நில ஆக்கிரமிப்பை அகற்றுவதும், அந்நிய கலாசாரத்தின் மோகப் பிடியில் இருந்து மீள்வதும் நம்முன் இன்றுள்ள பாரிய சவால்களாகும்.

**<u>உசாத்துணை நூல்கள்</u>**

1. பண்டைய தமிழகம் - பேராசிரியர். சி.க. சிற்றம்பலம்
2. நாம் தமிழர் - பொ. சங்கரப்பிள்ளை
3. ஈழத்தவர் வரலாறு - கலாநிதி. க. குணராசா
4. இலங்கை வரலாறு - செ. கிருஷ்ணராசா
5. பண்டாரவன்னியன் விழா மலர் - 1982
6. குளக்கோட்டன் தரிசனம்- க. தங்கேஸ்வரி
7. மருதநிலா - இலக்கிய விழா மலர் - 1996, வடக்கு கிழக்கு மாகாணம்.

# எம்மடியில் துயிலடியோ!

எத்திக்கும் புகழ் மணக்கும்
ஏற்ற மிகு தமிழணங்கே
தித்திக்கும் தமிழ்ச் சுவையால்
தேகமெல்லாம் மகிழுதடி!

கல்தோன்றா மண் தோன்றா
காலத்தே முன் பிறந்தாய்
வில்லொத்த உன் னெழிலால்
வேதனைகள் மறந்தேனடி!

உனையள்ளி அணைத்திட்டால்
உள மெங்கும் இன்பமடி
அணையாத தீபமடி
அழகென்னும் தெய்வமடி!

உலகத்து மொழியனைத்தும்
ஒன்றிணைத்துப் பார்த்தாலும்
நிலவொத்த ஒளி போன்று
நீதான்டி உயிர் நாடி!

எத்தனை சீவன்கள்
ஏடள்ளிப் படித்தாலும்
புத்தியுள்ள பெண்ணென்றால்
புகழுனக்கே சொந்தமடி!

கன்னித்தமிழ் வடிவழகே
கள்ளமில்லா நல்லமுதே
கன்ன மிட்டேன் உனைநாளும்
காலமெல்லாம் மறவேனடி!

என்னன்புத் தாயவளே
யாவரையும் கவர்ந்தவளே
பொன்னொத்த பெருநிதியே
பேர் தாங்கி வாழ்வாயடி!

பாவலர்க்குப் பாவையடி
பாட்டோடு கலந்தாயடி
யாவரையும் மயக்குகின்ற
இன்னிசையுன் தோற்றமடி!

தங்க மலர்ப்பெண்ணரசே
தந்து விடு தமிழறிவை
எங்கள் குல நாயகியே
எம் மடியிற் துயிலடியோ!



**மூதூர் ''கலைமேகம்''**

# தமிழ்க்கவிதைக்கு காரைக்காலம்மையாரின் பங்களிப்பு

ந. பார்த்தீபன். எம்.ஏ. விரிவுரையாளர்,
கலவியியற் கல்லூரி, வவுனியா

தமிழ் இலக்கியத்தை செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம் என இரண்டாக வகுக்கலாம். உரைநடை இலக்கியமானது காலத்தால் பிந்தியதோடு இன்று வனப்பும் வண்ணமும் வாய்ப்பும் பெற்று பல நோக்கங்களை நிறைவு செய்யப் பயன்பட்டு வருகிறது. ஒப்பீட்டளவில் செய்யுள் இலக்கியமானது குறைந்துள்ள போதிலும் சங்க காலந்தொட்டு தற்காலம் வரையிலான காலத்தில் பல்வேறு வடிவங்களால் பெற்று சிறப்புற்று விளங்குவதையும் காணலாம். மேலும் தொல்காப்பிய நூற்பா மூலம் பாட்டு, உரை, வாய்மொழி, நூல், பிசி, அங்கதம், முதுசொல் என்னும் ஏழு வகையாகக் குறிப்பிடப்பட்டு நாளடைவில் செய்யுள் என்ற சொற் பொருளால் சுருங்கி இன்று கவிதை என்ற நாமம் பெற்று நிற்கின்றது. சொற்செறிவு, பொருள் தெளிவு, இசைநலம், அணிநயம் முதலிய நல்லியல்புகளால் அமைக்கப்பட்ட செய்யுளானது செறிவும் சுருக்கமும் கொண்டதாய் கற்பனையை அடையாளமாகக் கொண்டு, பொருளை முழுமையாய்க் கண்டு, அழகினை வியந்து நிற்கிறது. எதுகை, மோனை என்ற தொடை நலங்களும் அணி நலங்களும் கொண்ட செய்யுள், உளச்சுவைகளையும், உணர்ச்சிகளையும், மனவெழுச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு படித்துச்சுவைக்கவும் முருகுணர்ச்சியை வளர்க்கவும் துணைபுரிகிறது. இதனால் நுண்கலைகளில் சிறந்த இடத்தைப் பெறுகிறது.

பேராசிரியர் ஜோர்ஜ் ஓ நெய்ல் ''அழகின் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு விழுமிய முறையில் எழுந்து வரும் உணர்ச்சி, கற்பனை இவற்றின் மொழியே கவிதை'' என்று கருத்துரைக்கின்றார். இன்னும் ''சொற்கள் நடந்தால் வசனம். நாட்டியமாடினால் கவிதை'' எனக் கூறுகின்றனர். எப்படியோ மகாகவி பாரதி கூறியது போல் சொல்புதிது, பொருள் புதிது, சோதிமிகு நவ கவிதை என்று கவிதையானது இன்றுவரை பல்வேறு மாற்றங்களைப் பெற்று வசனகவிதை, புதுக்கவிதை என்ற வடிவங்களுடனும் இன்றும் எழுதப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இருப்பினும் மரபுக்கவிதை என்ற வடிவினை எடுத்து நோக்குவோமாயின் பெரும்பாலும் அவை விருத்தம் என்ற செய்யுள் வகையிலேயே அமைந்து காணப்படுகின்றன. இந்த, இன்றும் கூட அதிக அளவில் பயன்படுத்தப்படும் விருத்தமானது காரைக்காலம்மையாரின் பிரபந்தங்களோடு-தான் தொடங்குகின்றன என்பதில் காரைக்காலம்மையாரின் சிறப்பையும், அந்த முன்னெடுப்பையும் புரிந்து கொள்ளலாம்.

## <u>உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு விருத்தம்.</u>

விருத்தம் என்பது தமிழிலேயே வளர்ந்து அமைந்த ஓர் அழகான செய்யுள் வடிவமாகும். அகவல் முதலியவை போல ஓர் அடியில் நான்கு சீர் இருக்க வேண்டுமென்ற வரையறை இதில் இல்லை. நான்கு சீரும் இருக்கலாம்; ஐந்து, ஆறு........ என நாற்பது சீரும் இருக்கல்லாம். ஆனால் நான்கே அடிகள் இருக்க வேண்டும். முதல் அடியில் எத்தனை சீர்கள் வந்தனவோ அதே முறையில் மற்றைய அடிகளிலும் வரவேண்டும். சீர்கள் நீண்டும் இருக்கலாம்; குறுகியும் இருக்கலாம். இதனால் விருத்தம் என்னும் செய்யுள் கணக்கற்ற வகையில் வேறுபடுவதற்கு வாய்ப்பாகிறது. மேலும் பலவகை உணர்ச்சிகளுக்கு ஏற்றபடி பல்வேறு வகையில் சொற்கள் அமைந்து வெவ்வேறு ஓசைகள் பிறக்க வழி பிறக்கிறது. எனவே தான் உணர்ச்சிகளுக்கு ஏற்ற வடிவம் தருவதற்கு மிக நன்றாக உதவுகின்ற செய்யுள் வடிவமாக விருத்தம் காணப்படுகிறது. மேலும் கவிதைக்

கலையின் முக்கிய கூறு உணர்ச்சியேயாகும். இந்நிலையில் தனது உணர்ச்சிப் பெருக்கை கவிதையில் வடிக்கும் கவிஞன் விருத்தத்தையே கையாள்கிறான். ஆக இன்று எழுதப்படுகின்ற அநேக கவிதைகள் விருத்தத்தைக் கையாண்டு விருத்தப்பாக்களாகவே அமைகின்ற நிலையில் இதற்கு வித்திட்ட காரைக்காலம்மையாரின் கவிதைப் போக்கு பெரும் புரட்சிகரமானதாகவே அமைகின்றது. இவரின் பின்வந்த கவிஞர்கள் பின்பற்றும் ஒரு வடிவத்திற்கு முன்னோடி இவர் என்றே கூற வேண்டும்.

சங்க காலத்திலிருந்தும் சங்கம் மருவிய காலத்தின் போதும் வெண்பா யாப்பில் செய்யுள் பாடப்படுவதே பெருவழக்கமாயிருந்தது. இவ்வெண்பா யாப்பானது வினாவிற்கு கொடுக்கும் விடையில் காணப்படவேண்டிய சொற்சுருக்கம், கருதிய பொருளன்றிப் பிறிது பொருள் புணராமை முதலிய பண்புகளைக் கொண்டது. மேலும் வெண்டளை பிழையாமை, செப்பலோசை குன்றாமை முதலிய கட்டுப்பாடுகளும் உடையதாக விளங்குவது வெண்பாயாப்பு. காரைக்காலம்மையார் கூட இணையற்ற பக்திப் பாடல்களாகிய திருவந்தாதியை இவ்வெண்பா வாயிலாகவே வெளிப்படுத்தியுள்ளார். இருப்பினும் உணர்ச்சிப் பெருக்கை வெண்பா வாயிலாக வெளிப்படுத்தும் திறமை எல்லோர்க்கும் எளிதானதன்று. இத்திறமை வாய்க்கப்பெற்றவராக காரைக்காலம்மையார் விளங்கியுள்ளமைக்கு இவரது திருவந்தாதி நல்ல சான்றாகும். இது இவருடைய புலமையை எடுத்துக் காட்டியுள்ளது. ஆயினும் உணர்ச்சிப் பெருக்கை உணர்ச்சி பேதங்களையும் தெய்வானுபவங்களையும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற கருவியாக வெண்பா அமையவில்லை என்பதையுணர்ந்த காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களிற்கு விருத்தப்பாவையே கையாண்டார். இதே போன்று கட்டளைக் கலித்துறையைத் திருவிரட்டை மணி மாலையிலும் கையாண்டார். இங்கு புதிய மரபொன்றினைக் கையாண்டதனூடாக காரைக்காலம்மையார் தனித்துவமானவராகத் தன்னை இனங்காட்டினார்.

**பக்தி இலக்கிய முன்னோடி.**

கடவுளை வாழ்த்துவதற்கும் பரவுவதற்கும் (துதிப்பது) முன்னைய மரபுகள் இருந்தன. சங்க கால, சங்க மருவிய கால பெருவழக்குகளே முன்னைய மரபுகளாகக் காணப்பட்டன. ஆயினும் பக்தி அனுபவம் அம்மரபுக்குள் அடங்கவில்லை என்பதோடு அகத்திணை, புறத்திணைப் பொருள் மரபுகளையும் பயன்படுத்த வேண்டியிருந்த நிலையில் அத்தகையதொரு புதிய மரபு (கவி மரபு) காரைக்காலம்மையாரால் தோற்றுவிக்கப்பட்டது. ஆக சங்ககால, சங்க மருவிய கால பெருவழக்காயிருந்த வெண்பா யாப்பை இலக்கியத்தின் கருப்பொருளறிந்து தவிர்த்து புதிய வடிவங்களைப் பயன்படுத்தும் முற்போக்கான சிந்தனை, துணிச்சலான முயற்சி காரைக்காலம்மையாரிடத்து காணப்பகிறது. இது, இவருக்குப் பின்வந்த பல்லவர் கால நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் ஓர் உந்து சக்தியாக விளங்கியமையைக் குறிப்பிட வேண்டும். பக்தி இலக்கியத்தின் ஊக்கியாக, முன்னோடியாக காரைக்காலம்மையார் பாடல்கள் விளங்கின.

பக்தி இலக்கிய வளம் தமிழுக்குரிய தனிப்பெருஞ்சிறப்பு. இத்தகைய பெருந்தொகையாக அது வேறு இலக்கிய வளமுள்ள எந்த மொழியிலாயினும் எழவில்லை என்பது அறிஞர் கருத்து. காரைக்காலம்மையார் பாடியருளிய பிரபந்தங்கள் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பன. இவை மூன்று பிரபந்தங்களிலும் மொத்தம் நூற்று நாற்பது செய்யுள்கள் மட்டுமே உள்ளன. இந்த மூன்று பிரபந்தங்களும் நூற்று நாற்பது செய்யுள்கள் மட்டும் எழுதிய காரைக்காலம்மையார் தமிழ்ப் பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்தவராகவும் முதுபெருந்தமிழ்ப் புலவராகவும் போற்றப்படுகின்றார் என்றால் மிகையாகாது. மூன்று சிறிய பிரபந்தங்களும் இயற்றிய ஒருவரை பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணுவது எவ்வாறு பொருந்தும் எனக் கேட்கவும் வாய்ப்புண்டு. ஆனால், ஒரு புலவனின் பெருமையை அறிய அவர் பாடிய ஒரு பாடலே போதுமென்பர் அறிஞர்கள்.

உதாரணமாக ''யாது மூரே யாவரும் கேளிர்'' என்ற சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் இந்த ஒரு பாடலே அவரைப் பெரும்புலவர் வரிசையில் வைத்து எண்ணத் தக்கதொன்றே என்பர் அறிஞர்.

இனிப் பாடு பொருளை எடுத்துக் கொண்டால் காரைக்காலம்மையாரின் பக்தி வைராக்கியமானது இறைவன் திருவுருவைக் கண்டனுபவித்தல், அவன் புகழ் பாடுதல் என்பவற்றைத் தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டது. நான் இந்த உலகில் பிறந்து, பேசக் கற்றுக் கொண்ட பிறகு உன்னுடைய திருவடிகளில் அன்பு மிகுந்து உன்னிடமே அடைக்கலமாகச் சேர்ந்தேன். சிவபெருமானே! என்னுடைய இடரை நீ தீர்ப்பது எந்நாள்? என்னுடைய இடரைத் தீர்க்காவிட்டாலும், என்னிடம் இரக்கம் கொள்ளாவிட்டாலும் யான் சொல்லத்தக்க நெறி இன்னது என்று ஆணையிடாவிட்டாலும் என் கடவுளாகிய அவரிடம் கொண்ட அன்பு என் நெஞ்சை விட்டு நீங்காது. ஆக உலக வாழ்விற் பிறிதொன்றினையும் விரும்பாது இறைவன் திருமேனியழகில் இலயப்பட்டு நிற்ற லொன்றினையே அவாவினார். என்பதே இவர் பாடிய திருவந்தாதிகள் எடுத்துக் காட்டுகின்றன. தம் பக்தியையும் மாறாத ஈடுபாட்டையும் பல பாடல்களில் காட்டிப் பாடியுள்ளார். ''இந்தப் பாடல்களே தமிழில் உள்ள சைவ சமயத்துப் பக்திப் பாடல்களுள் மிகப் பழமையானவை. அவை பக்தியும் ஞானமும் நிரம்பிய பழம் பாடல்களாக இன்றும் போற்றப்பட்டு வருகின்றன'' என்கிறார் டாக்டர் மு. வரதராசன் இவ்வாறான சான்றுகள் காரைக்காலம்மையாரின் பாடல்களின் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.

காரைக்காலம்மையாரின் பாடுபொருளை அடியொற்றி பக்தி இயக்கத்தினூடாக பக்தி இலக்கியம் வளர்த்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்களுடைய தேவாரங்களிலும் திருப்பாடல்களிலும் பொருள் மரபைத் தொடர்ந்தார்கள். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தியையே போற்றி, அதற்கு இசைவான ஆடல் பாடல் முதலான கலைகளைப் பாராட்டினார்கள். இல்வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்தாலும், எந்தத் தொழிலைச் செய்தாலும், உள்ளத்தை இறைவனுக்கு உரியதாக வைத்து வாழ்க்கை நடத்தினால் போதும் என்றார்கள். ஆக பல்லவர் காலத்துச் சமய இலக்கியங்கள் ஒரு புதுவழியிற் செல்லத் தக்கவை எனப் புகழப்படக்கூடிய சிறப்புப் பெற்றவையாகத் திகழ காரைக்காலம்மையாரின் பாடு பொருளே காரணமாகின்றது. ''பல்லவர் காலத்துப் பக்திப் பாடல்கள் தோன்றுவதற்கு ஓர் அறிகுறியாக, அவற்றிற்கு முன் விடிவெள்ளி போன்று உதயமானவை காரைக்காலம்மையாரின் பாடல்கள்'' என்று சிறப்பித்துக் கூறுகிறார் பேராசிரியர் வி. செல்வநாயகம். இன்று வரை நிலைத்துநிற்கும் பக்தி இலக்கியத்திற்கு வித்திட்டவர் காரைக்காலம்மையார்.

காரைக்காலம்மையார் பாடிய திருவந்தாதிகள் சிறந்த பக்தி அனுபவங்களைப் புலப்படுத்தியதோடு உயர்ந்த கவிதைகளிற் காணப்படும் தெளிவு, உணர்ச்சிப் பெருக்கு, பொருட்செறிவு, ஓசைநயம் முதலியவற்றிற்கு தமிழிலக்கிய உலகில், வரலாற்றில் ஒரு தனிப்பெருமை எக்காலத்திலுமுண்டு என்று கூறுவார்கள். இன்றைய காலக் கவிதைகளிற்கும் இப்பண்புகள் காணப்படுவதற்கு வழிகாட்டியாக காரைக்காலம்மையாரை குறிப்பிடுவதில் எதுவித சந்தேகமுமில்லை எனலாம். மேலும் ஆறாம் நூற்றாண்டில் காரைக்காலம்மை யாரினால் எடுத்தாளப்பட்ட விருத்தம் என்னும் செய்யுள் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுப் பக்திப் பாடல்களிலும் ஒன்பதாம் நூற்றாண்டில் சீவகசிந்தாமணி என்னும் மிகப்பெரிய காவியத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. இந்த விருத்தப் பாவினால் உருவான காவியத்தின் வெற்றியானது பெரிய புராணம், கம்பராமாயணம் போன்ற மிகச்சிறந்த புராண காவியங்களிற்கும் பயன்பட்டு இன்றுவரை தொடர்ந்து நிற்கிறது. ஆக பொருளமைதி, யாப்பமைதி ஆகிய இரு விடயங்களிலும் ஒரு புதிய இலக்கிய மரபினைத் தோற்றுவித்து இன்றுவரை தனது கவித்துவத்தை நிலைநிறுத்தி வைத்திருக்கும் காரைக்காலம்மையார் தமிழ்க்கவிதைக்கு செய்த பங்களிப்பு மகத்தானது.

# கூர்வாள்

- ஆனந்தி எம்.ஏ -

தொடர்பு சாதனங்கள் இன்றைய உலகின் ஆற்றல் மிக்கவையாக விளங்குகின்றன. ஒரு சராசரி மனிதன் தன்னுடைய தினசரி கடமையில் நாள் ஒன்றுக்கு ஆறு மணித்தியாலங்களுக்கும் அதிகமான நேரம் மக்கள் தொடர்பு சாதனங்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றான் அல்லது அவை அவனை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைய நவீன உலகில் மக்கள் தொடர்பு சாதனங்களாக செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, இன்ரநெற் என்பன பரவலாகக் காணப்படுகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த தொடர்புச் சாதனங்கள் தோன்றிய காலத்தைப் போல் அல்லாமல் இன்று பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றன.

## காந்தியடிகளின் இலக்கணம்

மக்கள் தொடர்பு சாதனங்களின் பணிகள் பற்றி இந்தியாவின் தேசபிதாவும் சிறந்த தொரு இதழாசிரியருமான மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுகையில், "செய்தித் தாள்களின் முதல் முக்கிய பணி மக்களின் எண்ணங்களைப் புரிந்து கொண்டு அவற்றிற்கு வடிவம் கொடுத்தல். அடுத்தபணி மக்களிடையே சகல தேவையான சமூக உணர்வுகளைத் தூண்டுதல். கடைசிப்பணி மக்களின் தவறுகளைத் துணிச்சலாகச் சுட்டிக்காட்டுதல்" என்று இலக்கணம் கூறியுள்ளதானது ஒரு பத்திரிகையின் பணி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகின்றது.

அவரது கருத்தின்படி மக்களின் உணர்வலைககளைப் பிரதி பலிக்க வேண்டும் மக்கள் மத்தியில் தேவைக்கேற்ப சமூக உணர்வுகளைத் தூண்டிவிட வேண்டும் அதே வேளையில் மக்களின் தவறுகளையும் சுட்டிக்காட்டித் திருத்தியமைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹெரால்டு லாஸ்வெல் கூற்று

காந்தியடிகளின் முக்கிய மூன்று பணிகளை விட இதழ்கள் ஆற்றுகின்ற மேலும் மூன்று பணிகளைப் பற்றி தொடர்பியல் அறிஞர் ஹெரால்டு லாஸ்வெல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. சுற்றுப்புறச் சூழலைக் கூர்ந்து ஆராய்தல்
2. சமூகச் சார்புடையவராக்குதல்
3. இணைத்துக் காட்டல் என்று மேலும் விரிவாக்கியமை

## கூர்ந்து ஆராய்தல்

மக்களின் தொடர்பில் ஈடுபட்டிருப்பவர்கள் சமூகத்தின் ஒவ்வொரு சிறு அசைவுகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு மனிதனின் ஒவ்வொரு சிறு அசைவையும் மிக உன்னிப்பாக அவதானிக்கின்றனர். மக்களைப் பாதிக்கும் எந்த நிகழ்வும் இதழியலாளர்களின் கண்களில் இருந்து தப்புவதில்லை. அவற்றைத் துருவித்துருவி ஆராய்ந்து தொகுத்து செய்திகளாகவோ, விவரணமாகவோ மக்களுக்குக் கொடுப்பதன் மூலம் சமூகத்தில் நடைபெறும் ஊழல்கள், மோசடிகள் என்பவற்றைக் குறைக்கின்றனர்.

## சமூகச் சார்புடையவராக்குதல்

பிறந்த குழந்தைகளிடம் சாதி, மத, இன பேதங்கள் என்று எதுவுமே இல்லை. ஆனால் பின்னர் வளர்ந்தவர்களால் சுட்டிக் காட்டப்படும் போது அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராகுகின்றது. இந்த உணர்வுகள் பெற்றோர்,ஆசிரியர், நண்பர்கள், உறவினர்களால் அந்தக் குழந்தையின் மனதில் பதியப்படுகின்றன. இங்கு ஒரு சமூகம் சார்ந்த செயல் பாடுகளைப் போதிக்கும் ஊடகமாக மக்கள் தொடர்பு சாதனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை முறையான அல்லது முறைசாராத வகையில் சமுதாயம் சார்பான கல்விகளைப் போதிக்கின்றன. தினசரிகள், கட்டுரைகள், தலையங்கங்கள், செய்திகள், துணுக்குகள் என்பவற்றினூடாக மக்கள் மனதிலே கருத்துக்களை உருவாக்கி வழிப்படுத்துகின்றன.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் பற்றிய தெளிவான சரியான விளக்கத்தைப் பல பத்திரிகைகள் எழுதுகின்ற போதும், சில பிற்போக்கு பேரினவாதப் பத்திரிகைகள் இனவாதத்தை தூண்டும் வகையில் செய்திகளையும், கட்டுரைகளையும் பிரசுரிப்பதனூடாக அவற்றையே திரும்பத் திரும்ப வாசிக்கும் பாமர மக்கள் சமாதானதிற்கு எதிர்ச்சார்புடையவர்களாக்கப் படுவதைக் காணலாம்.

## இணைத்துக் காட்டல்

ஒரு சமூகத்தில் நிகழ்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் காரணங்கள் உண்டு. சாதாரண ஒரு மனிதனால், தன்னைச் சுற்றி நிகழும் செயல்களுக்கான காரணங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியாது போகின்றது. இதே போன்று சில காரணிகளின் விளைவால் நிகழும் காரியங்களை முன்கூட்டியே அறிய முடிவதும் இல்லை. இந்த நிலையில் வெகுசனத் தொடர்பாடல்கள் செயலுக்கான காரணத்தையும், காரணியின் காரியத்தையும் கண்டுபிடித்து, இரண்டையும் இணைத்துச் செய்திகளை வெளியிடுகின்றார்கள்.

உதாரணமாக வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மின்சார நெருக்கடி, இனவாதம் போன்றவற்றிற்கான காரணங்களையும் மக்களின் பொதுவான முயற்சியின்மை, பொறுப்பற்ற தன்மை, சுயநலம் போன்ற மூடத்தனங்களினால் ஏற்படக் கூடிய விளைவுகளை முன் கூட்டியே அறிந்து விளக்கி இரண்டுக்கும் ஒரு இணைப்பை வழங்கிச் செய்திகளை வெளியிடுகின்றன.

மோட்டார் சைக்கிள் வாகனத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை, இறந்தோர் தொகையையும், தலைக்கவசம் அணிவதால் இறப்பு குறைந்த தொகையையும் புள்ளிவிபரத்துடன் இருவேறு சம்பவங்களையும் இணைத்துக் காட்டும் பொழுது மக்களில் ஒரு விழிப்புணர்வு ஏற்படும்.

## இதழ்களின் வேறுபணிகள்

இதழ்கள் இவற்றை விட அறிவித்தல், அறிவுறுத்தல்கள், மகிழ்வூட்டல் பணிகளையும், ஆற்றுகின்றன. அன்றாடம் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைப் பொது மக்களுக்கு அறிவித்தல் இதில் சமூகம், சமயம், அரசியல், கலை, பண்பாடு, பொருளாதாரம், தேசியம், உலக அரங்கு, ஆகியவை தொடர்பாக நடைபெறும் எல்லா நடவடிக்கைகளையும் மக்களுக்கு அறியத் தருவதன் மூலம் ஒவ்வொருவரும் சரியான நட்வடிக்கையை எடுப்பதற்கு அறிவித்தல் பணி உதவுகிறது.

இதே போன்று மக்களைச் சிந்திக்கத் தூண்டி, கல்வியறிவை வழங்கி, மக்களைச் சரியான தீர்மானம் எடுக்கும் வகையிலும், அறிவுறுத்தல் பணிகளையும் மக்கள் தொடர்பு

சாதனங்கள் செய்துவர வேண்டும். இவை எல்லாவற்றையும் விட இன்னுமொரு முக்கிய பணியாக விளங்குவது மக்களை மகிழ்விக்கும் பணியுமாகும். உழைத்துக் களைத்த மக்களையும், பல்வேறு நெருக்குதல்களினால் சோர்ந்து போனவர்களையும் உற்சாகமூட்டும் வகையில் மக்களை மகிழ்விக்கும் பணியை பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன செய்து வருகின்றன.

## சூர்வாளாக இதழ்கள்

இவ்வாறான பணிகளையும் ஆற்றுகின்ற இதழ்கள் சமூகத்தையும், தனி மனிதனையும் நெறி நிறைந்த வாழ்க்கை வாழ வழி காட்டுகின்றன. எந்த சமூகத்தில் அநீதிகளும், மோசடிகளும், சாதி, சமய, சமூகச் சண்டைகளும் தாண்டவமாடுகின்றதோ அந்தச் சமூகத்தைத் திருத்தும் சூர்வாளாக இதழ்கள் விளங்க வேண்டும். எந்த அரச அலுவலகங்களில் ஊழல்களும், மோசடிகளும், அதிகார துஷ்பிரயோகங்களும், சோம்பேறித்தனமும், எதேச்சாதிகாரமும் தலைவிரித்தாடுகின்றதோ அங்கே சூர்வாளாகப் பத்திரிகைகள் விளங்க வேண்டும்.

எந்த அரசில் ஒடுக்குமுறைகளும், சர்வாதிகாரமும், மோசடியும், நர்த்தனம் புரிகின்றதோ அங்கே பத்திரிகைகளே சூர்வாளாகக் கோலோச்ச வேண்டும். எனவே ஒரு நாட்டின் ஜனநாயகக் காவலனாகவும், மக்களின் காவல் நய்களாகவும் விளங்கும் பத்திரிகைகள் அவற்றுக்கான ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுக்கும், தர்மத்திற்கும் அமையத் தம் பணிகளைச் செய்ய வேண்டும். அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்வதில் எமது தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் அர்ப்பணிப்புடன் செய்து வரவேண்டும்.

**வரலாற்றுச் சான்று**

## தமிழ் காக்கும் மட்டுநகர்

மட்டக்களப்புத் தமிழகம் இன்றும் தனித்துவமான தொன்மை வாய்ந்த தூய தமிழ்ப் பிரதேசமாக விளங்குகின்றது.

"மட்டக்களப்பில் பேசப்படும் மொழிவார்த்தையை ஆராய்ந்து பார்க்கின், பழமையான நல்ல தமிழ் மொழி வழக்கு இங்கே இருப்பதை அறியலாம். தமிழுலகில் இன்று வழக்கொழிந்து போனதும், தொல்காப்பியர் காலத்ததுமான "கா" என்னும் அசைநிலை இடைச்சொல் பிரயோகம் இங்கே இருக்கிறது.

எலுவன், எல்லா, எலா என்ற பண்டைய விளிப்பெயர்களின் திரிபான "இல" என்பதனுடன் "கா" அசைச் சொல்லும் சேர்ந்து "இலக்கா" என்னும் விளியாகிக் கிராம மக்களிடையே வழங்குகின்றது. இதனை "மட்டக்களப்பிலே ஆடவர் தோளிலுங்கா அரிவையர் நாவிலுங்கா" என்று ஒரு யாழ்ப்பாணத் தமிழறிஞர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். இன்னும் இப்பிரதேச வழக்கில் இருக்கும்; மறுகா, (மறுகால்); அப்புதல் (பூசுதல்); ஏமம் (யாமம்); கிறுகு (திரும்பு)! வண்ணக்கன் (கணக்கறிஞன்); முடுகு (கிட்டப்போ) என்பன போன்ற தூய தமிழ்ச் சொற்கள் பழமையான மூலப் பிறப்பினை உடையன.

**பண்டிதர் வீ.சீ. கந்தையாவின்**
**"மட்டக்களப்பு தமிழகத்தில் இருந்து"**

# சேதுபந்தனம்

## நாட்டிய நாடகம்

பிரதியாக்கம் : கலாநிதி, சாகித்தியரத்தினம்
க. சொக்கலிங்கம் (சொக்கன்)
இசையமைப்பு : சங்கீதகலாவித்தகர்
சி.சிவானந்தராஜா

**நடர்**

இராமன், சீதை (உருவெளித்தோற்றம்) இலக்குவன், சுக்கிரீவன், அங்கதன், நீலன், அநுமன், சாம்பவன் (கரடிமுகத்தினன்) நளன், வள்ளுவன் (பறையறைவோன்) மயிந்தன், வானரமாதர், வானரச் சிறுவர் சிறுமியர் (சிலர்).

**கதைச்சுருக்கம்**

இராமபிரான் சீதையை மீட்பதற்கு இலங்கை வர, இடையிலே கடல் தடையாய் உள்ளது. அவர், தம் நண்பனும் வானரவேந்தனுமான சுக்கிரீவனின் துணைகொண்டு சேதுபாலம் அமைப்பித்த கதையே சேதுபந்தனம். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற கூற்றுக்கு எடுத்துக்காட்டாய் வானரர் ஒன்று திரண்டு நிகழ்த்திய சாதனையே ''சேதுபந்தனம்''.

## காட்சி ஒன்று

[வங்கக்கடல் அலை எறிகிறது. இராமபிரான் கரையிலே சோகமே வடிவெடுத்தாற் போல நிற்கின்றார். அவர் முன்பு சீதையின் உருவெளித்தோற்றம். (ஒரு நிமிட வாத்திய இசையினைத் தொடர்ந்து) பின்னணியில் பாட்டு. இராமபிரானின் அபிநயம்]

### பாட்டு (விருத்தம்)

<u>இராகம்:- சுபபந்துவராளி</u>

வெய்யோன் ஒளி தன் மேனியின்
விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
வையம் அழப் போனான் இன்று
மனையாள் பிறன் கவர
வெய்யதுயர் மழையாய் விழி
வழியக் கரைநின்றான்.

<u>இராகம்:- சுபபந்துவராளி</u> <u>தாளம்:- ஆதி</u>

அலைகடலே! ஓயாமல் அழுகின்றாய் உன்னை
அழவைத்துப் பிரிந்தவர்யார்? அதை எனக்குக் கூறு
கலைமானின் பொன்னெழிலில் கருத்தினையே 'வைத்த
காதலியை யான்பிரிந்த கதையுனக்குச் சொல்வேன்
தலைபத்துக் கொண்ட மறக்கடையனது மாயம்
தன்னாலே அசோகவனம் சோக வனம் ஆக
நிலைத்தழுவாள் எனதிதய அரசியினை நினைந்து
நீண்டதுயர் நாகம் எனத் தீண்ட அழுகின்றேன்.

[சுக்கிரீவன், அநுமன், இலக்குவன், சாம்பவன் அங்கதன் ஆகியோர் இராமன் நிற்கும் கடற்கரைக்கு வருகின்றனர்]

பாட்டு

**இராகம்:- வசந்தா** **தாளம் : ஆதி**

**சுக்கிரீவன்:-** ஆண்மையின் உருவே! தெய்வீக நிறைவே!
அழுகை தவிர்த்திடுவீர்
மாண்புறை சீதை மலர்மகள் உந்தம்
வருகைக் கேங்குகிறார்.

**அநுமன்:** வீணர் அரக்கர் கூட்டம் அழித்து
வெற்றிக் கொடி நாட்டக்
காணுவம் என்று காத்துளர் தேவர்
கலக்கம் விடுவீரே.

**இலக்குவன்:** எழுவதும் பகையை அழிப்பதும் தெய்வம்
என்றன் அண்ணிசிறை விடுப்பதும்
எளியதே எனினும் கடலை எங்கள் படை
எவ்விதம் கடக்கும்? எண்ணுவீர்.

**சுக்கிரீவன்** **விருத்தம்** **இராகம்: அமிர்தவர்ஷனி**

பெருமைக்கோர் நளன் உள்ளான் பெருந்தச்சன்
பெருந்தகையீர்! பின் ஏன் அச்சம்?
அரக்கருக்கு மயன்போல அமரர்க்கு விஸ்வகர்மன்
அவன் போல் எங்கள்
அருமைமிகும் அவனிருக்க ஐயம் ஏன் கவலை ஏன்
அவற்றை ஒட்டி
ஒரு நொடியில் நம்படைஞர் பலகோடி உள்துணையாய்
அமைப்பான் பாலம்.

**சாம்பவன்:** (சிரிக்கிறான். இராமபிரான் உட்பட
யாவரும் அவனை நோக்குகின்றனர்)

**இராகம்: அமிர்தவர்ஷனி** பாட்டு **தாளம்:- ஆதி**

வயதினால் மூத்தவன் நான் - என்றன்
வார்த்தையைக் கேட்டிடுவீர்
உயர்ந்தெழும் பேரலைகள் - மிகுந்த
உக்கிரந்தான் இதுவே
வியத்தகு திறலுடையோம் - எனினும்
மேலேஓர் பாலம் இட
இயலுமோ எங்களினால்? - சிறிய
இந்தக் குரங்குகளால்

(சிறிது தொலைவில் துள்ளிக் குதிக்கும் சிறு குரங்குகளைக் காட்டுகின்றான்.)

சின்னஞ்சிறிய இவை - கோடி
சேரினும் ஆவதென்ன?
பென்னம் பெரிய மலை - பலவும்
பெயர்த்திடல் கூடுவதோ?

பன்னிடல் எளிதாகும் - சாதனை
பண்ணிடல் எளிதாமோ?
உன்னியே உணர்ந்திடுவீர் - என்னுரை
ஓர்ந்திடுவீர் மிக ஆய்ந்திடுவீர்
சொல்லுதல் நினைந்து முடிவெடுப்பீர்

**சுக்கிரீவன்:** அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கென
அறியாயோகிழவா!
திடமிகு நெஞ்சும் செயலும் சேர்ந்தால்
செய்தற் கரிதுண்டோ?

**அங்கதன்:** கடல்போல் வானரப் படைதிரண்டிடுமேல்
கணத்தில் நிறைவேறா
விடயம் எதுவும் உண்டோ? தயக்கம்
விடுவாய் சாம்பவனே!

**அநுமன்:** ஒன்றாய் நின்றுமு யன்றால் - வெற்றி
எம்கைப் படும் ஐயா!
குன்றும் சிறுமண் குவியல் ஆகும்
கூடிமு யன்றிட்டால்
என்றும் எதிலும் ஒற்றுமை பூண்டால்
எதுதான் முடியாது?
சென்றிடுவோம் திசை எட்டும் அதிரச்
செயலில் இறங்கிடுவோம்.

**விருத்தம்**

**சுக்கிரீவன்** **கேதாரகெளளை**

சாம்பவ ! உடன்நீ சென்று சங்கதி எடுத்துக்கூறி
நாம் அழைத்திட்டோம் என்று நம்படை அனைத்தும் ஒன்றாய்
ஈங்கழைத் திடுவாய் சிற்பி நளனுக்கும் செய்தி சொல்லிப்
பாங்குடன் எம்பணிப்பை நிறைவேற்ற விரைவாய் நீயே.

## காட்சி இரண்டு

[வள்ளுவன் பறைஅறைந்து சாம்பவன் பணித்த செய்தியை, வானரரர் அவனைச் சூழ்ந்து நின்று கேட்கத் தனக்கே உரிய அங்க சேஷ்டையுடன் உரைக்கின்றான்.]

**இராகம்: ஆரபி** **அகவல்**

சக்கரவர்த்தி சகம்புகழ் மன்னர்
சுக்கி ரீவர் இட்ட கட்டளை
சாம்பவர் உமக்குச் சாற்றிடப் பணித்தார்.
டம் டம் டம் டம் டண்ட டண்டடம்

வானரத் தானையர் யாவரும் வருக

தொல்லிலங் கைக்கும் தூயதென் னாடாம்
எம்முடைப் பதிக்கும் இணைப்புப் பாலம்
கபடிக் கடலினைக் கடந்திட வருக!
உடனே வருக! ஓடியே வருக!
கணமும் தாமதம் காட்டிட வேண்டாம்
டம் டம் டம் டம் டண் டண்டடம்

சுக்கி ரீவச் சக்கரவர்த்தி
இட்ட கட்டளை ஏற்றிடு வீரே
இட்ட கட்டளை ஏற்றிடுவீரே
இட்ட கட்டளை ஏற்றிடுவீரே
டம் டம் டம் டம் டண்ட டண்டடம்

[கேட்ட வானரர் துள்ளிக்குதித்துக்களி கொண்டு ஆடுகின்றனர்]

### பாட்டு

**இராகம்: குந்தலவராளி** **தாளம்:- ஆதி**

சின்னா வாடா பொன்னா வாடா
சேர்ந்து செல்வோமே
கண்ணா வாடா மன்னா வாடா
கடிதிற் செல்வோமே
பாலங் கட்டிக் கடல்க டந்து
பாய்ந்து செல்வோமே
ஞாலம் அதிர இடிபோல் ஆர்த்தே
நாங்கள் செல்வோமே
எங்கள் தலைவர் கட்டளை ஏற்றே
இணைந்து செல்வோமே
சீதை அன்னையைச் சிறையில் இட்ட
தீயனை அழித்தற்கே
ஏதும் தயங்கா தேற்றன செய்வோம்
எழுச்சி கொள்வோமே.

[வானரர் செல்ல அவர்களில் ஒருவன் மட்டும் எஞ்சி நிற்கின்றான். அவன் முகத்தில் கோபம், வெறுப்பு, கவலை என்பன மாறி மாறி நிழலிடுகின்றன. இவன் பெயர் மயிந்தன். சிறிது போதில் நீலன் என்ற அவன் நண்பன் வந்து, அவன் தோளிலே தட்டத் திடுக்குற்றுத் திரும்புகின்றான். நீலன் ''என்ன விடயம்?'' என்று அபிநயத்தால் வினாவுகின்றான்.]

### பாட்டு

**மயிந்தன்:**

**இராகம்: சண்முகப்பிரியா** **தாளம் : ஆதி**

என்னவோ எனக்கிவை ஒன்றும் பிடிக்கவில்லை
ஏனிந்தப் பாடுகளோ? அர்த்தம் புரியவில்லை
சன்னதம் பிடித்தவர்போல் எங்கள் சகோதரர்கள்
சாமிஎன ராமனது காலில் விழுகின்றார்

சொன்னதைச் செய்வதற்குப் போட்டி இடுகின்றார்
சுத்த மடைப்பயல்கள்! சீச்சீ இவர்களினை
என்னவர் என்றிடவே வெட்கம் பிடுங்குது
இதுகள்வா னரர்கள் அல்ல செம்மறி ஆடுகள்.

## பாட்டு

**இராகம்: கானடா** **தாளம்: ஆதி**

**நீலன்** : நன்றி மறந்திடுதல் நன்றல்ல வாலியின்
நண்பன்நீ என்பதனால் சொல்கின் றாயிதனை
இன்று நம் மன்னவர் ஆட்சியில் இருப்பதற்கே
இராம பிரானன்றோ காரணம் அறியாயோ?

**மயிந்தன்**: மரத்தின்பின் மறைந்திருந்து மாய்த்தவன் வீரனோ?
மானிடன் குணத்தையவன் காட்டினான் அல்லவோ?
**நீலன்**: மானிடன் அல்லன் என்ற உண்மையை உணர்த்த உன்
மன்னவன் வாலியன்று சொன்னதை மறந்தனையோ?
**மயிந்தன்**: தெய்வம் என்றால் என்ன? தேவதேவனானாலும்
செய்தது தவறுதான் செய்தது தவறுதான்

**இராகம்: ஹம்சத்வனி** **தாளம் : ஆதி**

ஐயன் என் றேத்துவதால் அவன்கறை போகாது
அவன்மனை யாளுக்காய் நம்மவர் மாய்வதோ?
தனித்த ஒருவனது தாரத்தை மீட்பதற்காய்
தானையாய் நாம் எம்மைப் பலிக்கடா ஆக்குவதோ?
வினைப்பயன் என்றிடுவாய் நீலனே! இல்லை இது
விழலுக்கிறைத்த நீர்விளங்கிடு என்தோழா!

**நீலன்: (மயிந்தனின் தோளில் தட்டி)**
சகலதும் இருந்தென்ன, தருமமில்லா இலங்கை
தன்பதி இராவணனைப் பூண்டுடன் அழிப்பதொன்றே
உகந்ததென்றே உதித்த உத்தமன் இராமபிரான்
உலகங்கள் மூன்றினையும் காக்கமானிடனானான்
ஓர்ந்திடு மயிந்தனே! உண்மைக்குப் பணிந்திடுவாய்.

[மயிந்தன் பின்னும் ஏதோ கூறமுயல,
அவன் வாயைப் பொத்தி, அவனை நீலன்
பலவந்தமாய் இழுத்துச் செல்கின்றான்]

## காட்சி மூன்று

[இராமன், இலக்குவன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன், சாம்பவன், நளன், வானரப்படை, சிறுவர், சிறுமியர், வானர மாதர் நிறைந்த அரங்கு. **சேது** பந்தனத்துக்கு இராமனாதியரை அனுப்பி வைக்கக்கூடிய பெண்கள் சிலர் இராமனாதியோருக்கு மங்கல திலகம் இட்ட பின்னர், அவர்கள் முன்பு, கும்மியடித்து வாழ்த்துக் கூறுகின்றனர்]

## கும்மிப்பாட்டு

**இராகம்:- ஆனந்தபைரவி** **தாளம்:- ஆதி திஸ்ரநடை**

சீராமர்லக்குவர் சேர்ந்தசுக் கீரீவர்
சிறந்தநல் அநுமந்தர் அங்கதரே!
சார்கின்ற சாம்பவர் நீலரே மேன்மைகொள்
சிற்பிநளனென்னும் செம்மலரே!

ஓலமிட் டோயாது கும்மாளம் கொட்டிடும்
ஓதக் கடலினைத் தூர்த்திடவே
ஞாலம் அதிர்ந்திடச் சென்றிடுவீர் எங்கள்
நங்கை சனகிகண் ணீர்து டைப்பீர்

பெண்மைக் கிழிவினைச் செய்திட்ட கீழ்மகன்
பேதையைப் பூண்டோடழித்திடுவீர்
திண்மையுடன் பாலம் கட்டி அதிற்சென்று
செற்றம் இழைத்துவெற் றிக்குழைப்பீர்

ஒருவன் ஒருத்திக்காம் உண்மை மறந்திடர்
உற்றவர் பற்பலர் அன்னவருள்
தரும லாதவத் தீமைக் கடிப்பட்டான்
தன்குடி முற்றிலும் சென்றொழிப்பீர்

வாழிய ராமபி ரானொடு தம்பியர்
வாழிய வையமும் வானகமும்
ஏழிசை யும்பண்ணும் என்ன உலகங்கள்
எங்கணும் சூழுக நல்லறமே

[கும்மி முடிந்து பெண்கள், தம் கூட்டத்துடன் சேர்கின்றனர். இராமபிரான் கருணைகூர் முகமும், முறுவல் விளையும் இதழ்களுமாய் எல்லோருக்கும் ஆசி கூறும் பாவனையில் இருகரங்களையும் அபிநயிக்கிறார்.]

## கீர்த்தனை

**இராகம்: பிலஹரி** **தாளம்: ஆதி**

**இராமபிரான்**

### பல்லவி

நன்றியு ரைத்திடுவேன் - அன்பு
நங்கையரே எனது தங்கையரே உமக்கு
(நன்றி)

### அநுபல்லவி

கன்றிடு பாவமெல்லாம் பொன்றிடவேநீவிர்
களிப்புடன் எந்தமை அனுப்புதற்காய் உமக்கு
(நன்றி)

### சரணம்

இன்றெமைச் சூழ்ந்துள்ள இருளினைப் போக்கியே
எழுகின்ற ஞாயிறாய் இன்பம் ஒளிரவே
சென்று பணிபுரிய எந்தமக் கன்புடன்
செப்பிய வாழ்த்தினுக் கென்றன் உளம் ஓம்நிறைந்த
(நன்றி)

[இராமபிரானும் இலக்குவனும் வானரத்தலைவர்களும் செல்கிறார்கள். சிறுவர் சிறுமியர் தொடர்கிறார்கள். எஞ்சி நின்ற மாதர்கள் தங்கள் மனநிலையையும் ஆர்வத்தையும் முகமலர்ச்சியுடன் வெளிப்படுத்தும் அபிநயத்துடன் வெளிப்படுத்துகின்றனர்.]

**இராகம்: காபி**

**விருத்தம்**

ஓயாமல் ஒழியாமல் உழைக்கவே செல்கின்ற
உத்தமர்க் குணவு நல்கிச்
சாயஎம் மடிஈந்து சஞ்சலம் புகாமலே
சால்பான தொண்டு செய்வோம்.
மாயாது மடியாது மனங்களும் சோராது
மைந்தருக் குதவி செய்வோம்
தாயாகி மகளெனத் தங்கையாய்த் தமக்கையாய்த்
தண்ணளி புரிகுவோமே.

# காட்சி நான்கு

சேது பந்தனம் மிக விறுவிறுப்பாகவும், சுறு சுறுப்பாகவும் நிகழ்கின்றது. மரங்கள் பெயர்க்கப்படுகின்றன. மலைகள் பிளக்கப்படுகின்றன. வானரர் தமக்கேயுரிய அங்க சேஷ்டைகளோடு பாறைகள், மரங்கள், கற்கள் என்பவற்றைத் தலைகளிலே சுமந்து வந்து வரிசையில் நிற்போரிடம் முறை முறையாகக் கொடுக்க அவர்கள் கைமாறிக் கடைசியில் நளனிடம் அவற்றைக் கையளிப்பதாகவும், நளன் பாலம் கட்டுவதாகவும், பாவனை இச்செயல்கள் பாட்டோ, உரையாடலோ இன்றிப் பொருத்தமான பின்னனி இசையோடு (பெரும்பாலும் தாளவாத்திய இசையோடு) சுவாரசியமாக நாட்டிய நாடக இயக்குநரின் கற்பனை வளத்தோடு நிகழ்த்தப் படவேண்டியன. (கம்பராமாயணம், யுத்தகாண்டம், சேது பந்தனப் படலத்தில் உள்ள 24, 28, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 92 பாடல்கள் இக்காட்சி உருவாக்கத்திற்கு நன்கு உதவும். இது நிறைவுறும் கட்டத்தில் பின்வரும் பாடல்களைப் பயன்செய்து நாடகத்தை நிறைவு செய்க.

**பாட்டு**

<u>**இராகம்: பிருந்தாவன சாரங்கா**</u> <u>**தாளம்: 374 சாபு**</u>

ஒன்று கூடி முயன்று ழைத்திடில்
உலகில் ஆகிடாக் காரியம்
என்று கொண்டிட ஒன்றும் இன்றென
உணர வைத்தனர் வானரர்
அன்று மின்றுமென் றென்றும் ராமனின்,
ஆற்றல் சேர் புகழ் கூறிட
வெற்றி கொண்ட இச் சேது பந்தனம்
விளங்கும் மேன்மைசால் சின்னமே
ராம ராம ராம ராம ராம ராம ராம்!
ராம ராம ராம ராம ராம ராம ராம்!
ராம ராம ராம ராம ராம ராம ராம்!

(பாலம் முடிவுற்று அதன்மேல் இராமபிரான், கூட்டத்தினர் நடந்து செல்லும் பாவனை)

## பின்னணிப்பாட்டு

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

போகிறார் பெரியர் போகிறார் கொடுமை
பொன்றி வீழ்ந்தொழியப் போகிறார்.
போகிறார் விறலர் போகி றார் அதர்மப்
போலிகள் தொலைந் தழியவே
போகிறார் பெரியர் போகிறார் மகளிர்
போற்றும் நல்லுரிமை மீட்கவே
போகிறார் தலைவர் போகிறார் உலகின்
புன்மை யாவையும் ஒழியவே
போகிறார் ......... போகிறார்.......... போகிறார்.

திரை

முற்றும்



வரலாற்றுச் சான்று

## இலங்கை வேந்தன் இராவணனின் வெட்டு

திருக்கோணேஸ்வரம் சுவாமிப் பாறையில் இந்த இராவணன் வெட்டு காணப்படுகின்றது. இலங்கை வேந்தன் என்று சிறப்பிக்கப்பட்டவனும், சிவபக்தனுமாகிய இராவணன் வழிபாடு செய்து வந்த கோணேஸ்வரத்தில் பக்தி வைராக்கியத்தின் சின்னமாக இராவணன் வெட்டு காணப்படுகின்றது.

கடல் மட்டத்தில் இருந்து 400 அடி உயரமான குன்றில் கோணேசர் கோயிலுக்கு அருகே கிழக்குப் பக்கமாக பாரிய வெட்டு காணப்படுகின்றது.

தனது தாயார் வழிபடுவதற்காக உத்தர கயிலைக்குச் சென்று தவஞ்செய்து பெற்றெடுத்த சிவலிங்கத்தை இழந்துவிட்ட இராவணன், நாரதரின் அறிவுரைப்படி தெட்சண கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்திற்கு வந்து மீண்டும் ஒரு லிங்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காகக் கடுந்தவம் புரிந்தான். இறைவன், அவனது தவத்திற்கு இரங்காமை கண்ட இராவணன், பக்தி வைராக்கியத்தினால், அகங்காரம் கொண்டு கோணேசர் அமைந்துள்ள குன்றையே வெட்டிப் பிளந்து எடுத்துச் செல்ல முனைந்தான். அதற்காக அவன் வெட்டிய அடையாளம்தான் இராவணன் வெட்டு. இந்த வரலாற்றை தெட்சண கயிலாய புராணம் கூறுகின்றது.

ஒல்லாந்தர் - பிரித்தானியர் ஆளுகைக் காலங்களில் இப்பகுதி "காதலர் பாயுமிடம்" (Lovers Leap) என அழைக்கப்பட்டது.

இன்று நாம் வாழுகின்ற இந்த வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களே சிறந்த நாடகங்களாகும். அவற்றில்தான் மக்களுக்கு ஒரு அர்த்தம் தெரியும். ஆங்கிலத்தில் Realistic play என்று அழைக்கப்படும், இந்த வகை நாடகத்தை தமிழில் யதார்த்த நாடகம், இயல்பு நாடகம், மண்வாசனை நாடகம் என்று பலபெயர்களால் அழைப்பர். நவீன நாடகம் (Modern Drama) என்பதும் இதுவே. நாம் சமூகத்தில் சந்தித்துப் பேசிப் பழகுகின்ற மனிதர்களே அவற்றில் பாத்திரங்களாக வந்து தமக்கே உரிய இயல்பான பேச்சு வழக்கு மொழியில் உரையாடுவர். பேச்சு வழக்கு மட்டுமல்லாது அவர்களது செயல்கள், செயற்பாடுகளும் இயல்பானவையாகவே இருப்பது அவசியம். சமூகத்தின் பிரச்சனைகளே அந்த நாடகங்களின் பாடுபொருள்.

நாடகம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. நல்ல பொழுது போக்காக அமைந்து மக்களுக்கு மகிழ்வூட்டுவது, அவர்களுக்கு நல்ல பாடங்களையும் புகட்டுவது. இந்த மூன்று பணிகளையும் யதார்த்த நாடகங்களால் மட்டுமே திறம்படச் செய்ய முடியும்.

ஊடகம் எதுவாக இருந்தாலென்ன, நாடகம் வேகமாக ஓடவேண்டும். அதில் பேசப்படுபவை, செய்யப்படுபவை எல்லாவற்றையும் ரசிகர்கள் உடனுக்குடன் புரிந்து கொண்டால்தான் நாடகத்தை நன்கு ரசிப்பர். புரியாமையும் மயக்கமும் குழப்பமும் நாடகத்தில் இருக்கக்கூடாது. அதன் வேகமான ஓட்டத்திற்குத் தடையாக உள்ளவை எல்லாவற்றையும் அதிலிருந்து நீக்கிவிடவேண்டும். அப்பொழுது தான் நாடகம் நல்லபடியாக அமையும். ரசிகர்களும் அதிலிருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறுவர்.

மண்வாசனை நாடகங்களில் வருகின்ற பாத்திரங்கள் தமக்கே உரிய இயல்பான பேச்சு வழக்கு மொழியில் உரையாடுவதால், தாம் சொல்ல வந்ததை விரைவாகவும், திறமையாகவும் அழகாகவும் சொல்லிவிடும். மக்களும் அவற்றை நன்றாக விளங்கிக் கொண்டு நாடகத்தை நன்கு ரசிப்பர். அந்தப் பேச்சு வழக்கு உரையாடலே பாத்திரவார்ப்பும் செய்துவிடும். நாடகாசிரியரது வேலை சுலபமாக முடிந்துவிடுகிறது!

# நவீன நாடகத்தின் சிறப்பு

கலாபூஷணம், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

தங்களைப் போன்ற பாத்திரங்களையே மக்கள் விரும்புவார்கள். தாங்கள் சமூகத்தில் சந்தித்துப் பேசிப் பழகுகின்ற மனிதர்களே மேடையிலும் வந்து நிற்கிறார்கள் என்ற உணர்வே நாடக ரசிகர்களைப் பாத்திரங்களுடன் ஒன்றிக்கச் செய்துவிடும். பாத்திரங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பொழுது, ரசிகர்களும் அவர்களுடன் சேர்ந்து போராடுவர். அவை வெற்றி பெறும் பொழுது இவர்களும் மகிழ்வர். அவை தோல்வியைத் தழுவும் பொழுது இவர்களும் அவற்றிற்காகக் கண்ணீர் சிந்துவர். ரசிகர்கள் நாடகத்தில் இருந்து தாமாகவே சில பாடல்களைப் படிப்பர். அக்கருத்துக்கள் எல்லாம் அவர்களது மனதில் ஆழப் பதிந்துவிடும்!

## ஹன்றிக் இப்சனது நவீன நாடகங்கள் (கி.பி. 1828 - 1908)

உலகத்தில் முதல் முதலாக நவீன நாடகங்களை எழுதிப் பெயர் பெற்றவர், நோர்வேஜிய நாடகாசிரியரான ஹன்றிக் இப்சன் (கி.பி. 1828- 1908) ஆகும். அவரும்

முதலில் மன்னர்களதும், பிரபுக்களதும் கதைகளை கவிதை நடையில் நாடகமாக்கிக் கொண்டு இருந்தவர்தான். ஞானோதயம் பெற்றவர் போலத் திடீரென்று "இந்த நாடகங்களுக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை. நாடகம் என்பது மக்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும். அத்தகைய நாடகங்களால்தான் மக்கள் அதிக பயன் பெறுவார்கள். நாடகமும் சிறக்கும்". என்றுகூறி, இயல்பு நாடகங்களை எழுதத் தொடங்கினார்.

அவரது நாடகங்களில் சமூகத்தில் உள்ள சாதாரண மனிதர்களே பாத்திரங்களாக வந்து தங்களுக்கே உரிய பேச்சு வழக்கு மொழியில் உரையாடினர். அவற்றில் சமூகத்தின் அரசியல், பொருளாதார, மனித உறவுப் பிரச்சனைகளே எடுத்தாளப்பட்டன.

இராசா ராணிக் கதைகளிலும் பிரபுக்கள் பற்றிய புளுகுகளிலும் ஊறிப்போய் இருந்தவர்கள், ஐரோப்பாக் கண்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் அவர் மீது கண்டனக் கணைகளைத் தொடுத்தனர். கண்டனங்களைக் கண்டு இப்சன் கலங்கவில்லை. தான் தனது அறிவிலும், அனுபவத்திலும் சரி என்று கண்ட நாடகத்தை தொடர்ந்து எழுதி வெற்றியும் பெற்றார். இன்று உலகம் முழுவதிலும் நவீன நாடகங்களே பெரு வழக்காயிருக்கின்றன. அதனால் ஹன்றிக் இப்சன் "நவீன நாடகத்தின் வெளிச்ச வீடு" என்று பாராட்டப்படுகிறார்.

அதன் பிறகு ஐரோப்பாக் கண்டத்தில் தோன்றிய லியோடால்ஸ்டாய், அன்ரன்செக்காவ், பெர்னாட்ஷா போன்ற பெரிய நாடகாசிரியர்கள் எல்லோரும் இப்சன் காட்டிய வழியிலேயே நாடகங்கள் எழுதினர். பெர்னாட்ஷா தான், இப்சனது பெரும் பக்தர். (Deciple) "நான் இப்சனைப் பின்பற்றியே நாடகம் எழுதுகிறேன்" என்று வெளிப்படையாகவே கூறிக் கொண்டார். பின்பு இன்னும் ஒருபடி மேலே போய் சமூகப் பிரச்சனைகளை ஆராய்கின்ற நாடகம் "பிரச்சனை நாடகம்" (Problem play) என்ற ஒரு புதிய நாடக வகையையே ஆங்கில மொழியில் தோற்றுவித்தார்.

## தமிழ் மொழியில் யதார்த்த நாடகங்கள்

தமிழ் மொழியில் யதார்த்த நாடகங்களை முதன் முதலில் எழுதியவர் பம்மல் சம்பந்த முதலியாராகும். அவர் அவற்றை நடித்தும் காட்டினார். துரதிஷ்டவசமாக அவர் எழுதிய சமூக நாடகங்கள் எமக்குக் கிடைக்கவில்லை.

முதன் முதலாக மேற்கத்தைய பாணியில் "மனோன்மணியம்" என்ற கவிதை நாடகத்தை எழுதியமைக்காக பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பெரிதும் பாராட்டப்படுகிறார். அது யதார்த்த நாடக மல்ல. இரவல் கதை, கவிதை நடை, சேர சோழ பாண்டியர் காலத்தைப் பின்னணியாகக் கொண்டது. மேடையில் நடிக்க முடியாதது. பின் வந்தவர்கள் அதில் பல திருத்தங்களைச் செய்தே நடித்தனர்.

## பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள்

இலங்கையில் முதன் முதலாக நவீன நாடகங்களை எழுதியவர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகும். தான் வாழ்ந்து கொண்டிருந்த யாழ்ப்பாணச் சமூகத்தைச் சித்திரிக்கும் நாடகங்களை யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்குத் தமிழில் எழுதினார். அதன் மூலம் நவீன நாடகம் என்றால் எப்படி இருக்கும் என்பதை ஈழத்தமிழ் மக்களுக்குக் காட்டியதுடன், யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழுக்கு ஒரு இலக்கிய அந்தஸ்தும் பெற்றுக் கொடுத்தார். அதன் பிறகே ஏனையோரும் பேச்சு வழக்கு மொழியில் நாடகங்கள்

எழுதத் தொடங்கினர். பேராசிரியர் எழுதிய நாடகங்களை உடனுக்குடன் அரங்கேற்றி அந்த வகை நாடகங்களை அரங்கேற்றும் முறையையும் விளக்கிக் காட்டினார்.

## தமிழ் மொழியில் இன்று நவீன நாடகங்களின் நிலை

நவீன நாடகங்களை எழுதியும் அரங்கேற்றியும் இலங்கையில் தமிழ் நாடகக் கலையை இப்படித்தான் வளர்க்க வேண்டும் என்று அன்றே வழிகாட்டினர். பேராசிரியரும் கலாநிதியும். ஆனால் தமிழ் மக்கள் இன்றுகூட, அந்த நாடக வகையின் சிறப்பை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஈழத்தில் இன்று நாடகங்கள் அரங்கேற்றப்படுவது குறைவுதான். இருந்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதேதோ நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். நவீன நாடகங்களைக் காண்பதுதான் மிகவும் அரிதாக உள்ளது.

இலங்கை வானொலி மட்டும்தான் நவீன நாடகத்தின் சிறப்பை அறிந்து அந்தவகை நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்புகின்றது. தமிழ்ச்சேவை இலங்கைவாழ் தமிழ் மக்களுடைய வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகங்கைள ஒலிபரப்புகின்றது.

1995ஆம் ஆண்டுக்கு முன்பு "புலிகளின் குரல்" வானொலி ஒலிபரப்பிய பல நாடகங்களைக் கேட்டிருக்கிறேன். அவற்றில் பெரும்பாலானவை அன்றைய தமிழ் மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற யதார்த்த நாடகங்களே!

நவீன நாடகங்களை எழுதி அரங்கேற்றினால் மட்டும் போதாது. அவற்றை நூல்களாகவும் வெளியிட்டால்தான் தமிழ் நாடகத்துறை வளரும்.




நன்றி - சிரித்திரன்

# அகதியின் முற்றத்து மழை

இழுத்தி போர்த்திக் கூட
படுக்க அவ்வளவு,
விருப்பமில்லை!

நல்ல மழைதான்
மரவள்ளி கிழங்கும்,
மாட்டுக் குடலுக்கும்
பொருத்தமான மாரிதான்!

நெடுங்காலமாக
நமக்குச் சொந்தமான
வானத்து மழை
கிடைக்காதது – தான்
பெரும் குறை!

ஊரார்,
கூரையின் கீழ்தான்
இப்போகத்து மாரியும்!

வானம்
அள்ளி ஊற்றி
வாடகை வளவெல்லாம்
பெரும் வெள்ளம்!

வெட்டிக் குத்தி
வெள்ளத்தை வழியனுப்ப
வட்டாரத்தில்
யாருமே இல்லை!
குந்தி இருந்து
குடும்பத்தோடு,
மழைக் காட்சி பார்க்க
சொந்த நிலமா இது?

இங்கு
வந்து போகும்,
இடி மின்னலும்
எங்கள்,
வீட்டு முற்றத்தில்
குந்தி விட்டுத்தான் வந்திருக்கும்

பீ ஆமைக்கு
பெரு வெள்ளம்
பெருநாள் மாதிரி!

எடுத்து விரி!
சாக்குத் துண்டை
கால் விறைக்குது!

-முகமட் அபரார் -
478, பள்ளி வீதி
கல்முனை



பொலன்னறுவை சிவன் கோவில்
மேலும் தகவலுக்கு 87ம் பக்கம் பார்க்க

# வழிகாட்டல் ஆலோசனைச் சேவையில் ஆரம்ப அமுலாக்கத் திட்டமும் பெற்றோர் பங்கும்

திரு. பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்
யா /சரவணை சின்னமடு
றோ.க.த.க பாடசாலை.
தீவக கல்வி வலயம்.

பாடசாலை மட்டத்தில் செயற்படுகின்ற, தொழில் ரீதியாக பயிற்றப்பட்ட ஆலோசகர்களால் வழிகாட்டல் சேவைகள், முழுநேர அடிப்படையில் ஒரு சில பாடசாலைகளில் தான் வழங்கப்படுகின்றன. இதுவரை நடத்தப்பட்ட வழிகாட்டல் மதிப்பீடுகள் மாணவர்களுக்கு விரிவான வழிகாட்டல் திட்டங்கள் கிடைப்பதில்லை எனக் காண்பித்துள்ளன. அநேகமான திட்டங்கள் ஒரு பரிகாரம் காணும் தன்மையுடையனவாக அமைந்திருந்தன. அதாவது பிரச்சினைகளோடு ஆலோசகர்களை நாடி வந்தோருக்கு மட்டுமே இப்பரிகாரங்கள் கிடைத்தன. இத்திட்டங்கள், இரண்டாம் நிலை அல்லது சிரேஷ்ட இரண்டாம் நிலைக் கட்டங்களில் மட்டுமே, ஒழுங்கமைக்கப்படுகின்றன.

தனிப்பட்ட மாணவன் ஒருவனின் முழுமையான இசைவாக்கத்தினை மேம்படுத்துவதற்கான, துணைச்சேவைகள் என்ற வகையில் வழிகாட்டற் திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். இந்நோக்கத்தினை அடையும் வகையில், போதுமானளவு விரிவானதாக ஒரு திட்டம் அமையவேண்டும். ஒரு வழிகாட்டற் திட்டமானது, ஒரு சேவைத்திட்டத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே, வழிகாட்டற் திட்டம், முழுமையானதாகக் கருதப்படும். விருத்தி செய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்படும் சேவைகள் இச்சேவைத்திட்டத்தில் அடங்கியிருக்கின்றது. இவற்றுக்கான சில கருத்துக்களும், வழிகாட்டல்களும், பல்வேறு மாணவப்பிரிவினர், பாடசாலைக் கல்வியின் வெவ்வேறு கட்டங்களிலிருக்கும் போது வழங்குவதற்காக இங்கு தரப்பட்டுள்ளன.

வழிகாட்டற் திட்டங்களின் தன்மையானது, வெவ்வேறு மாணவர் பிரிவினருக்கும் அமைப்புக்களுக்கும் வேறுபடுகின்றன. பல்வேறு சமூக-கலாச்சார, மற்றும் வயதுப் பிரிவினருக்கும் வழிகாட்டல் திட்டங்கள் வேறுபடுகின்றன. மாணவர்களின் அபிவிருத்தி அளவு மற்றும் கல்விக்கட்டத்தைப் பொறுத்தும் இவை வேறுபடுகின்றன.

வழிகாட்டலென்பது, ஒரு சர்வதேச ரீதியான தேவையாக இருப்பதால், பல்வேறு வயதுக் கட்டங்களிலுள்ள அபிவிருத்தித் தேவைகளைச் சமாளிக்கும் வகையில், வழிகாட்டற் திட்டங்கள் வடிவமைக்கப்பட முடியும். வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் தனிப்பட்ட தேவைகள் மற்றும் சமூக ரீதியான கோரிக்கைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வெற்றிகரமான சீராக்கங்களை (adjustments) மேற்கொள்ள வேண்டும். ஆகையால் வழிகாட்டற் செயற்பாடுகளும் திட்டங்களும், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயிலவேண்டிய குறிப்பான அபிவிருத்திப் பணிகளை கருத்திற்கொண்டு விருத்தி செய்யப்பட வேண்டும். (ஹியூமஸ், கொஹென்சில்1987) அபிவிருத்திப் பணியினை, ஒரு நபரின் வாழ்வின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் எழுகின்ற தனிநபரினது தேவைக்கும், சமூகக் கோரிக்கைக்கும் இடையிலான ஒரு நடு வழி (mid-way) என விபரித்துள்ளார். (ஹாவிகர்ஸ்ட் 1972)

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அபிவிருத்திப் பணிகளை கைவரப்பெறுவது, ஒரு நபர் பயனுறுதித்தன்மையுடன் செயற்படுவதற்கு தேவையாகும். இதனால், ஒரு நபர் மகிழ்ச்சியடைவதுடன், எதிர்காலத்தில் வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. (ஹாவிஹேர்ஸ்ட் 1972, கிஸ்பேர்ஸ் மற்றும் ஹென்டர்சன் 1988, மிறிக் 1987) பல்வேறு கட்டங்களில் வழிகாட்டற் திட்டங்களை திட்டமிடும்போது அபிவிருத்திப் பணிகளை, ஆலோசகர்கள் கருத்திற்கொள்வது அவசியமென்பதை வலியுறுத்தியுள்ளன.

**கல்வியின் பல்வேறு கட்டங்களில் வழிகாட்டல்**

| கல்வியின் கட்டம் | ஆரம்ப நடுத்தர நிலை | இரண்டாம் நிலை | சிரேஷ்ட இரண்டாம் நிலை |
|---|---|---|---|
| நோக்கு | அபிவிருத்தி ரீதியானவை தடுப்பு வகையானவை | தடுப்பு வகையானவை | பரிகாரமானவை |
| நோக்கங்கள் | சுயவிழிப்புணர்வு தொழில் விழிப்புணர்வு | சுயவிழிப்புணர்வு தொழில் பற்றிய ஆராய்ச்சி | சுயஅடையாளம் தொழிலுடன் அடையாளம் காணப்படல் |
| விளைவுகள் | ஆரம்பம் தகுதிகள், திறமைகள் மனப்பாங்குகள் விழுமியங்கள் | தனிப்பட்ட/ தொழில் சார்ந்த விருப்புக்களையும் இலக்குகளையும் இனங்காணுதல் | தன்னைப் பற்றியதும் தொழில் சம்பந்தமானதுமான தீர்மானங்கள் |

ஆரம்ப கட்டத்தின் முதற் பருவமானது, பண்புகள் உருவாகும் காலமாகும். இப்பகுதியில், திறமைகளையும் மனப்பாங்குகளையும் விருத்திசெய்து ஆரம்ப அபிவிருத்திப் பணிகளைச் சமாளிக்க மாணவர்களுக்கு உதவும் செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. பிற்காலங்களில் அபிவிருத்திப் பணிகளை வெற்றியுடன் கையாளுவதற்கான அத்திவாரம் இங்கு இடப்படுகிறது. நடுப்பகுதி மற்றும் இரண்டாம் நிலை பாடசாலை வருடங்கள் உடல், உள வளர்ச்சியைக் குறிப்பதாக உள்ளது. இவ்வாறு ஆரம்ப வருடங்களில் வழங்கப்படும் ஆலோசனை வழங்கலும் வழிகாட்டலும், மாணவர் தம்மைப்பற்றிய சுய விழிப்புணர்வு மற்றும் தொழில் சம்பந்தமான பணிகள் பற்றிய அறிவு பெற உதவுகின்றது. மேலும் தம்மையும் வேலை உலகையும், ஆராய்வதால், தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்களையும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

**ஆரம்ப பாடசாலைக் கட்டத்துக்கான வழிகாட்டல் திட்டம்.**

அநேகமான ஆரம்பப் பாடசாலைகள் தனி ஆசிரியர் உள்ளவையாக இருக்கின்றன. எனவே, அங்கு ஆசிரிய- மாணவர் தொடர்பு நெருக்கமாக இருக்கின்றது. ஆசிரியர்கள், பிள்ளைகளை நன்றாக அறிந்து கொண்டுள்ளனர்.

- ❖ ஆரம்பப் பாடசாலைகள் பெரும்பாலும் அருகிலுள்ளவையாக இருப்பதால், உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அங்கு கற்கின்றனர். எனவே, ஆரம்ப வருடங்களில் கற்கும் பிள்ளைகள் அங்கு நிலையாக வசிக்கும் குடும்பங்களிலிருந்து வருபவர்களாக இருப்பர். இந்த அறிமுகமான தன்மை (familiarity) பிள்ளைகள் பாடசாலையுடன் சுலபமாக இசைவாக்கம் (adjustment) பெறுவதற்கு உதவியாக அமைகின்றது.
- ❖ கிராமிய பாடசாலைகள் அடிப்படை வசதிகளற்றவையாக உள்ளன.
- ❖ ஆரம்ப நிலையில் பெற்றோருடைய ஆர்வமும், ஈடுபாடும் பொதுவாக அதிகளவினதாக இருக்கின்றது.

❖ விளையாட்டு அல்லது உடற்பயிற்சியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை மையமாக வைத்து பொதுவாக ஆசிரியர்கள் தமது பாடவிதானத்தை நிறைவேற்றுகின்றனர்.

ஆகையால், வழிகாட்டற் திட்டமானது பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

i) தொடர்ந்து திருப்தி செய்யப்படவேண்டிய அடிப்படைத் தேவைகள்.
ii) குறிப்பிட்ட வாழ்வுக் கட்டங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அபிவிருத்தித் தேவைகள்.

மஸ்லோ (Maslow 1943, 1947) போன்ற உளவியலாளர் உயர்ந்த நிலைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு முன், கீழ்மட்டத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர். பிள்ளைகளின் உணவு, உடை, உறைவிடம் போன்ற தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதை, ஆசிரியர் அல்லது ஆலோசகர் அறிந்திருக்க வேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் வாழ்க்கையின் அடிப்படையிலான வசதிகள்கூட இல்லாத வறுமையான குடும்பங்களிலிருந்து வருகின்றனர். இவ் அடிப்படை வசதிகளற்ற நிலையிலுள்ள பிள்ளைகளை எழுத, வாசிக்க, கணக்குச் செய்வதற்கான ஆற்றல்களைப் பெறச் செய்ய இயலாது. பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வரும் இப்பிள்ளைகளுக்கு, அடிப்படைத்தேவைகளை வழங்குவதற்காக, ஆசிரியர், பாடசாலைக்குள்ளும் வெளியிலும் கிடைக்கின்ற மூலவளங்களைப் பயன்படுத்த வேண்டும். சில பாடசாலைளில், சுகாதாரப் பராமரிப்பு, மதிய உணவு, உதவுதொகை போன்ற ஏற்பாடுகள் தேவையான பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வசதிகளற்ற பாடசாலைகள், இவ்வாறான உதவிகளை, தனிப்பட்டவர்களிடம், தனியார் அல்லது அரச, சமூக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முயலவேண்டும்.

## ஆரம்ப மற்றும் நடுத்தர பிள்ளைப் பருவத்துக்கான அபிவிருத்திப் பணிகள்.

மனிதனது வாழ்க்கைக் கட்டத்திற்கு ஏற்ப, அவனது அபிவிருத்தித் தேவைகள், ஹவிஹேர்சல்ற் (Havighurst) என்பவரால் வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் அபிவிருத்திப் பணிகளிலிருந்து சில தடயங்களை ஆசிரியர்களும் ஆலோசகர்களும் பெற்றுக்கொள்ள முடியும்.

1. சாதாரண விளையாட்டுக்கான உடல் ரீதியான ஆற்றல்களைக் கற்றுக்கொள்ளுதல்.
2. வளர்ச்சியடையும் மனிதன் என்ற வகையில், ஒருவர் தன்னைப் பற்றி நிறைவான மனப்பாங்குகளை வளர்த்துக்கொள்ளுதல்.
3. தனது வயதுத் தோழருடன் சேர்ந்து பழகக் கற்றுக்கொள்ளுதல்.
4. பொருத்தமான சமூகப் பங்களிப்பினைக் கற்றுக் கொள்ளுதல்.
5. வாசிப்பு, எழுத்து, கணக்கிடல் ஆகியவற்றின் அடிப்படை ஆற்றல்களை விருத்தி செய்தல்
6. அன்றாட வாழ்வுக்கான எண்ணக்கருக்களை விருத்திசெய்தல்
7. மனச்சாட்சி, ஒழுக்கம் மற்றும் விழுமிய அளவுகளை விருத்திசெய்தல்.
8. தனிப்பட்ட சுதந்திரத்தை பெறுதல்.
9. சமூகப் பிரிவினர் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.

வழிகாட்டற் திட்டங்களும் செயற்பாடுகளும், இக்கட்டத்திலுள்ள பிள்ளைகளின் பின்வரும் இயல்புகளைக் கருத்திற்கொண்டு விருத்தி செய்யப்பட வேண்டும். (Gibson and Mitchell 1986 கிப்ஸன் மற்றும் மிச்செல்)

- இப்பருவத்தில் பிள்ளைகள், குழு ரீதியான அடையாளத்தை விருத்தி செய்யாத படியால், ஆரம்பப் பாடசாலை பிள்ளைகள் ஒரே மாதிரியானவர்களாக இருக்க மாட்டார்கள்.
- தொடர்ச்சியான வளர்ச்சி, அபிவிருத்தி அல்லது மாற்றத்தை பிள்ளை அடைந்து கொண்டிருக்கின்றது.
- அனுபவங்களை, தொடர்ந்து பிள்ளை ஒன்று திரட்டி வருகிறது.
- காரணப்படுத்தும் ஆற்றல்களை முழுமையாக வளர்ச்சி பெறாததால், பிள்ளையால், வாய்மொழி மூலம் காரணத்தை தெரிவிக்க முடியாதிருக்கின்றது.
- நீண்ட நேரத்துக்கு, ஒரே விடயத்தில் கவனம் செலுத்தும் தன்மை குறைவாக உள்ளது.
- பிள்ளையினது உற்சாகத்தையும் ஆர்வத்தையும் சுலபமாக தூண்டலாம்.
- நீண்டகால திட்டங்களை காண்பதற்கு கஷ்டமாக இருப்பதால், தீர்மானங்களும் இலக்குகளும் உடனடி நோக்கங்களுக்காக அமைந்துள்ளன.
- உணர்வுகளை வெளிப்படையாக காண்பிக்கும் தன்மையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வயது மற்றும் வகுப்புக்களைப் பொறுத்தவரை இங்கு முதலாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையான பிள்ளைகள் உள்ளடக்கப்பட்டாலும், தோர்ண்பேர்க் (Thornberg) போன்ற உளவியலாளர்கள், ஆரம்பப் பிள்ளைப்பருவம் மற்றும் பிந்திய பிள்ளைப் பருவங்களை (11 - 14) வேறுபடுத்தியுள்ளனர். இப்பருவம் (11 - 14 வருடங்கள்) ஒரு மாற்றப்பருவம் என அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இவ்வருடங்களிலேயே ''வயதுக்கு வருதல்'' (Puberty) நிலை உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் பிள்ளைகளில் ஏற்படுகின்றது.

### ஆரம்ப பாடசாலைக் கட்டத்துக்கான வழிகாட்டலின் நோக்கங்கள்.

- வீட்டிலிருந்து பாடசாலைக்கான மாற்றம் சிறப்பாக அமைதல்.
- ஒரு நேரிடையான எண்ணக்கரு உருவாகுதல்.
- ஆசிரியர் - கற்பவர் உறவுகள் மேம்படல்
- அடிப்படைக் கற்கும் ஆற்றல்களில் குறைபாடுகளை கண்டறிதல்
- பாடசாலையிலிருந்து விட்டுவிலகக்கூடிய மாணவர்கள் பாடசாலையில் தொடர்ந்து படிக்க உதவுதல்.
- நடத்தைப் பிரச்சனைகளையுடைய பிள்ளைகளை இனங்காணுதலும் உதவி வழங்குதலும்
- வேலை உலகம் தொடர்பான யதார்த்த எண்ணக்கருக்கள் பற்றிய விழிப்புணர்வை விருத்தி செய்தல்.

### ஆரம்பப் பாடசாலைக் கட்டத்துக்கான வழிகாட்டல் திட்டம்

- தகவல் திரட்டுதல் ஒத்துணர்வை நிறுவுதல்.
- இலக்குகளை அமைத்து தேவைகளைப் பூர்த்தி செய்தல்
- திட்டத்தினை விருத்தி செய்து நடைமுறைப்படுத்தல்
- கணிப்பீடும், திட்ட முன்னேற்றமும்.

## ஆலோசனை வழிகாட்டல் சேவையில் பெற்றோர் பங்கு

ஆரம்பப் பாடசாலை வழிகாட்டல் திட்டமானது மிகமுக்கியமான கட்டமாகும், இக்கட்டத்தில், பாடசாலை ஆளணியினர் யாவரினதும் செயலூக்கமுள்ள ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும். (ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள்) அத்துடன் பெற்றோரின் ஆதரவும் தேவையாகும். ஆகையால், வழிகாட்டற் பணிப்பாளரின் தொழிற்பாடுகள் குறித்து நிர்வாகிகளும், பாடசாலைப் பணியாளர்களும் சார்புத்தன்மைப் படுத்தப்பட (oriented) வேண்டும் திட்ட இலக்குகளை அடையும் ஆற்றலில் நம்பிக்கையை இது ஏற்படுத்தும். ஆலோசகர் ஒரு ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர் என நிர்வாகி கருதக்கூடாது. அவ்வாறு கருதுவாரானால், இலகுவாக்குபவர் (facilitator) என்ற நிலையிலிருந்து அவர் தவறிவிடுகிறார். பிள்ளையின் வளர்ச்சி, அபிவிருத்திக்கட்டத்தில், தமது செயலூக்க பங்களிப்பினை வழங்குவதன் மூலம், பெற்றோர்கள் கணிசமான பங்களிப்பினை வழங்கமுடியும். வழிகாட்டற் திட்டங்களில் பெற்றோர்கள் ஈடுபடுவதற்கு பின்வரும் நோக்கங்கள் உள்ளன.

1. பிள்ளைகளுக்கு என்ன கற்பிக்கப்படுகின்றது என்பதை பெற்றோர்கள் அறிந்து, அச்செயற்பாட்டில் தாமும் ஓர் அங்கமெனக் கருதுகின்றனர்.
2. பாடசாலைத் திட்டத்தில், ஆலோசகரின் பணி பற்றியும், ஆசிரியரின் பணி பற்றியும் சில நேரிடையான கருத்துக்களை பெற்றோர்கள் பெறுகின்றனர்.
3. பெற்றோரின் கடமை குறித்த கருத்துக்கள், குடும்பத்தை சிறந்த முறையில் உருவாக்க உதவுகின்றது.
4. வழிகாட்டற் செயற்பாடுகளை திட்டமிடவும் நடைமுறைப்படுத்தவும் உதவுவதற்கான செயற்பாடுகளில் அவர்கள் உதவமுடியும்.
5. பல்வேறு வழிகளில் அவர்கள் கருத்து வழங்கும் நபர்களாக (resource persons) செயற்பட முடியும்.

பெற்றோர்களால் தொடரப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து, ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும். உதாரணமாக, பிள்ளையின் கிரகித்தல் மனப்பாங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை பெற்றோரின் நடத்தைகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றியும் அவர்கள் எவ்வாறு பிள்ளையின் அபிவிருத்தியை மேம்படுத்தலாமெனவும் அவர்களுக்கு தெரிவிக்க முடியும்.

வாழ்வுக்கான கல்வியின் நோக்கம், தெளிவாகவும் துல்லியமாகவும் விளங்கவைக்கப்பட வேண்டும். அவனது படிப்புப் பழக்கவழக்கங்களை மேம்படுத்தி, பாட சம்பந்தமான விடயங்களிலுள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்வதன் மூலம், அவன், படிப்புடன் தன்னை இசைவாக்கிக் கொள்வதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும். மீள் கல்விச் செயற்பாட்டின் மூலமாக, விரைந்து மாற்றமடைந்து தொண்டுவரும் இவ்வுலகில், இந்நூற்றாண்டின் இறுதியில் இப்பொழுது இருப்பதைவிட முற்றிலும் வேறுபட்டதாக அமையக்கூடிய, வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான, சிந்தனை, வேலை, மனப்பாங்குகள் பற்றிய ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை விருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும், வரப்போகும் மாற்றங்களுக்கு விரைந்து இசைவாக்கம் பெற உதவும் வகையிலான, புதிய ஆர்வங்கள் மற்றும் புதிய ஆற்றல்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டிய ஆலோசனை வழிகாட்டல் சேவை மூலம் நிறைவேற சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

# தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள் விரிவான ஆய்வுக்கான முன்குறிப்புக்கள் சில

கார்த்திகேசு சிவத்தம்பி

**தமிழுக்குப் புதிய பரிமாணங்களைத் தந்த இதழியல் பற்றிய நுண்ணாய்வு**

தமிழிலக்கிய வரலாற்றில் மிக முக்கிய இடம்பெறுவனவாகிய பல்வேறு இதழ்களின் வரலாறுகளையும் அவற்றின் தமிழ்நிலை முக்கியத்துவத்தினையும் பல்வேறு தொகுதிநிலைத் தலைப்புக்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. இவற்றில், விடுதலைக்கு முந்திய இதழ்கள் என்றும் திராவிட இயக்க இதழ்கள் என்றும் பல நிலைப்பட்ட தொகுதி நிலைகளில் தமிழ் இதழ்கள் பெரும்பாலானவை ஆராயப்பட்டுள்ளன.

இதழ்கள் (Journals) தமிழின் நவீனமயப்பாட்டில் முக்கிய இடம்பெறுவதுடன் தமிழ், சில புதிய பரிமாணங்களைப் பெற உதவியுள்ளன.

தமிழில் இன்று, எழுதப்படுவதை (Writings) 'எழுத்து' என்று சொல்லும் மரபு வந்துவிட்டது. சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' என்ற சஞ்சிகை, நவீன தமிழிலக்கியர் ஆக்கங்களை 'எழுத்துக்கள்' (Writings) என்ற நிலை நின்றே நோக்க வேண்டும் என்பதனை நிறுவியுள்ளது. 'இலக்கியம்' என்று சொல்லும்பொழுதே, அதற்குள் ஒரு தர ரீதியான மதிப்பீடு உள்ளார்ந்து நிற்கிறது. எழுத்து, எழுத்துக்கள் என்பன ஒரு நடுநிலைப் பதமாகும் தரம் இனிமேல்தான் நிச்சயிக்கப்பட வேண்டும். விமர்சனம் உடைமையாகத் தொழிற்படத் தொடங்குகின்றது.

இதழியல் எழுத்துக்களிற் பல்வேறு வகைப்பாடுகள் உள்ளன. அவற்றிற் பலவற்றுக்கு இயைபான, சனரஞ்சகமான பதங்களை நாம் இன்னும்தான் உண்டாக்கிக் கொள்ளவில்லை. Feature writing, script writing, column writing, copy writing எனப் பல வரும்.

வீரசோழியத்தில் 'கத்தியகத்தின்' (உரைநடையின்) வடிவமாக எடுத்துக்கூறப்பட்ட 'கட்டுரை' இன்று சிலரால் 'கட்டுரை இலக்கியம்' என்றே எடுத்துக் கூறப்படுகின்றது. ("கத்தியம் கட்டுரை செய்யுளின் போலி கலந்து அவற்றோடு ஒத்து இயல்கின்றமையால் ஒன்று தாமும் உரைத் தனரே)" கல்வித் தேவைகள் முதல் சாதாரண வாசிப்புத் தேவைகள் பலவற்றுக்குக் கட்டுரை இன்று உதவுகின்றது.

மேலும் இதழியலின் வரலாற்றினுள், நவீன தமிழிலக்கியத்தின் முக்கிய ஆக்க வடிவங்களான சிறுகதை, நாவல், கவிதை ஆகியவற்றின் வரலாறு தொக்கி நிற்கின்றது.

பல்வேறு ஆய்வுகளினூடாகப் பெறப்பட்ட அறிவினைத் தளமாகக் கொண்டு இதழியல், இலக்கிய வரலாற்றின் அங்கமாக அமையும் தன்மையும் எழுத்துக்களின் அமைவியல், அழகியல் அமிசங்களும் ஆராயப்பட வேண்டும். மேலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ் இதழியல் வளர்ந்த வரலாறு அறியப்பட வேண்டும்.

## I

நூல்களைத் தளமாகக் கொண்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தனவற்றை மாத்திரமே ஆதாரமாகக் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றினை நோக்கும் இயல்பு நம்மிடையே இருந்து வந்துள்ளது. நாம் ஒரு குறிப்பிட்ட எழுத்துப் பாரம்பரியத்தையே போற்றி வந்துள்ளோம்.

அதனுள்ளும்கூட சில அமிசங்களை விட்டுவிட்டோம். உதாரணமாகத் தமிழில் உள்ள அறிவியற் பாரம்பரியம் பற்றி நமது இலக்கிய வரலாற்று நூல்கள் பேசுவதில்லை. இலக்கிய வரலாறென்பது அந்த மொழியில் எழுதப்பட்ட எல்லா எழுத்துக்களினதும் வரலாறு ஆகும். அதாவது தமிழர் சிந்தனை எவ்விடங்களிலெல்லாம் தொழிற்பட்டுள்ளதோ அந்த எழுத்துக்கள் யாவும் - அவை பிறமொழிகளில் இருப்பினும் - எடுத்துப் பேசப்படுதலே முறைமை (13ஆம் நூற்றாண்டின் பின்னர் தென்னகத்தில் தோன்றிய சமஸ்கிருத நூல்களில் காணப்படும் தமிழ் சிந்தனைகள், பாரம்பரியங்கள் பற்றிய நேர்மையான ஆய்வுகள் இருப்பின் தமிழ்நாட்டில் சமஸ்கிருத எதிர்ப்புக் குறைந்திருக்கும்)

இத்தகைய ஒரு புறக்கணிப்பை நவீன தமிழ் இலக்கியத்தில் (காலனித்துவ, பின்காலனித்துவ காலங்களில்) செய்துவிட முடியாது. ஏனெனில் இக்காலத்தில் தமிழில் முன்னர் நிலவாத இரு முக்கிய அமிசங்கள் காணப்படுகின்றன. ஒன்று கல்வியில் தமிழ். இது இரண்டு விடயங்களை உள்ளடக்கியது. (அ) சகலருக்குமான கல்வி, (ஆ) புதிய பாடங்களின் அறிமுகம். இந்த இரண்டாலும் ஒரு புதிய உலக நோக்கே தமிழ் மக்களிடையே ஏற்பட்டது.

அடுத்து வேறுபடும் வாசக மட்டங்களுக்கான எழுத்துமுறை நம்மிடையே பரவத் தொடங்கிற்று. இது எழுத்தறிவின் காரணமாக ஏற்பட்டது. எழுத்தறிவு வளர்ச்சியுடன் வாசிப்பில் இரு மட்டங்கள் துல்லியமாகின்றன. ஒன்று காத்திரமான வாசிப்பு நிலை. இரண்டு ஜனரஞ்சக நிலை. இது உண்மையில் நமது சமூகத்தில் தோன்றியுள்ள வாசிப்புக்களைச் செய்கின்றமையையும் அவதானித்தல் வேண்டும்.

தமிழ்நாட்டில் அச்சிதழ்கள் வந்த சமூகப் பின்புலத்தைத் தெளிவுற விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு நோக்கும் பொழுது நாம் தமிழகத்தின் மீதான பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலத் தாக்கத்திற்குச் செல்லல் வேண்டும்.

பிரித்தானிய ஆட்சியின் வருகையுடன் தமிழகத்தில் குறுநில ஆட்சியாளர்களின் அதிகார முறைமை சிதைக்கப்பட்டு தாமிரபரணி, காவேரி ஆகிய ஆற்றுப்படுக்கைகளிலும் கொங்கு நாட்டிலும் ஒரு புதிய சுதேச உயர்குழாத்தினர் (Elite) முக்கியம் பெறத் தொடங்குகின்றனர்.

இந்த நன்மையைப்பெற்றோர் பிராமண, வேளாள சாதியினரே. ஆற்றுப்படுக்கை நகரங்களான திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற கல்வி வசதி காரணமாகக் கீழ்மட்ட அரசு உத்தியோகத்துக்கு இவர்களிலிருந்தே உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நடைமுறை காரணமாக அரசாங்கத்திற்கும் வெகுசனங்களுக்குமிடையே ஊடாடுகின்ற ஒரு சமூக வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கின்றது. மேற்குறித்த இந்தப் புதிய வட்டத்திலிருந்து வந்தவர்களிடையே தம்முடைய தனித்துவம், பாரம்பரியம், பழமை பற்றிய கருத்து, துணிபு நிலைக்குப் படிப்படியாக வளரத் தொடங்குகிறது. இது சமஸ்கிருதம், தமிழ் பற்றிய மொழிகளின் மீள்நோக்குக்கு இட்டுச் செல்லும். அதே வேளையில் குறிப்பாகத் தொண்டை மண்டலப் பகுதியில் இதுகாலம் வரை எத்தகைய கல்வி வசதிக்கும் வாய்ப்பற்றிருந்த அடிநிலை மக்கள் பிரித்தானியத் தொடர்புகளால் சமூக உணர்வு பெறுகின்றார்கள். இது ஒரு முக்கிய பண்பாகும். இந்த அடி நிலை மக்களின் கிளம்புகையில் கிறிஸ்தவத்துக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு.

மேற்கூறியவை காரணமாகத் தமிழ்நாட்டின் வரலாற்றில் தோன்றும் இரு சக்திகளும்

(உயர் குழாத்தினரும் அடி நிலை மக்களும்) தங்களை நவ இந்தியமயமாக்கப் பின்புலத்தில் இனங்கண்டுகொள்ள முயன்றனர்.இதனால் தமிழ்ச்சமூக நிலையில் நான்கு நிலைப்பட்ட ஒரு எழுகை தெரியவருகின்றது.

1. இந்தியாவுக்குள் தமிழ்நாடு (தமிழிலும் பார்க்க இந்தியா வலியுறுத்தப்பட்டது) என்ற நிலைப்பாடு.
2. தமிழ்நாடு பிரதானப்படுத்தப்படுகின்றது (அதாவது தமிழ் என்பது இந்தியாவுக்குள் உள்ள ஒன்று என்பது மறுக்கப்படாமல் தமிழ் வலியுறுத்தப்படுகின்றது)
3. தமிழ்நாட்டிற்குள் உள்ள சமூகக் குழுமங்கள் (பெரும்பாலும் அடிநிலைச் சாதிகள்) தங்கள் இருப்புப் பற்றிய பிரக்ஞையைக் கொள்ளுதல்.
4. நிருவாக எதிர்ப்புடைய பகுத்தறிவுவாதக் கருத்துநிலை பேசும் ஒரு குழுமம்.

அச்சுசாதனப் பரவுகையுடன் மேற்கிளம்பும் இதழ்கள் மேற்கூறிய இந்த ஒவ்வொரு மட்டங்களில் இருந்தும் வெளிவருவதைக் காணலாம். உதாரணம்

1. சுதேசமித்திரன் (1882), இந்தியா (1906)
2. தமிழ்நேசன் (1917), நவசக்தி (1920)
3. பஞ்சமர் (1871), திராவிட பாண்டியன் (1885), ஆன்றோர் மித்திரன் (1886), பறையன் (1893), தமிழன் (1907), திராவிடக் கோகிலம் (1908)
4. அயோத்திதாஸ் (1845 - 1914) - ஒரு பைசாத் தமிழன்

இவற்றுள் நாம் முதலிரண்டு பற்றியே விரிவாக ஆராய்ந்துள்ளோம். சஞ்சிகைகளின் தேவை பற்றிய சமூகப் பின்புலம் முக்கியமானதாகும்.

சஞ்சிகைகளின் எழுகையை இன்னொரு நிலைநின்றும் பார்க்கலாம். தமிழ்நாட்டின் எழுத்தறிவு மயமாக்கத்துடனும், சனநாயக மயமாக்கத்துடனும் சஞ்சிகைகள் தொடர்பு கொண்டுள்ளன.

(அ) தமிழ், தமிழரின் நவீன மயமாக்கம், மேல்நாடுகளில் காணப்பட்ட வளர்ச்சிகளைத் தமிழுக்குள் கொண்டு வந்தது. சமூக மாற்றத்திற்கும் இதற்கும் ஒரு ஊடாட்டம் இருந்தது.

(ஆ) இந்த நவீன மயப்பாட்டு வளர்ச்சி காரணமாக இதழ்களினூடே சிறப்பு நிலைப்பட்ட (Specialised) இதழ் வளர்ச்சி ஏற்பட்டது. அதாவது தொடக்க காலத்தில் அரசியல், சமூகம், அறிவியல், பண்பாடு, இலக்கியம் என்பனவற்றைத் தொகுத்துத் தருகின்ற மரபினையுடைய இதழ்கள் படிப்படியாக ஒவ்வொரு துறைக்கும் உரியனவாக, சிறப்புநிலை பெறும் தன்மை இங்கு குறிப்பிடப் பெறுகின்றது. (அரசியல் சஞ்சிகைகள், அறிவியற் சஞ்சிகைகள், இலக்கிய சஞ்சிகைகள்)

(இ) மகிழ்வளிப்பு வாசிப்பின் தொடக்கம் (பிரசண்ட விகடன், ஆனந்த விகடன்)

சுதந்திர காலம் வரையும் எந்தப் பத்திரிகைக்கும் அடிநாதமான ஒரு அரசியல் வரிப்புணர்வு (Commitment) இருந்தது. அத்தகைய ஒரு சூழல் மாறி 'வாசிப்பதற்காகவே வாசிப்பு' என வாசிப்பு ஒரு விற்பனைப் பண்டமாகக் கையாளப்படும் நிலைமையின் எடுத்துக்காட்டாகக் 'குமுதம்' அமைகிறது. விடுதலைக்கு முன்னர், பின்னர் என்ற கோடு பிரிப்பில் இது ஒரு முக்கிய அமிசமாகும். ஆயினும் இதழ்களின் வளர்ச்சியை ஒரு தொடர்ச்சியாகப் பார்த்தல் வேண்டும். ஏனெனில் 1947க்குப் பின்னர் வருகின்ற வளர்ச்சிக்கான விதைகள், முளைகள் (சில வேளைகளிற் செடிகள்) சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே காணப்படுகின்றன.

இந்தப் பின்புலத்திலேயே தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள் இடம்பெறும் இடத்தினை நோக்கல் வேண்டும்.

## II

தமிழில் நவீன காலத்திற்கு முன்னர், அதாவது அச்சகயுகத்திற்கு முன்னர் காணப்படாதனவும் நவீன யுகத்தோடு மாத்திரமே வருகின்றனவுமான எழுத்துக்கள் யாவை என்பது பற்றி ஒரு தெளிவு நமக்கு முதன் முதலில் தேவை. அவற்றைப் பின்வருமாறு விரித்து நோக்கலாம்.

1. அரசியல், சமூக விமர்சனங்கள்: இத்தகைய விமர்சனங்கள் இப்பொழுது நடைபெறுகின்ற வகையில் முன்னர் நிகழவில்லை.
2. புனைகதை - சிறுகதை, நாவல்: ஏற்கனவே நிலவிய கதை மரபுகளுக்கும் இதற்கும் வேறுபாடுகள் உள்ளன. அந்த வேறுபாடுகளை மீறி, இவை தமக்கே உரிய பெரும் வளர்ச்சியைப் பெற்ற முறைமைகளையே இவற்றின் வரலாறாகக் கொள்ள வேண்டும்.
3. புதுக்கவிதை: சந்த ஒத்திசையை நம்பியிருக்காததும் பிரதானமாகக் கட்புலனுக்கே உரியதுமான கவிதை வடிவம்.
4. புதிய நாடகம்: கூத்து மரபில் வராது முற்றிலும் மேல்நாட்டு மரபினைச் சார்ந்தது.
5. இலக்கிய விமர்சனம்: அதாவது எந்த ஒரு இலக்கியப் பாடமும் தர ரீதியாக மதிப்பிடப்படலாம்; படவேண்டும் என்ற எடுகோளை உடையது.

மேலே கூறிய இந்த ஐந்து எழுத்து வகைகளும் உலகப் பொதுவானவை ஆகும். இவற்றுக்கான பிரதான கூறுகள் இந்திய மரபிலிருந்தோ, தமிழ் மரபிலிருந்தோ எடுக்கப்பட்டவை அல்ல.

இந்த வருகையில், இரண்டு நிலைகளைப் பிரித்துப் பார்த்தல் நலம்.

1. அவற்றின் வருகை அல்லது அவை மேற்கொள்ளப்படுகை.
2. வந்தவை, மேற்கொள்ளப்பட்டவை, தமிழ் அனுபவத்துடன் சுவறுகை. இந்தச் சுவறுகையுடன் தமிழ் அனுபவமும் சித்திரிப்பு முறையும் ஆழமாகின்றன.

இந்தச் சுவறுகையுடன்தான் உண்மையான நவீனத்துவம் வருகின்றது. 'நவீனத்துவம்' (Modernism) நவீனமாம் தன்மையிலிருந்து (Modernity) வருவது இந்த Modernity- யின் அடித்தளம் மனிதாயதச் சிரத்தையாகும் (Humanitarian). இந்த நவீனத்துவம் தமிழில் இரு துறைகளில் வெளிப்படுகின்றது.

அ) ஆக்க எழுத்து (Creative writing)
ஆ) படைப்பாக்கம் சாரா எழுத்து (non - creative writing)

நவீன தமிழ் இலக்கியத்தின் முதலாவது பெருவளர்ச்சி எனக் கொள்ளப்படவேண்டிது படைப்பாக்கம் சாரா எழுத்துக்களின் வருகையாகும். இதழ்கள் இதனை ரஞ்சகப்படுத்தின. இதழியலின் (journalism) அடித்தளமே இதுதான். இது செய்திகளை அறிவித்தல் என்கின்ற புதிய தொடர்பு முறைமையை வளர்த்தது. மதம், கல்வி, அரசியல், சமூகம் சார்ந்த பல இதழ்கள் வெளிவரத் தொடங்கின. இவை ஒவ்வொன்றும் 'சராசரி வாசகர்' எனப்படுபவரை நோக்கி அளிக்கப்பட்டன. இங்கே சுதந்திரம் பற்றிய எழுத்துக்கள், தமிழ், தென்னிந்திய அரசியற் பிரச்சினைகள் பற்றிய எழுத்துக்கள் என இவை பல்கிப் பெருகின.

ஏற்கனவே கண்டபடி ஆரம்ப நிலையில் இவை அறிவுத் தகவல்களையும் குறிப்புரைகளையும் (அபிப்பிராயங்கள்) கூறுவனவாக அமைந்து படிப்படியாக இலக்கியச் சிறப்பு நிலையினை எய்தின. இப்போக்கினூடே புதிய இலக்கிய வடிவங்கள் படிப்படியாக

அறிமுகமாயின (மாதவையாவின் பஞ்சாமிர்தம், வ.வே.சு. ஐயரின் பாலபாரதி ஆகியன சிறுகதையின் வளர்ச்சிக்கு முக்கியமானவையாகும்)

இந்த வளர்ச்சியினூடே 1930களில், வாசிப்பில் இரண்டு போக்குகள் துல்லியமாகத் தொடங்கின. (இவற்றுக்கான மூலக்கூறுகள் அதற்கு முன்னரேயே காணப்பட்டன. 'துப்பறியும் நாவல் வாசிப்பு - வெகுசன வாசிப்பு'; 'விமர்சனங்கள் - காத்திர வாசிப்பு')

ஒன்று வெகுசன வாசிப்பு: இரண்டு காத்திர வாசிப்பு. தமிழின் முதலாவது காத்திரமான சிறப்புநிலை இலக்கிய நவீனத்துவ இதழாக **மணிக்கொடி** கிளம்புகிறது. மணிக்கொடியின் வரலாற்றினுள்ளே இந்தச் செல்நெறியைக் காணலாம். 1933 - 35 வரை பிரதானமாக, அது அரசியல் விமர்சன இதழே; 1935 - 38 இல் அது இலக்கிய நவீனத்துவ இதழாகப் பரிணமித்தது.

இக்கட்டத்தில் இலக்கிய நவீனத்துவம் என்பது மேற்கில் தொழிற்பட்ட முறைமைக்கும் (இந்தியாவில்) தமிழில் தொழிற்பட்ட முறைமைக்கும் வித்தியாசம் உள்ளது என்பதை மனத்திருத்திக் கொள்ளல் அவசியமாகும். மேல் நாட்டில் modernism என்பது பிரதானமாக முதலாவது உலக யுத்தத்துடன் வருகின்ற சமூக, உணர்முறைமை மாற்றங்களின் அதாவது, மனிதர்களைப் புதிய நோக்கில் பார்க்கின்ற ஒரு முறைமையுடன் வருகின்றது.

தமிழில் நவீனத்துவம் என்பது, புதியவற்றின் வருகை தமிழினுள் உள்வாங்கப்படுவதன் வரலாறு ஆகும். இது பாலபாரதி, பஞ்சாமிர்தம் முதலே நடைபெற்று வருவதாம். ஆனால் மணிக்கொடியுடன்தான் சமூக மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களைத் தனிமனித உணர்வு நிலைநின்று சித்திரிக்கும் பண்பு, கலாநேர்த்தியுடன் செய்யப்படும் முறைமை என்பன வளமடையத் தொடங்குகின்றன. அத்துடன் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் எடுத்துப் பேசப்பெறும் முக்கிய ''கட்டங்களை இக்கண்ணோட்டத்தில் மீள்நோக்கிச் செய்யும் தன்மையும் காணப்படுகிறது. (புதுமைப்பித்தனின் 'அன்றிரவு', சாபவிமோசனம்' முதலிய கதைகள்) எனவே நவீனத்துவம் என்ற சொல்லைக் கையாளுகையில் ஒரு விமர்சன நிதானமிருத்தல் அவசியம்.

நவீனத்துவத்தின் (modernity) வருகையோடேயே தமிழில் 'மறுமலர்ச்சி இயக்கம்' என்ற எண்ணக்கரு வருகிறது. மறுமலர்ச்சி என்பது Renaissance என்பதன் தமிழாக்கமாகும். அதாவது, புதிய வருகைகளுடன் தமிழை மீண்டும் முதனிலைப்படுத்தல் என்பது இதன் கருத்தாகும். இது இலக்கியம் பற்றிய ஒரு புதிய பார்வைக்கு இடமளித்தது. ஆனால் தமிழ்ப் புலமையாளரிடையே இந்த எண்ணக்கரு பற்றிக் கருத்து வேறுபாடு காணப்பட்டது. எஸ் வையாபுரிப்பிள்ளை தமது கட்டுரைத்தொகுதி ஒன்றுக்குத் 'தமிழின் மறுமலர்ச்சி' என்றே பெயர் வைத்தார். ரா.பி. சேதுப்பிள்ளை 'மறுமலர்ச்சி' என்ற எண்ணக் கருவையே எதிர்த்தார்.

இந்தக் காலகட்டம் முதல் ஐரோப்பிய, இந்திய மொழிகளிலிருந்து ஆக்கங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படத் தொடங்கின. ரஷ்ய எழுத்தாளர்கள் ஆங்கிலம் வழியாக அறிமுகம் செய்யப்பட்டனர். முன்னர் சமஸ்கிருதத்திலிருந்து மாத்திரமே (ஒரேவேளைகளில் பிராகிருதத்திலிருந்தும்) இலக்கிய மாற்றம் செய்யும் முறைமை போய், இப்போது வங்காளம், மராட்டி, ஹிந்தி முதலிய மொழிகளிலிருந்தும் தமிழில் நாவல்கள் மொழிபெயர்க்கப்படத் தொடங்கின. தமிழ் நாவல் வளர்ச்சியில் வங்காள, மராட்டிய மொழிப் புனைகதைகளின் தாக்கம் மிகப்பெரியதாகும். பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள் பலர் தமிழ்ச் சமூகத்தை, குறிப்பாகப் பாத்திர மோதல்களையும் அவை பற்றிய சித்திரிப்புக்களையும் காண்டேகர், தாராசங்கர் பானர்ஜி, சரத்சந்திரர் போன்றவர்கள் தீர்மானித்தனர். இந்த வருகைகள் தமிழ் இலக்கியத்துக்கு அனைத்திந்தியப் பரிமாணத்தை வழங்கின.

எழுத்தைச் சமூக, அழகியல் விமர்சனத்துக்கான ஒரு விடயமாகப் பார்க்கின்ற தன்மை படிப்படியே ஆழமாகத் தொடங்குகிறது. இந்த ஆழப்பாடு நடக்கும் அதே வேளையில்தான் தமிழ் நாட்டின் இதழியல் வளர்ச்சியில் முக்கியம் பெறும் நான்கு அம்சங்கள் நிலைபெறத் தொடங்குகின்றன.

1. அரசியல் இதழியல்: திராவிட இயக்க எழுத்துக்கள், பொதுவுடமை இயக்க எழுத்துக்கள்.
2. நவ வாசக வட்டத்துக்கான எழுத்துமுறைமை: தினத்தந்தியின் வருகையும் அது செய்திகளை அறிவித்த முறைமையும். இது தமிழ்ப் பத்திரிகை உலகில் பெரும் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தியது.
3. புலனாய்வுச் சஞ்சிகைகள்: தமிழ்நாட்டின் இதழியல் துறையில் இன்று மிக முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ள இதழ் வடிவம் புலனாய்வு முறைமையாகும். பொது முக்கியத்துவம் உடைய மக்கள் விடயங்கள், செய்திகள் பற்றிய பின்புல நடவடிக்கைகளை வெளிக்கொணர்ந்து 'பெரிய இடங்கள்' பற்றி வாசக அவாவினைத் தீர்ப்பதில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. தமிழ் நாட்டின் அரசியல் வாழ்க்கையில் இப்புலனாய்வு இதழ்கள் தமது தாக்கத்தை 'இந்துநேசன்' பாலம் முதலே இவ்வெழுத்து முறைமைக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. இன்றைய அரசியலில் இவற்றுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இதற்கான உதாரணங்களாக அமைபவை தராசு, நக்கீரன், ஜுனியர்விகடன், தமிழன் எக்ஸ்பிரஸ் முதலானவை ஆகும்.
4. சனரஞ்சக வாசிப்புச் சஞ்சிகைகள்: ஏற்கனவே குறிப்பிட்ட குமுதத்தைக் குறியீடாகக் கொண்டவை.

இத்தகைய ஒரு பின்புலத்திலேதான் இலக்கியச் சிறப்பு நோக்குள்ள இலக்கியத்துக்கான சிற்றிதழ்கள் (little journals) தோன்றின. 1950-80கள் வரையுள்ள காலப்பகுதியில் இவற்றின் போக்கும் தொழிற்பாடுகளும் நுண்ணியதாக அறியப்பட வேண்டியனவாகும்.

வல்லிக்கண்ணன் இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றிய பின்வரும் பட்டியலைத் தருவார்: மணிக்கொடி, கலாமோகினி, கிராம ஊழியன், சரஸ்வதி, சாந்தி, எழுத்து, கசடதபற, ஞானரதம், பிரக்ஞை, வானம்பாடி, கொல்லிப்பாவை, சுவடு, வைகை, மானுடம், தாமரை, சிகரம், யாத்ரா, இலக்கிய வெளிச்சம், வடியல், படிகள், பரிமாணம், மனவோசை, மல்லிகை, கணையாழி, தீபம், புதியபார்வை (சுபமங்களா, காலச்சுவடு போன்றவற்றை இதில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.)

இந்த இலக்கியச் சஞ்சிகைகளின் முக்கிய அம்சமாகக் குறிப்பிடப்பட வேண்டியது இவற்றின் கருத்து நிலை மையப்பாடு ஆகும்.

சனரஞ்சக எழுத்தானது வெகுசன வாசிப்புக்கான எழுத்தாக மாறி ஒரு குறிப்பிட்ட உலகப் பார்வையைக் கொண்டதாய், மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவற்றின் காத்திரப்பாட்டுடன் எடுத்துக்கூறும் முறைமையிலிருந்தும் பிறழ்ந்தனவாய் அமையும் ஒரு பண்பு படிப்படியாக மேற்கிளம்பத் தொடங்குகிறது. இந்த ஒரு அம்சமே அவற்றின் வாசக விசாலிப்புக்கும் கவர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்து விடுவது உண்டு. இத்தகைய ஒரு சூழலில் அதே சஞ்சிகைகளில் காத்திரமான விவாதங்களும் இலக்கியப் பரிசோதனைகளும் நடைபெறுவதென்பது முடியாது.

ஆனால், இதே காலகட்டத்தில் இலக்கியத்தின் பயன்பாடு, கையாளுகை பற்றிய

அடிப்படைக் கருத்து வேறுபாடு கொண்ட, இலக்கியத்தின்பால் ஒரு வரிப்புணர்வு கொண்ட (commitment) ஒரு எழுத்தாளர் குழாம் தோன்றியிருந்தது. இவர்களிடையே இலக்கியம் பற்றிய அடிப்படைக் கருத்து நிலை வேறுபாடுகள் காணப்பட்டன. இலக்கியத்தின் தன்மை, பயன், அழகியல் ஆகியன பற்றி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களுடைய குழுக்கள் தொழிற்படத் தொடங்கின.

மேற்குறிப்பிட்ட இரு செல்நெறிகளும் இலக்கியச் சிற்றிதழ்களின் தோற்றத்திற்குக் காரணமாயின. 1970 - 80 - 90களில் நடைபெற்ற இலக்கியக் கருத்துநிலைப் போர்கள் இவற்றின் வழியேயே நிகழ்த்தப்பட்டன. அந்த அளவில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இச்சஞ்சிகைகளுக்கு முக்கியமான இடம் உண்டு.

ஆனால், நமது இலக்கிய வரலாறு பதிவு செய்யாது விட்ட ஒரு முக்கிய அம்சம் யாதெனில் இத்தகைய சிறப்பு நிலை முனைப்புக் கொண்ட சஞ்சிகைகள் மற்றைய தொழில் துறைகளிலும் வளர்ந்தமையே ஆகும். வேளாண்மை, தொழில்நுட்பம், தட்டெழுத்து, பொது அறிவியல், கணனி, தையற்கலை, சோதிடம் ஆசிரியர் வாண்மை விருத்தி போன்றவற்றுக்கும் இச்சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன என்பதை நோக்கும் பொழுது சஞ்சிகைத் துறையில் ஏற்பட்டு வருகின்ற சிறப்பு நிலைக்கூர்மை (specialisation) நன்கு தெரியவருகிறது. சினிமா பற்றியும் மகளிருக்கெனவும் பிரசுரிக்கப்படும் இதழ்களும் சனரஞ்சகத்தன்மையும் வெகுசன இயல்பும் கொண்டனவாகக் காணப்படினும் உண்மையில் இவற்றின் 'இலக்கு வாசகர்களை' (targetreaders) சிறப்புநிலை வாசகர்களாகவே கொள்ளவேண்டும். இதழ்களின் வரலாறு பற்றிப் பேசும் போது இவை அதிகம் முக்கியத்துவம் பெறாதுபோவது கவலைக்குரியது. இதழியல், சினிமா இதழ்களுக்குப் பெரிதும் கணிசமான இடத்தைப் பெறுகிறது. உண்மையில் இலக்கியச் சஞ்சிகைகளின் வளர்ச்சியை இப்பின்புலத்திலிருந்து பிய்த்தெடுத்துப் பார்க்கக் கூடாது.

இலக்கியச் சிற்றிதழ்களால் ஏற்பட்ட முக்கிய பெறுபேறுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. புதுக்கவிதையின் ஏற்பும் நிலைப்பாடும் - சிற்றிதழ்கள் வழியாகவே தமிழில் புதுக்கவிதை நிலைபெற்றது என்பது ஒரு பொருத்தமான கூற்றாகும். எழுத்து, கசடதபற, வானம்பாடி ஆகியனவற்றின் வரலாற்றினுள் இவ்வுண்மை தொக்கு நிற்கிறது.
2. புனைகதை மரபு வளமூட்டப்பட்டமை - இதில் கணையாழி, சரஸ்வதி, சாந்தி, அலை, காலச்சுவடு, சுபமங்களா ஆகியனவற்றின் பணி முக்கியமானது. ஜெயகாந்தன், அசோகமித்திரன், சா.கந்தசாமி, வண்ணநிலவன், அம்பை, நீல பத்மநாபன், கி. ராஜநாராயணன், ஜெயந்தன் போன்றவர்களுடைய புனைகதைகள் சிறு சஞ்சிகைகள் மூலமாகவே முதலில் வெளிவந்தன.
3. காத்திரமான இலக்கிய விவாதங்கள் சிறு சஞ்சிகைகளின் இயல்பு காரணமாக இத்தகைய விவாதங்கள் தவிர்க்க முடியாதன ஆயின. மார்க்சியம் எதிர்ப்பு பற்றியும் கவிதையின் இயல்பும் பற்றியும் அமைப்பியல் வாதம் பற்றியும் தலித் இலக்கியம் பற்றியும் ஆழமான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.
4. முன்னிலை நவவேட்கை வாத (avant - gardist) அம்சங்கள் இவை சிற்றிதழ்கள் பலவற்றில் காணப்பட்டன. அதாவது, சர்வதேசிய மட்டத்தில் நவமாகத் தோன்றிய இலக்கியக் கொள்கைகளை, போக்குகளை அறிமுகம் செய்வதிலும் அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதிலும் இச்சஞ்சிகைகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

இவற்றை எடுத்துக் கூறும்பொழுது இலக்கியச் சிற்றிதழ்களுக்கும் சனரஞ்சக இதழ்களுக்கும் இடையே நிலவிய ஊடாட்டத்தினை மறந்துவிடக்கூடாது. உண்மையில் சனரஞ்சக இதழ்கள் இலக்கிய சிற்றிதழ்களைத் தமக்குப் பயன்படக்கூடிய எழுத்தாளர்களைப் பெறுவதற்கான நாற்றுப்பதிகைகளாகவே கொண்டிருந்தன. ஜெயகாந்தன், சு. சமுத்திரம், பாலகுமாரன், கி.ராஜ நாராயணன், பிரபஞ்சன், மேலாண்மை பொன்னுச்சாமி எனப் பல பெயர்களைக் குறிப்பிடலாம்.

இலக்கியச்சிற்றிதழ்களின் இப்பண்பினைக் கூறும்பொழுது இன்னொரு விடயமும் முக்கியப்படுத்தப்பட வேண்டும். அதாவது, சில இலக்கியச் சிற்றிதழ்கள் தங்களுடைய ஏற்புடைமை காரணமாகச் சிற்றிதழ்கள் என்ற வட்டத்தை மீறி, சிறு சனரஞ்சகச் சஞ்சிகைகளாக மாறக்கூடிய நிலைமை இருந்ததையும் மறந்து விடக்கூடாது. தீபம், சுபமங்களா ஆகிய இரு சிற்றிதழ்களும் இச்செல்நெறிக்கான உதாரணங்களாகக் கொள்ளலாம்.

## III

இக்கட்டத்தில் இலங்கையில் இதழ்களின் வரலாறு பற்றிய ஒரு மிகச்சிறிய அறிமுகக்குறிப்பு அவசியமாகிறது. தமிழின் பொதுவான வளத்துக்கு உதவுகின்ற ஈழத்து இதழ்கள், எழுத்து என்பதற்கு ஒரு வரலாற்று, சமூக, பொருளாதாரப் பின்புலம் உண்டு என்பதையும் நிறுவுகின்றன.

இங்கு இலங்கையின் முக்கியமான வளர்ச்சி நிலைகளே குறிப்பிடப்படுகின்றன. இலங்கையிலும் அச்சுச் சாதனம் மேனாட்டாட்சியாலும் கிறிஸ்தவ தேவ ஊழியக் கருமங்களாலுமே அறிமுகம் செய்யப்படுகின்றன. இவற்றுள் கிறிஸ்தவமே அச்சு ஊடகத்தை மக்கள் நிலை கொண்டு செல்வதற்குத் தொடங்குகின்றது. சாதாரண சனங்களின் எழுத்தறிவு எழுகைக்கான காரணமாக அமைந்த புரோட்டஸ்தாந்த கிறிஸ்தவர்களே இப்பணியிலும் ஈடுபடுகின்றனர். இதன் முதல் முயற்சியாக அமைந்தது. 1841இல் வெளியிடப்பெற்ற 'உதயதாரகை' என்ற இதழாகும். இதன் ஆங்கிலப் பெயர் Morning Star ஆகும். இதனைத் தொடர்ந்து வேறு சில இதழ்களும் வெளிவந்தன. குழந்தைகளை நோக்கிய 'பாலியர் நேசன்' என்பது முக்கியமானது.

19ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் யாழ்ப்பாணத்தில் நாவலருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே அச்சு ஊடகக் கையாளுகையில் ஒரு பலப்பரீட்சையே நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் அச்சுக்கூடம் நிறுவிக் கிறிஸ்தவர்களை எதிர்க்க முடியாத நிலையில்தான் நாவலர் 1866இல் தமிழகத்திற்கு வந்து இங்கு 'வித்யாநுபாலன அச்சியந்திரச்சாலையை' நிறுவிப் பதிப்பு வேலைகளையும் தொடங்குகிறார். ஆறு வருடங்களின் பின்னரே ஈழம் திரும்புகிறார். 1870களில் இலங்கையில் சுதேச நிலைப்பாட்டினை வற்புறுத்துவனவாக ஆங்கில, தமிழ் இதழ்கள் வெளியாயின. நாவலர் 'இலங்கைநேசன்' என்ற ஓரிதழோடு சம்பந்தப்பட்டிருந்தார். 1870களின் பின்கூற்றிலேயே ஈழத்துச் சைவ எழுச்சியின் பிரதான ஏடுகளாகிய 'இந்துசாதனம்', Hindu Organ வெளியாகின்றன. மேல்நாட்டு மயமாக்கத்தை எதிர்த்து இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டு நிலைப்பாட்டினை வற்புறுத்துகின்ற 'முஸ்லிம் நேசனும்' 19ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிற்குரியதே. இதனைப் பிரசித்தி பெற்ற சித்திலெப்பை அவர்கள் நடத்தினார். கத்தோலிக்கர்களின் இதழான ''சத்தியவேத பாதுகாவலன்'' (The Cathalic Guardian) இக்காலத்தைச் சேர்ந்ததே.

இலங்கை அச்சு ஊடக வளர்ச்சியின் அடுத்த பிரதான கட்டமாக அமைவது சுதேச தேசிய உணர்வு முளைவிடத் தொடங்கிய 1930களாகும். இக்காலகட்டத்திலேயே அரசியல், சமூக விமர்சன இதழ்கள் வரத் தொடங்குகின்றன. இவ்வகையில் 1930 ஒரு

பிரிகோடாக அமைகிறது. அவ்வருடம் தான் யாழ்ப்பாணத்தின் ஈழகேசரியும் (அரசியல் சமூக விமர்சன செய்தி வாராந்திர இதழ்) கொழும்பிலிருந்து முதல் தமிழ்த் தினசரியான வீரகேசரியும் வெளிவந்தன. 1932 இல் 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தினரால் 'தினகரன்' பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கிற்று. இவற்றினுள் ஈழகேசரி இன்று இல்லை. தினகரன், வீரகேசரி ஆகியன தொடர்ந்து நாளிதழ்களாக வெளிவருகின்றன. 1930களில் இலங்கையின் தோட்டப் பகுதியாகிய மலையகத்தில் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்க்கான தொழில்நிலை முன்னேற்ற நடவடிக்கைகளில் நடேசையர் என்பவரும் அவர் மனைவியும் ஈடுபடுகின்றனர். இக்காலகட்டத்தில் அங்கும் இதழ்கள் தொடங்கப்படுகின்றன. செய்தி நாளிதழ் வெளியீட்டில் இலங்கையில் நடந்தேறிய சில முக்கிய மைல்கற்களைக் குறிப்பிட வேண்டும்.

இலங்கையின் அரசியல் வளர்ச்சி கொழும்பை மையமாகக் கொண்டே இயங்கி வந்தமையால் நாளிதழ்கள் கொழும்பிலிருந்தே வெளிவந்தன. ஆனால் 60களின் பின்கூற்றிலிருந்து வடகிழக்குப்பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பை மையமாக வைத்தே நடைபெறத் தொடங்கியமையாலும் யாழ்ப்பாணத்தில் நாளிதழ்கள் தொடங்க வேண்டிய சூழலும் தேவையும் ஏற்பட்டது. இவ்வாறு தோன்றியதே 'ஈழநாடு' என்பதாகும். இதனைத் தொடர்ந்து 80களில் ஏற்பட்ட அரசியல் போராட்டங்கள் காரணமாக 'ஈழமுரசு', 'முரசொலி', 'ஈழநாதம்', 'உதயன்' எனும் நாளிதழ்கள் தொடங்கப்பெற்றன. இவற்றினுள் உதயன் யாழ்ப்பாணத்திலும், ஈழநாதம் வன்னியிலும் இருந்து இன்று தொழிற்படுகின்றன.

இலங்கையின் இலக்கிய இதழியல் நடவடிக்கைகளை நோக்கும் பொழுது ஈழகேசரி முக்கிய இடத்தைப் பெற்றதெனினும் சிறப்பு நிலை இலக்கிய இதழ்களாக வெளிவருபவை 1940லேயே வெளிவருகின்றன... 'மறுமலர்ச்சி' (யாழ்ப்பாணம்), 'பாரதி' - இந்த இரண்டு பத்திரிகைகளுடனும் ஈழத்தின் இலக்கிய நவீனத்துவம் ஆரம்பிக்கிறதென்றும் ஆய்வாளர்கள் வாதிட்டுள்ளனர். மறுமலர்ச்சி, ஒரு குழுவினரால் வெளியிடப்பட்டது. பாரதி, கே. கணேஷ் என்பவரால் வெளியிடப்பட்டது. இந்த இரு இதழ்களினதும் பெயர்களே தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் நிலவிய இலக்கியத் தொடர்பினையும் தமிழ்நாட்டின் செல்வாக்கு மேலாண்மையையும் காட்டுகின்றன எனலாம்.

இலங்கையில் தனி இலக்கியப் பத்திரிகைகள் வெளிவந்தனவெனின் இலங்கை எழுத்தாளர்கள் பலர் தமிழகச் சஞ்சிகைகளிலேயே எழுதினர். உதாரணம் 'இலங்கையர்கோன்', வைத்திலிங்கம். இவர்கள் கலைமகளில் எழுதினர். 50களின் பிற்கூற்று முதல் 60, 70களில் முற்போக்கு இலக்கிய வீச்சு பரவியிருந்த காலத்தில் முற்போக்கு அணியையும் எதிரணியையும் சேர்ந்த பல சஞ்சிகைகள் வெளிவந்தன. இவற்றில் முக்கிய இடம் வகிப்பது 'மல்லிகை' ஆகும். 70களில் தொடங்கிய மல்லிகை இன்றும் வெளிவருகிறது. முற்போக்கு எதிர்நிலைச் சஞ்சிகைகளாக முக்கிய பணியை ஆற்றியனவற்றுள் 'கலைச்செல்வி', 'அலை' முக்கியமானவை. அலை, முற்போக்கு எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தமிழக முற்போக்கு எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்து மேற்கொண்டது. 80களில் ஏற்படுகின்ற மாற்றங்களோடு வெளிவரத் தொடங்கிய சஞ்சிகைகள் இரண்டு முக்கியமானவை. ஒன்று 'திசைகள்'; மற்றொன்று 'வெளிச்சம்'.

இன்று கொழும்பை மையமாகக் கொண்டு வெளிவரும் இலக்கியச் சிற்றிதழ்களுள் முக்கியமானவை 'மல்லிகை', 'மூன்றாவது மனிதன்', கிழக்கு மாகாணத்தில் வெளிவருவனவற்றுள் முக்கியமானது 'களம்' ஆகும்.

இலங்கையின் இன்றைய பிரதான நாளிதழ்கள் வீரகேசரி, தினக்குரல், தினகரன், உதயன் என்பனவாகும். தினமுரசு என்ற வார இதழ் மிகப்பிரபலமானது.

இலங்கையின் இதழியல் வளர்ச்சியில் அரசியல், தொழிற் சங்க இதழ்கள் முக்கிய இடம் பெறும். தமிழ்த் தேசியத்தின் வெளிப்பாடாக அமைந்த 'சுதந்திரன்', கம்யூனிஸ்ட் கட்சிகளின் வெளியீடாக அமைந்த 'தேசாபிமானி', 'தொழிலாளி' முக்கியமானவை ஆகும். மலையகத் தமிழ் எழுத்துக்களின் களமாக வெளிவந்தவை 'செய்தி', 'அஞ்சலி' என்பன. இப்பொழுது 'கொழுந்து' முதலிய இதழ்கள் வெளிவருகின்றன. இலங்கைத் தமிழ் இதழியல் வெளியீட்டில் ஒரு முக்கியமான இடம் வகித்த 'சரிநிகர்' என்ற வார இதழ் கலை, இலக்கியம் பண்பாடு பற்றிய உயர்நிலை விமர்சனங்களைக் கொண்ட ஓர் இதழாகும். உண்மையில் இதனை வெகுசனப் பண்பாட்டு வட்டத்துள்ளிருந்து வரும் பத்திரிகைக்கான ஒரு மாற்றுப் பத்திரிகையாகவே (alternate Journal) கொள்ளவேண்டும்.

மலேசியா, சிங்கப்பூரிலும் அவ்வந்த நாடுகளின் சமூக அரசியல் பின்புலங்களிலிருந்து வரும் இதழ்களாக 'தமிழ்நேசன்', 'தமிழ் முரசு' ஆகியன வெளிவருகின்றன. புலம் பெயர்ந்த தமிழர்களிடையே இருந்து 'ஈழநாடு' போன்ற பத்திரிகைகள் பிரான்சிலும் கனடாவிலும் வெளிவருகின்றன. புகலிடத் தமிழர்களின் இலக்கியச் சிற்றிதழ்களாக, 'சுவடுகள்', 'எக்ஸில்', 'உயிர்நிலை', 'அஆஇ' முதலானவை வெளிவருகின்றன.

## IV

தமிழில் இதழ்களின் வளர்ச்சி பற்றி மிகமிக மேலோட்டமாக எடுத்துக் கூறப்பட்ட இவற்றின் பின்னர் இதழ்களின் தொடர்புவன்மை குறித்தும் அவற்றின் வாசகத்தளம் குறித்தும் சிலவற்றைக் கூறுவது அவசியமாகிறது.

இதழ்கள் என்ற சொல் செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகிய இரண்டையும் பொதுப்படக் குறிப்பதாக உள்ளது. சஞ்சிகைகளையும் (Magazines-ஐயும்) நாளிதழ்களையும் மிகத்துல்லியமாகப் பிரித்து நோக்க வேண்டும். நாளிதழ்கள் ஒவ்வொரு நாளும் வருபவை. **அந்த அடுத்த நாள், முதல் நாளின் வெளியீட்டுக்கு மதிப்பிருக்காது. ஆனால் சஞ்சிகையைப் பொறுத்த வரையில் அடுத்த இதழ்வரும் வரையும் நடப்பிதழுக்கு முக்கியத்துவம் உண்டு.** அத்துடன் நூல்களும் சஞ்சிகைகளுக்குமான தொடர்பியல் வேறுபாடுகளையும் அவதானித்துக் கொள்ளல் வேண்டும். நூல்களுக்குச் சஞ்சிகைகளுக்கில்லாத ஒரு நிரந்தரத் தன்மை உண்டு.

சஞ்சிகைகளுடனேயே மகிழ்வளிப்புக்கான வாசிப்பு என்பது (entertainment reading) நிலைபெறத் தொடங்குகிறது. இந்த முக்கியத்துவத்தை வெகுசனப் பண்பாடு மிக நுட்பமாகப் பயன்படுத்தியுள்ளது. சஞ்சிகைகள் ஒரு பெரும்பொருள் பற்றிய சகல விடயங்களையும் தருவனவாகவும் அன்றேல் பல்வேறு விடயங்கள் பற்றிய பல்வேறு தரவுகளைத் தருவனவாகவும் அமையும். பண்பாட்டின் வடிவங்களை நம்மிடையே நிலைநிறுத்துவதற்கும் அவற்றின் செல்வாக்கை விரிவடையச் செய்வதற்கும் சஞ்சிகைகள் பயன்படுகின்றன. இதனைத் தமிழ்நாட்டின் இன்றைய பண்பாட்டு வடிவங்களை நோக்கும் போது தெரிந்து கொள்ளலாம். சினிமா, தொலைக்காட்சி, வானொலி, சனரஞ்சக புனைகதை.

இந்த நிலையில் மாத்திரமல்லாமல் பொதுவான மத, பண்பாட்டு நிலைகளிலும் சஞ்சிகை முக்கிய இடம் பெறுகிறது. பரந்து பட்ட வாசிப்பு என்பது நவீன யுகத்தின் ஒரு கொடையாகும். **இன்றைய வெகுசனப் பண்பாட்டுச் சூழலில் வாசிப்பு என்பது தரவுகளைத் தருவது, சிந்தனையைத் தூண்டுவது என்கின்ற நியமங்களுக்கு அப்பாலே சில** முக்கிய **பண்பாடுகளுக்குத் தளமாகிறது** என்று தொடர்பியற் சமூகவியலாளர் கூறுகின்றனர். அவை பின்வருமாறு:

1. எழுத்தறிவு நமது கற்பனையைத் தூண்டுகிறது. நமது நினைவு நிறைவேற்றங்களுக்காக நாம் வாசிக்கிறோம்; எழுதுகிறோம்.
2. எழுத்தறிவு அக உணர்வுகளை வெளிக்கொணர்ந்து மனத்தைச் சமநிலைப் படுத்துகிறது. பாலகுமாரனின் நாவல்கள் சில, வாசிப்பு மட்டங்களில் ஒரு உளவியல் தேவையாக மாறுவதை அவதானிக்கலாம்.
3. இவற்றின் காரணமாக வாசிப்பு, நம்மைச் சூழலை ஏற்க வைக்கிறது.

மிக நுணுக்கமாகச் சிந்திக்கும் பொழுது இவை ஒவ்வொன்றிலும் இதழ்களின் தொழிற்பாட்டினைக் காணலாம்.

வாசிப்பில் வாசகரின் மனப்பக்குவம் முக்கியமாகும். இந்த அடிப்படையில் வாசகர்களை இரண்டு நிலைப்படுத்திப் பார்ப்பார்கள்.

அ) அவர்களின் உடல்வயது (Physical age)

ஆ) அவர்களின் மனவயது (mental age)

உடல்வயதில் கூடியவர்கள் பலர் மனவயதில் குறைந்தவர்களாக இருப்பார்கள். தமிழின் சனரஞ்சக எழுத்துக்கள், புனைகதைகள் பெரும்பாலும் 18-35 வயதினரை நோக்கியே எழுதப்பட்டிருத்தலை அவதானிக்கலாம்.

இங்கும் மிக நுணுக்கமாக நோக்கும் பொழுது வெகுசன இதழியல் தொடர்பு வன்மைக்கான காரணங்கள் மிகத் துல்லியமாகத் தெரிகின்றன. வாசிப்பு தனிநிலைப்பட்ட ஒரு மனித முயற்சியாகையால் அது மனிதரின் தனித்துவப்பாட்டை மேலும் வலுக்கச் செய்கிறது எனலாம்.

## V

நவீன தமிழிலக்கியத்தின் அச்சாணி யான ஓர் அம்சத்தை நினைவு கூர்ந்து இச்சிறு கட்டுரையினை நிறைவு செய்யலாம்.

நவீன தமிழ் இலக்கியம் தமிழ்நாட்டில் முன்னர் எக்காலத்திலும் நிலவாத சனநாயக மயப்பாட்டின் சிசுவும் செவிலியுமாகும். இதழ்களின் தேவை, வளர்ச்சி, விரிவு, எழுத்துச் சனநாயக மயப்படுகையின் தவிர்க்கமுடியாத பெறுபேறு ஆகும். அதற்குள் இனியவையுமுண்டு; இன்னாதவையுமுண்டு.



"கற்பதற்கும், உலகை அறிந்து கொள்ளவும் தயாராக நான் இருக்கின்றேன். எனக்கு உதவுவீர்களா?"

பரிகாரம் என்பது குறிப்பிட்ட ஒரு பலவீனமான நிலையிலிருந்து மீள்வதற்காக மேற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை ஆகும். தமிழ் மக்கள் வாழ்க்கையில் சில காலங்களுக்கு முன்னர் 'பரியாரியார்' எனும் சொல் பெருவழக்குப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மனித உடலில் ஏற்படும் நோய்களை மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்பவர், (ஆயுர்வேத சித்த மருத்துவத் துறையில்) பரியாரியார் என அழைக்கப்பட்டார். பரிகாரி → பரிகாரியார் → பரியாரியார் என இவ்வழக்கு இடம் பெற்றது எனலாம்.

எமது கல்விப்புலத்திலும் பரிகாரச் செயற்பாடு மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. கற்றலில் பரிகாரச் செயற்பாடு ஏன் முக்கியமானது என்பது முக்கியமான ஒரு வினாவாகும்.

பிள்ளைகள் தம் கல்விக் காலத்தில் அந்தந்தத் தரமட்டங்களில் பெற்றுக்கொள்ள வேண்டிய அடைவு மட்டங்களைப் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் அவர்கள் கற்றலில் பின்தங்கியவர்களாக ஆகி விடுகின்றனர். இந்த நிலையில் அவர்களது கற்றற் செயற்பாடுகளும், பிற நடவடிக்கைகளும் பல மாற்றங்களுக்கு உட்படுகின்றன. கற்றற் செயற்பாடுகளிலிருந்து விலகி நெறி-பிறழ் நடத்தைகளில் ஈடுபடுபவர்களாகவும் அவர்கள் ஆகிவிடுகின்றனர்.

# தாய்மொழிக் கல்வியில் பரிகாரச் செயற்பாடு

கந்தையா முருகதாசன்,
ஆசிரிய ஆலோசகர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்

கற்றலில் பின்தங்கிய மாணவர்களைப் பின்வருமாறு இரண்டு வகைகளாக நோக்கலாம்.

1. குறிப்பிட்ட சில பாடங்களில் மட்டும் பின் தங்கியவர்களாக இருப்பவர்கள்.
2. எல்லாப் பாடங்களிலுமே பின்தங்கியவர்களாக இருப்பவர்கள்.

இவர்களுள் முதலாவது பகுதியினர் குறிப்பிட்ட பாடங்களில் ஆரம்பக் கல்வியில் பெற்றிருக்க வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் படிப்படியாக அப்பாடங்களில் பின்தங்கியவர்களாக ஆகியவர்கள். இரண்டாவது பகுதியினர் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாகவும் செவி மடுத்தல், கிரகித்தல், சிந்தித்தல், தொகுத்தல், எழுதுதல் முதலிய மொழித்திறன்களையும் இழந்து அவற்றின் விளைவாக கற்றற் செயற்பாடுகளையே இழந்து நிற்பவர்கள். பிள்ளைகள் கற்றலில் பின் தங்குவதற்குப் பின்வரும் காரணிகள் இருக்கலாம்.

1. குடும்பத்தில் கற்றலுக்குரிய வழிகாட்டல் இன்மை
2. பாடசாலையில் முறையான கற்றற் செயற்பாடு நடைபெறாமை.
3. குடும்பப் பொருளாதார நிலைமை
4. குடும்ப உறவினரிடையே நிலவும் முரண்பாடுகள்.
5. பிரதேசத்தின் அரசியல் பொருளாதார சமூகச்சூழ்நிலை.
6. இடப்பெயர்வும் கதியற்ற வாழ்க்கையும்.
7. பிள்ளைகளின் உடல் ரீதியான / உள ரீதியான குறைபாடுகள்.

கற்றலின் அடிப்படையே தாய்மொழிக் கல்விதான். பிள்ளை தன் தாயின் மொழிவழியாகவே உலகத்தை அறிந்து கொள்கிறது. தாயானவள் தன் பிள்ளையைத் தாலாட்டும் போதும், சோறூட்டும் போதும் மொழியைப் பயிற்றுவதுடன் உலகத்தையும் அறிய வைக்கின்றாள். குடும்ப உறவுகள், மனித விழுமியங்கள், இயற்கைச் சூழல் முதலியவற்றையெல்லாம் பிள்ளை தன் தாயின் மொழி வழியாகவே அறிந்து கொள்கிறது. அத்துடன் கேட்டல், செவிமடுத்தல், சிந்தித்தல் முதலிய அடிப்படை மொழித் திறன்களையும் தாயின் மொழிதல் ஊடாகப் பெற்றுக் கொள்கிறது.

மேற்குறிப்பிட்ட அம்சங்களைச் சீரிய முறையிலே பெற்றுச் சரியான வழிகாட்டலில் வளரும் பிள்ளை கற்றலில் முன்னேறுகின்ற பிள்ளையாகவும் அவற்றைப் பெறாமல் முன்னர் குறிப்பிட்ட கற்றலில் பின்தங்குவதற்கான காரணிகளில் ஒன்றையோ பலவற்றையோ பெற்று இடர்ப்படும் பிள்ளைகள் கற்றலிலே பின்தங்கியவர்களாக ஆகிவிடுகின்றனர்.

மொழி சார்ந்த திறன்களின் ஊடாகவே பிள்ளை ஏனைய பாடங்களின் விடயங்களையும் உள்வாங்கிக் கொள்கிறது. ஆகவே எமது பிரதேசங்களில் பிள்ளைகள் கற்றலில் பின்தங்கி இருப்பதற்கு மொழிசார்ந்த திறன்கள் தொடர்பாக அவர்களிடம் இருக்கக் கூடிய குறைபாடுகளே காரணிகள் ஆகின்றன என்று நாம் கொள்ளலாம்.

எமது பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற பிள்ளைகளைப் பொறுத்தவரையில்.

1. வரிவடிவங்களை இனங்காண்பதில் உள்ள பிரச்சினை.
2. உயிர்க்குறிகள் (ெ, ே, ன, ள) உயிர்மெய் எழுத்துக்களுடன் இணையும் போது ஏற்படும் ஒலி மாற்றங்களை இனங்காண்பதில் உள்ள பிரச்சினை.
3. ஒலி பேதங்களுடைய எழுத்துக்களை (ல, ள, ன, ண, ந, ர, ற) சொற்களிற் பயன்படுத்துதல்

ஆகிய இடர்ப்பாடுகளை உடையவர்களாக விளங்குகின்றனர். இவ்விடர்ப்பாடுகள் காரணமாகவே செவிமடுத்தல் - கிரகித்தல், சிந்தித்தல் - ஒழுங்கமைத்தல் ஆகிய குறைபாடுகளையும் எய்துகிறார்கள்.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் இத்தகைய குறைபாடுகளை உடைய பிள்ளைகளை நாம் அவதானிக்கலாம்.

ஆகவே எமது பிரதேசங்களின் கல்வி அடைவு வீழ்ச்சி பற்றியும் அவற்றை மாற்றுவதற்கான வழிமுறைகள் பற்றியும் சிந்திக்கும் எவரும் தாய்மொழிக்கல்வி தொடர்பான பரிகாரச் செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியாது. வீழ்ச்சி நிலைகளுக்குக் குறிப்பிட்ட ஒரு சாராரை மட்டும் குறை கூறுவதும் பொருந்தாது.

தாய்மொழிக்கல்வியில் பரிகாரச் செயற்பாடு பற்றிச் சிந்திக்கும் போது அவதானிக்க வேண்டிய அம்சங்கள் பல உள.

முதலில் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பெற்றார் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பிள்ளைகளிடம் மொழி சார்ந்த திறன்கள் குறைவடையும் போது அவர்களது கல்விச் செயற்பாடுகளில் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும், வீட்டுச் சூழலில் மொழி சார்ந்த திறன்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய மீளவலியுறுத்தல்கள், வழிகாட்டல்கள் பயிற்சிகள் என்பன பற்றியும் அவர்களுக்கு அறியத்தரல் வேண்டும்; உணரச் செய்தல் வேண்டும்.

பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்களில் பயிலும் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டு தரம் ஆறில் கனிஷ்ட இடைநிலைப் பிரிவினுள் நுழையும் போது மொழி சார்ந்த திறன்களில் இடர்பாடுகள் இல்லாதிருப்பதைப் பாடசாலை நிர்வாகமும் ஆசிரியர்களும் உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

எழுத்துத் திறன்கள் சார்ந்தனவாக எமது பிள்ளைகள் விடும் பிழைகள் வரிவடிவங்கள் தொடர்பானவையாகவே உள்ளன. உயிர்மெய் எழுத்துக்களிலே பயன்படுகின்ற ஒற்றைக் கொம்பு ← (ெ), அரவு ← (ா) இரட்டைக் கொம்பு ← (ே) முதலியன தொடர்பானவையாகவே இவை அமைகின்றன. 'க' , ச முதலிய உயிர்மெய்களுடன் மேலே குறிப்பிட்ட உயிர்க்குறிகள் இணையும்பொது அந்த எழுத்துக்களுக்குரிய 'உயிரொலிகள்' இழக்கப்பட்டு இந்த உயிர்க்குறிகளுக்குரிய ஒலிகள் சார்ந்த புதிய எழுத்துக்கள் பிறக்கின்றன என்பதை எமது பிள்ளைகள் உணர்ந்து கற்பதில்லை என்றே கூறவேண்டும்.

உதாரணமாக 'க' வின் முன் ஒற்றைக் கொம்பு (ெ) இணையும்போது 'க'வுக்குரிய அகர உயிர் இழக்கப்பட்டு ஒற்றைக்கொம்புக்குரிய 'எ' எனும் ஒலி இணைந்து 'கெ' எனும் உயிர்மெய் உருவாகிறது என்பதைக் கூறலாம்.

ஆகவே எழுத்துக்களைப் பயிற்றும் போது எழுத்துக்களையும் உயிர்க்குறிகளையும் உருவங்களாக அமைத்து முதலில் உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்கவும் பின்னர் சொற்களை உருவாக்கவும் பயிற்றுதல் வேண்டும்.

ஒலிப்பில் மயக்கம் தரும் எழுத்துக்களும் பிள்ளைகளுக்கு எழுத்துத் திறனில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்துகின்றன. இந்த வகையில் ன/ந, ண/ன, ல/ள/ழ முதலிய எழுத்துக்கள் தொடர்பாக எமது பிள்ளைகள் அதிகம் பிழைகளை விடுகிறார்கள். இந்த எழுத்துக்களிலே காணப்படுகின்ற ஓசை ரீதியான நுட்பமான வேறுபாடுகளும், ஒத்த இயல்புகளுமே இத்தகைய பிழைகளுக்குக் காரணிகளாக ஆகின்றன.

ஆகவே இது விடயத்தில் பிள்ளைகளுக்கு அனுபவபூர்வமான தெளிவு ஏற்படும் வகையில் இவ் எழுத்துக்களைப் பயிற்றுதல் வேண்டும். எழுத்துக்களை உச்சரிக்கும் போது,

1. ஒலியின் இயல்பு, நாக்கின் செயற்பாடு என்பவற்றை அனுபவபூர்வமாகப் பயிற்றுதல்.
2. எழுத்துக்களை ஆசிரியர் உச்சரிக்க மாணவர் எழுதுதல்.
3. சொற்களை ஆசிரியர் உச்சரிக்க மாணவர் எழுதுதல் (ஒலிபேதங்கள் உள்ளவை)
4. தற்கால வழக்கில் ஒலிப்பில் வேறுபாடின்றியே ஒலிக்கும் எழுத்துக்களைத் தனித்தனியே பயிற்றுதல் (ன,ந). முதலிய செயற்பாடுகள் மூலம் இத்தகைய குறைபாடுகளுக்குப் பரிகாரம் காணுவது இலகுவானது ஆகும். (உதயன் பத்திரிகை 24-11-2003)

எழுத்துக்களை இனங்காண்பதில் இடர்ப்படும் பிள்ளைகள் வாசிப்பதிலும் சிக்கலை எதிர்கொள்கிறார்கள். வரி வடிவங்களுக்குரிய ஒலிகளைத் தீர்மானிப்பதிலேயே இவர்களது பிரச்சினை உள்ளது.

எழுத்திலும் வாசிப்பிலும் பின்தங்கிய பிள்ளைகள் ஏனைய மொழித்திறன்களிலும் பின்தங்கிவிடுகிறார்கள். வகுப்பில் உள்ள ஏனைய மாணவர்களுடன் இணைந்து கற்றலில்

ஈடுபடுவதில் உள்ள சிரமங்கள் காரணமாக இவர்கள் தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாகிறார்கள். கற்றற் செயற்பாட்டில் வெறுப்படைகிறார்கள். இத்தகைய பிள்ளைகளை மேம்படுத்துவதற்கு பரிகாரச் செயற்பாடுதான் ஒரே வழியாகும்.

வகுப்பறைச் செயற்பாடுகளின் போது பிள்ளைகள் விடும் பிழைகளைச் சுட்டிக் காட்டுதல், மீளவலியுறுத்தல், பிழை திருத்தம் எழுதுவித்தல் என்பன மட்டும் பரிகாரச் செயற்பாடுகள் ஆக மாட்டா.

பரிகாரச் செயற்பாடு என்பது திட்டமிடல், மதிப்பீடு செய்தல், பிரச்சனைகளை இனங்காணுதல், பயிற்சி வழங்குதல். மதிப்பீடு செய்தல், மீள் பயிற்சி வழங்குதல், மதிப்பீடு செய்தல் எனும் சங்கிலித் தொடர் நிகழ்ச்சிகளாக அமைய வேண்டியது.

இத்தகைய பரிகாரச் செயற்பாட்டைச் சாதாரண வகுப்பறைச் செயற்பாட்டில் நிகழ்த்த முடியாது. குறைபாடுடைய பிள்ளைகளை வேறுபடுத்தித், தனியொரு தொகுதியாக்கி, பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட குறைபாடுகள் தொடர்பாக பல்வேறு வகுப்புக்களிலும் இருக்கக்கூடிய (தரம் 6,7,8) மாணவர்களை ஒரு தொகுதியாக்கி பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

தாய்மொழிக்கான பரிகாரச் செயற்பாடு என்பது ஒரு கூட்டுச் செயற்பாடு ஆகும். தாய் மொழியைப் பயிற்றும் ஆசிரியர்கள் மட்டுமே இச்செயற்பாட்டில் ஈடுபடுதல் என்ற நிலை பொருந்தாது. மொழியைப் பயிற்றுவது என்பது அனைத்துப் பாடங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களாலும் மேற்கொள்ளத்தக்கது. எழுத்து, வாசிப்பு, கிரகித்தல் என்பவற்றைப் பயிற்றுவதற்கு விசேட தகைமைகள் எவையும் தேவையில்லை.

பரிகாரக் கற்பித்தல் வகுப்புக்கள் மாலைநேர வகுப்புக்களாகவும், விடுமுறைக்கால வகுப்புக்களாகவும் அமைதல் பொருந்தும். பாடசாலையில் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இணைந்து செயற்படும் போது இது இலகுவான செயற்பாடாக அமைந்து பயன்தரும்.

**வரலாற்றுத் தகவல்**

## மட்டக்களப்பில் தூய தமிழ் வழிபாடு

இறைவனை வழிபாடியற்றுவதற்கு சமஸ்கிருதம் தான் தேவையானது என்று மயங்கிக் கிடந்து ஆரிய நாகரீகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்த தமிழர் வழிபாட்டு முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வழிகாட்டியாக இறைவனைத் தமிழிலும் பாட முடியும் என்ற உயர் சிந்தனை வழிபாட்டு முறை தென்தமிழீழம் என்று பேசப்படும் மட்டக்களப்புத் தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது.

தமிழில் வழக்கொழிந்து போயுள்ள தாந்திரிக வழிபாட்டு முறையின் எச்சங்களாக இன்று மட்டக்களப்பில் தமிழிலான வழிபாட்டு முறைகளும், சடங்குகளும் பேணப்பட்டு வருகின்றன.

இவ்வழிபாட்டு முறைகளில் பல சித்துக்கள் கையாளப்படுகின்றன. இறை ஆலயங்களில் திருமுறை ஓதப்படுவது போன்று தமிழ் வழிபாட்டு முறையிலான பக்திப்பாடல்களுடன் அமைந்த காவியம், அகவல், கும்மி, தாலாட்டு, குளிர்த்திப் பாடல்,அம்மானை போன்ற தூய தமிழ் வடிவங்கள் இன்றும் மட்டக்களப்பு ஆலயங்களில் வழக்கில் உள்ளதால் அங்கே மக்களுக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

இவ்வாலயங்களில் பறைமேளம் (தவில்), தாரை, தம்பட்டை, சவுணிக்கை, உடுக்கு, சிலம்பு, மணி, அம்மானைக்காய் போன்ற தமிழ் வாத்தியக் கருவிகள் இன்றும் ஒலிக்கப்படுவது தமிழ் ஒலிக்கும் உணர்வைத் தருகின்றது.

ஆம். . . . தூய தமிழ் பிரதேசமான மட்டக்களப்பில் மொழிநடை மட்டுமல்லாது, ஆலய வழிபாட்டு முறைகளிலும் கூட தமிழ் ஒலிப்பது நமக்கெல்லாம் பெருமையல்லவா?

**தகவல்: திரு.எம். பவளகாந்தன்**

இலக்கியக் கட்டுரை

# எண்ணங்களின் வண்ணங்கள்

பரதன் கந்தசாமி (எம்.ஏ)

நாட்கள் எனும் பூக்கள் நாளுக்கு நாள் மடியுகம் யுகமாய் கனிந்து கொண்டிருக்கின்றது. உலகில் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலமே வாழ்க்கையாகும். அவ்வாழ்க்கையை வாழ வேண்டியதும், அதில் வெற்றிகாண வேண்டியதும், மனிதர்களின் கடமையாகும்.

மனிதர்கள் இவ்வுலகில் பிறந்ததும் அவர்களுடைய கையில் இறைவன் வாழ்க்கையெனும் ஒரு கல்லை அளிக்கின்றான். ஒரு சிற்பி தன் குறிக்கோளை மையமாக வைத்து தனது சிற்றுளியால் முன் யோசனையுடனும், எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும் செதுக்கி, செதுக்கி எப்படி எழில் மிகுந்த சிற்பத்தை வடிக்கிறாரோ, அப்படியே அவரவர் குறிக்கோளுக்கேற்ப வாழ்க்கையும் அமைகிறது.

உலகம் என்பது உண்மையில் இன்பத்தின் பிறப்பிடம் அதனை மனிதர்கள் துன்பத்தின் இருப்பிடமாகச் செய்து கொண்டிருக்கின்றனர். சிலர் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் மண் கவ்வுவதற்கும் காரணம் அவரவர் மனம் தான். அந்த அமுத சுரபியே எல்லாவித காரியங்களுக்கும் நிவாரணம் அளிக்கிறது. தன்நம்பிக்கை, தைரியம், தளராத முயற்சிகளினால் மனம் உந்தப்படும்பொழுது, விளைவாகும் செயல்களினால் வாழ்க்கையில் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. மனித உடல் உள்ளத்தின் ஊழியன். உள்ளம் எதை நினைக்கிறதோ அதை உடல் பிரதிபலிக்கிறது. எனவே, வன்மையாக உடலை ஆட்சிசெய்து வாழ்வை உருவாக்கும் அரும்பெரும் கருவி எண்ணம்தான் என்பதை மறுக்கமுடியாது.

''உடம்பால் அழியின், உயிரால் அழிவர். திறம்பெற மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்'' என்கிறார் கவியரசு கண்ணதாசன். எண்ணம் எங்கு தோற்றம் பெறுகிறது என்பதைப் பற்றி பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் அது உள்ளத்தில் இருந்துதான் உற்பத்தியாகிறது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. செடியானது வித்திலிருந்து முளைப்பதைப்போல மனிதரது ஒவ்வொரு செயலும் அவருடைய எண்ணத்தில் இருந்து தான் உண்டாகிறது. வித்தில்லாது எப்படி செடி இல்லையோ, அவ்வாறே எண்ணமில்லாது செயலும் இல்லை. நாம் முன்பு எண்ணிய எண்ணங்களின் பலனாக தற்போதைய வாழ்வும் நாம் தற்போது எண்ணிக்கொண்டிருக்கும் எண்ணங்களின் பலனாக வருங்கால வாழ்வும் அமைகிறது.

சுருக்கமாகக் கூறின் கோடிக்கணக்கான எண்ணங்களின் கூட்டுக்கலவையே மனித வாழ்க்கையாகும். இதைத்தான் மனம் போல வாழ்வு என்பர் பெரியோர். நல்ல எண்ணங்களை நம்பிக்கையான எண்ணங்களை, மகிழ்ச்சியான எண்ணங்களை, எண்ணிவாழும் மனிதர்கள் எப்பொழுதும் நல்ல உடலமைப்பையும் நலமான வாழ்வையும் பெறுவர்.

ஒருவர் மற்றொருவர் பால் கொள்ளும் தீமையான எண்ணங்கள் அத்தீமையான எண்ணங்களை எண்ணுபவருக்கே தீமை பயக்கவல்லன. அவை சம்பந்தப்பட்டவரின் அகத்திலும் முகத்திலும் ஊறுகளை ஏற்படுத்திவிடுகின்றன. ''கவலையில்லாமல் வாழ்ந்தால் தான் எனக்கு முதிர் பருவத்திலும் நரை. திரை ஏற்படவில்லை'' என்றார் பிசிராந்தையார் என்னும் பெரும்புலவர்.

நல்வாழ்க்கையின் மிகப்பெரும் எதிரியாக அளவுக்கதிகமான சுயநலம், பொய், களவு, காமம், பொறாமை ஆகியவை காணப்படுகின்றன. இவை மனித இதயம், ஈரல், மூளை ஆகியவற்றை இலகுவாகப் பாதித்து நோய்களைத் தோற்றுவிக்கின்றன. அழகைக் கெடுத்து அழிவையும், இழிவையும் ஏற்படுத்துகின்றன. பேராசை, பொறாமை என்பவற்றைத் தவிர்த்து அன்பைத் துணையாக்கி வாழும் வாழ்க்கை தான் உண்மையில் உயர்ந்த வாழ்க்கை.

மனிதரின் அறிவுக்கு அபரிமிதமான ஆற்றலை இறைவன் வழங்கியுள்ளான். எவ்வளவு அழகாக எமது கைகளைப் படைத்து அதற்கு எத்தனை வகையான திறன்களையும் கொடுத்துள்ளான். எமது கட்புலன், செவிப்புலன் என்பவை எவ்வளவு மகத்தான ஆற்றல் உடையவை. எமது உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு வனப்பும், வளமும், திறனும், திறலும் மிக்கவையாக விளங்குகின்றன.

அனைத்தையும் அருமையாகப் படைத்து எம்மை உன்னத நிலையை அடையக் கூடிய வாய்ப்பையும் வழங்கிப் பெருமைப்படுத்திய இறை தத்துவத்தை சிறுமைப் படுத்துபவர்களும் எம்மத்தியில் இல்லாமல் இல்லை. உலகம் எவ்வளவு கொடுமையானது, எங்கு பார்த்தாலும் துன்பங்களும் துயரங்களும்; நோய்களும் நொம்பலங்களும்; அடக்கு முறைகளும் அழுகைகளும்; ஏக்கங்களும் மாற்றங்களும் என்று நொந்து புலம்புவது எவ்வளவு மடமையானது.

உலகில் வறுமை எண்ணத்தைப் போன்று இழிவானது வேறு எதுவுமில்லை. நான் ஓர் ஏழை. இது இறைவன் எனக்கு விட்ட வழி என்று கூறுவது தன்னைத்தானே அவமானப்படுத்தும் செயலாகும். மனிதர்களைப் படைத்த இறைவன் இவர்கள் செல்வர். இவர்கள் ஏழை, இவர்கள் அறிஞர், இவர்கள் மூடர், என்று எவ்வித சிறப்பு அடையாளங்களையும் விசேடமாகப் படைக்கவில்லை. மனிதர்கள் யாவரும் இறைவன் முன்னிலையில் சரிசமமானவர்களே. இறைவன் எல்லோரையும் ஒரே கண்கொண்டுதான் பார்க்கிறான். மனிதன் உயர்வடைவதும், தாழ்வடைவதும் அவரவர் உள்ளத்தின் தன்மையைப் பொறுத்தே அமைகின்றன.

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய உயர்வு''

என்று கூறுகிறது குறள். வெள்ளம் உயர உயர தாமரை மலரின் தண்டின் அளவும் உயர்வதைப் போல உள்ளம் உயர, வாழ்க்கையும் உயரும். பெரிய மனிதர்களைப் போன்று எண்ணவும் செயலாற்றவும் செய்பவர்கள் நாளடைவில் பெரிய மனிதர்களாகவே ஆகிவிடுகிறார்கள். அதுபோல தாம் நலமாக வளமாக வாழ்வதாக நினைத்துக் கொள்பவர்களும் செயலாற்றி வருபவர்களும் வாழ்க்கையை வெற்றியுடையதாகவே அமைத்துக் கொள்கிறார்கள்.

வாழ்க்கையில் நம்பிக்கையும் முயற்சியும் அத்தியாவசியம். சோதனைகளும் வேதனைகளும் வந்துற்ற போது இவ்விரண்டும் உள்ளவர்களே தளர்ச்சி அடையாது வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். ''எவர் எந்தப் பொருளில் நம்பிக்கை உடையவரோ அவர் அந்தப் பொருளை ஆள்கிறார்'' என்கிறது ஸ்ரீமத் பகவத் கீதை. எந்த விடயத்திலும் நம்பிக்கை உடையவர்கள் வாழ்க்கையில் எந்த விதத்திலும் வெற்றி பெறுவர். நெருப்பு எப்படி பொன்னை ஒளிரச் செய்கிறதோ அப்படியே நம்பிக்கை மனிதனை ஒளிரச் செய்கிறது. நம்பிக்கையும் துணிவும் இல்லாதவருக்கு ஒரு குப்பை மேடு கூட கடக்க முடியாத பெரிய மலையாகத் தோன்றலாம்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு''

என்கிறார் எமது அய்யன். ஆவதும் அழிவதுமாகிய பலவும் எண்ணியே ஒன்றைச் செய்யத் துணிய வேண்டும். துணிந்த பின் இடையிலே எண்ணிக்கொள்வோம் என்பது குற்றமாகும். ''நான் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்னர் இரண்டு அடி திரும்பிப் பார்ப்பேன் இது பயத்தாலோ அச்சத்தினாலோ அல்ல'' எண்ணித் துணியவேண்டும் என்பதனால்-தான் என்றார் நெப்போலியன்.

நம்பிக்கையைப்போன்று மனிதரை அணிசெய்யும் குணங்களில் ஒன்று துணிச்சல். துணிவே துணையாகக் கொள்ளும் காரியங்கள் தோல்வியில் முடிவதில்லை. அச்சம் என்பது அறியாமையாலும் சலன புத்தியாலுமே ஏற்படுகின்றது. மரணத்துக்குக் கூட அஞ்சாதவர்களே உலகில் சாதனைகள் படைத்து இறந்த பின்பும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்த வெற்றிக்கு வழிகோலும் மற்றுமோர் காரணி முயற்சியாகும். முயற்சி திருவினையாக்கும் முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும். அடிக்க அடிக்க அம்மியும் நகர்வதைப் போன்று ஆழ முயன்றால் ஆகாததொன்றில்லை.

இளமை ஒரு முறைதான் வரும். இவ்வுலகில் ஒரு தடவைதான் என்பதை உணர்ந்து காலமழியாது கருமமாற்றுபவர்கள் வாழ்க்கையில் வெற்றி காண்கிறார்கள்.

''தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''

என்கிறார் குறள் ஆசிரியர். தெய்வத்தின் அருளால் கைகூடிவராது என்றாலும் முயற்சியால் தனது உடலை வருத்தும் போது அதற்கான பலன் கிடைக்கவே செய்யும். அடுத்து வெற்றிக்கனியை பெற்றுத் தருவதில் காலம். சந்தர்ப்பம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. கறந்த பால் முலை புகாது. கடந்த காலம் திரும்பி வராது.

''கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து''

காலத்தை நோக்கி ஒதுங்க வேண்டிய காலத்திலே நீர்க்கொக்கைப் போல் இருக்க காலம் வாய்த்த போது அக்கொக்கைப்போல் தாக்கி வெல்க என்ற வள்ளுவமே வெற்றியாளர்களின் ஒளிவிளக்கு. முன்னேற வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்கள் காலத்தை தவறவிடவோ, வீண் விரயம் செய்யவோ மாட்டார்கள். அடுத்து வாழ்க்கையில்

ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். இலட்சியம் இல்லாத வாழ்க்கை மீகாமன் இல்லாத மரக்கலத்தைப் போன்றது. இதை சுவாமி விவேகானந்தர் அழகாகச் சொல்கிறார். ''நீ உனது குறிக்கோளில் வெற்றியடைய வேண்டுமாயின் அக்குறிக்கோள் உன் குருதியோடு குருதியாக ஓடி உடல் முழுவதும் பரவி உன்னுடைய மயிர்க் காம்பின் வழியாக வெளியேற வேண்டும்''

எனவே உலகமெல்லாம் வியக்கும் வண்ணம் வெற்றி வாழ்க்கை வாழ விரும்பின் ஆனந்தம், ஆற்றல், அமைதி, ஆரோக்கியம் ஆகியவற்றின் கவசமான நம்பிக்கையை அணிந்து கொண்டு குறிக்கோளை நோக்கி எண்ணத்தை வன்மைப்படுத்தி தாளாண்மையுடன் உழைக்க வேண்டும். உயர்ந்த எண்ணம் உள்மனதைத் தொட வேண்டும். அந்த எண்ணமே உருப்பெறும். தகாதனவற்றை அழித்து தக்கனவற்றை வாழ வைக்கும் சக்தி எண்ணத்துக்கு உண்டு. மனித மனத்தினுள்ளே நின்றுலவும் எண்ணங்கள், கனவுகள், ஆசைகள், கற்பனைகள், நம்பிக்கைகள், தேவைகள் ஆகியவை எல்லாம் அவரைச் சூழ ஓர் எண்ண வளையத்தை உண்டு பண்ணுகின்றது. விளக்கைச் சுற்றி எவ்வாறு வெளிச்சவளைவு இருக்கிறதோ அதேபோல எண்ணவளைவு வாழ்வின் வெற்றிக்கு ஒளியூட்டுகிறது.

''எண்ணிய எண்ணியங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்''

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. எண்ணியவர்கள் மனவலிமையாலும் செயலாற்றும் திறனிலும் உறுதியானவர்கள் என்றால் அவர்கள் எண்ணியபடியே எல்லாவற்றையும் அடையலாம். எனவே எண்ணியதை திண்ணியதாகப் பெறுவதற்கு மேலே சொன்னபடி எண்ணத்தை உயர்த்தி இலட்சியப் பாதையில் முழு நம்பிக்கையோடும் முயற்சியோடும் தளர்ச்சியடையாமல் செயற்படுவோமாயின் வேதனைகளையும் சோதனைகளையும் வென்று சாதனை படைக்கலாம் என்பதில் ஐயமே இல்லை.



**''நான் செய்து பார்ப்பதன் ஊடாகக் கற்றுக் கொண்டிருக்கின்றேன்.**

**அதன் மூலம் நான் வாழப்போகின்ற உலகத்தை அறிந்து கொள்ளப் போகின்றேன்....**

**எனக்கு உதவுவீர்களா?''**

# மழையே மழையே நீ பொழிவாய்

மழையே, மழையே
நீ பொழிக!
மன்னுயிர்கள் மகிழ்தற்காய்
காய்ந்து வெடித்த
காணிநிலத்து மண்ணின்
மனங்களின் காயத்தை
ஆற்றுமட்டும்
அல்ல அல்ல; அதற்குமப்பால்.

கடுமையாய் பெய்துவிடாதே
கனமான மழையே!
அதே அகதிமுகாம்கள் இன்னும்
அந்தந்த இடங்களில்
ஆணியடிக்கப்பட்டுள்ளன.

தொழுவங்களை விடவும்
கேவலமாயும்,
மனப்பிணியாளர்களின் தங்கிடமாயும்,
ஏதிலிகளின் ஒதுக்கிடமாயும்,
ஏடறிவியலா சிட்டுக்களின்
கூடுகளாயும் தொடுக்கப்பட்ட
கூண்டுகள் நொருங்கி விடாமல்
மெதுவாய் பொழிக.

போரோய்ந்த பொழுதுகளின் பின்னும்
தம் ஊர்திரும்பவியலா
காலக் கைதிகள்.
இவரின் கண்ணீரால் கரையா தடைகளை
உன் மணித்துணிகளின் கனதியால்
முழுமையாய் தகர்த்துவிடு.

ஆதலால் மழையே!
ஏதிலிகள் நொடிந்து விடாமல்
இரவிலாயினும், பகலிலாயினும்
இடைவிட்டாகிலும்
இடித்துப் பெய்க.
இடமறிந்து.

வி. குணபாலா

**வரலாற்றுத் தகவல்**

## விடுதலைப் போராட்டம்

1956 இல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியராக இருந்த கணபதிப் பிள்ளை அவர்கள், தான் எழுதிய சங்கிலி என்ற நூலுக்கு எழுதிய முன்னுரைக்கு இலங்கை வாழ் தமிழ் வரலாறு என்ற தலையங்கம் இடப்பட்டாலும் கூட இது, யாழ்ப்பாண வரலாற்றைக் கூறுவதாகவே இருந்தது. யாழ்ப்பாண அரசு மறைந்த பின்னருள்ளதான நிகழ்ச்சியை விடுதலைப் போராட்டம் என்ற உபதலைப்பில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"அரச பரம்பரை ஒழிந்து தன்மானம் என்னும் பெரிய தனத்தை இழந்து விட்டோமோ யென்னும் மனப்பாரம் யாழ்ப்பாணத்து மகன் ஒவ்வொருவனது இதயத்தையும் அமுக்கியது. மதித்தற்கரிய மாணிக்கமாகிய சுதந்திரச் செல்வத்தை இழந்து விட்டமோ என்ற கவலை மக்களை வாட்டியது. விடுதலை வேட்கை பொங்கியெழுந்தது. நாடு தொலைந்து பிறன் கைப்பட்ட ஈராண்டுக்கிடையில் ஆறுமுறை புரட்சி வெள்ளம் கான்யாறு போல் கரை புரண்டோடியது. இதனைப் போர்த்துக்கேய வரலாற்றாசிரியரே கூறிப்போயுள்ளார். முதன்முறையாக கரையார் தலைவன், போர்த்துக்கேயருக்கு எதிராய்ப் படையோடெழும்பினான். நல்லூருக்கு அருகில் நடந்த போர் ஒன்றில் ஒலிவீரா இவனை முறியடித்தான். இதே போன்று 5 தடவைகள் நடந்த போர்களிலும் தமிழர் சேனை போர்த்துக்கேயரால் முறியடிக்கப்பட்டது. இவ்வாறு 5 வதாக நடந்த போரே, இலங்கைத் தமிழரின் கடைசி விடுதலைப் போராட்டம்."



# அரங்க விளையாட்டுக்களும் சிறுவர் அரங்கும்

முத்து இராதாகிருஷ்ணன்.

சிறார்களிடையே இறுக்கமான நிலையினை களைவதற்கும் இலகுவான அல்லது இலேசானதும், சுதந்திரமானதுமான மனநிலையை சிறார்களிடையே ஏற்படுத்துவதற்கும் அரங்க விளையாட்டுக்கள் மிக உகந்தவை. இவ்வகையில் இவ்விளையாட்டுக்கள் மாணவர்களின் தேர்ச்சியினை அதிகரிக்ககூடிய தயார்நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்த உதவுகின்றது. எனலாம். அதுமட்டுமல்லாது உடனடியான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கக்கூடிய செயற்திறனையும் ஏற்படுத்துகின்றது. மாணவர்களிடையே பிணைப்பையும், நற்பண்புகளையும் முதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் அழகியல் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கும் எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளையை பிள்ளை போல் செயற்பட வைப்பதற்கும் ஆசிரியர்களுக்கு உதவுகின்றது.

அரங்க விளையாட்டுக்கள் மாணவர்களின் பாடவிதானம் சார்ந்த நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தக் கூடியன. கணிதம், சுற்றாடல் மொழி, செயற்பாட்டு ரீதியிலான வாய்மொழி ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பல படிகளை, கற்றல் அனுபவத்தை இவ்விளையாட்டுக்கள் மூலமாக மாணவர்களுக்கு அடையச் செய்ய இயலும்.

சுற்றாடலுக்கு நேசமான தன்மையினை ஏற்படுத்தும் அரங்க விளையாட்டுக்கள் மூலமாக சிறார்களிடையே மரங்கள், தாவரங்கள் இயற்கை என்பவற்றிடம் விருப்பமும், இயற்கையை ரசிக்கும் பண்பும், இயற்கை வளங்களை பாதுகாக்கும் மனப்பாங்கும் ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லாது மிருகங்கள், பறவைகள் என்பவற்றை அவதானிக்கும் இயல்பு, அவற்றிடம் அன்பு கொள்ளும் தன்மை, அவற்றைத் துன்புறுத்தாமல் பாதுகாக்கும் தன்மை, அவற்றைப்போலச் செய்தல், சூழல் மாசுபடுதலை அனுமதிக்காமல் தன்னளவில் சூழலுக்கு நேசமான செயற்பாடுகளைக் கொண்டவர்களாகும் இயல்பு என்பவை ஏற்பட வாய்ப்பு உண்டு.

இவ் அரங்க விளையாட்டுக்கள் மூலம் சிறார்களிடையே கணித இயல்பும், கலாசாரமும் ஏற்பட வாய்ப்பு உண்டு. கணித சிந்தனை விளையாட்டு, உடல் தெறிவினை போல் கணிதப் பிரச்சினைகளை எதிர்கொள்ளப் பழகுதல், தீர்வுகளைக் காணல், அடிப்படைகளை இனங்கண்டு விடை காணப்பழகுதல், துரித செயற்பாடுடையவர்களாக செயற்பட்டு ஞாபக சக்தியை வளர்த்தல், என்பவற்றை கணிதம் சார்ந்த அரங்க விளையாட்டுக்கள் மூலம் சிறார்களிடையே இலகுவாக ஏற்படுத்திக்கொள்ள இயலும்.

இவ்விளையாட்டுக்கள் மூலம் மொழி தொடர்பான ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள இயலும். மொழியை ஒரு கல்வியாகக் கொள்ளாது ஒரு திறனாக கருதப் பழகுதல். துரிதமாக மொழியைக் கையாளப்பழகுதல். மனதில் பட்டதை தெளிவாக கூறுவதற்கு பழகுதல், ஏற்ற இறக்கங்களுடன் உரத்து மொழியைக் கதைக்கப் பழகுதல், மொழியின் முழுமையினை தொடர்பாடலுக்கு பயன்படுத்துதல், கலைச்சொற்களை ஞாபகத்தில் தேடிச் சேர்த்தல், உணர்வுகளைப் புரிந்து உரையாடல், போன்ற பல்வேறு

தன்மைகளை மொழி தொடர்பான அரங்க விளையாட்டுக்கள் மூலம் சிறார்களிடையே உருவாக்கிக்கொள்ள முடியும்.

பிள்ளைகளுக்கு உதவுதல் என்பதே கல்வியாகும். இவ்வகையில் ஒரு ஆசிரியரின் பணி மிக மேன்மையானது மிருகங்களைப் பழக்குவது போன்ற ஒரு நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அன்பும், உறவும், உணர்வும் நிறைந்த தெய்வீக நிலையை அவ்வாசிரியர் பேணுதல் வேண்டும். தனது மாணவச் சிறார்களுக்கு கற்றல் அனுபவத்தை ஏற்படுத்தி கொடுத்தல், அதற்கான களநிலைமையினை நன்கு திட்டமிட்டு உருவாக்குதல் என்பவையே அவரது பிரதான பணியாகும்.

பிள்ளை பங்குபற்றும் ஒவ்வொரு செயற்பாடும் அது வகுப்பறைச் செயற்பாடாக இருந்தாலென்ன, வகுப்பறைக்கு வெளியே பாடசாலை மைதானமாக இருந்தாலென்ன அல்லது பாடசாலை முற்றமாக இருந்தாலென்ன ஒரு சுற்றுலாவாக இருந்தாலென்ன ஒவ்வொரு செயற்பாடும் ஒரு முழுமையான ஆற்றுகையாக அமைதல் வேண்டும். பிள்ளைகளுக்கு அவர்கள் விருப்பத்துடன் அடையக்கூடிய கற்றல் அனுபவமாக இருத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி பற்றி சிந்தித்த பலர் இதைச் செய். இதைச் செய்யாதே. இது தவறு. இது பயனுள்ளது என பல்வேறாக கூறி வந்தனர். பல சிந்தனைகள் உருப்பெற்றன. ஆனாலும், பிள்ளைகள் தாம் நினைத்ததையே செய்தனர். செய்கின்றனர். என்பதுவே உண்மை. எப்போது அப்பிள்ளை தான் உணர்ந்து விருப்பத்துடன் செயற்படுகின்றானோ அவ்வேளையில் அவன் அடைகின்ற அடைவு அல்லது அனுபவம் தான் கல்வியாகின்றது. இங்குதான் ஆசிரியரின் பணிபற்றி கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

உண்மையில் ஆசிரியர் ஒரு வசதியளிப்பவர். ஒரு பங்குபற்றும் நெறியாளர் ஆகின்றார். கற்றல் செயற்பாட்டை நன்கு திட்டமிடவேண்டியவர் ஆகின்றார். என்ன விடயம் பிள்ளைகளுக்கு சென்றடைய வேண்டும், எந்தளவில் சென்றடைய வேண்டும், எவ்வளவு காலத்தில் அக்கற்றல் அனுபவத்தை அவர்கள் பெற வேண்டும், என்பவை போன்ற விடயங்களை நன்கு திட்டமிடுவதோடு இவ் அனுபவத்தை பெறுவதற்கான தயார் நிலைக்கு பிள்ளைகளை அரவணைத்துக் கொண்டு செல்பவராகவும், இருத்தல் வேண்டும். இதற்கு உணர்வுகளை புரிந்து கொள்ளக்கூடிய, உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கக்கூடிய பக்குவ நிலையினை அவ்வாசிரியர் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறான நிலையிலேயே பிள்ளைகள் குறிப்பாக கவனிக்கப்பட்டு, உரியதேர்ச்சிகளை உச்ச அளவில் பெற்று, பாண்டித்திய நிலையினை அடைவர். அதுமட்டுமல்லாது இத்தகைய ஒரு பக்குவ நிலையிலையே மனிதத்துவத்தை உருவாக்கக்கூடிய கல்வி அனுபவம் பிள்ளைகளிடத்தே சென்றடையும்.

அரங்க விளையாட்டுக்கள் மூலம் பிள்ளைகளிடத்தும், ஆசிரியரிடத்தும் மேற்குறிப்பிட்ட பக்குவ நிலையினை இலகுவாக உருவாக்க முடியும். வெளிப்படையான உணர்வுப்பகிர்வு கற்றல் அனுபவத்தை தேடிப்பெறும் இயல்பு சாதிக்க முடியும் என்ற மனத்தைரியம் என்பவற்றையும் இவ்வரங்கு ஏற்படுத்தவல்லது.

# அஞ்சலித்தேன்!

குயிலுக்கு இனிமையுள்ள குரலை வைத்து
கொல்லுகின்ற ஆலத்தை அரவில் வைத்து,
மயிலுக்கு எழிலான தோகை வைத்த
மன்னாவுன் மலர்ப்பாதம் "அஞ்சலித்தேன்!"

ஆனைக்கு நிகரற்ற பலத்தை வைத்து
அதைக்கூட, எறும்புக்கு பணிய வைத்து
கோனென்னும் தலைமையினை கொண்டிருக்கும்
குரிசிலுந்தன் கவின்பாதம் "அஞ்சலித்தேன்!"

ஆறேழு மழலைகளை வழங்கிவிட்டு
அற்றதனி மலடாக்கித் தவிக்க வைத்து,
மாறாத இன்னலினை மாற்றிவைக்கும்,
மாண்புருவின் எழிற்பாதம் "அஞ்சலித்தேன்!"

இன்னொளிசேர் பூரணையைக் காட்டிவைத்து
இருள் கவிந்த அமாவாசை ஆக்கிவைக்கும்,
எண்ணமெலாம் எக்காலும் அறியும் வல்ல
ஏகமுதற் பொருளுனையே "அஞ்சலித்தேன்!"

குருதியினைச் செம்மைநிறம் ஆக்கிவைத்து
குடிக்கும் பால் வெள்ளையென மாற்றிவைத்து,
இரவின்பின் பகலென்றே நியதிவைத்த
இறையே, உன் பக்தனுனை "அஞ்சலித்தேன்!".



**கவிமணி அ. கௌரிதாசன்**
**ஆலங்கேணி கிழக்கு**
**கிண்ணியா.**

**முன்னுரை:-**

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியானது, அந்நாட்டின் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. கல்வி கற்ற ஒரு சமுதாயம் உள்ள ஒரு நாகரிகமுள்ள நாட்டிலேயே, மனித நேயம் படைத்த மக்களைக் காணமுடியும். அதனைக் கருத்தில் கொண்டே ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் கல்விக்கான மூலதனத்தை அதிகளவு செலவிட முன்வருகின்றன. எனவே எமது நாட்டின் கல்வியானது, நல்ல விழுமியங்களை உடையதாகவும், சிறந்த நோக்கங்களைக் கொண்டதாகவும் அமைந்திருத்தல் முக்கியமானதாகும். அந்த வகையில் எமது தேசியத்திற்கான கல்வி முறையானது எமது சூழல், கலை, பண்பாட்டு விழுமியங்களை உடையதாகவும், எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். எந்த ஒரு நாட்டினதும் கல்வியின் நோக்கங்களைத் தீர்மானிக்கும் போது பல்வேறு காரணிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# தேசிய உணர்வை உருவாக்கும் கல்வி முறையிலான கட்டமைப்புக்கள்

## ஒரு நோக்கு

ந. அனந்தராஜ்

**01. கல்வியின் நோக்கங்கள்:-**

பொதுக் கல்வியின் நோக்கங்கள் எனப் பின்வருவனவற்றை வகைப்படுத்தலாம்:

- ஒரு தனிமனிதனை, இந்தச் சமுதாயத்தில் பொருத்தப்பாடுடையவனாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் முழு மனிதனாக்குதல்.
- இனத்தின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை அறியச் செய்தலும், அவற்றின் பாரம்பரியங்களைப் பேணுதலும்.
- தேசியப் பற்றை வளர்த்து, ஒரு மொழி பேசும் மக்களிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துதல்.
- நாட்டின் இயற்கை வளங்களை (மூலதனம், பொருட்கள், மனிதவளம்) இனங்காணலும், அவற்றின் உச்சப் பயன்பாட்டைப் பெறுதல், பாதுகாத்தல் போன்ற அறிவை வழங்குதலும்.
- ஒரு நாட்டின் உண்மையான வரலாற்றை அறிய வைத்தலும், நாட்டின் சுதந்திரத்திற்கும் சுபீட்சத்திற்கும் அரும்பாடுபட்ட தேசிய வீரர்களைப் பற்றி அறிதலும், அவர்களது சாதனைகளையும் வீரதீரச் செயல்களையும் அறியவைத்தல்.
- ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார அறநெறிகளுக்கு ஏற்ப கல்வி அமைந்திருத்தல்
- ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவக் கருத்துக்களுக்கும், ஒழுக்க நெறிகளுக்கும் அமைவாக ஒழுங்கு படுத்துதல்.
- தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறை சார்ந்த கல்வியை அளித்தலும், அவற்றின் செயல் முறையான கற்றலும்.
- சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்வியின் நோக்கம் வரையறுக்கப்படுதல்.
- கல்வி கற்றோர் வீதத்தை அதிகரித்தல்.
- கல்வி கற்றலின் மூலம் நாட்டுப்பற்றை ஏற்படுத்தலும், நாட்டுக்கும், மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற மனோநிலையை ஏற்படுத்தலும், மக்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டு முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் தனிமனித வளர்ச்சிக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படலும்.

- சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் அவற்றைத் தீர்மானிப்பதற்கும் கல்வி வழிவகுக்க வேண்டும்.
- சூழல், காலம், மனோபாவம், திறமை என்பனவற்றிற்கேற்ப வேலைவாய்ப்பை வழங்குதல். அறிவைத்தேடும் ஆர்வத்தையும், விமர்சிக்கும் மனப்பான்மையையும் விருத்தி செய்யும் வகையிலானதாக கல்வி அமைதல் வேண்டும்.
- ஒழுங்கு, கட்டுப்பாடு, சீரிய வாழ்க்கை முறைகளுக்கேற்ப தயார்படுத்தல் போன்ற விழுமியங்களை ஏற்படுத்துதல்.
- ஆண் பெண் சமத்துவத்தை ஏற்படுத்துதல், சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான உணர்வுகளை வளர்த்தல்.

**02. இலங்கைக் கல்வி முறையின் பாதகமான பெறுபேறுகள்:-**

இலங்கைக் கல்விமுறையானது மேற்குறித்த விழுமியங்களை தோற்றுவிப்பதற்குப் பதிலாக மாறான பெறுபேற்றைக் கொண்ட வகையிலேயே எமது மாணவர்களைத் தயார் செய்துள்ளது.

இந்தப் பாரம்பரியமான கல்வி முறையின், பாதகமான விளைவுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

2.1 மக்களிடையே முரண்பாடுகள், இன, சாதி, மத மோதல்களை ஏற்படுத்தியுள்ளது.

2.2 வேலைவாய்ப்பை மையப்படுத்தியதாகவே இருந்ததால் குறித்த அல்லது எதிர்பார்த்த வேலையைப் பெற முடியாத நேரத்தில் இளைஞர் மத்தியில் விரக்தியும், வேலையின்மையும் ஏற்படுத்தத் துணையானது.

2.3 தொழில்நுட்ப வளர்ச்சியில் ஆர்வமின்மை புதிய தொழில்நுட்ப முயற்சிகளைக் கண்டு பிடிக்கும் ஆற்றலை வளர்க்கவில்லை.

2.4 தேசிய உணர்வு, தேசிய ஒருமைப்பாடு நாட்டுப்பற்று என்பவற்றை ஏற்படுத்தாமை

2.5 நாட்டின் மூலவளங்களை முழுமையாகப் பயன்படுத்தும் ஆற்றலின்மை

உ + ம் வடக்கு கிழக்கின் எல்லையினுள் பெருமளவிலான மூல வளங்கள் காணப்படுகின்றன.

அ. கனிய வளங்கள் - இல்மனைற், கல்சைற், சிலிக்கா போன்றவை பெருமளவில் உண்டு.

ஆ. மீன் வளம்:- இலங்கையிள் மீன்பிடித் துறையானது 2/3 பங்கு வடக்கு கிழக்கின் கட்டுப்பாட்டில் உள்ளது. நவீன தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி அதன் உச்சப் பயன்பாடு பெறப்படவில்லை. இதற்கான கல்வியும் வழங்கப்படவில்லை

இ. சூரிய சக்தி:- இயற்கை தந்த சக்தியை அறிவியல் ரீதியாக முழுமையாகப் பயன்படுத்த முன்வரவில்லை எமது பிரதேசம். அயன மண்டலப் பிரதேசமானதால் எல்லாக் காலமும் சூரியசக்தி பெறப்பட முடியும்.

ஈ. காற்று:- வருடத்தின் பெரும்பாலான மாதங்களுக்கு கணிசமான காற்று வலு உண்டு. இதனைக் கொண்டு இயந்திரங்களை இயக்குதல், புதிய சக்திப் பரிமாணங்களை ஏற்படுத்துதல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

2.6 படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் மத்தியதர வகுப்பினருக்கும், எமது நாட்டின் பாரம்பரிய கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துள்ளமை.

2.7 படித்தவர்கள் மத்தியில் வெளிநாட்டு மோகமும், அன்னிய நாட்டுக்குச் சேவகம் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையும் வளர்ந்தமை.

பாடசாலைக் கல்வியினூடாக எமது இனம், மொழி, தேசியப்பற்று ஊட்டப்படாத காரணத்தினால் உள்நாட்டில் வேலைசெய்ய வேண்டும் என்ற மனோநிலையோ, சொந்த நாட்டு மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வோ ஏற்படுத்தப்படவில்லை.

உதாரணமாக இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் பல உயர் தேர்ச்சி பெற்ற மருத்துவ நிபுணர்கள், விஞ்ஞானிகள், சட்ட வல்லுனர்கள் போன்றோர் அந்த நாட்டு மக்களுக்காகவே சேவையாற்றுகின்றனர்.

2.8 உயர்கல்வி வாய்ப்பிற்கான போட்டி ஏற்படுத்தப்பட்டதனால், பாடசாலைக் கல்வி முறைக்குச் சமாந்தரமான கற்பித்தல் முறையை ஏற்படுத்தும் தனியார் கல்வி நிலையங்களின் அபரிதமான வளர்ச்சி.

2.9 போதைப்பொருட்பாவனை, ஒழுக்கமின்மை, கலாச்சாரப் பிறழ்வுகள், பெரியோரை மதிக்காமை போன்ற விரும்பத்தகாத விளைவுகளையும் இளம் சிறார்கள் மத்தியில் அவதானிக்கக் கூடியதாக இருத்தல்.

2.10 மேலைநாட்டு சமூக, பொருளாதார, கலாச்சாரங்களின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தியமை.

2.11 அடிமை மனப்பான்மையும், சுய சிந்தனையின்மையையும் ஏற்படுத்தியமை.

2.12. பரீட்சை முறையிலான குறைபாடுகள் உள்ளதனால் கல்வியைத்தொடர முடியாதவர்களில் 55% தினரின் இடைவிலகலுக்கு காரணமாக இருந்தமை.

2.13. வாசிப்புத்திறன் விருத்தியின்மையும், மாணவர்கள் நூலகங்களுக்குச் சென்று தாமாகவே தகவல்களைத் திரட்டக்கூடிய வாய்ப்புக்களை அதிபர்களும், ஆசிரியர்களும் ஏற்படுத்திக் கொடுக்காமையும், இதன் முக்கியத்துவம் உணரப்படாடையும்

**03. கல்வியின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமைக்கான காரணங்கள்:-**

கல்வியின் நோக்கங்கள் குறித்த இலக்கை அடைய முடியாமைக்கு எமது சூழலுக்குப் பொருத்தப்பாடில்லாத கல்வி முறையும், அதற்கான கலைத்திட்டமுமே காரணம். இலங்கையில் மாறி மாறிப் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் தமது வர்க்க நலன் பேணும் கருவியாக அரசாங்கத்தைப் பயன் படுத்தியமையும், பொது அபிவிருத்தியும், மக்களின் நடவடிக்கையும், மறுக்கப்பட்டமையுமே காரண மாகும்.



வகுப்பறை நூலக அமைப்பு

காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வியின் நோக்கங்கள் நிறைவேற்றப் படாமைக்கான காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

3.1. செயல்முறையிலான கல்வி வழங்கப்படாது வெறும் ஏட்டுக் கல்விமுறையாக கற்றல்.

3.2. மாறிவரும் அரசாங்கங்கள் தமது அரசியல் கொள்கைகள், தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து, காலத்திற்குக் காலம் கல்விக் கொள்கைகளையும், கலைத்திட்டங்களையும் மாற்றிக் கொண்டு வருதல்.

இலங்கையில் 1961-1980 க்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் ஆறு தடவைகள் பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டு ஒரு உறுதியற்ற கல்வித் தளத்தைக் கொண்டிருந்தமை.

3.3. கல்விக் கொள்கைகளையும், கல்வித்திட்டங்களையும் வகுக்கும் பொழுது, ஒவ்வொரு பிரதேச மக்களினதும் சூழல், சமூக வாழ்வு, பொருளாதார நிலைகளைக் கருத்திற் கொள்ளாது, பௌத்தமகாசங்கம், சிங்களமகாசபை போன்ற அமுக்கக் குழுக்களின் நெருக்குதல்கள், வேண்டுகோளின் பெயரில் பக்கச்சார்பான கலைத்திட்டத்தைத் தயாரித்தல்.

உ + ம் 1990ம் ஆண்டின் ஆண்டு - 6, ஆண்டு 9 வகுப்புக்கான "வரலாறு" பாடப் புத்தகத்தில் தமிழர் வரலாறு புறக்கணிக்கப்பட்டதுடன், இந்த நாட்டில் தமிழர்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றார்கள் அவனுக்கு என்று ஒரு வரலாறு, என்பதும், பாரம்பரியம் இருந்தது என்பன போன்ற தகவல்களும் இருட்டடிப்புச் செய்யப்பட்டமை.

3.4. வேலைவாய்ப்பை நோக்கிய கல்விமுறைமை இருந்தமையினால், கல்வி கற்றும் வேலையில்லாத நிலையால் விரக்தி ஏற்பட வைத்தமை.

3.5. எமது சூழலில் கிடைக்கும் வளங்கள், சக்திகள் என்பவற்றைக் கவனத்தில் எடுக்காது, கற்பனையிலான மேலைத்தேசத்திற்குப் பொருத்தமான கல்வித் திட்டத்தைத் இங்கும் திணிக்க முயன்றமை.

3.6 பாடநூல்களினூடாக இனவாதம் புகுத்தப்பட்டதால், இலங்கையில் வாழும் இரு தேசிய இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்தமை.

3.7. உயர்கல்வி வாய்ப்பை ஒரு வீதமானவர்கள் மட்டுமே பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும் நேரத்தில் கல்விக்காக செலவிடும் பணத்தில் 3/4 பங்கு உயர்கல்வியை நோக்காகக் கொண்டவர்களுக்குச் செலவிடுவதாலும், ஏனைய பிரிவினரான கைத்திறன், தொழிலாளர்களைப் பயிற்றுவித்தல், தொழில்நுட்பத்திறன் அபிவிருத்தி, இடைநிலைக் கல்வியை முடித்து பாடசாலைகளில் இருந்து விலகுவோர்க்கான மறுசீரமைப்பு என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீடு போதாமையினால் கல்வியின் பெறுபேறுகள் வெற்றி அளிக்கவில்லை.

3.8. கலைத் திட்டங்களில் மனித உணர்வுகளை நளினப்படுத்தக் கூடிய எமது பாரம்பரிய கலை, கலாச்சார, மனிதப் பண்பாட்டியல் போன்ற நுண்கலைகளுக்கு உரிய இடம் அளிக்காமையினால், சமூக ஏற்றத்தாழ்வு நிறைந்த, சாதியத்திற்கு எதிரான உணர்வுகளைத் தோற்றுவிக்காத, சீதன ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழாத, இன ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாத ஒரு நடைப்பிணமான மனிதனை உருவாக்கும் தன்மையுள்ளதாகவே கல்வித் திட்டங்கள் அமைந்துள்ளன.

3.9. பல்கலைக்கழகக் கல்வி முறைகள் கூட, வெறும் பட்டங்களைப் பெறுகின்ற மனித இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலை என்ற வகையிலேயே அமைந்துள்ளன. மாறாக நல்லொழுக்கமும், செயல்திறனும் தேசியப்பற்றும் உள்ள பிரஜைகளை உருவாக்கும் வகையில் அவற்றின் செயற்பாடுகள் அமைந்திருக்காமை.

**04. தற்போது நடைமுறையில் உள்ள கலைத்திட்டத்தின் பரிணாம வளர்ச்சி:-**

இன்று எமது மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டமானது, ஆட்சி முறைகள் மாற்றப்படும் பொழுது பல்வேறு மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டு புதிய பரிணாமத்தை எடுத்து வந்துள்ளது.

இதனைப் பின்வரும் காலகட்டங்களாக வகைப்படுத்தி எடுத்து நோக்கலாம்:

1. புராதன இலங்கையில் இருந்த கல்வி முறை
2. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் அன்னியர் ஆதிக்க குடியேற்றகால கல்விமுறை
3. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட சுதேசிய கல்வி முறை

**புராதன இலங்கையில் இருந்த கல்வி முறை:-**

இலங்கையின் பண்டைய கல்வி முறைக்கு அடிப்படையாக இருந்தது பௌத்த கல்வி மரபுகளேயாகும். அக்காலத்தில் இருந்த கல்வி முறையினால் இரு பிரதான நோக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டன.

1. அறிவு வழங்குதல்
2. நல்லொழுக்கங்களையும், ஆன்மீக பண்புகளையும் விருத்தி செய்தல்.

இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மூன்று வகையான முறைசார் கல்வி நிறுவனங்கள் நடைமுறையில் இருந்தன.

1. குருவீடு
2. பௌத்த கோயில்கள்
3. பிரிவேனா

குருவீட்டில் வாசிப்பு, எழுதுதல், எண்கள் ஆகியவற்றை பற்றிய அடிப்படை விளக்கங்கள் இளம் வயதினருக்கு வழங்கப்பட்டன. இங்கு மாணவர்கள் எழுத்துக்களைக் கற்க ஆரம்பித்து அவற்றை மனனம் செய்தல், உடல் தண்டனைகள் எதுவுமின்றி மறைவில் எழுத்துக்களை எழுதிப் பழகுதல், வாசிப்பில் தேர்ச்சி பெறுவதற்காக உரத்துச் சத்தமிட்டு நூல்களை வாசித்தல் போன்ற திறன்களைப் பெறுகின்றனர். இன்று உரத்து வாசிக்க வைத்தல் செயல்பாட்டை எமது ஆசிரியர்கள் மேற்கொள்வதில்லை.

இதனூடாக மாணவர்களின், எழுத்து, வாசிப்புத்திறன் என்பன அதிகரிக்கப் பட்டன. இங்கு குருவின் இல்லமே அவர்களுக்குரிய நூலகமாகவும் இருந்தது.

தொடர்ச்சியான மேல்நிலைக் கல்வியைப் பெற விரும்புபவர்கள் பௌத்த கோயில்களுக்குச் சென்று பெற்றனர். குருவீடுகளில் ஆரம்பக் கல்வியையே பெற்றனர். பௌத்த ஆலயங்களில் பெற்ற கல்வி விரிவானதாக இருந்தது. இங்கு கல்வியைப் பெற்றவர்கள் பௌத்த குருமார்களாக மாற விரும்புபவர்களாகவும், வைத்தியம், சோதிடம், ஆசிரியர் தொழில் ஆகியவற்றில் ஈடுபட விரும்பிக் கற்பவர்களாகவும் காணப்பட்டனர். அங்கு பாளி மொழி, சமஸ்கிருதம், இலக்கியம், வரலாறு, கணிதம், சோதிடம், வைத்தியம், கவிதை, இலக்கணம் என்பன கற்பிக்கப்பட்டன.

இவற்றை விட மேலதிக கல்வியைப் பெற விரும்புபவர்கள் பிரிவேனாக்களில் சென்று உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வர்.

**அன்னியர் ஆதிக்கத்தின்கீழ் இலங்கையின் கல்வி முறைகள்:-**

16ம் நூற்றாண்டில் இருந்து இலங்கை மூன்று வேறுபட்ட வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது.

1505 - 1685 வரை போத்துக்கேயர் ஆதிக்கம்
1685 - 1769 வரை ஒல்லாந்தர் ஆதிக்கம்
1769 - 1948 வரை பிரித்தானியர் ஆதிக்கம்.

**போர்த்துக்கேயர் காலக் கல்வி முறைகள்:-**

போத்துக்கேயர் காலத்தில் காணப்பட்ட கல்வி முறையில் பின்வரும் பண்புகள் காணப்பட்டன.

- சமயக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான கல்வியை வழங்குதல்.
- மதகுருமார்களே பெரும்பாலும் ஆசிரியர்களாக இருந்தனர்.
- கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் மதகுருமார்களிடமே இருந்தது.

இவர்களுடைய பிரதான நோக்கம் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதாகவே இருந்தது. இலங்கையில் சமயக்கல்வி வேலைகளில் ஈடுபடுவதற்கு போர்த்துக்கல் நாட்டில் இருந்து நான்கு சமயப் பிரிவுகளைச் சேர்ந்த மதகுருமார்கள் இங்கு அனுப்பப்பட்டனர்.

1. பிரான்சிஸ்கன் சபை மதகுருமார்கள்
2. யேசுசபை மதகுருமார்கள்
3. டொமினிக்கன் சபை மதகுருமார்கள்
4. ஒகஸ்தினியன் சபை மதகுருமார்கள்

இவ்வெவ்வேறு சமயப் பிரிவுகள் சபைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் மூலம் வாசிப்பு, எழுத்து, சமயம், பாடல், மானிடவியல், சுயமொழி என்பனவும் வழங்கப்பட்டன.

இக்காலத்தின் பிரதான கல்வி நிறுவனங்களாக பரிஸ் பாடசாலைகள் (கோவில் பற்று), கிராமியப் பாடசாலைகள், கல்லூரிகள் என்பன காணப்பட்டன.

**ஒல்லாந்தர் காலத்தில் பாடசாலை கல்வி முறை:-**

ஒல்லாந்தர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி முறை பின்வரும் குறிக்கோள்களை உடையனவாக இருந்தன.

1. இலங்கை மக்களை புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாற்றிக் கொள்ளுதல்.
2. புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியவர்களுக்கு எழுத்து, வாசிப்பு என்பவற்றுக்கான அடிப்படைக் கல்வியை வழங்குதல்.
3. ஒல்லாந்தருக்குச் சார்பான ஒரு குழுவினரை உருவாக்குவதன் மூலம் அரசியல் நிலையைப் பலப்படுத்திக் கொள்வது.

இக்குறிக்கோள்களை இலக்குகளாகக் கொண்டு ஒல்லாந்தர் அமைத்த கல்வி நிறுவனங்கள் பின்வருமாறு:

1. பரிஸ் பாடசாலை - கிராமப் பாடசாலைகள்
2. ஒல்லாந்தர் பாடசாலைகள் - ஐரோப்பிய பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வி வழங்குதல்.

3. நோமல் பாடசாலைகள் - ஆசிரிய பயிற்சி வழங்கும் பாடசாலைகள்

4. செமினரிகள்

இந்நிறுவனங்களின் மூலம் வாசிப்பு, எழுத்து, கிறிஸ்தவ சமயம், எண், புவியியல், சங்கீதம், ஒல்லாந்த மொழி, கிரேக்க மொழி, இலக்கணம், ஹிப்று மொழி, லத்தீன் என்பன கற்பிக்கப்பட்டன.

உயர் கல்வியைப் பெறவிரும்புபவர்கள் ஒல்லாந்தில் உள்ள லெய்டன் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டனர்.

ஒல்லாந்தரினால் நிறுவப்பட்ட பாடசாலைகளின் கல்வி அமைப்பானது உறுதியான ஒரு திட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

ஒல்லாந்தரின் கல்வி முறையில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் பின்வருமாறு:-

1. நாடு முழுவதிலும் நிறுவப்பட்டிருந்த பரிஸ் பாடசாலைகள் ஸ்கொலாக்ஸ் கொமிஷன் என்னும் நிர்வாக சபையினால் நிர்வகிக்கப்பட்டன.
2. அடிப்படைக் கல்வி தாய்மொழியில் வழங்கப்பட்டது.
3. பதினைந்து வயதுவரை கட்டாயக்கல்வி அமுலாக்கப்பட்டது.
4. நிர்வாக சபையின் பரிசோதகர்கள் ஒழுங்கான முறையில் பாடசாலை மேற்பார்வைகளை மேற்கொண்டமையினால் பாடசாலைகள் மிகச் சிறப்பாக பரிபாலனம் செய்யப்பட்டன.
5. மிகத் திறமையான நுண்ணறிவுடைய மாணவர்களுக்கு செமினரிகளில் உயர்கல்விக்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டன.

# என்னிடம் வரும்போது அழகாவாய்!

கிரணங்களைப் பொழியும் போது
கதி ரோனும் அழகு தான்
மலை யிடையே மறையும் போது
முழு மதியும் அழகுதான்
ஓடை நீரில் பட்டுத் தெறிக்கும்
தாரகையும் அழகு தான்
என் னிடம் நீ வருகையிலே
முழு உலகும் அழகு தான்.

குழந்தைகளின் நடத்தை மாற்றங்களைத் துல்லியமாகக் காட்டும் வகையில் ஒரு கவிஞனின் இந்தப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலை மாணவர்களின் நடத்தையுடன் ஒப்பிடும்போது அது கணிப்பீட்டுக் கோட்பாட்டிற்கு உதவியான ஒரு தத்துவத்தை வெளிப்படுகின்றது. இப்பாடலில், "கதிரவன்" எல்லா நேரமும் அழகாய் இருப்பதில்லை எனக் கூறப்படுகின்றது. கிரணங்களைப் பொழியும் போதுதான் கதிரவன் அழகாக இருக்கும். இங்கு ஒரே கதிரவன்தான் காலையிலும், மாலையிலும் துலங்கும்போது கணிப்புக்குட்படுத்தப்படுகின்றான். அதேபோன்று மாணவர்களும் எல்லா நேரமும் ஒரே மாதிரி துலங்குவதில்லை. எனவே அவர்கள் துலங்கும்போதுதான் அதாவது மாணவரிடையே செயல் ஒழுங்கு நடைபெறும் போதுதான் அவர்களைக் கணிப்புக்குட்படுத்த வேண்டும். ஆமாம்!..... அவர்கள் துலங்கும் போதுதானே அழகாக இருப்பார்கள்.

**ஆனந்தி எம்.ஏ**

6. மதகுருமார்களாக வர விரும்புபவர்களுக்கு ஒல்லாந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

7. பரிஸ் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தோம்புகளை வைத்துப் பேணுகின்ற பதவிகளும் வழங்கப்பட்டன. (தோம்பு - காணி உறுதிகள்)
8. பாடசாலைப் புத்தகங்களை அச்சிடுவதுடன், பைபிளை சுதேச மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனூடாக மதமாற்றத்தை மேற்கொண்டனர்.

**பிரித்தானியர் காலப் பாடசாலைகளின் கல்வி முறைமைகள்:-**

1796இலிருந்து 1812 வரை ஒல்லாந்தரின் காலத்தில் இருந்த கல்வி முறைமையை அடிப்படையாகக் கொண்டு சில மாற்றங்களுடன் பாடசாலைகளை நிர்வகித்து வந்தனர்.

இதற்கமைய பின்வரும் நிறுவனங்கள் கல்வியை வழங்கின.
1. ஒல்லாந்து பரிஸ் பாடசாலைகள் - தாய்மொழியில் வாசிப்பு, எழுத்து, எண்கணிதம், கிறிஸ்தவ சமயம் என்பன கற்பிக்கப்பட்டன.
2. உயர்மட்ட பாடசாலைகள்-
   1. ஆரம்பப் பாடசாலைகள் (எட்டு வருடம்)
   2. அக்கடமி (செமினரி)
3. ஒல்லாந்தர் அநாதை விடுதிகளைப் புனரமைத்தல் - இது ஐரோப்பியர்களுக்குப் பிறந்த பிள்ளைகளை அரச செலவில் வளர்ப்பதற்கு பயனுள்ள தொழில் பயிற்சி அளிப்பதற்காக அமைக்கப்பட்டது.

1812 இற்குப்பின் சகல மிசனரிமார்களும் வந்ததனால் இலங்கையின் கல்விக் கொள்கைகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இலங்கைக்கு வருகைதந்த நான்கு மிசனரிகளும் வெவ்வேறு வகையான பாடசாலை அமைப்பு முறைகளை ஏற்படுத்திக் கொண்டன.

1. பப்ரிஸ்ற் மிசனரி சபையினர்:-
   அ. தாய்மொழிப் பாடசாலைகள் - இலவச கல்வி
   ஆ. ஆங்கிலப் பாடசாலைகள் - கட்டணம் அறவிடப்பட்டது.
   இ. பெண்கள் பாடசாலைகள்

2. வெஸ்லியன் மிசனரி சபையினர்:-
   அ. தாய்மொழிப் பாடசாலைகள் - சமயத்தைப் பரப்புவதற்காக நாடு முழுவதும் அமைக்கப்பட்டன.
   ஆ. ஆங்கிலப் பாடசாலைகள் - கிறிஸ்தவம், வாசிப்பு, எழுத்து கணிதம் என்பவற்றைக் கற்பிப்பதற்கான பாடசாலைகளாக கொழும்பு நீர்கொழும்பு, காலி, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

   இ. ஞாயிறு பாடசாலை:- கிறிஸ்தவ மதத்தை ஏழைப் பிள்ளைகளுக்கு கற்பித்தல்.
   ஈ. அக்கடமி - ஆங்கில மொழியில் உயர்கல்வி வழங்கல்.

3. அமெரிக்க மிஷன் சபையினர்:-
   அ. இலவச கிராமப் பாடசாலைகள் - தாய்மொழியில் ஆரம்பக்கல்வி இலவசமாக வழங்கப்பட்டது.

ஆ. இலவச விடுதிப் பாடசாலைகள் - உணவு, உடை. கல்வி என்பன முற்றுமுழுவதாக இலவசம்.

இ. மத்திய பாடசாலைகள் - தாய்மொழிப் பாடசாலைகளில் இருந்து வருகின்ற நுண்மதியுள்ள மாணவர்களை ஆசிரியத் தொழிலுக்காகப் பயிற்சி அளித்தல்.

ஈ. வட்டுக்கோட்டை செமினரி - உயர்கல்வி வழங்குவதற்காக நுண்மதி படைத்த பிள்ளைகளுக்கு விடுதிப் பாடசாலையாக இது அமைந்தது.

4. திருச்சபைப் பாடசாலைகள்:-

- யாழ்ப்பாணம், நல்லூர், கண்டியில் அமைக்கப்பட்டன.

அ. கிராமப் பாடசாலைகள்:

தாய்மொழியில் உள்ளூர் சாதாரண மக்களுக்கு கல்வி வழங்கப்பட்டன.

ஆ. மத்திய பாடசாலைகள்:

- ஆங்கிலம், வாசிப்பு, எழுத்து, எண்கணிதம், புவியியல் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

இ. விடுதிப் பாடசாலைகள்:

கோட்டே, பத்தேகம, நல்லூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

ஈ. கோட்டே கல்லூரி:

- மத்திய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நுண்மதி படைத்த மாணவர்களுக்கு

உ. பெண்கள் பாடசாலைகள்:

- நல்லூர், பத்தேகம, கோட்டேயில் அமைக்கப்பட்டன.

இலங்கையின் கல்விநிலையின் முக்கிய திருப்புமுனையான, கோல்புறுக் ஆணைக்குழுவினர் கல்வி தொடர்பாக முன்வைத்த இரு ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு 1865இல் நியமிக்கப்பட்ட மோர்கன் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் பின்வருமாறு அமைந்தன.

1. பொதுக்கல்விப் போதனைப் பணிப்பாளர் என்ற பிரதான அதிகாரியின் கீழ் பொதுக் கல்விப் போதனைத் திணைக்களம் நிறுவப்பட்டது. கல்வி நிர்வாகச் செயற்பாடுகள் இத்திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.
2. மிசனரிப் பாடசாலைகளுக்கு அரச நன்கொடை வழங்கப்பட்டது.
3. இலங்கை மூன்று கல்விப் பரிசோதனை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்று க்கும் பிரதான பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டனர்.
4. ஆரம்பக் கல்வி விருத்திக்காகச் சுயமொழிப் பாடசாலைகள் விருத்தி செய்யப்பட்டன.
5. ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவுதல்

5. 1870 இன் பின் உதவி நன்கொடைகள் வழங்கும் இந்து, பௌத்த பாடசாலைகள் நிறுவப்பட்டன.

கிறிஸ்தவ மிசனரிகள், கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஏனைய மதத்தினரை விட உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தமையால், கிறிஸ்தவ மிசனரிகளுக்கு எதிரான சுதேச மதங்களின் மறுமலர்ச்சியின் தேவை உணரப்பட்டது. அதனால் இலங்கையில் பௌத்தம், இந்து, இஸ்லாமிய பாடசாலைகள் தோன்றின.

பிரித்தானியர் காலக் கல்வித் திட்டமானது:

பின்வரும் முக்கிய நோக்கங்களை எதிர்பார்த்து அமைக்கப்பட்டது

1. பிரித்தானிய அரச நிர்வாகம் செயல்படுதவற்கு சுதேசிகளிடம் இருந்து ஆட்சேர்ப்பு
2. குறைந்த ஊதியத்தில் கூடிய வினைத்திறன் உள்ளவர்களை வேலைக்கு அமர்த்தும் நோக்கிலான கல்வி.
3. ஆங்கிலத்தையும், கிறிஸ்தவத்தையும் சுதேசிகளிடம் பரப்புவதற்கான ஊடகமாகக் கல்வியைப் பிரயோகித்தமை.
4. பிரித்தானிய அரச அதிகாரத்தின் கீழ் அடங்கி நடக்கும் அடிமை மனப்பான்மையுடைய சமுதாயத்தை உருவாக்கும் வகையிலான கல்வி.

இவை போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கல்வித் திட்டம் பிரித்தானியரின் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுதுதான் 1869ல் இலங்கையில் கல்வி அலுவலகம் முதன் முதலில் அமைக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் ஆங்கிலக் கல்விக்கே பிரதான இடம் அளிக்கப்பட்டதால் தமிழ்மொழிப் பிரயோகம், வளர்ச்சி என்பன தடைப்பட்டது. அதேவேளை படித்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் ஐரோப்பியர்களின் நடை உடை பாவனைகளைப் பின்பற்றத் தொடங்கியதுடன் மதமாற்றத்திற்கும் இக்கல்வி முறை தூண்டுகோலாக இருந்தது,

சைவசமய வளர்ச்சி கல்வித் திட்டம்:-

பிரித்தானிய மதத்தினரை எதிர்த்து ஆறுமுகநாவலர் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் ஆங்காங்கே சைவவித்தியாவிருத்திச் சங்கங்களை உருவாக்கி தமிழ் மொழியிலான கலைத்திட்டத்தை சுயாதீனமாக உருவாக்கினார். இவரது காலத்தில் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், வல்வை வைத்தியலிங்கப்புலவர் ஆகியோர் சைவசமயக் கல்வியை ஊக்குவித்தனர். இதன் விளைவாக வடக்குகிழக்கில் பல சைவ பாடசாலைகள் தோற்றம் பெற்றதுடன். தமிழ்மொழியைக்கற்கும் ஆர்வமும், தூண்டுதலும் எற்பட்டது.

**டொனமூர் காலத்திலான கல்வித் திட்டம்:-**

1931இல் டொனமூர் ஆணைக்குழு அரசியல் அமைப்பின்படி இலங்கையின் நிர்வாக அமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இவ்வமைப்பின் கீழ் உருவாக்கப் பட்ட நிர்வாகக் குழு முறையில் கல்விக் குழுவின் தலைவராக இருந்த சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரரா அவர்களின் தலைமையில் கல்வி புனரமைப்பு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் கலாநிதி சி.டபிள்யூ.ஈ. கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கல்வியில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டுவந்தார். அவர் காலத்தில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அ. கல்வி கற்றலில் செயல்முறை மூலம் கற்றலை வெளிப்படுத்தும் கலைத்திட்டம். இதன்மூலம் "கிராமியக் கல்வி" நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கியமை

ஆ. உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலான கல்வித் திட்டம் உருவாக்கியமை

இ. 1943ம் ஆண்டில் 'கல்விச் சிறப்புக் குழுவின்" விதந்துரைக்கேற்ப இலவசக் கல்வி திட்டம் அறிமுகம்.

ஈ. 1945ம் ஆண்டு சகல பாடசாலைகளிலும் தாய்மொழி மூலமான கல்வி அறிமுகம்

இதன் விளைவாக இலங்கை வரலாற்றில் இலவச பாடசாலைகள், இலவச பல்கலைக்கழகம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. இவற்றினூடாக கல்வி கற்றோர் வீதம் அதிகரித்தது.

1943ம் ஆண்டின் சி.டிபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவைத் தலைவராகக் கொண்ட விசேட கல்வி ஆணைக்குழுவினரால் விதப்புரை செய்யப்பட்ட கல்விக் கொள்கைகள் பின்வருமாறு

1. அரசினதும், மதக் குழுக்களினதும் ஒத்துழைப்புடனான ஒரு கல்வி முறையை நடைமுறைப்படுத்தல்.
2. தாய்மொழியில் பாடசாலைக் கல்வியை வழங்குதல்
3. சகல சமயத்தைச் சேர்ந்த மாணவர்கட்கும் சமயக் கல்வியை வழங்குதல்
4. ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குதல்.
5. கல்வியில் சம வாய்ப்பினை வழங்குதல்.
6. ஆசிரியர் பயிற்சிக்காக விசேட நிறுவனங்களை அமைத்தல்.
7. மூன்றாம் தரம் தொடக்க்ம், ஆங்கிலத்தைக் கட்டாயமாக இரண்டாம் மொழியாக்குதல்.

**05. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால கல்வி முறை**

1948ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆக்கிரமிப்பியில் இருந்து இலங்கை விடுபட்ட பின்னர் வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு கட்சி அரசியலைச் சேர்ந்தவர்களால் முன்வைக்கப்பட்ட கல்வித் திட்டம் 1948இல் இருந்து 1998ஆம் ஆண்டு வரை நீடித்து வந்தது.

**1948ம் ஆண்டுக்கு பிற்பட்ட கலைத்திட்டம்**

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில், கல்வி வளர்ச்சியானது ஒரு புதிய வடிவ மெடுத்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சுதந்திரமான கலைத்திட்டம் உருவாக்கப் பட்டதைத் தொடர்ந்து பாடசாலைகளில் வெவ்வேறான கலைத்திட்டம் அறிமுகமானது. அத்துடன் பாடப்புத்தகங்கள், பரீட்சை முறைகள்கூட தனித்துவ மானவையாகவும் இருந்தன. இதன்மூலம்

அ. பாடசாலைகளிடையே கல்வித்துறையில் போட்டி ஏற்பட்டது. இதன்மூலம் கல்வித் துறையில் துரித வளர்ச்சி ஏற்பட்டது.

ஆ. தேசிய இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் இடம்பெறவில்லை - இந்தக் காலப்பகுதியில் தென்னிலங்கையில் இருந்து பல சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கற்றுப் பட்டம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது

**1961ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட கலைத்திட்டம்**

1961ம் ஆண்டு சகல பாடசாலைகளும் அரசாங்க உடமைகள் ஆக்கப்பட்டதைத் தொடர்ந்து பாடவிதானமும் தேசிய மட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஒரே கலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

இதனால் பின்வரும் விளைவுகள் ஏற்பட்டன.

அ. ஒவ்வொரு பாடசாலைகளினதும் தனித்துவம் இழக்கப்பட்டது

ஆ. சகல பாடசாலைகளிலும் ஒரே கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால், பாடசாலைகளுக்கு சமாந்தரமான கல்வி அமைப்பைக் கொண்ட கட்டணம் அறவிடும் தனியார் கல்வி நிலைய அமைப்பு வளர்ச்சியடையத் தொடங்கியது.

இ. பாடசாலைகள் மட்டத்தில் கற்றல் கற்பித்தலுக்கான போட்டிகள் குறைந்து வந்ததுடன், ஏனோ தானோ என்ற நிலை அதிபர்கள் ஆசிரியர்கள் மத்தியில் உருவானது.

ஈ. பாடப்புத்தகங்கள் கொழும்பை மையப்படுத்தியும் சிங்கள பௌத்த கலாச்சாரத்தின் பின்னணியையும் கொண்டு எழுதப்பட்டதால் இனங்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகள் வலுவடையத் தொடங்கின.

உ. பாடசாலைகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டன. இதனால் சில பாடசாலைகள் உயர்ந்த நிலையில் மதிக்கப்படவும், சில கிராமப்புற பாடசாலைகள் கேட்பாரற்ற நிலைக்கும் தள்ளப்பட்டன.

**1972ம் ஆண்டின் கல்வி புனரமைப்புமக் கொள்கைகளும், தொழிற்கல்விப் பாடத்திட்டமும்**

1948ல் இருந்து 1972 வரை அடிக்கடி கல்விப் புனரமைப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டபோதும், பாடசாலை அமைப்பு முறையிலும் கொள்கையிலும் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால் இலங்கையின் சமூக, பொருளாதார மாற்றங்களுக்கேற்ப பொருத்தமான ஒரு கல்வித் திட்டம் அவசியம் என உணரப்பட்டதால், 1972ல் புதிய கல்விப் புனரமைப்பு தொடர்பான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இதில் பழைய க.பொ.த.சாதாரணதரம், க.பொ.த.உயர்தரம் என்ற பெயர்கள் மாற்றப்பட்டு தேசிய தராதரப் பொதுக்கல்வி (NCGE) உயர்தர பொதுக்கல்வி (HNCGE) என்ற பெயரிலான உயர்கல்விப் போதனைகள் இடம்பெற்றன.

இதில் பின்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டன.

சாதாரண பாடசாலைகள் மூலம் வழங்கப்படும் கல்வி மூன்று நிலைகளில் வழங்கப்படுதல்

1. தரம் 1-5 வரையிலான ஆரம்பக் கல்வி (கட்டாயக் கல்வி)
2. தரம் 6-9 ஆம் தரம் வரை கனிஷ்ட, இடைநிலைக் கல்வி (கட்டாயக் கல்விக்காலம்) இதன் முக்கிய நோக்கம், செய்முறை சார்ந்ததும், தொழில் வழிகாட்டலுக்கு உதவுவதுமான கல்வியை வழங்குவதற்கும் இப்பாட விதானம் மூலம் விஞ்ஞானம் சமூகக் கல்வி ஆகியன ஒன்றிணைந்த பாடங்களாக்கப்பட்டுள்ளன. 9ஆந் தர இறுதியில் “பொதுக் கல்வி பற்றிய தேசிய தராதரப் பத்திரப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும்.

3. தரம் 10-12 வரை சிரேஷ்ட இடைநிலைகள்:-

இதுவரை காலமும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை என இருந்த பொதுப் பரீட்சை இப்புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம், 10ஆம் தரத்தின் இறுதியில் தேசிய கல்வித்தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மாணவர்கட்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

12ஆம் தரத்தின் இறுதியில் தேசிய உயர்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றும் வகையில் உயர்கல்வி வழங்கப்பட்டது.

இப்புதிய கல்வித் திட்டத்தின் மூலம், பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் வயது ஆறாக உயர்த்தப்பட்டிருந்தது.

இக் கல்வித் திட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. இது தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. எனினும் நடைமுறையில் இது வெற்றியளிக்கவில்லை.
2. பாடங்களின் எண்ணிக்கை கூட்டப்பட்டது.
3. ஏனைய கலைத்திட்டங்களை விடவோ, முந்திய பொதுப் பரீட்சைகளின் தரங்களை விடவோ குறைந்த தரமுடையதாகவே கணிக்கப்பட்டது.

**1978ஆம் ஆண்டின் கலைத்திட்டம்:**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினால் 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தம் 1977இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் 1978இல் மாற்றியமைக்கப்பட்டது.

1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்களைக் கற்பதற்குரிய சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை காரணமாக கல்வி முன்னேற்றம் தடைப்பட்டமையால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் மத்தியில் எழுந்த அதிருப்திகள் காரணமாக 1978இல் புதிய கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1. பாடசாலை அனுமதி வயது 5 ஆகக் குறைக்கப்பட்டது.
2. கனிஷ்ட, இடைநிலைக் கல்விக் காலம் 6 வருடங்களாக அதிகரிக்கப்பட்டது.
3. க.பொ.த (சா.த.), க.பொ.த. (உ.த) பொதுப் பரீட்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.
4. பாடசாலையை விட்டு இடைவிலகுவோருக்கு மேலதிகமாக ஒரு பயிற்சியை வழங்குதல்.
5. உயர்கல்வி வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை அதிகமாக வழங்குதல்

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த பல்கலைக்கழக வெளிநிலைச் சேவை நிலையமும், இலங்கைத் தொலைக்கல்வி நிலையமும் ஒன்றிணைக்கப்பட்டு திறந்த பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது.

1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் பாடத்திற்கு பதிலாக புதிய தொழில்நுட்ப பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

1978இல் அறிமுகப்படுத்தப்பட்ட இக் கல்வித் திட்டம் தொடர்ந்து 20 ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்ட ஒரு கல்வித் திட்டமாக 1998ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது. இது பின்வரும் குறைபாடுகளைக் கொண்டதாக கல்வியலாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

அ) தமிழர் பாரம்பரிய கலை கலாச்சாரங்களை வளர்க்க உதவவில்லை.

ஆ) சிங்கள, பௌத்த கலாச்சாரம், அரசியல் பின்னணியும் வெளிக்கொணரப்பட்டு, தமிழர் வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இ) வயதுக்கு ஏற்றவகையிலான கல்வியை வழங்க முடியாத வகையில் மாணவர்களுக்கு அதிக சுமையை ஏற்படுத்தக்கூடிய தெளிவற்ற பாடப் பரப்புக்களை கொண்டு கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களினதும் ஆசிரியர்களதும் நேரம் விரயமாக்கப்படுவதுடன், மனிதவலுவளவும் வீணாக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது

ஈ) பரீட்சை முறையை இலக்காகக் கொண்ட கல்வி முறையாக அமைந்துள்ளது.

உ) இனவாதம் புகுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் முழுப்பகுதியும் சிங்களவரின் பாரம்பரிய பிரதேசம் என்றும், தமிழர் வந்தேறு குடிமக்களே என்றும் பொய்மை வாதம் நிலைநாட்டப்படும் முறையில் கல்வித்திட்டம் அமைந்துள்ளது.

ஊ) அந்தந்த சூழல், இனம், மொழி, மதம் கொண்ட மக்கள் வாழும் பிரதேசத்திற்கு ஏற்ப கல்வி அமைப்பு இடம்பெறவில்லை.

எ) தேசியப் பற்று ஊட்டப்படவில்லை.

ஏ) தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல வேண்டிய தேவையை இதுவும் ஏற்படுத்தியது.

உ) மாணவர்களின் தனித்துவமான ஆர்வமும், ஆற்றலும் உள்ள துறைகளை இனங்கண்டு அவற்றை வளர்க்கும் முயற்சியைக் கொண்டிருக்கவில்லை.

ஊ) தொழில்நுட்பத்திறன், கைத்திறன் தொழிலாளர் தரம் ஆகியவற்றிற்கான முக்கியத்து வமும், பயிற்சியும் வழங்கப்படவில்லை. இக் கலைத் திட்டமானது நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப வளைந்து கொடுக்காத கலைத் திட்டமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான அனைத்து மட்டங்களிலும், முந்திய சகல கலைத்திட்டங்களிலும் காணப்படுகின்ற குறைபாடுகளையும், கற்பித்தலில் காணப்படும் தவறுகளையும், தொழில் அடிப்படையில் கௌரவித்தல் சம்பளம் வழங்குதல் என்ற பொருத்தப்பாடில்லாத தன்மையையும்,

நீக்கக்கூடிய ஒரு புதிய கல்வித்திட்டத்தை முன்வைக்கப்படவேண்டியது அவசியமாகப்பட்டது.

**1981ம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை:-**

கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட கல்விக் கொள்கைகளின் படி ஒவ்வொரு பிள்ளையும் நூற்கல்வி மூலம் உருவாகும் மனப்பாங்கு, எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைப் பெற்றோர்களேயன்றி இவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆற்றல்களையும், திறன்களையும் பெற்றிருக்கவில்லை. இக்குறைபாடுகளை நீக்கும் வகையிலேயே 1981ம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கை முன்வைக்கப்பட்டது.

**இது பின்வரும் விதப்புரைகளை உள்ளடக்கியது.**

1. பாடசாலை அனுமதி வயது 5 ஆக இருக்கும்.
2. பாடசாலைக் கட்டமைப்பில் ஆரம்பப் பிரிவு (1-5), கனிஷ்ட, இடைநிலை (6-8), சிரேஷ்ட இடைநிலை (9-11) கல்லூரி மட்டம் (12-13) என 4 வகைகளாக வகைப்படுத்தப்பட்டு 13 வருடங்களை உள்ளடக்கியுள்ளது.
3. பாடசாலைகளின் நிர்வாக வசதி, வளப்பகிர்வு, அபிவிருத்தி என்பன கருதி நாட்டில் உள்ள பாடசாலைகள் 1000 கொத்தணிகளாக தொகுக்கப்படல்.
4. மூலாதாரப் பாடசாலை அமைப்பு முறை உருவாகியமை
5. எட்டாம் தரத்தில் பொதுப்பரீட்சை கொத்தணி மட்டத்தில் நடாத்தப்படல்.
6. மூன்றாம் நிலைக்கல்வி ஸ்தாபிக்கப்பட்டு பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல்,

அ) பல்கலைக்கழகம் சாரா உயர்கல்வி நிறுவனங்களைக் கூட்டிணைத்தல்,விருத்தி செய்தல், இந் நிறுவனங்கள் ஆசிரியத் தொழில், தாதித் தொழில், நில அளவை, அச்சிடல், கணக்கியல், இசை, நடனம் என்ற தொழில் சார்ந்த பயிற்சிகளை அளித்தல்.

ஆ) தொழில் நுணுக்க கல்வி அதிகார சபையூடாக எல்லா மட்டங்களிலும் தொழில்முறை, தொழில்நுணுக்கக் கல்வியை அளித்தல்.

7. கல்வி அமைச்சின் கொள்கையும், அக் கொள்கைகளின் அமுலாக்கங்களையும் மீளாய்வு செய்வதற்கு ஒரு கல்வி மதியுரைச்சபை ஏற்படுத்தப்படல்.

கல்வி நிர்வாகப் பரவலாக்கல் என்ற வகையில் 1984 இல் கோட்டக்கல்வி அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1998 இல் மாவட்டக் கல்வி அலுவலக முறை நீக்கப்பட்டு வலயக்கல்வி அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதற்கமையவே வடக்குக் கிழக்கில் 24 கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இத்தகைய நிர்வாகப் பரவலாக்கல் எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளன என்பது இன்றும் சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது.

**06. 1998ம் ஆண்டின் புதிய கல்விச் சீர்திருத்தம்:**

21ம் நூற்றாண்டிற்கான நவீன இலத்திரனியல் தொழிநுட்ப உலகை நோக்கிய பயணத்தில் இலங்கையும் வீறுநடைபோடுகிறது. அதற்கேற்ப செயற்றிறன் வாய்ந்த ஒரு கல்வியை வழங்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

1998ம் ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த கல்வி முறைமையின் ஊடாகப் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இன்றுள்ள கல்வி முறைமையின் பண்புசார் விருத்தியிலும், தலைமைத்துவ ஆளுமையிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையை சமூகத்தில் அவதானிக்க முடிகிறது

இத்தகைய குறைபாடுகளையுடைய ஒரு பாடசாலை முறைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வியானது,

1. சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற் திறன்கள், மனப்பாங்கு களைக் கொண்டமாணவர்களை உருவாக்கத் தவறி விட்டது.
2. ஆக்கத்திறன், சுயதூண்டல், ஒழுக்கம் மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை, நாட்டுப்பற்று, புரிந்துணர்வு என்பனவற்றையும் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட பூரண ஆளுமை விருத்தியை மாணவர்களில் ஏற்படுத்தத் தவறிவிட்டது.
3. சிந்தித்துச் செயற்படும் ஆற்றலுள்ள ஒரு சந்ததியைத் தோற்றுவிக்கத் தவறிவிட்டது.
4. இனங்களுக்கிடையிலான குரோத உணர்வை ஏற்படுத்தியதுடன் சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் என்ற உணர்வுகளையும் வளர்க்கத் தவறிவிட்டது.
5. சகல இனங்களுக்குமான சமமானகல்விவாய்ப்பு, பாரபட்சமின்மை, தகுதிக்கேற்ப வேலை வாய்பு என்பவற்றை உருவாக்கவில்லை.

இதன் விளைவாக தேசிய மட்டத்தில் குறைவான வெளிப்பாடுகள், சமூக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், நூலகங்கள், எரிக்கப்படுதல், மாணவர்களில் பலர் கொல்லப்பட்டும், புதைக்கப்பட்டும் போனமை, போன்ற வக்கிர உணர்வுகள் என்பனவும் இலங்கையின் கடந்த கால கல்வி முறையின் தோல்வியை வெளிப்படுத்தும் ஒரு சில அறிகுறிகளாகும்.

இத்தகைய குறைபாடுகளின் இருந்து நாட்டை மீட்டுப் புதியதொரு சமூகத்தை உருவாக்க கல்வியில் சீர் திருத்தங்களை மேற்கொள்வதற்கென 1991 இல தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் அதிகாரம் இதற்கு உண்டு.

இத்தேசிய கல்வி ஆணைக்குழுவானது கல்வியின் பல்வேறு நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ஆழமாக ஆராய்ந்ததுடன், பொது மக்களின் அபிப்பிராயங்களையும் பெற்றும் பலதரப்பட்ட கல்வியியளாளர்களையும் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அலுவலர்கள் ஆகியோரினதும் கருத்துக்களைப் பெற்றும் கல்விச் சீர்திருத்தம் தொடர்பான கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையிலேயே ஜனாதிபதியினால் கல்விச் சீரமைப்பை விரைவு படுத்துவதற்காக "பொது கல்விச் சீர்திருத்தத்திற்கான துரித நடவடிக்கைக்குழு" அமைக்கப்பட்டது.

புதிய கல்விக் கொள்கைகள் தொடர்பாக ஜனாதிபதி துரித நடவடிக்கைக் குழுவின் சீர்திருத்தச் செயற்பாடுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. கல்விக்கான வாய்ப்புக்களை விரிவாக்குதல்.
2. கல்வியின் தரத்தை மேம்படுதுதல்.
3. செயல்முறை மற்றும் தொழில்நுட்பத்திறன்களை விருத்தி செய்தல்.
4. ஆசிரியர்களுக்கு கல்வியும், பயிற்சியும் வழங்குதல்.
5. வினைத்திறனுள்ள முகாமைத்துவத்தையும், வளங்களையும் வழங்குதல்.

இவற்றின் அடிப்படையிலேயே 1998ஆம் ஆண்டின் புதிய கல்விச் சீர்திருத்தக் கொள்கைகள் முன்வைக்கப்பட்டன.

**புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவான கல்வியின் தேசிய குறிக்கோள்கள்:-**

01. தேசியப் பிணைப்பினையும், தேசிய முழுமைப் பாட்டினையும் தேசிய ஒருமைப் பாட்டினையும்.
02. பரந்தளவிலான சமூக நீதியை நிலை நாட்டுதல்.

03. ஓம்பக் கூடியதொரு வாழ்க்கைப் பாணி, ஓம்பக்கூடியதொரு வாழ்க்கைப்பாங்கு என்பதனைச் சிறக்கச் செய்தல்.
2000 ஆம் ஆண்டுக்கும் அதற்கு அப்பாலும் உயிர் நிலையாய் விளங்கக்கூடியது அக்காலம் மனித வர்க்கத்தின் வரலாற்றில் முதன் முதலாக வளியும் நீரும் தானும் கிடைக்கும் என்று கொள்ள முடியாது காலம் (சனத்தொகை அபிரித வளர்ச்சி)
04. கண்ணியம் (Dignifief) திருப்தி (Satisfying) தன்னிறைவு (Self fulfilling) என்பவற்றை ஏககாலத்தில் தரக்கூடிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
05. மேலே குறிப்பிட்ட பணிச் சட்டத்தில் நாட்டின் வளர்ச்சின் அமைப்பொழுங்கில் கூட்டு விலைவை உண்டாக்குவதற்காக மனிதவள அபிவித்திக்கான முயற்சிகளில் யாவரும் பங்குகொள்வதற்கான முயற்சிகளில் யாவரும் பங்கு கொள்வதற்கான பல்வேறு வாய்ப்பு களை ஏற்படுத்துதல்.
06. நாட்டின் மேம்பாட்டுக்கான முயற்சிகளில் பங்குகொள்வதற்கு ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் ஆழத்திருக்கும் ஆழ்ந்த இடையறாத அக்கறையுணர்வு தொடர்ந்து பேணப்படுதலை உறுதிப் செய்தல்.
07. மாறிவரும் உணர்வையும், ஏற்ப இணங்கி வாழக் கற்றல்.
08. காப்பு உணர்வுவையும், உறுதிப்பதட்டு உணர்வையும் எய்தும் வகையில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமையைச் சமாளிக்கும் தகைமையை வளர்த்தல.
09. சர்வதேச சமூகத்தில் கௌரவமாகதோர் இடத்தைப் பெறக் கூடியதாக மேற்குறிப்பிட்ட தகைமைகளை விருத்தி செய்தல்.

**வரலாற்றுத் தகவல் :-**

## தமிழர் இராட்சியம்

இலங்கைத் தீவினுடைய வரலாற்றில் கோட்டை அரசின் காலம் முக்கியத்துவம் வாய்ந்தது. கோட்டை என்ற பெயரே, அங்கு அழகக்கோனார் என்ற ஒரு தமிழ் மகன் கட்டிய கோட்டையின் பெயரையே தாங்கி நிற்கின்றது. ஆம் ... கோட்டே இன்றும் ஒரு தமிழ்ச் சொல்லையே தாங்கி நிற்கின்றது.

கோட்டே அரசு அமைக்கப்பட்ட அதே காலத்தில் இலங்கையில் மூன்று அரசுகள் நிலவின. கோட்டே இராச்சியத்தை விட, வேறும் இரண்டு அரசுகள் இங்கே இருந்திருக்கின்றன. ஆரம்பத்தில் கம்பளையைத் தலைநகராகக் கொண்டு பின்னர் கண்டிக்கு மாற்றப்பட்ட ஒரு சிங்கள அரசும், வடக்கே நல்லூரைத் தலைநகராகக் கொண்ட ஒரு தமிழ் அரசும் இலங்கை நிலப்பரப்பில் விளங்கின என்பது வரலாற்றில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை.

பேராசியரியர் கே.எம்.டி.சில்வாவினால் எழுதப்பட்ட **"A HISTORY OF SRI LANKA"** என்ற வரலாற்று நூலின் 84 ஆம் பக்கத்தில் உள்ள குறிப்பு பின்வருமாறு உள்ளது.

''14ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிங்கள மக்களுடைய நிலை மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. கம்பளை மன்னர்களுடைய ஆணை றுகுணையிலும், மேற்குக் கடற்கரை ஓரத்திலும் ஆதிக்கமுற்று இருந்தது போலத் தோன்றினாலும், ஆரியச் சக்கரவர்த்தியின் கீழ் இருந்த யாழ்ப்பாண அரசு தான் இந்தத் தீவில் மிகப் பலம் வாய்ந்த அரசாக இருந்தது.'' என்ற கூற்றும் , அதனைத் தொடர்ந்து 85 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டு இருந்த ''தலைநகர் மீண்டும் ஒரு முறை மாற்றப்பட்டது. இந்தத் தடவை மலைப்பகுதியில் இருந்து மேற்குக் கரையோரத்திற்கு அதாவது கொழும்புக்குச் சமீபத்தில் அழகக்கோன் 'ஜயவர்த்தனபுர' என்ற கோட்டைகட்டிய இடத்திற்கு மாற்றப்பட்டது.'' ஏனெனில் முக்கியமாகப் பாதுகாப்பு நோக்கம்தான். மேற்குக் கடற்கரை ஓரத்தை, அங்குள்ள கறுவாத் தோட்டங்களில் கண் வைக்கத் தொடங்கிய தமிழ் இராட்சியத்தில் இருந்து பாதுகாக்கும் பொருட்டுத்தான் கோட்டேக்கு இந்தத் தலைநகரம் மாற்றப்பட்டது.

இவ்வாறு அந்தச் சிங்கள வரலாற்றுப் பேராசிரியர், வரலாற்றைத் திரிக்காது கூறியுள்ளமை, அன்று நிலவிய தமிழ் அரசை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

எனவே இக் குறிக்கோள்களை எய்தக் கூடிய வகையில் 1998 ஆம் ஆண்டின் புதியகல்விச் சீர்திருத்த விதப்புரைகள் உள்ளன.

**புதிய கல்விச் சீர்திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்:-**

01. கல்வியில் சம வாய்ப்பை வழங்குதல்.
02. 5-14 வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் கட்டாயக் கல்வியை வழங்குதல் இது ஏற்கனவே 1939 ஆம் ஆண்டின் 31. இலக்கக் கல்விச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், வலுவாக அமுல்படுத்தப்படவில்லை.
03. கல்வித் தரத்தை அதிகரிப்பதற்கான சகல உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்குரிய பெருமளவு பணம், அதிபர்களிடமே வழங்கப்படும். இது தர உள்ளீட்டு நிதியினூடாக பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன.
04. முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தல் (வயது 3-5க்கு இடைப்பட்ட குழந்தைகள்)
05 ஆரம்பக்கல்வி அபிவிருத்தி மூன்று நிலைகளில் அபிவிருத்தி மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
   முதன்மை நிலை 1 - தரம் 1, தரம் 2.
   முதன்மை நிலை 2 - தரம் 3, தரம் 4
   முதன்மை நிலை 3 - தரம் 5
06. தரம் 1 இல் இருந்தே வாய்மொழி ஆங்கிலம் அறிமுகம் செய்தல்.
07. தரம் 6-11 வரை மதிப்பீட்டுக்குப் பதிலாக கணீப்பீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தல் இதுவே இன்று பாடசாலை மட்டக் கணிப்பீடு என்ற பெயரில் வகுப்பறையில் மேற்கொள்ளப்படுகிறது. இது படிப்படியாக உயர்வகுப்பு வரை அமுல்படுத்தப்படும்.
08. தரம் 9 இல் மாணவர்களின் கணிப்பீட்டின் அடிப்படையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படும்
09. ஆறாம் தரத்தில் சமூகக்கல்வி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களை ஒன்றிணைத்து சுற்றாடல் கல்வி அறிமுகம்.
10. க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்ற வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை நான்கில் இருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களிகன் சுமை குறைக்கப்பட்டது. இவற்றுக்கு மேலதிகமாக பொதுச் சாதாரண வினா தாள்களுக்கு தோற்றுதல் வேண்டும்
11. க.பொ.த. உயர்தரத்தில் ஒவ்வொருமாணவர்களும் செயுற்றிட்ட வேலை (தனி, குழு)களைப் பூர்த்தி செய்து அறிக்கைப்படுத்த வேண்டும்.
12. விஞ்ஞான பாடங்களில் செய்முறை சோதனை வேலைத்திட்டம் அறிமுகம் படுத்தப்படல்
13. க.பொ.த. உயர்தரத்தில் பொது ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தல்.
14. மாணவர்களின் கற்றல் திறமையும், வாசிப்புத் திறனையும் அதிகரிக்கும் வகையில் நூலக அபிவிருத்தியை மேம்படுத்தல். இதற்கென உலக வங்கி 5.8 மில்லியன் அமெரிக்கா டொலர்களை, பொதுக்கல்வி திட்டம் மூலம் வழங்கியுள்ளது. மாணவர்களின் நூலகப் பயன்பாடு கட்டயமாக்கப்பட்டதுடன், க.பொ.த.உயர்தர வகுப்பு நேரசூசியில் நூலகத்திற்கென வாரத்திற்கு 4 பாடவேளைகள் ஒதுக்கப்படும்.
15. இப்புதிய கல்விக் கொள்கைகளின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் இரு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    1. கனிஷ்ட பாடசாலைகள் - தரம் 1-9 வரையான வகுப்புக்கள்
    2. சிரேஷ்ட பாடசாலைகள் - தரம் 10-13 வரையான வகுப்புக்கள்

    ஆனால் இது வெற்றியளிக்கவில்லை.
16. ஆசிரியர் நிலையங்கள் (Teacher Centres) ஆசிரியர்களின் தொழில் வாண்மை விருத்திக்கு உதவும் வகையில் அமைக்கப்படுதல்.

இலங்கையில் மாறிவரும் அரசியல் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப, காலத்திற்குக் காலம் மாற்றமடைந்துவரும் கல்விக் கொள்கைகள் இன்றுவரை ஒரு ஸ்திரமான நிலையை அடையவில்லை என்றாலும், அதிகரித்துவரும் இலத்திரனியல் கணனி தொழிநுட்ப யுகத்திற்கு ஏற்ப கல்விக் கொள்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்று கூறலாம்.

இச்செயற்பாட்டில் இலங்கையில் உள்ள பாடசாலைகளுடன் வேறும் கல்வி நிறுவனங்களில் காத்திரமான பங்களிப்புக் குறிப்பிடக்கூடியதொன்றாகும். அவை

1) தேசிய கல்வி நிறுவகம், மகரகம
2) கல்வியியற் கல்லூரிகள், வடக்கு கிழக்கு மாகாணத்தில் வவுனியா, அட்டாளைச் சேனை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு
3) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள்
4) திறந்த பல்கலைக்கழகம்
5) பல்கலைக்கழகங்கள்
6) ஆசிரியர் கல்வி நிலையங்கள்
7) தொழில்நுட்பக் கல்லூரிகள்

தற்பொழுது நடைமுறையில் உள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் கூட எதிர்பார்த்த இலக்கை எட்டவில்லை என்பதைப் பல கல்வியியலாளர்கள் இன்று சுட்டிக்காட்டுகின்றனர்.

அவர்களால் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. கல்விக்காகப் செலவிடப்படும் பணத்தின் பெரும்பகுதி துஷ்பிரயோகம் செய்யப்படுதல்.
2. கிராமப்புற மாணவர்களுக்குப் பொருத்தமானதாக அமையவில்லை.
3. தேசிய உணர்வையும், நாட்டுப்பற்றையும் ஊட்டத் தவறியமை.
4. கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்த தவறியமை
5. பொருத்தமான பாடநூல்கள், மற்றும் உள்ளடக்கங்கள் இன்மை. குறிப்பாக தமிழ்மொழி மூலத்தில் இவை குறைவாகவே வெளியிடப்படுகின்றன.
6. கல்விக்கான வளங்களிலான சமபங்கீடுகள் இடம்பெறவில்லை.
7. செயல்திறன் மிக்க தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவம் இங்கும் உணரப் படவில்லை.
8. இக் கல்வித்திட்டமும் பரீட்சை மையக் கலைத்திட்டமாவே இருப்பதால், தனியார் கல்வி நிலையங்களை மாணவர்கள் நாடும் நிலை தொடர்கிறது.
9. மனித, பௌதிக வளப்பாடுகளின் சமமற்ற நிலை காரணமாக நகர, கிராமப்புற வேறுபாடுகள் தொடர்ந்தும் நிலவுகின்றன.
10. வேலை உலகுக்குத் தயாராகும் வகையிலான ஒரு கலைத்திட்டமாக இது அமையவில்லை.
11. வளங்களை வினைத்திறன் உள்ள வகையில் பயன்படுத்தாத நிலையில் வளவிரயம் பாரிய அளவில் காணப்படுதல்.
12. ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமலேயே 90% மான கிராமப்புறப் பாடசாலை களில் ஆங்கில பாடம் கற்பிக்கப்படுவதாகக் காட்டப்படுகின்றமை.
13. பாடசாலைமட்டக் கணிப்பீட்டுத் திட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை.
14. மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக அனுமதியைக் கொண்டதாகவே இந்தக் கல்வி முறையும் அமைந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை மீண்டும் ஒரு கல்விச் சீர்திருத்தத்தை எதிர்நோக்க வேண்டும் அல்லது நடைமுறையில் இருக்கின்ற கல்விச் சீர்திருத்தத்தில் பொருத்தமான மாற்றத்தைச் செய்து பயனுடைய கல்வித் திட்டமாக மாற்றிச் செயற்படுத்த முன்வர வேண்டும். அப்பொழுதுதான் நமது நாடும், 21ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய அபிவிருத்தி அடைந்த நாடாகத் திகழ முடியும்.

வரலாற்றுத்தகவல்:

## சோழர்காலத் திருகோணமலை நிர்வாகம்

இராஜராஜ சோழன் (கி.பி.958 - 1014) காலம் அவர் மகன் இராஜேந்திரசோழன் (கி.பி. 1012 - 1044) காலத்திலும் சோழ இராட்சியம் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வொவ்வொரு மண்டலங்களும் வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இலங்கையின் சோழராட்சி உட்பட்ட பகுதிகளில் காணப்பட்ட நிர்வாகப்பிரிவுகளில் ஆறு வளநாடுகளே சாசனங்களில் உள்ளன. இவற்றுள் நான்கு வளநாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்திருக்கின்றன. சோழ வளநாடுகள் ஒவ்வொன்றும் சிறப்புப் பெயர்களினால் வழங்கப்பட்டன.

1. இராஜேந்திர சோழவளநாடு (திருகோணமலை நகரமும், கந்தளாய் ராஜராஜ சதுர்வேதி மங்கலமும் உள்ளடக்கப்பட்ட பகுதி.)

2. விக்கிரம சோழ வளநாடு (மூதூர் பற்றின் ஒருபகுதியான, கணக்கள் கொட்டியாரம் உள்ளடக்கிய பகுதி)

3. இராஜராஜ வளநாடு (மூதூர் பற்றின் மற்றைய பகுதியான மாப்பிசும்பு கொட்டியாரம்)

4. இராஜேந்திர சிங்க வளநாடு (வெல்கம் விகாரை என இன்று அழைக்கப்படும். இராஜராஜப் பெரும்பள்ளி உள்ளடங்கிய பகுதி - தற்போது இது கட்டுக்குளம் பற்று என அழைக்கப்படுகிறது.)

சோழராட்சி நிர்வாக முறை குறித்த சில தகவல்களை கந்தளாய்க் கல்வெட்டு மூலம் அறியலாம்.



நன்றி - சிரித்திரன்

# வெங்காயத்தின் மகத்துவம்

எமது பிரதேசத்தில் சாதாரணமாக விளைந்து கொண்டிருக்கும் சின்ன வெங்காயத்தின் முக்கியத்துவத்தை எம்மில் பலர் உணர்ந்து கொள்வதில்லை.வெங்காயம் ஒரு சுவையூட்டியாகவும் வாசனைப் பொருளாகவும் கறியுடன் சேர்க்கப்படுகின்றது. அதிகளவில் அயடீனைக் கொண்டுள்ள வெங்காயம் சிறந்த ஒரு மருத்துவப் பொருளாகவும் இருப்பதால் அது பற்றிய தகவல்களை அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**பலம் அதிகரிக்க**

பனிக்காலங்களில் சிலர் சோர்வாகவும், பலவீனமாகவும் இருப்பதைக் காணலாம். இதற்கு அரை அவுன்ஸ் வெங்காயச் சாற்றை எடுத்து அதனுள் ஒரு தேக்கரண்டி அளவு தேன் கலந்து அருந்தி வர நாளடைவில் உடலின் சக்தி அதிகரிக்கும்.

**இருதய பலவீனத்திற்கு**

வெங்காயச் சாற்றுடன் சிறிதளவு சீனி சேர்த்து அருந்தி வருவதால் இதயம் பலம் அடைவதுடன் இதய நோய்களுக்கு உட்படும் தன்மையும் குறைவடையும்.

**சமியாக் குணம் நீங்க**

வெங்காயச் சாற்றுடன் சம அளவு வினாகிரி விட்டுச் சூடாக்கிக் குடித்தால் சமியாக்குணம் நீங்கி இரைப்பை பாரம் குறைந்து உடல் சுகம் பெறும். இதற்காக டைஜீன் மாத்திரைக்கு அலைந்து திரியத் தேலையில்லை.

**தலைவலி நீங்க**

வெங்காயத்தை செங்கல்லில் வைத்து அரைத்து அந்தச் சாற்றை எடுத்து தலை வலிக்கும் இடத்தில் பற்றுப் போடத் தலைவலி நீங்கும்.

**இரவில் தூக்கம் வராமல் இருப்பவர்க்கு**

இரவு நேரங்களில் தூக்கம் வராமல் அவதிப்படுபவர்களுக்கும் கூட நல்லதொரு வெங்காயச் செய்தி உள்ளது. இரவில் உணவு அருந்திய பின் தேவையான அளவுக்கு வெங்காயச் சாற்றை அருந்தி வரும்பொழுது குறித்த நேரத்தில் தூக்கம் வரத் தொடங்கும்.

**தோலில் தேமல் நீங்க**

சிலருக்குத் தோலின் மேல் படைகளாகவோ, தேமலாகவோ அடையாளங்கள் தோன்றும் தினமும் தேமல் படை உள்ள இடத்தில் வெங்காயச் சாற்றைப் பூசிவந்தால் விரைவில் அவை மறைந்து விடும்.

**புகையிலை நஞ்சு நீங்க**

அதிகளவில் புகையிலைச் சாற்றைக் குடித்து நஞ்சு ஏறியவர்களுக்கு உடனடியாகச் சின்ன வெங்காயச் சாற்றை அருந்தக் கொடுத்தால் நஞ்சு நீங்கிச் சுகம் பெறுவர்.

**நினைவிழந்தவர்களுக்கு**

மூர்ச்சையுற்று நினைவிழந்தவர்களுக்கு, உடனடியாக செய்ய வேண்டிய முதல் உதவி, வெங்காயச்சாற்றை எடுத்து மூக்கில் வைத்து முகரச் செய்ய வேண்டும் அந்த ஆவி சுவாசப்பை வரை சென்றதும் உடனே தெளிவடைந்து விடுவார்கள்.

வழமையாக முதல் உதவியாளர்கள் அமோனியம் இரு காபனேற்று எனப்படும். மணக்கும் உப்பையே முகரச் செய்வார்கள். இது மூக்கை அரிக்கும் தன்மையைக் கொண்டதால் நமது கைக்குள் இருக்கும் வெங்காயச் சாற்றையே பயன்படுத்தலாம் அல்லவா?

**வயிற்றுவலி, நோவு நீங்க**

வயிற்று வலியினால் அவதிப்படு பவர்களுக்கு வெங்காயச் சாற்றுடன் சிறிதளவு உப்புக் கலந்து அருந்தக் கொடுத்தால் வயிற்று வலி மறைந்து விடும்.

**தைரொட்சின் குறைபாடு உடையவர்களுக்கு**

கழுத்துப்பகுதியில் உள்ள கேடயச் சுரப்பி எனப்படும் தைரொயிட் சுரப்பிக் குறைபாடுடையவர்களின் கழுத்துப்பகுதியில் வீக்கம் வரத் தொடங்கும். இது நாளடைவில் பெருத்து வரும்பொழுது கண்டமாலை எனப்படும் நோய் ஏற்படும். தைரொக்சின் குறைபாடு அயடீன் கனிப்பொருள் குறைபாடு காரணமாகவும் ஏற்படும். இத்தகையவர்கள் போதியளவுக்கு வெங்காயத்தை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**தீக்காயம் குணமாக**

தீக்காயத்தின் மேல் வெங்காயச் சாற்றைப் பூசிவர விரைவில் காயம் ஆறும்.பார்த்தீர்களா இவை மட்டுமா வெங்காயத்தின் மகத்துவம் அதன் மருத்துவப் பலன்கள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. இந்தப் பகுதியில் இன்னும் பல சுவையான மருத்துவக் குறிப்புக்கள் இடம் பெற உள்ளன. வெங்காயத்தின் மகத்துவத்தை அறிந்த பின்பும், மடவெங்காயம் என்று எவரையாவது ஏசிவிடாதீர்கள் 'அவர் மகத்துவமானவராகி விடுவார்.

**நன்றி: கதிரவன்**

வரலாற்றுத் தகவல்

## மட்டக்களப்புத் தமிழ் ஊர்கள்

மட்டக்களப்பில் உள்ள பல ஊர்கள் காரணத்தால் பெயர் பெற்றவையாக உள்ளன. இன்று புளியந்தீவு என வழங்கப்படும் ஊர் முன்னாளில் ''புலியன் தீவு'' எனப் பெயர் பெற்று விளங்கிய ஊராகும்.

'புலியன்' என்னும் வேடர் குலத் தலைவன் அரசு புரிந்த இடமாதலால் இது ''புலியன் தீவு'' என வழங்கப்பட்டது. இதுவே மொழிச் சிதைவினால் பின்னர் ''புளியந்தீவு'' என வழங்கப்படுகின்றது. இதேபோன்று ''காத்தான்குடி'' என்பது ''காத்தான்'' என்னும் வேடனால் முதலில் குடியிருக்கப்பெற்றதால் இப்பெயர் பெற்றது.

ஏறாவூர் - முக்குவரிடமிருந்து முஸ்லீம்கள் பரிசாகப் பெற்றுக் குடியேறும் வரை ஒருவரும் குடியேறாதிருந்த ஊராக இருந்ததால் ஏறா ஊர் எனப் பெயர் பெற்றது.

சத்துருக் கொன்றான் - பகைவர்கள் கொல்லப்பட்ட இடமாதலால் (சத்துரு - பகைவர்) இப்பெயர் பெற்றது.

வந்தாறு மூலை என்பது படைகள் வந்து ஆறியிருந்து சென்ற பகுதியாதலால் வந்து ஆறு மூலை எனப் பெயர்பெற்றது.

கிட்டங்கித்துறை என்பது அந்நாளில் நெல் சேர்க்கும் பெரிய களஞ்சியங்கள் கொண்டு வாவிக் கரையில் இருந்த துறையாக இருந்ததால் இப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. கிட்டங்கி என்பது நெல் மற்றும் உணவுப் பண்டங்கள் சேமிக்கும் அறை. இவ்வை யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் இன்றும் உள்ளன.

# எரிந்துபோன கிராமம்

செத்துப்போன வாழ்வுதனை
திரும்பிப்பார்க்கிறேன்
ரம்மியமும் இரட்சிப்பும்
ஒவ்வொரு முயற்சியிலும்
ஆதிக்கம் செலுத்த

எல்லாம் பச்சையாகவும்
ஆட்காட்டி கலாசாரம்
எதுவுமே தொக்காமல்
நீண்டு நெடிதுயர்ந்த
விண்மீன் மாளிகையில்
மனது சஞ்சரித்து உலாவி
சுற்றித் திரிந்து சுகித்தது

எங்கும் கோடான கோடி
கொட்டிக் கிடக்கும் இன்பங்களாய்
எதிர்காலம் எதிர்வு கூறி
இருப்பைக் கைப்பிடிக்குள் பொத்த

கிராமத்துச் சத்தங்கள்
மார்கழி வெள்ளம்
திருவெம்பாவை ஊர்வலம்
ஓடைகளில் குளிப்பு

தூண்டில் எறிந்து மீன் பிடித்த
பகமை உணர்வு
ஆலமர விழுதில் தொங்கி
குரங்காட்டம் போட்ட குறும்பு

புழுதி விளையாடி
சேற்றில் கால்பதித்த இளமை
போக்கடி அரட்டை
பிள்ளையார் கோயில் பூசை
இளநீர் குலை திருடி
இன்பம் துய்த்த நாட்கள்
எதுவும் அறிவுக்குள் சிக்காத
சின்ன கிராமத்து

விவசாய வாழ்க்கை அன்று
திமிறி வந்த யுத்தவீரனுக்குள்
அமிழ்ந்து அழிவுண்டு போக
அகதிவாழ்வும் அவலமும்

நிதர்சன வலைவிரிக்க இன்று
நெருப்பு வாழ்க்கையாய்
எனது கிராமம்
எரிந்து கிடக்கிறது.

**க. அன்பழகன்**
**கலாசார உத்தியோகத்தர்**
**பண்பாட்டுத் திணைக்களம்**



" ஆடுதல், கற்றல், பாடுதல்,
சித்தரம், கவி எழுதுதல்
என்பவற்றுடன் வீட்டிற்கும்
உதவி, நாட்டைக் காக்கும் நல்ல
தலைவர்களாவோம்..... எமக்கு
உதவுவீர்களா ,"

# இஸ்லாமியரின் பாரம்பரியங்களும், வழக்காறுகளும்

கே.எம்.எம். இக்பால்
மேலதிக வலயக் கல்வி அலுவலகம்
கிண்ணியா

ஒரு இனத்தைச் சோந்தவா் இன்னொரு இனத்திற்குரிய பாரம்பரியங்களையும், வழக்காறுகளையும் அறிகின்றபோது இனங்களுக்கிடையிலான குரோதம் தணிகின்றது. ஆரோக்கியமான உறவு கட்டியெழுப்பப்படுகிறது. பல்லினங்கள் உள்ள ஒரு நாட்டிலே, இனப்பகையின் தாக்கத்தைக் குறைப்பதற்கு, பிற இனத்தவா்களின் வரலாறுகளையும், பாரம்பரியங்களையும் கற்கும் வேட்கை வளரவேண்டும். அந்த வகையிலே இலங்கை முஸ்லிம்கள் கடைப்பிடிக்கும் சில பாரம்பரியங்களையும், வழக்காறுகளையும் விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை சந்திக்கின்ற போது 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூற அதற்குப பதிலாக 'வ அலைக்கும் முஸ்ஸலாம்' என்று மற்றவா் பதில் கூறுகிறாா். எந்த நாட்டில் பிறந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், எந்த நிறத்தைச் சோ்ந்தவராக இருந்தாலும் முஸ்லிம்கள் அனைவரும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளே என்பதை உணா்த்த இந்த வழக்காறு உதவுகிறது.

கோபம் கொண்டு பிரிந்த நண்பா்களையும் சண்டையிட்டு பகைவா்களாக விளங்கும், மனிதா்களை-நேசா்களாகவும் மாற்றுவதற்கு இது உதவுகிறது. ''அஸ்ஸலாமு அலைக்கும் 'என்பதன் கருத்து,'' ''உங்கள் மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!'' என்பதாகும். இன்றைய உலகிலே உள்ளத்தில் சாந்தி ஏற்படுவது அரிதாக உள்ளது. அந்தச் 'சாந்தி உங்கள் மீது உண்டாவதாக!' என்று உரைப்பது சிறந்த மனித விழுமியமாகக் காணப்படுகிறது.

ஒருவா் ஒரு வீட்டுக்குள் நுழையும் முன்பு 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று சொல்லிக் கொள்வது, இஸ்லாமிய பாரம்பரியமாக உள்ளது. அவ்வாறு வாசலில் ஒருவா் செல்லும் போது, வீட்டுக்குள் இருப்பவா், வந்தவரை வரவேற்க ஆயத்தமாவதற்கு அது வாய்ப்பாக அமையும். வீட்டுக்குள் இருந்து உரிய பதில்வராத போது, வந்தவா் திரும்பிச் செல்வதற்கு அது வசதியாக அமையும்.

இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றும் இன்னொரு வழக்காறாக, சஹனில் உணவு சாப்பிடுதல் அமைகிறது. அதாவது ஒரு வட்டவடிவமான பாத்திரத்தில் நான்கு அல்லது ஐந்து பேர் ஒன்றாக உணவருந்துவதை இது குறிக்கும். முஸ்லிம்களின் விஷேட தினங்களில் சஹனில் உணவு உண்பது சாதாரண ஒரு நிகழ்வாக அமைகிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. தனித்தனியாக உண்பதை விட ஒன்றாகச் சாப்பிடுவது வேற்றுமையைக் குறைத்து, ஒற்றுமையை வளா்க்க உதவுகிறது. பிற இனத்தைச் சோ்ந்தவா்கள் கூட, சாப்பிடும் போது வீட்டிலுள்ள அனைவரும் ஒன்றாக, ஒரே மேசையில் அமா்ந்து சாப்பிடுவதை விரும்புகிறாா்கள். குடும்ப அங்கத்தவரில் ஒருவா் சாப்பாட்டு மேசைக்கு வராவிட்டால், மற்றவா்களுக்கு அது கவலையை ஏற்படுத்துகின்றது, ஒன்றாகச் சாப்பிடும் போது கருத்துக்களும் உணா்வுகளும் பரிமாறப்படுகின்றன. ஒரே மேசையில் ஒன்றாக அமா்ந்து

சாப்பிடும் இந்த நிலையிலிருந்து, இன்னும் ஒரு படி முன்னேற்றம் உடையதாக, சஹன் சாப்பாடு அமைகிறது.

நான்கு அல்லது ஐந்து பேர் ஒரே தட்டில் சாப்பிடும் போது, அவர்களுக்கிடையிலான பிணைப்பு இன்னும் இறுக்கமடைகின்றது. பகைப்பட்ட நெஞ்சங்களுக்கிடையே பிணைப்பு ஏற்படுகின்றது. மற்றவருடன் சேர்ந்து உணவருந்தும் போது, உண்ணும் பாங்கில் ஒழுக்கத்தைப் பேண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஒருவர் மற்றவருக்கு உதவும் வாய்ப்புக்களும், ஒருவர் மற்றவருக்கு விட்டுக்கொடுக்கும் நிலமைகளும் ஏற்படுகின்றன. ஒரேதட்டில், ஒரே உணவைச் சாப்பிடும் போது முதலாளி; தொழிலாளி பணக்காரன், ஏழை என்ற வேறுபாடுகள் நீங்கி அனைவரும் சமமானவர்களே என்ற உணர்வு ஏற்படுகின்றது.

முஸ்லிம்கள் பின்பற்றும் ஒரு பாரம்பரியமாக, பெண்கள் பர்தா அணிதல் அமைகிறது. நவநாகரீகயுகத்திலே இது பொருந்தாத ஒரு விடயமாக பெண்களின் உரிமையை பாதிக்கும் ஒரு விடயமாக-இது அமைகிறது என்று பிறரால் விமர்சிக்கப்படுகிறது. எனினும் பர்தா அணிவதால் ஏற்படும் இலாப நட்டங்களை சீர்தூக்கிப் பார்க்கும் போது, இலாபமே அதிகம் கிடைக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

பாலியல் ரீதியான சிந்தனைகளே இன்றைய உலகில் வேகமாகப் பரவிவருகின்றன. தொலைக்காட்சி, இணையம், சினிமா பாதையருகேயுள்ள விளம்பரம் இவை அணைத்துமே மனிதனது பாலியல் உணர்வுகளைத் தூண்டுவதிலே, வெற்றியடைந்த சாதனங்களாக உள்ளன. நவநாகரீகம் உற்பத்தி செய்த ஆக்கமாக எயிட்ஸ் காணப்படுகின்றது. மேலைத்தேச கலாசாரத்தின் புதிய அடையாளமாக ஓரினதிருமணம் அமைகிறது. இந்த நிலையிலே பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஆடைகள் அணிவதை எவரும் விரும்பமாட்டார்கள். தலைநகரத்திலே, பேருந்திலே பயணம் செய்யும் வாலிபர்கள், ‘முஸ்லிம் பெண்களின் உடைகள் எங்களின் உள்ளங்களை எவ்வகையிலும் கெடுப்பதில்லை’ என்று கூறுகிறார்கள்.

முஸ்லிம்கள் சந்திக்கும் போது முஸாபஹா (கட்டித் தழுவுதல்) செய்து கொள்வதும் ஒரு வழக்காறாகும். தூரத்தில் இருந்து ‘குட்மோனிங்’ சொல்வதைவிட, கைலாகு கொடுத்து வரவேற்றல் ஒரு உயர்ந்த பண்பாகும். அதைவிட உடலோடு உடலை அனைத்து ஆரத்தழுவுதல் மிகச்சிறந்த ஒரு பழக்கமாக இதயங்களின் இறுக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு அம்சமாகக் காணப்படுகின்றது. உடல் இணையும் போது, உள்ளங்களும் அன்பால் பிணைக்கப்படுகின்றன. முஸாபஹா பகைமையை வேரறுப்பதற்கும், சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கும் உதவுகிறது. அது இரு உடல்கள் இணைந்து விட்டன என்பதை மட்டும் உணர்த்தும் ஒரு குறிகாட்டி அல்ல. அது இரு உள்ளங்களின் சங்கமத்தை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாகவும் அமைகிறது.

இறைவனை ஐவேளை தொழுவதையும், ஏழைகளுக்கு பொருள் கொடுப்பதையும், ஒரு மாதம் நோன்பு இருப்பதையும் தமது கடமைகளாக முஸ்லிம்கள் கொண்டுள்ளனர். இவை ஏனைய சமயங்களிலும் இருப்பதால், இவற்றால் ஏற்படும் நன்மைகளையும் அவர்களுக்குள் அறிந்து கொள்வதில் பிரச்சினை இருக்காது.

தொழுவதற்கு முன்பு வுளூச் செய்தல் (சுத்தம் செய்தல்) முஸ்லிம்கள் பின்பற்றும் தனியான பண்பாக உள்ளது. ஒவ்வொரு பள்ளிவாசலும், ஒவ்வொரு நீர்த்தொட்டியைக்

கொண்டிருக்கும் பள்ளிவாசலிலே தொழவிரும்புகின்றவர்கள், முதலில் வுளூச் செய்வது அவசியமாகும். தொழுகை உள்ளத்தைச் சுத்தம் படுத்துவது போல, வுளூ உடலைச் சுத்தப்படுத்துகின்றது. ஐந்து வேளைத் தொழுகை ஒரு மனிதனது உள்ளத்தை எவ்வாறு தூய்மையாக ஆக்குகிறதோ, அதேபோல் ஐந்து வேளை வுளூச் செய்வது ஒரு மனிதனது உடலை தூய்மையுறச் செய்கிறது. புனிதமான பள்ளிவாசலிலே, தூய்மையாளனான இறைவனை, தொழுகையின் மூலம் சந்திக்க இருக்கும் ஒரு முஸ்லிம் தனது உடலை தூய்மையாக்க வேண்டும். ஒருவனது தொழுகை பரிபூரணமான தொழுகையாக அமைய வேண்டுமானால், அவனது உடல் பரிசுத்தமானதாக அமையவேண்டும்.

மேலும் முஸ்லிம்கள் நின்று கொண்டு சிறுநீர் கழிப்பதில்லை. நாய், பன்றிகளை வளர்ப்பதில்லை. இதற்கு அதிகமான விஞ்ஞான விளக்கங்களை முன்வைக்க முடியும். மேலும் முஸ்லிம்கள் மசூறாவின் (ஆலோசனை) அடிப்படையிலேயே தமது கருமங்களை நிறைவேற்றுகின்றனர். இது நவீன சிந்தனையாளர்கள் அனைவருக்கும் ஏற்புடைய ஒரு விடயமாகும்.

இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றும் பலவகையான வழக்காறுகளிலே ஒரு வழக்காறுகள் மட்டுமே இதுவரை நோக்கப்பட்டன. இவ்வாறு ஒரு இனத்தினரால் பின்பற்றப்படும் வழக்காறுகள், மற்ற இனத்தினரும் தெரிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட வேண்டும். ஒரு பல்லின நாட்டில் பிற இனங்களின் வழக்காறுகளையும், நம்பிக்கைகளையும் மதிக்கும் மக்கள் வாழ்ந்தால், அந்த நாட்டில் இனவன்முறை ஏற்படுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

**வரலாற்றுத் தகவல்**

## குளக்கோட்டனின் கோணேசர் தரிசனம்

சாலிவாகன சகாத்தம் 358ஆம் வருடத்தில் (கி.பி. 436) மனுநீதி கண்ட சோழனின் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரையை மேற்கொண்ட பொழுது, கோணேசர் மலையை அடைந்து, கோணேசர் சிவாலயத்தை தரிசித்துப் பின்னர் தம்பலகமம் சென்று அங்கு பழுதடைந்திருந்த சிவாலயத்தைப் பழுது பார்ப்பித்து, அக்கிராமம் (பிராமணர் குடியிருப்பு) முதலியவற்றின் வேலைகளையும் திருத்துவித்தான்.

குளக்கோட்டு மகாராசன் கோயில் திருப்பணியை நிறைவு செய்து, அவ்வாலயப் பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கும், கோணேசலிங்கத்துக்குப் பூசைகளை மேற்கொள்வதற்கும் உரிய செலவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையும், தோப்புக்களையும் ஏற்படுத்தி, அவற்றைப் பராமரித்து பயிரிட்டு, அதனால் கிடைக்கும் வருமானத்தை ஆலயத்திற்குச் செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன் நாட்டுக்கு மீண்டான்.

**நூல்: யாழ்ப்பாண வைபவமாலை**

ஈழத்தில் போர்க்கால சூழ்நிலையில் பாதுகாப்புக் கருதி தமிழ் மக்கள் - குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் - ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்களை உலுக்கிய அரசபயங்கர வாதத்திற்கு அஞ்சியே அவர்கள் வேற்று நாடுகளில் தஞ்சம் கோரினர்.

1980ஆம் ஆண்டிற்கு முன்னரும் ஈழத்தமிழர்கள் சிலர் வேற்று நாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு சென்றனர். 1970களில் மத்.தியகிழக்கை நோக்கிய பெயர்வு இடம்பெற்றது. 1980இற்கு முன்பு ஐரோப்பிய நாடுகளுக்கு - குறிப்பாக இங்கிலாந்துக்குச் சென்றவர்கள் - பெரும்பாலும் உயர் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ஆங்கிலம் கற்றவர்கள். இவர்கள் மருத்துவம், பொறியியல், கணக்கியல் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற பெருநகரங்களிலிருந்தே புலம்பெயர்ந்தார்கள். புதிய சூழல் பற்றி அறிந்து அவற்றுடன் இசைவாக்கம் பெறுவதற்கான மனப்பக்குவம் பெற்றிருந்தனர். இதனால் மன அதிர்ச்சிக்கோ, புதிய அநுபவங்கள் சார்ந்த மனக்கிளர்ச்சிக்கோ அவர்கள் உள்ளாக வேண்டிய சூழ்நிலை அரிதாகவே காணப்பட்டது. பொருள் தேடுதல், உயர் அந்தஸ்துடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல், தம் கல்வி நிலையை மேம்படுத்துதல் என்பனவே அவர்களின் நோக்கங்களாக இருந்தன. இவர்கள் இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை.

# தமிழில் புலம்பெயர் இலக்கியமும் அதன் எதிர்காலமும்

- முல்லைமணி -

ஆனால் யுத்த சூழ்நிலையில் புலம்பெயர்ந்தவர்கள் புகலிட நாட்டில் எத்தகைய பண்பாட்டுச் சூழலை எதிர்கொள்ளப் போகிறோம் என்ற முன்னெச்சரிக்கை உணர்வினைப் பெற வாய்ப்பிருக்கவில்லை. உயிர் பிழைத்தால் போதும் என அகதி நிலையில் சென்றவர்கள் வேரடி மண்ணோடு பிடுங்கி எறியப்பட்ட பயிராகப் புதிய மண்ணில் வீசப்பட்டவர்கள். இவர்கள் சிறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சிறு விவசாயிகள் தொழிலாளர்கள். பல்வேறு சாதிசார் தொழில் வினைஞர்கள் முதலானோராவர். குக்கிராமங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வருபவர்கள். இவர்களில் சிலர் அயற்கிராமத்தை அறியாதவர்கள், உயர்கல்வி வாய்ப்பைப் பெறாதவர்கள். பலருக்குத் தமிழ்தவிர வேறு மொழியே தெரியாது. இவர்களது வர்க்கநிலை, அறிவுநிலை, அநுபவநிலை வேறுபாடுகள் புலம்பெயர் இலக்கிய உருவாக்கத்திற்கான அடிப்படைக் கூறுகளாக அமைந்தன.

புதிய புலப்பெயர்வாளர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் கலை இலக்கியத் துறையில் ஆர்வமுடையோராக இருந்தனர். இதுவே புதிய இலக்கிய வெளிப்பாட்டிற்கு வாய்ப்பாக அமைந்த காரணியாகும்.

புலம்பெயர்வதற்கு முன்பே ஈழத்தில் படைப்பாளிகளாகப் பலர் திகழ்ந்தனர். எஸ்.பொன்னுத்துரை, அ.முத்துலிங்கம், வ.ஐ.ச.ஜெயபாலன், லெ.முருகபூபதி, சேரன், அ.பாலமனோகரன், முல்லையூரான் முதலிய பலர் குறிப்பிடத்தக்கவர்கள். தாய் மண்ணில் எழுத்தாளர்கள் என்ற நிலையில் தாங்கள் எய்தியிருந்த அடையாளத்தைப் புகலிட நாடுகளிலும்

பேணிக் கொள்ள முற்பட்டனர். இலக்கியம் வாழ்க்கை அனுபவத்திலிருந்து பிறப்பதால் இவர்களின் ஆக்கங்கள் புதிய சூழ்நிலையால் ஏற்பட்ட துன்ப துயரங்கள், ஏக்கங்கள் முதலானவற்றைப் பொருளாகக் கொண்டன. இவர்களுடன் புதிய தலைமுறை எழுத்தாளர்களும் சேர்ந்து கொண்டனர்.

ஆண்பெண் உறவு, குடும்ப உறவுச் சிக்கல்கள், சாதிப்பாகுபாடு, வர்க்க முரண்பாடு, சீதனக் கொடுமை, பெண்ணிலை வாதம், வறுமை முதலானவற்றை மையமாகக் கொண்டு முன்பு இலக்கியம் படைத்தவர்கள் தற்போது புதிய சூழ்நிலையில் தோன்றிய இன்னல்களை இலக்கியப் பொருளாக்கினர்.

இடப்பெயர்வின் அவலம், வேற்று நாட்டுக்கு பிரயாணம் மேற்கொள்ளும்போது பெற்ற துன்பகரமான அனுபவங்கள், குடும்ப உறவினரைப் பிரிந்த ஏக்கம், வேற்று நாடுகளில் அகதிமுகாம் வாழ்க்கை, பிரயாணத்தைத் தொடங்கிய இடத்துக்கே திருப்பி அனுப்பப்படுதல், புகலிட நாட்டில் வதிவிட அனுமதிபெறுவதிலுள்ள சிக்கல்கள், நிறவேறுபாட்டால் ஏற்படும் பாதிப்பு, தாயக மண்ணின் பசுமையான நினைவுகள் புதிய சூழலுக்கு இசைவாக்கம் பெறுவதில் எதிர்நோக்கும் கஷ்டங்கள், அந்நிய நாட்டில் தமது பண்பாட்டைப் பேணிக்கொள்வதில் ஏற்படும் கஷ்டங்கள். ஆண்கள் உரிய வயதில் திருமணம் செய்யமுடியாது தவித்தல் முதலான பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியதாக புலம்பெயர் இலக்கியம் விளக்குகின்றது.

இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் எழுத்தாளர் படைக்கும் ஆக்கங்களே புலம்பெயர் இலக்கியம் என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் படைக்கும் ஆக்கங்கள் புலம்பெயர் இலக்கியமாகக் கொள்ளப்படுவதில்லை. தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் நெருங்கிய பண்பாட்டுத் தொடர்பு இருப்பதால் இவை ஈழத்துத் தமிழ் இலக்கியமாகவே கொள்ளப்படுகின்றன.

புலம்பெயர் இலக்கியம் ஒரு வகையில் நோக்கின் ஈழத்திலக்கியத்தின் விஸ்தரிப்பாகவே திகழ்கின்றன.

இதன் பொருட்பரப்பைத் தொகுத்து நோக்குமிடத்து கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) புலம் பெயர்வதற்கான தாய்நாட்டுச் சூழல்

ஆ) பிரயாணச் சிக்கல்

இ) தாய்மண்ணின் நினைவுகள்

ஈ) அந்நிய நாட்டுப் பண்பாட்டுடன் இசைவாக்கம் தொடர்பான பிரச்சனை

உ) பாலுணர்வுச் சிக்கல்.

ஊ) அடையாளச் சிக்கல்.

1980 இற்குப் பின்னர் விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற போது அரச படைகளின் கெடுபிடிகள், குண்டுவீச்சு, சுற்றிவளைப்பு, கைது, காணாமற் போதல், பொருளாதார மருந்துத் தடைகள் போன்றவற்றால் அனுபவித்த இன்னல்களால் பெருந்தொகையான தமிழ் மக்கள் வேற்று நாட்டுக்குப் புலம் பெயர்ந்தனர்.

அங்கீகரிக்கப்படாத முகவர்களுக்குப் பின்னால் திரிந்து பிரயாணத்தை மேற்கொள்ளும்போது இடையில் பலமாதம் தங்கிச் செல்ல நேரிடுகிறது. பிடிபட்டுத் திருப்பி அனுப்பப்படுவதும் உண்டு.

புகலிட நாட்டில் வாழும்போது தாம்பிறந்து வளர்ந்த மண்ணின் நினைவுகள் அவர்களை ஆட்கொள்கின்றன.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது பண்பாட்டைப் பேணுவது இலகுவாக இருக்கவில்லை. புகலிட நாட்டின் பண்பாட்டுத் தாக்கத்திற்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. அவர்களின் பிள்ளைகள் புதிய பண்பாட்டம்சங்களை உள்வாங்க முனையும்போது பெற்றோர் கவலையடைகின்றனர். எப்படியும் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்பத் தம்பிள்ளைகளை வளர்த்தெடுக்கப் படாதபாடு படவேண்டி இருக்கிறது. பிள்ளைகள் Boy friend, Girl friend வைத்திருப்பதையும் சுதந்திரமாகப் பழக விரும்புவதையும் பெற்றோரால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

ஐரோப்பிய நாடுகளில் கறுப்பர், வெள்ளையர் பாகுபாடு அதிகம் நிலவுகிறது. வெள்ளையர்கள் கறுப்பர்களை இழிவாகவே நோக்குகின்றனர். அகதிகளுக்கு எதிரான இயக்கங்களும் தொழிற்படுகின்றன. இதனால் உளவியல் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

பாலுணர்வுச் சிக்கல் புலம்பெயர் வாழ்வில் குறிப்பாக ஆண்கள் சார்ந்த பிரச்சினையாகும். பெற்றோரையும் சகோதர சகோதரிகளையும் ஈழத்தில் விட்டு விட்டு பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, டென்மார்க், கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளில் வாழும் ஆண்கள் பலர் பெற்றோரின் நிபந்தனைகளால் உரிய வயதில் திருமணம் செய்ய முடியாது தவிக்கின்றனர். திருமணமாகாத சகோதரிகளுக்கு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்காக அவர்கள் தம் இளமையைப் பலிகொடுத்து உழைக்க வேண்டியிருக்கிறது.

மேலே கூறப்பட்ட அனைத்தும் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் முதலான வடிவங்களில் புலம்பெயர் இலக்கியமாக வெளிவருகின்றன. "புலம்பெயர் இலக்கியந்தான் எதிர்காலத்தில் ஈழத்திலக்கியத்தின் செல்நெறியை நிர்ணயிக்கப் போகிறது" எனப் பிரபல எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரை கூறுகின்றார்.

புலம்பெயர் தமிழ் இலக்கியம் எப்படி இருக்கப் போகிறது என்பதே இன்றைய கேள்வி. தற்போதிருக்கும் புலம்பெயர்ந்தவர்களின் சந்ததியினர் தமிழ் தெரிந்தவர்களாக தமிழிலே எழுதக்கூடியவர்களாக இருப்பார்களா? இவர்களில் பலர் தமிழிலே பேசக்கூட முடியாதவர்களாக மாறி வருகின்றனர். தற்போதைய நிலையில் புலம்பெயர்வு மந்த கதியிலே நடைபெறுகின்றது. காலப்போக்கில் முற்றாக நின்றுவிடவும் கூடும். இந்த நிலையில் இந்தத் தலைமுறையினருக்குப் பின் தமிழில் புலம்பெயர் இலக்கியம் தொடர்வதற்குரிய சாத்தியக் கூறுகள் மிக அருகியே காணப்படுகிறது.

இளைய தலைமுறையினர் தமது மூதாதையரின் வேர்களைத் தேடலாம். அவர்களின் வாழ்க்கை முறைகளை, இன்னல்களை ஆய்வு செய்யலாம். அவற்றை இலக்கியமாகவும் படைக்க முனையலாம். ஆனால் அவை நிச்சயமாகத் தமிழில் இருக்காது. அவர்கள் வாழும் நாட்டு மொழிகளிலேயே இருக்கப் போகின்றன. ஈழத்தமிழர்கள் அவற்றை மொழிபெயர்த்துத்தான் படிக்க வேண்டும்.

**மக்களின் தொண்டர்கள்**

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரமல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி. மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு எனவே அரசியல் வேலை செய்பவர்கள் மக்களுக்குச் சேவையாற்றுவதையே இலட்சியமாகக் கொண்டு மக்களின் தொண்டர்களாகப் பணிபுரிய வேண்டும்.

ஒரு தலைவனின் குறிப்பேட்டில் இருந்து

# மட்டக்களப்பு தமிழரின் பூப்புனித நீராட்டுவிழா

திரு.கு. சண்முகம் பீ.ஏ
அதிபர்
மட்/ சிங்காரத்தோப்பு சரஸ்வதி வித்தியாலயம்
களுவன் கேணி

மட்டக்களப்பு பிரதேசம் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாகும். இந்தப் பிரதேச மக்களிடையே தொன்றுதொட்டு பேணப்பட்டு வரும் வழக்காறுகள் ஏராளம். மட்டக்களப்பு பிரதேச மண்ணில் வாழ்கின்ற தமிழரின் வாழ்வோடு ஒன்றிப்போய் இருக்கும் சடங்குகளும், கிரியைகளும் தனித்துவமானது. ஈழத்தின் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களிடையே காணப்படும் சடங்குகள், கிரியைகள் என்பவற்றிலிருந்து மட்டக்களப்பு தமிழரின் கிரியைகளும், சடங்குகளும் வேறுபடுகின்றது. இதனடிப்படையில் மட்டக்களப்பு தமிழ் மக்களினால் பேணப்பட்டு வரும் பூப்புனித நீராட்டுவிழா முக்கிய இடம் பெறுகின்றது.

பெண் பிள்ளை பருவமடைவதை இப்பிரதேசத்தில், புத்தியறிதல், பெரியபிள்ளையாதல், சமைதல், சாமத்தியப்படல், பக்குவப்படல், எனப்பல பெயர்கொண்டு அழைப்பர். பூப்புனித நீராட்டுவிழாவை சாமத்தியக் கல்யாணம் என்றும் அழைப்பர்.

பெண்பிள்ளை பூப்படைந்ததை அறிந்ததும், உடனே அந்தப் பெண்பிள்ளையை வெளியே வர விடாது வீட்டின் இடது பக்க அறையில் (சாய்பறை) இருக்கவைத்து கதவைச் சாற்றிவிட்டு கதவுக்கு குறுக்கே இரும்புத்துண்டு, வாருகல்புல் என்பவற்றை வைப்பர். கெடுதியை உண்டாக்கும் அசுத்த ஆவிகள் ஊறு செய்வதை தடுப்பதற்காகவே இவை வைக்கப்படுகின்றது. பிள்ளை புத்தியறிந்த விடயத்தை உடனடியாக தமக்கு நெருக்கமான உறவினருக்குத் தெரிவிப்பர். உறவினரும் உடன்குறிப்பிட்ட வீட்டுக்கு வந்து பெற்றோருடன் இணைந்து கண்டதண்ணி வார்ப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்வர். முதலில் சோதிடரை நாடிச் சென்று சோதிடம் பார்த்து, புத்தியறிந்த பலனையும் கண்டதண்ணி வார்ப்பதற்கான சுப நேரத்தையும் அறிந்து வருவர்.

தமது குடும்பத்துக்கு கடமை செய்யும் குடி வீட்டுச் சலவைத் தொழிலாளிக்கு அறிவிக்க, அவர் வந்து முன் கூரையில் வெள்ளை கட்டுவார். தென்னம்பாளையொன்றும் கூரையில் கட்டுவார். அத்துடன் மாற்றுத் துணியும் போடுவார். பெருமளவு மஞ்சள் தூள் இடித்து பெரிய பானைகளில் கரைத்து வைப்பர். சிறிய மண்பானையில் சோறு சமைத்து வைப்பர். இது முளிப்புச் சோற்றுப்பானை என்று சொல்லப்படும். இதை சாமத்தியப்பட்ட பெண் முளித்ததும் சலவைத் தொழிலாளிக்குத் தானமாகக் கொடுப்பார்கள்.

சுபநேரம் நெருங்குவதற்கு சற்று முன்னதாக ஏழுபெண்கள் ஏழு குடங்களை கக்கத்தில் ஏந்திக்கொண்டு, வெள்ளைபிடித்து, குரவையிட்டு ஏழு கிணற்றில் நீரெடுத்து வெள்ளைச்சேலையால் மூடிக்கொண்டு வருவர். இவ்வாறு கொண்டுவந்த நீரில் மஞ்சளைக் கரைப்பர். சில பெண்கள் வெள்ளைச் சேலையை வளைத்துப் பிடித்து நிற்க அதன் மத்தியில் வாருகல் கட்டு, வாருகல்புல் என்பவற்றைப் போடுவர். வீட்டிற்குள் இருக்கும் பெண்ணை வெளியே சேலையால் மூடி அழைத்து வந்து வாருகல் கட்டின்மேல் நிறுத்துவர். இவ்வாறு பெண்ணை அழைத்து வரும் பெண் பெரும்பாலும் உறவினராகவே இருப்பர். ஆனால் அவர் சுமங்கலிப் பெண்ணாகவும், தலைப்பிள்ளை ஆண்பிள்ளை பெற்றவராகவும்

இருக்க வேண்டும். வெள்ளையின் மத்தியில் நிறுத்தப்பட்ட பெண்பிள்ளை பல்துலக்குவதற்கு சுட்ட பாக்குக் கரியைக் கொடுத்து பல்துலக்கி வாய் கொப்பளிக்கச் செய்வர். அதன் பின் ஏழு குடங்களில் கரைக்கப்பட்ட மஞ்சள் நீரால் நீராட்டுவர். நீராட்டுவதும் முன் சொன்ன சுமங்கலிப் பெண்ணேயாவாள். ஈரம் உலர்த்தி சாம்பிராணிப் புகை புகட்டி மாற்றுத்துணி உடுத்தி சேலையால் மூடி வீட்டுக்குள் அழைத்துச் செல்வர்.

அந்தப் பெண்ணுக்கு பன்னிரண்டு நாள் கழியும்வரை பத்தியம் காத்து நல்லெண்ணெயில் பொரித்த கத்தரிக்காய், உப்பிட்டு வறுத்த முருங்கைக்கீரை, உழுந்துக்களி, எள்ளுத்துவையல் என்பவற்றைக் கொடுப்பர்.

இதே வேளை அப்பெண்ணுக்கு தினமும் அரைத்த மஞ்சள் பூசி குளிப்பாட்டுவர். நல்லெண்ணெய் கலந்து அவித்த அரிசிமாப் பிட்டு, எள்ளுத்துவையல் என்பவற்றை துணியில் கட்டி தேகமெங்கும் ஒத்தடம் இட்டு அந்தப் பொருட்களை உண்ணக் கொடுப்பர்.

கண்டதண்ணி வார்த்து பெண்ணை வீட்டிற்குள் அழைத்துச் சென்றதும், ஏனைய பெண்கள் குரவையிட்டு மஞ்சள் குளித்து விளையடுவர். ஆளுக்காள் மஞ்சள் நீரை குரவைபோட்டு ஊற்றி விளையாடுவது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதுடன், பார்ப்பவர் அனைவரையும் பரவசப்படுத்தும் ஒரு பாரம்பரியமாகும்.

சோதிடர் கூறியதன்படி இரண்டாம் தண்ணி வார்க்கும் நிகழ்வு இடம்பெறும். இரண்டாம் தண்ணி வார்க்கும் போதுதான் சாமத்தியப்பட்ட பெண்ணுக்குரிய கிரகதோச நிவர்த்தி பரிகாரங்களும் செய்யப்படும். இந்நிகழ்வு பெரும்பாலும் ஏழாம், எட்டாம் நாள்களில் நடைபெறும். இதற்கும் கண்டதண்ணி வார்ப்பதற்கு பின்பற்றிய நடைமுறைகளே பின்பற்றப்படும். ஆனால் சூழலில் உள்ள அயலவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

சாமத்தியப்பட்டு முப்பதாம் நாள் அல்லது அது கடந்த பின் நடைபெறும் வெள்ளை அவிழ்க்கும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வே கோலாகலமாக நடைபெறும். பூப்புனித நீராட்டுவிழாவாகும். பூப்புனிதநீராட்டு விழாவுக்கான அழைப்பிதழ் உற்றார், உறவினர், நண்பர் அயலவர் எல்லோருக்கும் அழைப்பு கொடுப்பர். பூப்புனித் நீராட்டுவிழாவுக்காக அவர்களின் இல்லம் சிறப்பாக அலங்கரிக்கப்படும். வீட்டு முற்றத்தில் பந்தல் போடப்பட்டு தென்னங்குருத்து, மாவிலை, வாழை மரம், இளநீர்க்குலை என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். பந்தலின் உள்ளே கல்யாணக்கால் நாட்டப்பட்டு, நிறைகுடம், கண்ணாடி, வட்டாமடை என்பன வைக்கப்படும்.

அன்றைய நாள் சுபவேளையின்போது புத்தியறிந்த இளம்பெண்ணுக்கு பூப்புனித நீராட்டுவிழாவின் முக்கிய நிகழ்வான மஞ்சள் நீராட்டும் நிகழ்வு இடம்பெறும். இதற்கும் ஏழு பெண்கள், ஏழு குடங்களில் ஏழுகிணற்றில் இருந்து நீரெடுத்து வருவதற்கு குடங்களை கக்கத்திலே வைத்துக் கொண்டு வெள்ளை பிடித்து குரவை இட்டு மேளதாள வாத்தியங்கள் முழங்க சென்று எடுத்து வருவர். இவ்வாறு கொண்டுவந்த நீரை பாயில் வெள்ளை விரித்து அதன்மேல் மஞ்சளைக் கரைத்து வைப்பர்.

இதன் பின் தோழிப் பெண்ணை அழைத்து வரும் நிகழ்வு இடம்பெறும். சாமத்தியப்பட்ட பெண்ணுக்கு மச்சாள் முறையான பருவமடையாத சிறுமியின் வீட்டுக்கு விழாவுக்குரியவரின் வீட்டிலிருந்து ஒரு குழுவினர் மேளவாத்தியம் முழங்க குரவையிட்டு, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் அடங்கி வட்டாவை ஏற்றிச் சென்று தோழிப் பெண்ணை அழைத்து வருவர்.

சுபவேளையின்போது மஞ்சள் நீராட்டப்பட்டு, ஈரம் உலர்த்தி கூந்தலுக்கு சாம்பிராணிப்புகை காட்டி காயவிட்டதும், பெண்ணை புத்தாடை உடுத்தி, நகை அணிந்து அலங்கரித்து பந்தலுக்குள் அழைத்து வருவர். அங்கு பெற்றோர் முதியோர் மூத்த சகோதரரர் முதலியோரை விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுவார். அதன் பின் அலங்கரிக்கப்பட்ட மணவறையில் தோழிப் பெண்ணும் இவருமாக உட்கார்ந்து இருப்பர்.

இதன் பின் இடம்பெறும் விருந்தோம்பல் மிகச் சிறப்பானதாகும். பந்தலின் இரண்டு பக்கமும் மிக நீளமான பாய் விரிக்கப்பட்டு அதன்மேல் வெள்ளைச்சேலை விரிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு விரிக்கப்படும் பாய் "பந்திப்பாய்" என அழைக்கப்படும். இந்தப் பாயில் ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமுமாக அமர்வர். ஒவ்வொருதருக்கும் வாழையிலை அல்லது தாமரையிலை போடப்பட்டு செம்பில் தண்ணியும் வைக்கப்படும். வாழையிலையில் தண்ணீர் தெளித்துக் கழுவியதும் இலையில் சோறு வைக்கப்படும். சோற்றுடன் கறிவகைகளும் பொரியல் வகைகளும் வைக்கப்படும். இவற்றை உண்டு முடித்ததும் இலையில் மீண்டும் சோறு இடப்பட்டு, தயிர், பால், வாழைப்பழம், பலகாரம், கூழ் என்பன இடப்படும். இந்தச் சாப்பாட்டையும் சாப்பிட்டால்தான் முறையான விருந்துண்டதாகக் கருதப்படும். இந்த விருந்தின் சுவையொரு தனி ரகம் என்பதில் சந்தேகமில்லை.

விருந்தை முடித்ததும் விருந்தினர் விழாவுக்குரியபெண்ணை ஆசீர்வதித்து பரிசும் வழங்குவர். வாழ்த்தி விடைபெறுவர். உணவு வேளைக்கு புறம்பாக முற்பகல் பிற்பகல் வேளையில் வருகைதரும் விருந்தினர்க்கு சிற்றுண்டிகள் பரிமாறப்படும். பலகாரம் முறுக்கு அச்சு, வாரப்பம் தேநீர், வாழைப்பழம், தாம்பூலம் என்பன வழங்கப்படும்.

மட்டக்களப்பு பிரதேச தமிழர்களின் வாழ்வில் தனித்துவமாகப் பேணப்பட்டு வரும் பாரம்பரிய நடைமுறைகள் இன்றும் கிராமப் புறங்களில் உள்ளபோதும், நகரப் புறங்களில் நாகரீகம் நுழைந்ததின் காரணமாக புறக்கணிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும்.

**வரலாற்றுத் தகவல்**

## நாகதீப அரசு

நாகதீப அரசு கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கும் முன்னரேயே சிறந்த அரசாகத் திகழ்ந்ததை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் நாகதீப அரசு சிறப்புறத் திகழ்ந்ததை தொலமியின் 2ம் நூற்றாண்டுத் தேசப்படம் எடுத்துக் காட்டுகின்றது. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னும் கி.பி. 2ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் நாகநாடு என இதனைக் குறிப்பிடுகின்றன. கி.பி. 2ஆம் நூற்றாண்டு வல்லிபுரப் பொன்னேட்டிலும் இது 'நாகதீபம்' என அழைக்கப்படுகின்றது.

கி.பி. 135இல் ஆட்சியில் இருந்த மகல்லநாகன் நாகதீபத்தில் சாலிபர்வத விகாரையைக் கட்டினான் என மகாவம்சம் கூறுகின்றது. இவற்றில் இருந்து 'நாகதீப அரசு' கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டுவரை இருந்தது உறுதியாகின்றது.

# கார்த்திகைப் பூ

கார்த்தகைப்பூ - கார்த்திகை மாதத்தில் கொடிபரப்பிப் பூத்துக் குலுங்கும் அழகான செம்மஞ்சள் நிறமுடைய பூ. இது வடக்குக் கிழக்கெங்கும் பரவிக் காணப்படுகின்றது. பண்டைய தமிழ் மன்னர்கள் காலத்தில் சோழருக்கு அத்திப் பூவும், சேரருக்கு பனம்பூவும், பாண்டியருக்கு வேப்பம் பூவும் தேசிய மலர்களாக இருந்தன. அந்த வகையில் தமிழர்களுக்கு தமது தேசியப் பூவாக காத்திகைப் பூவைக் கொண்டால் என்ன என்ற வகையில் பூ.புலேந்திராஜா (வித்தியாசன்) வின் கவிதை அமைந்துள்ளது.

கார்த்திகைப் பூ பண்டைத் தமிழ் இக்கியங்களில் காந்தள் என்று அழைக்கப்பட்டது. லில்லியேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஒருவித்திலைத் தாவரமான காத்திகைப் பூவில் ஆறு இதழ்கள் இருக்கும். இவை தீச்சுவாலை போலக் காணப்படுவதால் அக்கினி சலம் எனப்படுகின்றது. இதன் தாவரவியல் பெயர் குளோரியோசா சுப்பேர்பா என்பதாகும்.

இதன் அழகிய வடிவமும், வேறுபட்ட கவர்ச்சியான வர்ணமும் பார்ப்பவரைச் சுண்டி இழுக்கும்.

கார்த்திகை பூச்செடியின் கிழங்கு ஆயுர்வேதம், யுனானி மருத்துவத்தில் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது. இக்கிழங்கில் காணப்படும் இரசாயனப் பொருளான கொல்சிசைலோ நச்சுத்தன்மையானதாக இருந்த போதும், பல்வேறு வைத்திய முறைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கார்த்திகைப் பூவைச் சிறப்பிக்கும் வகையில் பின்வரும் கவிதை அமைந்துள்ளது.



கார்த்திகைப் பூ, கார்த்திகைப் பூ - தமிழ்
காக்கும் பூ, தமிழர்களைக் காக்கும் பூ
கார்காலப் பூ, கரிகாலன் பூ - தமிழ்க்
கவிஞர் பூ, தமிழ்க் கலைஞர் பூ

மழையில் பிறந்த பூ, மானம் காக்கும் பூ
உலகம் வாழ்த்தும் பூ, உரிமை பூக்கும் பூ
வழமை மாற்றும் பூ, வரலாறு ஆக்கும் பூ
இளமை செழிக்கும் பூ, எளிமை வளர்க்கும் பூ

தமிழர் வெற்றி பூ, தாகத்தின் சக்திப் பூ
தணல் கொட்டும் பூ, தமிழ் தூக்கும் பூ
அமிழ்தம் சிந்தும் பூ, அழகு மிளிரும் பூ
ஆனந்தம் வாழும் பூ, அறிவியல் பொங்கும் பூ

களத்தில் நிற்கும் பூ, கருத்தினில் சிவக்கும் பூ
இரும்பினைக் காய்ச்சும் பூ, எதிரியை அழிக்கும் பூ
நிலத்தினைப் பிளக்கும் பூ, நிம்மதி அளிக்கும் பூ
நிறம் மாறாத பூ, நெஞ்சு நிமிர்த்திய பூ............

- வித்யாசன் -
பூ. புலேந்திரராஜா
யாழ்ப்பாணம்

# காக்கைச் சிறகினிலே.....

**தமிழ்மணி அகளங்கன்**

நாங்கள் எத்தனையோ விடயங்களில் புறத்தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடுகின்றோம். மயங்கி விடுகின்றோம். எங்களைக் கவருகின்ற பல விடயங்கள் ஒரு பிரயோசனமுமில்லாதவையாக இருந்து விடுவதுமுண்டு. நாளாந்தம் நாம் காணுகின்றவையும் நமக்கு நெருக்கமாக இருப்பவையும் பல சமயங்களில் நம் மனதைக் கவர்வதில்லை. எங்கோ தொலைவில் உள்ளவைதான் எங்கள் கவனத்தை ஈர்த்து விடுகின்றன.

கவியரசு கண்ணதாசன் அவர்களின் பாடலொன்றில் ஒரு அருமையான வரி உண்டு. "கண்களருகே இமையிருந்தும் கண்கள் இமையைப் பார்ப்பதில்லை" என்பதுதான் அந்தவரி. எவ்வளவு அற்புதமான வரி.

தாமரையோடு ஒன்றாகத் தடாகத்தில் வாழும் தவளைக்கு தாமரைப்பூவின் வாசனையோ, தாமரை இதழ்களின் பிரகாசமோ, அழகோ, மென்மையோ, மேன்மையோ எதுவுமே தெரிவதில்லை. தாமரைப் பூவிலுள்ள தேனின் அருமையும் தவளைக்குத் தெரியாது.

ஆனால் வண்டு காட்டிலே இருந்து தாமரைப் பூவைத் தேடிவந்து தேன்குடித்து மகிழ்ந்து செல்கிறது. வண்டுக்குத்தான் தாமரைப்பூவின் பெருமை தெரிகிறது. சில வேளை வண்டும் தாமரையோடு பக்கத்தில் வளர்ந்திருந்தால், அதற்கும் தாமரைப்பூவின் அருமை பெருமை தெரியாமலிருந்திருக்குமோ என்னவோ. நாம் பல சந்தர்ப்பங்களில் எம்மோடு கூட உள்ளவற்றின் சிறப்பை உணராமல் விட்டுவிடுகின்றோம் என்பதால் தான் இதனைக் கூறுகின்றேன்.

தூரத்தில் இருப்பவற்றில் நல்ல தன்மைகள்தான் தெரிகின்றன, கிட்ட உள்ளவற்றின் கெட்ட தன்மைகள்தான் தெரிகின்றன என்று சொல்லலாம்போல் இருக்கின்றது.

உங்களில் யாருக்காவது காகத்தைப் பிடிக்குமோ, காகத்தைப் பார்த்து பரிதாபப்பட்ட ஒரே ஒரு ஆள் மகாகவி பாரதிதான். அவர்தான், எத்தித் திருடும் அந்தக் காக்கை அதற்கு இரக்கப்பட வேணும் பாப்பா" என்று காகத்தின் மேல் இரக்கப்பட்டு, மற்றவர்களையும் இரக்கப்பட வைத்தவர்.

பாரதி ஏன் அப்படிப் பாடினான் என்று சிந்திக்கும்போது சில விடயங்கள் புலனாகின்றன. அவன் தனது பாப்பாப் பாட்டில்,

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா!

வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா!

எத்தித் திருடும் அந்தக் காக்கை - அதற்கு
இரக்கப்பட வேணும் பாப்பா

பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்த
பசுமிக நல்லதடி பாப்பா

வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா

வண்டி இழுக்கும் நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு

அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

என்றெல்லாம் சொல்லிக் கொண்டு போகிறார். இப்பாடலில் காகத்தை மட்டும்தான இரக்கப்பட வேண்டிய பறவை என்று கூறுகிறார். காகத்திற்காக ஏன் இரக்கப்பட வேண்டும்? அது ஏமாற்றித் திருடித் தின்கிறது. அறிவற்ற காகம் என்பதால் அதற்கு இரங்க வேண்டும் என்றாரா?

காகத்தை நரி ஏமாற்றிய கதை ஒன்று உண்டல்லவா. எத்தித் திருடிக் கொண்டு போய் மரக்கிளையில் இருந்த காகத்தைப் பார்த்து தந்திரசாலியான நரி புகழ்ந்து பேசியதாம்.

காகம் அழகற்ற பறவை என்றும், அதன் குரல் இனிமையற்றதென்றும் வைத்துக் கொண்டுதான் இந்தக் கதையை உருவாக்கினார்கள். தற்புகழ்ச்சிக்கு அடிமையான காகம் "கா கா" என்று பாட அதன் வாயிலிருந்த வடை கீழே விழுந்ததாகச் சொல்லும் கதை யாவரும் அறிந்த கதைதான்.

"உன் பொன்னான வாயைத்திறந்து உன் இனிமையான குரலில் பாடு பார்க்கலாம் என்று புகழ்ந்தது நரி' எனக் கதை பண்ணியவர்கள், காகத்தை மிகவும் அழகற்ற ஒரு பறவையாகவும், இனிமையற்ற குரல்கொண்ட பறவையாகவும் எண்ணித்தான் கதை பண்ணியிருக்கிறார்கள். இப்படி, காகம் ஏமாந்து போனதற்காகத்தான் பாரதி காகத்திற்காக இரக்கப்பட வேண்டுமென்று பாடினானோ!

காகத்தின் சிறப்புக்கள் பல உண்டு. காகத்தின் நிறம் கறுப்பாக இருக்கலாம். ஆனால் கறுப்பு அழகில்லை என்று எந்த முட்டாள் சொன்னான். பா. விஜய் என்வரின் "கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு" பாட்டைக் கேட்ட பின் கறுப்பு அழகில்லை என்று சொல்லலாமா.

தமிழனின் நிறமே கறுப்புத்தானே. அப்படியென்றால் தமிழன் அழகில்லையா. கவியரசு கண்ணதாசன் "கன்னங் கறுத்த கிளி கட்டழகன் தொட்டகிளி அன்னநடை போட்டாளடி" என்று எழுதிய பாடல் ஒலிக்காத திசையில்லையே. உச்சரிக்காத உதடில்லையே.

காத்தவராயன், ஆரியப் பூமாலையைப் பார்த்துவிட்டு வந்து தாயிடம் ஆரியப் பூமாலையின் அழகை வர்ணிக்கும்போது சொல்லுவான் "அவள் நாவற்பழத்திலுமோ நல்ல கறுப்பழகி" என்று.

ஆண்டாள் மகாவிஷ்ணு மூர்த்தியை "கருமாணிக்கம்" என்று அன்பொழுகத் தன் பாசுரத்திலேயே அழைக்கின்றார்.

பாரதி, காகத்தின் சிறகினிலே எதைக் கண்டான். "காக்கைச் சிறகினிலே நந்தலாலா உந்தன் கரிய நிறம் தோன்றுதையே நந்த லாலா" என்றானே. மறக்க முடியுமா, காகத்தின் சிறகிலுள்ள கருமையிலே கண்ணனைக் கண்டான் பாரதி.

அதுமட்டுமா! "காக்கைக் குருவி எங்கள் ஜாதி" என்று காக்கையை முன்னிறுத்தியல்லவா பரந்த உலகத்தில் தன் பற்றை வெளிப்படுத்துகிறான். அது மட்டுமா!

காவென்று கத்திடும் காக்கை - என்றன்
கண்ணுக்கினியு கருநிறக் காக்கை

என்று பாடுகிறானே, சும்மாவா! காகத்தின் புற அழகை ரசிக்க வேண்டுமென்றால் முதலில் காகத்தின் அக அழகைக் காண வேண்டும்." வெறுந் தோற்றத்தைக் கண்டு ஏமாந்து போகின்றவர்களுக்கு காகம் அழகில்லை. காகத்தின் சத்தமும் வெறும் கத்தல்தான்.

பாரதிக்கு குயிலின் கூவல்கூட கத்தலாகத்தான் இருந்தது. அதனாற்தான் "கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் பட வேண்டும்" என்று பாடினான் பாரதி.

குயிலின் குரல் இனிமையானது என்பது பலரது வாதம். முடிந்த முடிபு கூட, ஆண்டாள் முதல் அத்தனை பேரும் பாடிப் பரவி விட்டார்கள். "குயிலே உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்" என்று சினிமாவில் பாடினார்கள். "கீதமினிய குயிலே" என்று மணிவாசகர் பாடினார். தமிழ்த் திரையில் இளையராஜா பல குயில்ப் பாடல்களைப் புகழ்பெறச் செய்தார்.

ஆனால் எனக்கோ இப்போதெல்லாம் குயிலின் கூவல் பிடிக்கவில்லை. காகத்தின் கரைதல்தான் பிடிக்கிறது. கூவல் என்றால் அழைத்தல் என்று பொருள். கூவி அழைத்தல் என்றும் சொல்கின்ற வழக்கம் உண்டு.

குயில் யாரைக் கூவி அழைக்கிறது தெரியுமா. தன் துணையைத்தான் கூவி அழைக்கிறது. குயிலினத்தில் பெண்குயில்தான் கூவுகிறது என்கிறார்கள். பெண்குயில் தன் இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆண் குயிலை அழைக்கத்தான் கூவுகிறது.

சேவல் கூவுகிறது. இருளைப் போக்கி உலகைக் காக்கும் சூரியனை அழைத்துக் கூவுகிறது. அது உயர்ந்த பொது நோக்கம். தனக்காக அல்லாமல் உலகுக்காகக் கூவுகிறது சேவல். இருள் விலகி ஒளி தோன்றி உலகு உய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் அது கூவுகிறது. அதனாற்தான் முருகப் பெருமான் சேவலைக் கொடியாகக் கொண்டார்.

காகம் கரைகிறதே ஏன் தெரியுமா? ஏதாவது உணவு கிடைத்தால் தன் சுற்றத்தை அழைப்பதற்காக அது கரைகிறது. கரைதல் என்றாலும் அழைத்தல் என்றுதான் பொருள். கலங்கரை விளக்கு என்பது கலத்தை அழைக்கும் விளக்கு என்றே பொருள் தருகின்றது.

காகம் தன் இனத்தையும் அழைத்து உண்பிக்கின்ற உயர்ந்த எண்ணம் கொண்டது. இந்தக் குணம் குயிலிடம் இல்லை. இதனால் குயிலின் குரலைவிட காகத்தின் குரல் இனிமையானதாக இருக்கிறது.

இதைவிட இன்னொரு ரகசியமுமிருக்கிறது. அதுதான் இன்னும் முக்கியமானது. உலகில் தாய்மைக்கே களங்கமாக இருப்பது குயில். குயில் காகத்தின் கூட்டில் காகத்தை ஏமாற்றி முட்டையிட்டு விடுகிறது. அடைகாக்கத் தெரியாத குயிலுக்கு ஆசை வேறு. காகம் குயிலின் முட்டையையும் சேர்த்து அடைகாத்துக் கொள்கிறது. அது மட்டுமல்ல, குஞ்சு பொரித்தபின் குயிலின் குஞ்சுக்கும் இரையூட்டி வளர்க்கிறது.

தன் குஞ்சுக்கு ஒரு பொழுதேனும் இரை ஊட்டாத குயிலை நினைத்தால் கோபம் வரவில்லையா? தாய்மைக்கே மாசு கற்பிக்கும் குயிலின் குரல் போற்றப்படுவது விந்தையிலும் விந்தையே. இன்றைக்கு உலகம் இப்படித்தான் மயங்கிப் போய்க் கிடக்கிறது.

காகத்தின் சிறப்புப் பற்றி ஒரு பழம் பாடல் இருக்கிறது. அதனை இங்கு பார்ப்போம்.

"காலை எழுந்திருந்தால் காணாம லேபுணர்தல்
மாலை குளித்து மனைபுகுதல் - சால
உற்றாரோடு உண்ணல் உறவாடல் இவ்வாறும்
கற்றாயோ காக்கைக் குணம்"

என்பதுதான் அப்பாடல். அதிகாலையில் நித்திரைவிட்டெழுதல். எவரும் காணாத படி மறைவாகத் தன்துணையோடு கூடுதல். இன்று மனிதனிடமே இந்த இரண்டும் இல்லையே. நாய்க்குணம் மிக்க காமுகர்களையும், காதலர்களையும் தானே சந்திக்குச் சந்தி, கடற்கரை, பூங்கா, பஸ் நிலையம், புகையிரத நிலையம் என பார்க்குமிட மெங்கணும் நீக்கமற காண்கின்றோம். காகத்தின் அடுத்த சிறப்பு உற்றாரோடு சேர்ந்துண்ணல். அது மட்டுமல்ல ஒரு காகம் இறந்து விட்டால் எல்லாக் காகங்களும் சேர்ந்து அழுது தம் கவலையைப் பகிர்ந்து கொள்கின்றன. அத்தோடு மாலையிலே நீராடிவிட்டுத் தன் கூட்டுக்கு வருதல். இந்த ஆறும் காக்கைக் குணம். இதை மனிதன் கற்க வேண்டும் என்கிறார் புலவர்.

காகமா குயிலா நல்ல பறவை. வெளிவேசத்தில் மயங்கிப் போகும் மக்களுக்கு இது எங்கே புரியப் போகிறது?

இருந்தாலும் எங்கள் சைவர்கள் புரட்டாதிச் சனியிலே காகத்தை அழைத்து விருந்து வைக்கிறார்களே. காகக் குணத்தைத் தெரிந்து தான் விருந்து வைக்கிறார்களா?

உறவினர்கள் வரப்போவதை, அல்லது விருந்தினர்கள் வரப்போவதை அறிவித்து உதவக் கரைகின்ற காகமா, தன் காம இச்சையைத் தீர்த்துக் கொள்ள ஆண்குயிலை அழைத்துக் கூவும் குயிலா உயர்ந்த பறவை.

தன் தலைவனின் வரவை அறிவித்துக் கரைந்த காகத்திற்கு பொற் கிண்ணத்திலே அறுசுவை உணவை வழங்கினாலும் போதாது என்ற சங்கத் தலைவி, காகத்திற்கு கொடுத்த மதிப்பு உண்மையான உயர்ந்த மதிப்பே.

பல் ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெய் வெஞ்சோறு
ஏழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

(குறுந் - 210)

காக்கைப்பாடினியார் என்ற பெண் புலவர் பாடிய குறுந்தொகைப் பாடல் தான் இது.

"பல பசுக்கள் தந்த நெய்யோடு, தொண்டி என்னும் ஊர்முழுதும் விளைந்த வெண்ணெல்லின் விருப்பமான சோற்றைக் கலந்து ஏழு கலங்களில் கொடுத்தாலும் சிறிய கைம்மாறே ஆகும். என்தோழியின் தோளை நெகிழுமாறு செய்த துன்பத்திற்கு மாற்றாக விருந்து வருவதாகக் கரைந்த காக்கைக்கு உரிய பலியாகக் கொடுக்க அது சிறிதே ஆகும்". என இதற்கு உரை வகுத்துள்ளார் டாக்டர் மு. வரதராசன்.

காகத்தின் மதிப்பை இனியாவது உணர்ந்து கொள்வோம். போலிகளைப் போற்றுவதை விட்டு, நல்லவைகளைப் போற்றுவோம்.

# எப்போது விடியும்!

நாளாந்தம் விடிகிறது,
நடப்பவை நடக்க,
நடக்காதவை கிடக்க.
நமக்கும் நாளாந்தம் விடிகிறது!

நாளும் பொழுதும் - நாம்
தூங்கி, விழித்து,
உழைத்துக் களைத்து,
ஏங்கி ஏமாந்து,
நாட்கள் நடைப்பிணமாய் நகர........
நமக்கும் நாளாந்தம் விடிகிறது!

இதற்கிடையில்,
தீவிரமாய் களமிறங்கிய
சமாதானத்திற்கு என்ன கதியோ?

அதை
கொஞ்சம் கொஞ்சமாய்.......
சாகடிப்பதும் யாரோ?

இரு உள்ளங்களே
இரண்டு பட்டுக்கிடக்கும் இந்தக்காலம்,
இதில்,
மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம்
என்ன விலையோ?

ஈழமக்கள்
காத்திருப்புகளுக்கு காத்திரமானவர்களே!
இப்போது,
அவர்கள் பார்த்திருப்பது.
புதுப்போரை, எதிர் நோக்கவா?
புதை மீட்பாய்.......
சமாதானத்தை
வெளிக் கொணரவா?

நம் சித்தம் கெட்டு,
நித்தம் சலித்து,
நீண்ட பெருமூச்சுகளும் போதும்!
இனியும் வேண்டாம் - இந்த
இழுத்தடிப்புகள்!

இனி,
எங்கள் பார்த்திருப்புகளுடன்
உங்கள் பாசாங்குகளையும்,
மூட்டை கட்டி மூலையில் இடுவோம்!
மூளைச் சலவை செய்து,
முன்வருவோம்!

எமக்கு,
போட்டியின்றி உட்பூசலின்றி....
புதிர்களின்றி புரிதலுடன்
வேண்டுமொரு,
நிரந்தர சமாதானமே!

முயன்றால் முடியும்!
அப்போது தான்,
நமக்கும் விடியும்!

**முகைசிரா முகைதீன்**
**பாலையூற்று,**
**திருக்கோணமலை.**



# மறக்குல மகளிர் அன்றும் இன்றும்

ராணி சீதரன்

சங்க இலக்கியங்கள் காதலுக்கும், போருக்கும் முக்கியம் கொடுத்துள்ளமையை அகம், புறம் சார்ந்த பாடல்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. காதல் உணர்விற்கு மட்டும் பெண் கட்டுப்பட்டு இருக்கவில்லை. வீரத்திலும் அவள் விஞ்சியுள்ளாள் என்பதைப் பலபாடல்கள் புலப்படுத்துகின்றன. மறக்குல மரபில் வந்த பெண் போர்க்களத்திற்கோ, அன்றி அடுத்தடுத்து வரும் உறவுகளின் உயிர் இழப்புக்களுக்கோ அஞ்சவில்லை. வீரப்பெண்ணொருத்தி முதல் நாள் நடந்த போரில் சகோதரன் மாண்ட செய்தியை அறிந்தும், மறுநாள் கணவனை அனுப்புகின்றாள். அவனும் வீரமரணம் அடைந்து விட அதற்காகச் சோர்ந்து விடாது தனக்கென இருக்கும் ஒரேயொரு மகனையும் வேல் கைக் கொடுத்து ''சென்றுவா மகனே வென்று வா!'' என்று அனுப்புகின்றாள்.

''ஒரு மகனல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே''

என்ற புறநானூற்றுச் செய்யுளில் இச்செய்தியை அறிய முடிகின்றது. போருக்குச் சென்ற ஒருவன் புற முதுகுகாட்டி ஓடி, வேல்பட்டு இறப்பதை இழிவான செயலாகப் பெண்கள் எண்ணினர். மார்பிலே பகைவனின் அம்புபட்டு உயிர்விடுவதையே வீரமரணமாகக் கருதினர்.

**புறநானூற்றில் இப்படியொரு பாடல்**

''சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளன்? என வினவுதி என்மகன் ஆயினும் அறியேன் ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே.

**பாடியவர்:- காவற்பெண்டு. புறம் - 86**

சிறிய வீடு; தாய்மட்டும் இருக்கின்றாள். பழகிய ஒருத்தி வந்து தூணைப் பிடித்து நின்றுகொண்டு ''உன்மகன்எங்கே?'' என்று வினவுகின்றாள். அதற்குத்தாய் பதில் கூறுகின்றாள்.

''என்மகன் எங்கிருப்பவனாயினும் அறியேன். புலி தங்கியிருந்து நீங்கிய கற்குகையைப் போல அவனைப் பெற்ற வயிறு மட்டும் இங்கிருக்கிறது. நீ அவனைக்காண விரும்பினால் போர்க்களத்தில் சென்று காண்பாய்'' என்கிறாள்.

மகனைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்தாள். அவனைச் சுமந்த வயிறு புலி தங்கியிருந்து நீங்கிய கற்குகை போல இருக்கிறது என்று உவமைப்படுத்துகின்றாள். கற்குகை மாற்றமில்லாது என்றும் அப்படியே இருக்கும். அவனின் மீது கொண்ட பாசம், அவனைச் சுமந்த தடயங்கள் தான் தாய்க்குச் சொந்தமானது. அவனோ கடமைக்காகச் சென்றுவிட்டான். கட்டாயமாகக் காணவேண்டுமெனில் நீ போர்க்களத்தில் சென்று காண்பாய் என்று தாய் கூறுகின்றாள். தன்மகன் வீரன் என்பதால் புலி எனவும், வீரனைச் சுமந்த வயிறு கற்குகை

போன்றதெனவும் கூறிப்பெருமிதம் கொள்ளும் வீரத்தாயை இங்கு நாம் காணுகின்றோம்.

புறநானூறு சித்திரிக்கும் வீரப்பெண்களில் இருந்து சற்று வேறுபட்ட அனுபவச் சித்திரிப்புக்களைக் கொண்டவையாக ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெண் போராளிகளின் படைப்புக்கள் விளங்குகின்றன. தமிழவள், செந்தணல், சிரஞ்சீவி, மலைமகள், சூரியநிலா தூயவள், தமிழ்க்கவி, வான்நிலா, சுதாமதி, காந்தா போன்ற பல போராளிப் பெண்கள் படைப்புலகில் தம் முத்திரைகளைப் பதித்து வருகின்றனர்.

''சாக்குத்தொப்பியில் மழைநீர் ஊறி
தலையெல்லாம் கனக்க
கருவியோடு தானும் நனைந்தே
குளிரில் பல்கிடு கிடுக்க
மரத்தின் மறைவிலிருந்து
பகைத்தளம் நோக்கித்தன்
விழி விரித்த வீரி ஒருத்தி
சற்றும் அசைந்தாளில்லை
மழை வெள்ளம் என்ன
பகை வெள்ளம் வந்தாலும்
அவள் அசையாள்! வெல்வாள்."

மலைமகளின் ''அவள் ஒன்றுக்கும் அசையாள்" என்ற இந்தக்கவிதை பெண்பற்றிய சமூகத்தின் நம்பிக்கை, எதிர்பார்ப்புக்கள் என்பவற்றைக் கட்டவிழ்ந்து விடுவதாக அமைந்துள்ளது. ''காவற்பெண்டு" என்ற புலவரின் தாய் தன் மகனைப் போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டு அவனின் வீரத்தின் வெற்றியைக் கனவு கண்டு அந்தச் சந்தோஷத்தில் வாழுவதையும் அதிலிருந்து வேறுபட்டு மலைமகளின் கவிதை போர்க்கள அனுபவத்தையும், அதில் வெற்றி காணுவேன் என்ற நம்பிக்கையையும் தன்னிலை சார்ந்து கொண்டிருப்பதையும், காணமுடிகின்றது. இது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனித்துவம் வாய்ந்த அம்சமாக விளங்குகிறது. இதனைப் பின்வரும் கவிதை வரிகள் நியாப்படுத்துகின்றன.

1. நேற்றுவரை பெண்மைப் புயல்கள்
அடுப்புக்குள்ளே புகையூதிக்கிடந்தன.

..........................................................................

நேசிக்கும் காதலனுடன் பேசி முடிக்க முன்னர் நூறுமுறை கூனிக்குறுகியவர் மூச்சு விட்டால் எதிரியின் முதுகில் படும் தூரத்தில் கண்ணி வெடிகளைத் தாண்டி பகைவர் பாடிய படைத்தளத்துள்ளே எங்கள் தங்கையர் புகுந்தனர். கொற்றவைக் கூத்து முடிந்தபோது விடிந்தது. வெற்றி இவர்களின் கையில் விழுந்தது எப்படி எழுந்தார்கள். கனவிலும் காணாத நிமிர்வு?

''.........................................................................."

பெண்மை இங்கு பலியானதால் புறநானூறு புதிதாய், எழுதப்படுகிறது என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதை பெண் பற்றிய மரபு சார்ந்த நோக்கிலிருந்து விடுபட்டு கனவிலும் காணாத நிமிர்வை எப்படி அடைய முடிந்தது என்று வினவுவது சிந்திக்கக்கூடியதே.

பெண் என்றால் சமையலறை தான் அவளின் சாம்ராச்சியம் என்று முத்திரை குத்தப்பட்டுவிடும். நேசிக்கும் காதலனுடன் பேசுவதற்கு அச்சம், மடம், நாணம் எல்லாம் வந்து தடைசெய்ய அவளோ நூறுமுறை கூனிக்குறுகி விட வேண்டும். இல்லையேல் அவள் ஒழுக்கமான பெண்ணாக இருக்கமுடியாது என்று சமுதாயமே அவளுக்குச் சான்றிதழ்

வழங்கி விடும். இவற்றையெல்லாம் அறுத்தெறிந்து விட்டு, விடியும் வரை கொற்றவைக் கூத்து நடத்தி, வெற்றியும் பெற்றுவிட்டனர். இது எமது இலக்கியத்திற்கு ஒரு புதிய போக்கைக் காட்டுகின்றது.

தன் பிள்ளைக்குத் தாய்ப்பாலோடு சேர்த்து வீர உணர்வையும் ஊட்டி வளர்த்த வீரத்தாய்மாரின் வழியில் வந்த ஈழத்து வீரப் பெண்களின் போர்க்கள அனுபவமும், அவற்றைத் தாமே உருக்கொடுத்து வெளிப்படுத்த முனையும் படைப்புலகப் பிரவேசமும் புதிய நம்பிக்கைகளாகத் தென்படுகின்றன.

**வரலாற்றுத் தகவல்**

## விஜயனின் நாகரிகம்

எமது நாட்டுக்கு நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவன் விஜயன் என்று மகாவம்சம் கூறுகின்றது. அந்த விஜயனின் சில சிறப்புக்கள் கூட மகாவம்சத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

- ♣ விஜயனின் பாட்டி அழகி, காமவெறி பிடித்தவள், வங்க அரசனும், அரசியும் அவமான த்தினால் தமது மகளான அவளைத் தம்முடன் வைத்திருக்க முடியாதவர்களாக இருந்தனர். (மகாவம்சம் 6:2)
- ♣ விஜயனின் தந்தை சிங்கத்துக்குப் பிறந்தவன் (மகாவம்சம் 6:5-9)
- ♣ பணத்திற்காக விஜயனின் தந்தை தன் தந்தையையே கொன்றவன் (மகாவம்சம் 6:24-30)
- ♣ விஜயனின் தந்தை தன் தங்கையை மணந்தவன் (மகாவம்சம் 6:29)
- ♣ விஜயனின் தாய், தந்தை, பாட்டி அனைவரும் 16 ஆண்டுகளாக ஆடையே அணியாத வர்களாக இலை, குழை கூட இன்றி ஒரே குகையில் வாழ்ந்தவர்கள் (மகாவம்சம் 6:14)
- ♣ விஜயன் பல கொடூரச் செயல்களைப் புரிந்து நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பினால் தந்தையான சிங்கபாகுவினால் மொட்டையடிக்கப்பட்டு, அவனது 700 தோழர்களுடன் நாடு கடத்தப்பட்டவன் (மகாவம்சம் 6:4 - 43)
- ♣ விஜயன் மரக்கலத்தில் தத்தளித்து இலங்கைக் கரையிலே ஒதுங்கிய போது, புகலிடம் கொடுத்துத் தன்னையும் அவனுக்கே கொடுத்து, தனது ஆட்சியை கொடுத்த மனைவியான குவேனியையும் பிள்ளைகளையும் ஓராண்டிற்குள் விரட்டியடித்துவிட்டு மறுமணம் புரிந்தவன். (மகாவம்சம் 6: 41-43)

இப்படிப்பட்ட குணவியல்புகளை உடையவன்தான் எமது நாட்டுக்கு நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவன் என்று "மகாவம்சம்" கூறுகின்றது.

ஆனால் விஜயனின் பிறப்பு பற்றிய கதை நம்பமுடியாத ஒரு வரலாற்றுத் திரிபு என்பதை மெண்டிஸ் போன்ற சிங்கள வரலாற்றறிஞர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

# தமிழரின் பண்பாட்டை உணர்த்தும் வன்னியின் தொல் பொருட் சான்றுகள்

கு. மேகநாதன் பீ.ஏ
ஆசிரியர், கிளிநொச்சி
இந்துக்கல்லூரி.

ஒரு இனத்தின் மொழி, வழிபாட்டு முறைகள், சடங்குகள், ஆடை, ஆபரணங்கள் ஆகியன அவ்வினத்தின் பண்பாட்டு அம்சத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் கிறிஸ்து சமயம் கி.பி 15ம் நூற்றாண்டின் பின்னர் தான் பரவத் தொடங்கியது. பௌத்த சமயம் கி.மு. 5ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றாலும் இந்தியாவை ஆண்ட அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் இந்தியாவுக்கு அப்பால் சீனா, பர்மா, கம்போடியா, இலங்கை உள்ளடங்கலாக ஆசிய நாடுகளிலே பரவத்தொடங்கின.

புத்தசமயம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இலங்கையில் நிறுவனப்படுத்தப்பட்ட மதம் இருக்கவில்லையென்றும் பேய், பிசாசுகளையும் மரம் செடிகளையும் வணங்கினார்கள் என்றும் சிலர் கருதுகின்றார்கள். அண்மைக் காலங்களில் வன்னிப் பிராந்தியங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் தொல்பொருட் சான்றுகள் பல உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றன. இந்து சமயத்தின் தோற்றுவாய் சிந்து வெளி என்றும், அங்கிருந்து தான் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது என்றும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இந்தியாவில் உள்ள ஐராவதம் மகாதேவா என்பவர் தலைசிறந்த ஒரு தொல் பொருள் ஆய்வாளர். அவர் பின்வருமாறு தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இலங்கை, இந்தோனேசியா, அவுஸ்ரேலியா, இந்தியா ஆகியவற்றை உள்ளடக்கிய லெமோறியாக் கண்டம் ஒன்று காணப்பட்டதாகவும், கடல்கோளினால் அவைஅழிந்து பலநாடுகளாக உருப்பெற்றனவென்றும் கூறுகின்றார். அவுஸ்ரேலிய ஆதி வாசிகளுக்கும் திராவிடர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்ற கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அண்மையில் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள ஆனைவிழுந்தான் என்ற இடத்தில் 35க்கும் மேற்பட்ட ஆண், பெண், நாகம், விலங்குகள் சிலைகளை தொல் பொருள் ஆய்வுக் குழுவினர் எடுத்துள்ளார்கள். அவை வழிபாட்டுச் சின்னங்களா அல்லது அலங்காரப் பொருட்களா என்ற கேள்வி எழுகின்றது. இங்கே காணப்பட்ட தாடியுடன் கூடிய ஆணுக்குரிய சிலை, சிந்து வெளியில் காணப்பட்ட தாடியுடன் கூடிய ஆணின் சிலையை ஒத்துக் காணப்படுகின்றது. சிந்துவெளிச் சிலைகளும் மண்ணினால் செய்யப்பட்டவை. இவைகளும் மண்ணினால் செய்யப்பட்டவை. அவற்றின் காலத்தைக் காலக் கணிப்புக்கு உட்படுத்தும் பொழுதுதான் உண்மையான காலத்தை அறிய முடியும். மனித நடமாட்டம் அற்ற அடர்ந்த காட்டுப் பகுதியிலும் இச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் இருந்த இவ்வழிபாட்டு முறைகள் இங்கிருந்து சிந்து வெளிக்குச் சென்றனவா, அல்லது சிந்து வெளியில் இருந்து இங்கு வந்தனவா என்ற கேள்விக்கு தொடரும் ஆய்வுகளும் முயற்சிகளும் தான் விடை கூற வேண்டும். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் குமரிமுனைக்கு தெற்கே உள்ள கடற்பகுதியில் தொல் பொருள் ஆய்வு

மேற்கொள்ள இந்திய அரசு நடவடிக்கையை ஆரம்பித்த கையோடு அதனை நிறுத்திக் கொண்டது. அதன் மர்மமும் புரியாத புதிராகவே இருக்கின்றது. யாழ் மாவட்டத்தில் மாதகல் பகுதியை அண்டிய கடலுக்குள் ஆழ்ந்த நிலையில் ஒரு கோவில் இருப்பதாகவும், காலியில் அல்லது தேவநகர் என்று அழைக்கப்படும் இடத்திற்குத் தென்மேற்காக கடலில் ஒரு இந்துக்கோவில் மூழ்கிய நிலையில் இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. மகாவம்சம் கூட புத்தசமயம் வருவதற்கு முன்பு களனியில் ஆட்சிபுரிந்த நாக அரசர் இருவருக்கிடையே ஏற்பட்ட தகராற்றைத் தீர்த்து வைப்பதற்காகப் புத்தபகவான் இலங்கைக்கு வருகைதந்தார் எனக்கூறுகின்றது. நாக அரசர்களும், அவர்களுக்குக் கீழ் இருந்த மக்களும் நாக வழிபாட்டை மேற்கொண்டிருக்க வேண்டும். அதனை ஆதாரப்படுத்தும் வகையில் ஆனை விழுந்தானில் எடுக்கப்பட்ட ஐந்து தலை நாகத்தின் சிலை அமைந்திருக்கின்றது. அது ஒரு குறியீடா, அல்லது எழுத்தா எண்பது பற்றி இன்னும் அறியப்படவில்லை. நாகர்களுடன் தொடர்புடைய ஊர்களும், துறைமுகங்களும், நாகவழிபாட்டிற்குரிய கோவில்களும் ஈழத்தில் அதிகம் காணப்படுகின்றன. உதாரணமாக நாகதேவன் துறை, நயினை நாகபூசணி அம்மன், புதூர் நாக தம்பிரான், புளியம் பொக்கணை நாகதம்பிரான் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதேபோன்று இயக்கரை நினைவுபடுத்துவதற்கு இயக்கச்சி என்ற ஊர்ப்பெயரும் இருக்கின்றது.

வன்னியின் பல இடங்களிலே 6" x 6" x 6" அங்குல நீள, அகல, ஆழம் கொண்ட துளை இடப்பட்ட கோள வடிவக்கற்கள் மூன்று அல்லது நான்கு கற்கள், குறிப்பிடப்பட்ட இடைவெளியில் பல இடங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக அக்கராயன், கோணவில், பூநகரி, ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. 1999ம் ஆண்டில் Sunday Times பத்திரிகையில் தொல்பொருள் ஆய்வு சம்பந்தமான கட்டுரை ஒன்று வெளிவந்தது. Old Stones tell a Story என்ற தலைப்பின் கீழ் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது. கண்டி குருணாகல் வீதிக்கு அண்மையில் 6" x 6" x 6" அங்குல ஆழம் கொண்ட கற்கள் காணப்பட்டதாகவும் அவை வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்தவை எனவும் குறிப்பிட்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்படும் சமூகக்கல்வி நூல்களிலோ அனுரதபுரியில் இசுறுமுனியா காதலர் சோடி எனவும் விகாரைகளில் அலங்கார வேலைப்பாடு அமைந்த நுழைவாயிலை வாகல்கட எனவும் குறிப்பிடுகின்றார்கள். இசுறுமுனியா என்பது ஈஸ்வரமுனிவர் எனவும் வாகல்கட என்பது வாசல்கடவை எனவும் பொருள் கொள்ள முடியும் ஏனெனில் இந்து சமய வழிபாட்டு முறைகளும் அதற்குரிய மக்களும் வன்னியில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை, அண்மைக்காலத் தொல்பொருள் ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுமுறைகள் சமூகவாழ்க்கையின் ஓர் அம்சமாகக் கணிக்கப்பட்டாலும் திருமணச்சடங்கு, மரணச்சடங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றன. புராதன காலத்தில் எகிப்தியர்கள், அரசர் அல்லது மகாராணி, இளவரசி இறந்தால் அவர்களுக்கு பிரமிட் கட்டி அதில் அடக்கம் செய்வது நாமறிந்ததே. தமிழரின் சவ அடக்க முறைகளிலே, இடுகாட்டில் எறிவதும் சுடுகாட்டில் எரிப்பதும் புதைப்பதும், ஈழத்தமிழர்களை ஈழத்தாழியில் இட்டு அடக்கம் செய்வதும் ஆகிய முறைகள் காணப்பட்டி ருக்கின்றன. தமிழ் நாட்டிலே ஆதிஸ்ச நல்லூரில் அதிக எண்ணிக்கையான ஈமத்தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் புத்தளம் அல்லது பொம்பரிப்பு அல்லது பொன்பரப்பி என்ற இடத்தில் அதிகளவு ஈமத்தாழிகள் கண்டு கொள்ளப்பட்டுள்ன. வன்னியின் பல இடங்களில் இத்தகைய ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பூநகரி வெட்டுக் காட்டிலும் குஞ்சுப்பரந்தனிலும் எடுக்கப்பட்டன. அக்கராயனை அண்டிய குமரையன் தாழ்விலும் ஒரு ஈமத்தாழி இருந்திருக்கிறது. அதனை அழித்து விட்டார்கள்.

ஈமத்தாழி என்பது இறந்தவர்களை அல்லது அவர்களது எலும்புகளை ஒரு பானையில் இட்டு நிவேதனப் பொருட்களுடன் சேர்த்து அடக்கம் செய்வது. இத்தாழிகள் கறுப்புச் சிவப்பு மட்பாண்டமாகக் காணப்படுகின்றன. அதாவது உட்பக்கம் கறுப்பு நிறக் கழி மண்ணைக் கொண்டும் வெளிப்புறங்கள் சிவப்பு நிறத்தைக் கொண்டும் இருக்கும்.

மரணித்த வீரன், அல்லது தலைவன், அரசன், சிற்றரசன் ஆகியோர் நினைவாக நடுகல் நடும் வழக்கம் தமிழ் நாட்டில் காணப்படுகின்றது. வன்னியின் பல இடங்களிலே இத்தகைய நடு கற்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அக்கிராயன், ஸ்கந்தபுரம், 41ம் இலக்க வயற்காணியில் நடுகல் ஒன்று காணப்படுகின்றது. அதேபோன்று நடுகல், ஒன்று உருத்திரபுரம் 10ம் வாய்க்கால் செ. இராசையாவின் வளவில் உள்ளது. ஆனை விழுந்தானிலும் அதே போன்ற நடுகல் உண்டு. முக்கொம்பன் பூநகரிப் பகுதியில் 3 நடுகற்கள் இருந்திருக்கின்றன. அதனை உடைத்து விட்டார்கள்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வரலாற்று உதயகாலமாகிய கி.மு. 1ம் ஆயிரமாண்டளவில் வன்னியின் பல பாகங்களிலும் திராவிட பண்பாட்டுக்குரிய மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதனை நாம் தொல்பொருள் ஆதாரங்களைக் கொண்டு அறிய முடிகிறது.

**வரலாற்றுத் தகவல்**

## ஒல்லாந்தர் கால குரூர தண்டனைகள்.

யாழ்ப்பாணம், ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டுச் சில நாட்களுக்குள், ஒல்லாந்தரைக் கொன்று வேரறத் தொலைக்க வேண்டுமென்னுமோர் அந்தரங்கமான சூழ்ச்சி யாழ்ப்பாணத்தாரிடம் இருப்பதாக மனுவேல் அந்திரேடா என்னும் சிங்கள முதலி கண்டு, ஒல்லாந்தரிடம் வெளிப்படுத்தினான். இதனால் வெகுண்டெழுந்த ஒல்லாந்தர், இச் சூழ்ச்சியில் முக்கிய தலைவர்களாக இருந்த பதினான்கு பேரைக் கொலை செய்தனர். அவர்களுள் டொன்லூவிஸ் யூதத்தம்பியென்னும் யாழ்ப்பாண முதலியாரும், அரச விரோதிகளாக என்றும் இருக்கமாட்டோம் என்று சத்தியப்பிரமாணம் செய்து கொடுத்து யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த பறங்கியர் (போர்த்துக்கேயர்) ஐவரும், மன்னார்த் தலைவன் ஒருவனும் கல்தேறா என்னும் கத்தோலிக்க மதகுருவும், இச்சதி ஆலோசனைக் கூட்டத்தின் முக்கிய தலைவர்களாக இருந்தனர். இவர்களில் மூவரைப் பார்த்தவர்கள் நடுங்கும் படியான மிகக் கொடூரமான வதைக்கு ஆளாக்கினர். அவர்களைச் சிலுவைகளில் பிணைத்து, நெஞ்சுகளைப் பிளந்து, ஈரல்களைப் பிடுங்கியதுமன்றி, அவ்வீரல்களை அவர்களின் வாய்களுக்குள்ளும் திணித்தனர். பின் அவர்களின் சிரசுகள் கொய்யப்பட்டுக் கடைவீதியில் வைக்கப்பட்டன. கல்தேறாசிரச்சேதம் செய்யப்பட்டார். வேறு பதின்மர் தூக்கில் இட்டுக் கொல்லப்பட்ட பின், அவர்களின் உடல்கள் பருந்துகள், விருந்துண்ண மரங்களில் தொங்கவிடப்பட்டன. ஒல்லாந்தர்களின் இக்குரூரமான தண்டனைகளைப்பற்றி பல்தேயஸ் பாதிரியார் சித்திரத்தில் வரைந்து காட்டியிருக்கின்றார்.

-யாழ்ப்பாணச் சரித்திரம்
செ. இராசநாயகம்.

# நாவல் இலக்கியமும் முஸ்லிம்களும்

ஏ.எஸ். உபைத்துல்லா
வெள்ளை மணல் அல் அஸ்ஸர் ம.வி,
சீனக்குடா

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாவல் இலக்கியம் தமிழில் பிறந்தது. இது பற்றிய கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. அதே வேளையில் நாவல் இலக்கியமானது ஐரோப்பியர் வருகையினால் எமது மொழியில் உருவானது என்பது தெளிவான உண்மையாகும்.

ஈழத்தில் தமிழ் நாவல் இலக்கியம் தோன்றி ஒரு நூற்றாண்டு கடந்து விட்ட நிலையில் முஸ்லிம்கள் இவ்விலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கும், பணியும் போதுமானதாக இல்லை எனலாம். முஸ்லிம்கள் மத்தியில் நாவல் இலக்கியத்தில் ஒரு தேக்க நிலை காணப்படுகின்றது. இதனை இலக்கிய வரலாற்றாசிரியர்களின் பரிபாஷையில் கூறுவதானால் இப்பொழுது நாவல் இலக்கியத்தில் மங்கு திசை எனலாம்.

தமிழ் நாட்டைப் போன்று ஈழத்திலும் சிறுகதை எழுதப்படுவதற்கு முன்பே நாவல்கள் தோன்றின. அவ்வாறு தோன்றிய ஒரு நாவல் தான் அறிஞர் சித்திலெப்பை எழுதிய அஸன்பே சரித்திரம். இது 1885இல் வெளிவந்தது.

தமிழகத்தில் 1879இல் வேதநாயகம்பிள்ளை எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரம் தமிழில் முதல் நூலாக வெளிவந்தது. ஆயினும் ஈழத்தில் முதல் நாவலான அஸன்பே சரித்திரத்துடன் நாவல் இலக்கிய வரலாறு ஆரம்பிக்கப்படுகின்றது.

19ஆம் நூற்றாண்டின் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் சித்திலெப்பை. கண்டியில் வசதியான குடும்பப்பினணணியில் பிறந்து வளர்ந்த அவர் தாம் சார்ந்த இனத்தினதும், மதத்தினதும் முன்னேற்றத்திற்காக முனைப்புடன் உழைத்தார்.

வடக்கின விடிவெள்ளியாக இருந்த ஆறுமுகநாவலர் சைவத்தையும், தமிழையும் வளர்த்தது போன்று மத்திய மலைநாட்டின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த சித்திலெப்பை இஸ்லாத்தையும், தமிழையும் வளர்த்தார். மொழி இலக்கிய நோக்கில் இவரது பங்களிப்பினை நோக்கும் போது மகத்தானது.

சித்திலெப்பை என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது தமிழ் நாவல் இலக்கியத்தின் (அஸன்பே சரித்திரம்) பங்களிப்புத்தான். இந்நாவல் 1884 இல் சித்திலெப்பையின் முஸ்லிம் நேசன் பத்திரிகையில் தொடர்கதையாக வந்து 1885இல் நூலுருப் பெற்றது. மத்திய கிழக்கு, இந்தியா ஆகிய நாடுகளை கதைக்களமாகக் கொண்டு இந்நூல் விரிகின்றது.

உலக இலக்கிய வரலாற்றில் எம் மொழியிலும் பண்டைய இலக்கியங்கள் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. உரை நடையானது காலத்தால் பிந்தியது.19ஆம் நூற்றாண்டில் இது பருவமெய்தியது. உரைநடை இலக்கியத்தின் ஒன்றான நாவல் இலக்கியம் ஆங்கில நாவல்களைப்படித்துச் சுவைத்ததின் அருட்டுணர்வினால் தமிழ் நாவல் இலக்கியம் பிறந்தது.

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றை சுருக்கமாக விளக்க அதனை 3 கூறுகளாகப் பிரிக்கலாம்.

1.ஆரம்பகால நூல்கள் 1885-1900

2.இடைக்கால நூல்கள் 1901-1950

3.இக்கால நூல்கள் 1950 பின்னர்

வேதநாயகம்பிள்ளை, சித்திலெப்பையுடன் தமிழ் நாவல் இலக்கியம் தொடங்குகின்றது என்ற மரபை ஒரு கணம் ஒதுக்கி விட்டு, அவர்களுக்குப் பின் வந்தாரது நாவல்களில் தான் தெளிவான பாத்திர வார்ப்பு, வருணனை, கதைகூறும் பாங்கு, உருவஉள்ளடக்கம் என்பன காணப்பட்டன. இருப்பினும் நாவல் இலக்கியத்தைப் பொறுத்தளவில் 1930ஆம் ஆண்டளவிலேயே கலாபூர்வமாகவும், பிரக்ஞை பூர்வமாகவும் தமிழில் உதயமாயிற்று.

1950 ஆம் ஆண்டின் பின்னர் ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் புதியதொரு சகாப்தம் உருவானது. அதற்கு நாட்டு நிலைமையும் அரசியற் சூழலும் காரணமாக அமைந்தன. சமூகத்தில் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கும் நூல்கள் எழுந்தன.

பொருளாதார பிரச்சனைகளும், மொழிப்பிரச்சனைகளும் பேசப்பட்டு இடதுசாரி அரசியல் சித்தாந்தங்களும் வலுப்பெறத் தொடங்கியது. அதனை முன்வைப்பதாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயற்பட்டது.

சாதாரண மக்களது வாழ்க்கைப்பிரச்சினைகளும், அன்றாட அனுபவங்களுமே நாவல் இலக்கியத்தில் தயக்கமின்றி எடுத்தாளப்பட்டன. எதார்த்த அடிப்படையில் அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளும் கூர்மைப்படுத்தப்பட்டன.

பொதுவாக ஈழத்து முஸ்லிம் நாவல் இலக்கியத்தை நோக்கும் போது

1.சமூகப்பிரச்சினைகள் கொண்ட நாவல்
2.பிரதேச நாவல்கள்
3.சமய, பண்பாட்டு, அரசியல் பொருளாதாரப்பார்வை கொண்ட நாவல்கள்
4.பொழுது போக்கு நாவல்கள்
5.வரலாற்று நாவல்கள்

நவீன இலக்கிய வடிவங்களாக சிறுகதைகளை விட நாவல் இலக்கியம் சிருஷ்டிப்பவர்கள் முஸ்லிம்கள் தரப்பில் மிகக்குறைந்த எண்ணிக்கை உடையவர்களே காணப்படுகின்றனர். 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுபைர் இளங்கீரன் நாவல் இலக்கியத்தில் தடம்பதிக்கத் தொடங்கினார்.

சுபைர் இளங்கீரன் ஈழத்து நாவல் இலக்கியத்திற்கு புது இரத்தம்பாய்ச்சியவர். மாக்சிஸ சித்தாந்தங்களில் ஈடுபாடு கொண்டவர். அந்த அடிப்படையில் அதற்கு அமைவாக நூல்களை எழுதினார். அவருடைய ''நீதியே நீ கேள்'', ''புயல் அடங்குமா?'', ''கலாராணி அவர்கட்கு ஒரு வீடு வேண்டும்'', ''தென்றலும் புயலும்'' போன்ற பல நாவல்கள் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

கலாநிதி நா. சுப்பிரமணியம், சுபைர் இளங்கீரனைப்பற்றிக் குறிப்பிடும் போது ''இக்காலப்பகுதியில் நாவல்வரலாற்றுக்கு ஒரு புதிய பரிணாமத்தைக் கொடுத்த பெருமை இவரைச்சாரும்'' என்றார். 20 நாவல்கள் வரை எழுதியுள்ள இவரை நாவல் உலகின் ஒரு யுகப்புருஷன் என்றே குறிப்பிடலாம்.

சுபைர் இளங்கீரனின் நாவல்கள் ஏற்றத்தாழ்வு, ஒற்றுமை, பொருளாதாரப் பிரச்சினைகள் முதலியவற்றை அடிநாதமாகக் கொண்டு சித்திரிக்கப்பட்டுள்ளன. பொதுவுடமைக் கோட்பாட்டின் அடிப்படையில் சமூகப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக இந்நாவல்கள் அமைந்துள்ளன.

1950ஐ அடுத்துள்ள காலப்பகுதியில் எம்.எ.அப்பாஸின் கள்ளத்தோணி (1953) இவளைப்பார் (1953) கே.எம்.பீர்பாவாவின், அஸ்டாங்க யோகம் (1955) ஏகாந்த தீபம்(1955) எம்.சி.எம்.சுபைரின் மலர்ந்த வாழ்வு (1956) ஆகிய நாவல்கள் வெளிவந்துள்ளன.

கிழக்கிழங்கை விவசாய மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளையும் இஸ்லாமிய ''சரிஅத்'' கோட்பாடுகளையும் பிரதிபலிக்கும் வகையில் நாவல்களை எழுதியவர் அ.ஸ.அப்துஸ்ஸமது. தென்கிழக்குப் பிராந்தியத்தின் நாவல் இலக்கியத்தில் முன்னோடியான அ.ஸ.1950களில் எழுதத்தொடங்கியவர்.

பனிமலர்(1978) கனவுப்பூக்கள்(1987) தர்மங்களாகும் தவறுகள்(1997) ஆகிய மூன்று நாவல்களை அ.ஸ. எழுதியுள்ளார். அதில் பனிமலர் என்ற நாவல் வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில் கிழக்கிலங்கை மண்வளக்கதைகளுக்காகப் பரிசு பெற்றது. கனவுப்பூக்கள் என்ற நாவல் 1988 ஆம் ஆண்டு முஸ்லிம் எழுத்தாளர் தேசிய கவுன்சிலால் .........சமய கலாசார அமைச்சின் சார்பில் பொற்கிழி பெற்றது.

''தர்மங்களாகும் தவறுகள்'' நாவல் அரசியல் வக்கிரங்களை மீறி, மனித உறவுகள் இனமத பேதமின்றி எவ்வாறு வாழ்வில் பரிணமிக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

1970களில் இருந்து திக்குவல்லை கமால் தென்னிலங்கையின் ஏகப்பிரதிநிதியாக இருந்து எழுதிவருகிறார். இவர் தென்னிலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்வியல் வழிமுறைகளை இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் நாவல்களாக எழுதியுள்ளார். தென்னிலங்கைப் பேச்சுத் தமிழை இலக்கியத் தரத்திற்கு உயர்த்தி விட்ட பெருமை இவரைச் சாரும்.

சமவுடமைச் சிந்தனையாளர்களைச் சார்ந்த கமால் தென்னிலங்கையில் நாவல் இலக்கியத்தில் பிதாமகனாக விளங்குபவர். புனைகதை இலக்கியத்தில் இவரை ஒரு சாதனையாளர் என்றே குறிப்பிட வேண்டும். இதுவரை 7 நாவல்களை எழுதியுள்ளார். பொய்மைகள் நிலைப்பதில்லை (1977), இப்படியும் ஒருத்தி (1979), இவள் ஒரு இரத்தினம் (1980), முற்றத்து மல்லிகை (1982), பாதை தெரியாத பயணம் (1984), ஒரு பானைச்சோறு (1994), ஒளிபரவுகிறது (1995).

மேலே கூறப்பட்ட நாவல்கள் அனைத்தும் தினகரனில் தொடர் கதையாக வெளிவந்துள்ளன. ''ஒளிபரவுகிறது,'' ''ஒரு பானைச்சோறு,'' ''பாதை தெரியாத பயணம்'' ஆகிய 3 நாவல்களும் நூலுருப் பெற்றுள்ளன. ''ஒளிபரவுகிறது'' நூலுக்கு 1995 இல் சாஜித்திய மண்டலப்பரிசு கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தை பகைப்புலமாக்க கொண்டு எழுதி வரும் மற்றுமொரு நூலாசிரியர் ஜுனைதாஷெரீப் என்று அழைக்கப்படும் கே.எம்.எம். ஷெரீப். இவர் காத்தான்குடியைப்பிறப்பிடமாகக் கொண்டவர். ''சானைக்கூறை,'' ''இது நம்ம சொத்து'' ''அவளுக்கு ஓர் இதயம்,'' ''ஒரு கிராமத்தின் துயில்கலைகிறது,'' ''மூன்றாம் பிறை,'' ''காட்டில் எறித்த நிலா,'' உட்பட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவை தவிர மர்ம நாவல்களையும் எழுதியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் அதிக நாவல்களை எழுதி முதன்மை பெறும் ஜுனைதா ஷெரீபின் துடிப்பும் வேகமும் கொண்ட

நாவல்களில் காதல், கல்யாணம், சீதனம், சம்பிரதாயங்கள் என்பன கருவாக இழையோடிக் காணப்படுகின்றன.

ஒரு நூற்றாண்டு கால தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சியில் ஈழத்து முஸ்லிம்களின் பங்களிப்பு போதுமானதாக இல்லை. 1960களில் இருந்து பெண்கள் எழுதி வருகின்றனர்.

கலைப்பட்டதாரியான நயீமா ஏ.சித்திக் கருவிலே திருவுடைய ஒரு மூத்த முஸ்லிம் படைப்பாளி. இவருடைய ''வாழ்க்கைப்பயணம்'' என்ற நாவல் 1976இல் வீரகேசரியில் பிரசுரமாகி வந்துள்ளது. இவை தவிர கால வெள்ளம் என்ற சமூக நாவல் மங்கை சஞ்சிகையில் தொடர்கதையாக வெளிவந்துள்ளது.

இதே காலப்பகுதியில் எழுதத்தொடங்கிய டீ.எம். பீர் முகம்மது மலையகத்தைச் சேர்ந்தவர். இவருடைய படைப்புக்கள் பெரும்பாலும் இந்திய வம்சாவழி மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை. ''சதியில் சிக்கிய சலீமா,'' ''கங்காணி மகள்'' என்னும் இரு நாவல்களை வெளியிட்டுள்ளார்.

நாவல் நகர் பா.ஆப்தீன் அடக்கமும் அமைதியும் கொண்ட ஆர்ப்பாட்டம் இல்லாத ஒரு சிருஷ்டி கர்த்தா. அநுராதபுர மாவட்ட முஸ்லிம் மக்களின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு ''கருக்கொண்ட மேகம்'' என்ற நாவலை 1999 இல் வெளியிட்டுள்ளார். இந்நாவலை யாழ்ப்பாண இலக்கியப் பேரவை 2003ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலாக தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கியுள்ளது.

1978இல் எழுத ஆரம்பித்தவர் பீ.எம்.புண்ணியாமீன் உடத்தலவின்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ''அடிவானத்து ஒளிர்வுகள்'' என்ற நாவலை 1995 இல் வெளியிட்டுள்ளார்.

பேராதனையைச் சேர்ந்த ஏ.ஏ.ஜுனைதீன் தமிழ் இலக்கியப்பணியோடு சினிமாக்களிலும் ஈடுபாடு கொண்டவர். சிந்தாமணி பத்திரிகையில் இவர் தொடர்கதையாக எழுதி வந்த ஷாமிளாவின் இதயராகம் (2000) நாவல் வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. பிற்காலத்தில் அந்நாவல் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பீ.எம். ஜெலில் ''ஒரு வெள்ளைப்பூ சிரிக்கிறது'' என்ற நாவலை வெளியிட்டுள்ளார். அதே போன்று களுத்துறையைச் சேர்ந்த சனீறாகாலித்தீன் ''ஒரு தீயாகிறது'' என்ற நாவலை (1999) வெளியிட்டுள்ளார்.

பலராலும் பேசப்பட்ட ஒரு எழுத்தாளர் எம்.எச்.எம். ஷம்ஸ் தென்னிலங்கையைச் சேர்ந்த இவர். ''கிராமத்துக் கனவுகள்''(1999) நாவலை வெளியிட்டுள்ளார். கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஐ.நாகூர்கனி இம் மாவட்ட மக்களின் வாழ்க்கையை ஆதர்ஷமாகக் கொண்டு ''அவள் நெஞ்சுக்குத் தெரியும்'' என்ற நாவலை (1986) வெளியிட்டுள்ளார்.

வாழைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்ட அஹ்மது 1960களில் எழுதத் தொடங்கியவர். 1976ஆம் ஆண்டு இவரது ''புதிய தலைமுறைகள்'' என்னும் நாவல் வீரகேசரி வெளியீடாக வந்தது. இந்நாவல் அவ்வாண்டுக்கான சாகித்திய மண்டலப்பரிசு பெற்றுக்கொண்டது.

ஒழுவில் அமுதன் ''நாம் ஒன்று நினைக்க ''(2000) என்ற நாவலையும் ஜின்னாஹ் சரிபுத்தீன், ''கருகாத பசுமை'' என்ற நாவலையும் வெளியிட்டுள்ளனர்.

கல்முனையைச்சேர்ந்த பிரோஸா குசைன், கலைவாதி கலீல், எஸ்.எம்.ஹனீபா, அல்ஆசுமத், நிந்ததாஸன் ஆகியோர் தமது நாவல்களைத் தொடர்கதையாக தினகரனில்

எழுதியுள்ளனர். அக்கரைப்பற்றைச் சேர்ந்த அ.ச. சித்திறிஜா தினகரனில் ''மலர்களிலே மல்லிகை'', ''அவள் ஒரு மௌனராகம்'' என்ற இரு நாவல்களை எழுதியுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த அ.அன்வர்தீன் (எழிலோன், திவ்வியபிரகாஸ்) ஆகிய புனைப் பெயர்களில் தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் நாவல்களைத் தொடர் கதைகளாக எழுதியுள்ளார்.

''சமூதாயப்பூக்கள்'' (தினகரன் 1980) ''மன்னவனே மன்னவனே'' (வீரகேசரி 1992) ''மஞ்சந்தொடுவாய்'' (வீரகேசரி 1996) ''எழுதப்படாத கவிதைகள்'' (தினக்குரல் 1997) ஆகிய நாவல்களை எழுதியுள்ளார். இதுவரையில் இவரது நாவல்களில் ஒன்று கூட நூலுருப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்து முஸ்லிம் நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்த தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் பணி நினைவு கூரத்தக்கது. வீரகேசரிப் பிரசுரம் மூலம் முஸ்லிம் எழுத்தாளர் பலரின் நாவல்கள் புத்தகமாக வெளி வந்துள்ளன.

தொடர்கதைகளாகப் பத்திரிகைகளில் பிரசுரமான நாவல்களை நூல் வடிவில் கொணர்வதற்கு எழுத்தாளர்கள் கரிசனை காட்ட வேண்டும். அதேவேளையில், வசதி படைத்த சமூக நிறுவனங்கள் இந்நாவல்களின் வெளியீட்டு முயற்சிக்கு கைகொடுத்து உதவ முன்வரவேண்டும்.

ஈழத்தில் சிறுகதை இலக்கியம் வளர்ந்துள்ள அளவுக்கு நாவல் இலக்கியம் வளரவில்லை என்ற செய்தியை மீளவும் நினைவுபடுத்தி, இந்த நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் எழுத்தாளர்கள் நாவல் இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பு போதாது என்பதோடு, முஸ்லிம் எழுத்தாளர்களிடமிருந்து பெருமளவு நாவல்களை தமிழ் நல்லுலகம் எதிர்பார்க்கின்றது.

முடிவாக, ஈழத்து முஸ்லிம் நாவல் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் படைப்பாளிகள் ஆழ்ந்த நேரடி அனுபவமின்றி அவசரப்போக்கில் பரிச்சயமற்ற பாடு பொருளைப் பலர் நாவலுக்குக் கருவாகக் கொள்கின்றனர். அதுமட்டுமின்றி பிரச்சினைகள் சரியான தளத்தில் நின்று அணுகப்படுவதாகவும் இல்லை.

ஆகவே, மானிட உணர்வுகளினது. வாழ்வோட்டங்களை எடுத்துக்காட்ட முயல வேண்டும். உருவமும், உள்ளடக்கமும் இணைந்த ஒருமைப்பாடே உன்னதமான நாவல்களைத் தோற்றுவிக்கும் அத்தகைய இலக்கியங்களே காத்திரமானதாக அமையும் என்பதனை நாவலாசிரியர்கள் கவனத்தில் கொண்டால் சிறப்பாக இருக்கும். எனினும், நாவல் இலக்கியம் பொருளைப் பொறுத்தும், பொருளினை அணுகும் முறையினைப் பொறுத்தும் புதிய பரிமாணங்களைப் பெற்று மாற்றமுற்றுச் செல்ல வேண்டும் என்பதையே வாசகர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக ஈழத்தில் வளர்ந்து வருகின்ற தமிழ் நாவல் இலக்கியத்துக்கு முஸ்லிம்கள் ஆற்றிய் பங்களிப்பினை மதிப்பிடுவதுதான் இதன் நோக்கமாகும். ஆயினும், எனக்குக் கிடைத்துள்ள சில தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இச்சிறு கட்டுரையினை வேண்டிய இத்தலைப்பை நான் எடுத்தாண்டு ஒரு அறிமுக, வழிகாட்டல் குறிப்பாகவே தந்துள்ளேன்.

# நூலகப் பாரம்பரிய சேவை துறையில் முறைமையின் தாக்கம்

## - ஒரு விவரண நோக்கு -

திருமதி. மைதிலி விசாகருபன்
B.A(Hons); BLISC (Madurai)
MLISC (Maduraj)
CLISC (Annamalai University)
யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.

நூலகம் தொடர்பாக, நூலகவியல்: என்பது இன்று ஒரு தனித்துறையாக வைத்து ஆய்வு செய்யுமளவிற்குப் பல்வேறு வகையான வளர்ச்சி நிலமைகளைப் பெற்று விட்டது. இன்றைய அறிவியல் சார் விடயங்கள் அனைத்திற்கும் ஒரு இன்றியமையாத தீர்வகவீடாக ''நூலகம்'' செயற்பட்டு வருகின்றது. இந்தளவு முக்கியத்துவம் நூலகவரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே சமாந்தரமாக வந்து கொண்டிருந்த விடயமல்ல. அச்சின் அறிமுகம் அல்லது வளர்ச்சி என்பது ஏற்பட்ட பின்னர் நூலகத்தின் சேவையும் பரிமாணமும் மாறிவிட்டது. அச்சின் வருகை என்பது நூலக வரலாற்றின் ஒரு திருப்பு மையமாகச் (Turning Point) சுட்டிக்காட்டப்படத்தக்கது.

இந்த நூலகங்களுடைய சேவையும், அவற்றின் நோக்கமும் அச்சுக்கு முன்னர் ஒரு வகையிலும் அச்சின் பின்னர் வந்த நவீன காலத்தில் முற்றிலும் மாறுபாடானதும், விஸ்தாரமானதுமான நிலையில் காணப்படலாயிற்று. இவ்வாறான இந்த நூலக வளர்ச்சியில் அச்சுக்கலை அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தி விட்டதைக் குறிப்பிடுவதற்கு முன்னர் நூலகங்களின் பாரம்பரிய சேவைமுறை என்ன. இவை எத்தகைய வரையறைகளுக்குட்பட்டிருந்தன என்பவற்றிற் தெளிவு கொள்வது இங்கு பிரதான விடயமாகும்.

### தகவற் பேணுகையும் நூலகமும்:

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து இன்றைய 'நூலகம்' அல்லது 'தகவல் வழங்கும் நிலையம்' என்ற எண்ணக் கருவிலிருந்து ஆரம்பகால நூலகங்கள் மாறுபட்டேயிருந்துள்ளன. எழுத்து நிலைப்பட்ட ஆக்கங்களைச் சேகரித்தல் பாதுகாத்தல் பாவனைக்கு வழங்கல் என்ற நிலைப் பாட்டிலேயே இவை பெரிதும் செயற்பட்டன. இவ்வாறு ஆக்கங்களைப் பேணுகின்ற அல்லது பாதுக்காக்கின்ற இத்தகைய நூல கங்களின் அதிக பயன்பாடு ''பாடக் கையளிப்பு' ஆக (Text Transmission) இருந் ததே தவிர 'தகவல் வழங்கும்' மையங்களாக இருக்கவில்லை.




மேற்கூறியவாறு நூல்களைச் சேகரிக் கின்ற அல்லது பாதுகாக்கின்ற ஒரு செயற்

பாடு மனிதகுலம் நாகரிக வாசலுக்கு வந்த பின்னர், எழுத்து வடிவங்களும், எழுது கருவிகளின் உபயோகமும் ஏற்பட்ட பின்னர், ஏற்பட்டவையாகும்.

ஆரம்பகால நூல் நிலையங்களாக தேவாலயங்கள், மடாலயங்கள், பள்ளிவாசல்கள், கோவில்கள், அரண்மனைகள் முதலானவையும் தனிப்பட்ட செல்வந்தர் களது இல்லங்களும் காணப்பட்டிருந்தன. நூலக வரலாற்றின் ஆரம்பகால நூல் நிலையங்களாக இவையே கருதப்படுகின்றன.

எழுத்து நிலைப்பட்ட ஆக்கங்களைப் பாதுகாக்கக் கூடிய தகைமை அக்கால சமூக அமைப்பில் மேலாண்மை பெற்றிருந்த சக்திகளான் சமயும், அரசு முதலானவற்றைச் சார்ந்தவர்களுக்கே இருந்திருக்கின்றது. இவர்களால் தான் இத்தகைய 'பேணுகை அமைப்பை' ஸ்தாபிக்க அல்லது நிர்வகிக்க முடிந்தது.

## அன்றைய நூலகங்களின் தன்மையும் சேவையும்,

பண்டைக்காலத்தில் இந்த மத நிறுவனங்கள் தனியே மத நிறுவனங்களாக மாத்திரம் இராமல் சமூக நிறுவனங்களாகவும் செயற்பட்டவை. இங்கு அரச அலுவல் சார் விடயங்களும், சமயம் சார் விடயங்களும், சமூக மேலாதிக்கம் பெற்ற தனிப்பட்டவர்களுடைய விடயங்களும் தான் பெரிதும் சிரத்தை பெற்றிருந்தனவே தவிர பகுப்பாக்கம், பரவலாக்கம் என்பன இப்பாரம்பரிய சேவைக்கு வேண்டியனவாய் இருக்கவில்லை.

எகிப்திய ஆரம்பகால நூல் நிலையங்களில், அக்காலத்து அவர்களுடைய கடவுளர்கள் பற்றியும், மதநடவடிக்கைகள் பற்றியும், அரசு நிலைப்பட்ட எழுத்துருப் பதிவுகளையுமே காணக்கூடியதாகவுள்ளதென ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன.

நமது தமிழ் மரபிலும் கி.பி. 600 - 1800 வரை நிலவிய கோவிற் பண்பாட்டுக் (Temple culture) காலத்தில் கோவில் (கோ + இல்) என்பதன் உட்கருத்து இறைவனின் இருப்பிடம், அரசனின் இருப்பிடம் என்ற இரு நிலைகளிலுமே தெளிவுபடுத்தப்பட்டது. கோவிலிற் தான் அனைத்து செயற்பாடுகளும் நடந்தன. நூல் வெளியீடுகளாயினும், நடன அரங்கேற்றங்களாயினும் கோவில்களிலேயே நடந்தேறின. அச்சு எழுத்துத் தோன்றுவதற்கு முன்னர் நூல் உருவாக்கத்திலே இந்த மேலாதிக்க சமூகமே அதிக பங்கெடுத்துக் கொண்டது. இந்த நூல்களிலுமே இந்த மேலாதிக்க சமூகத்தின் வீரசாகசச் செயல்கள், பிரயாணக்கதைகள், உயர் குடும்ப வாழ்க்கைக் குறிப்புகள், தந்திரங்கள், விஞ்ஞானம், கணிதம், மருத்துவம் ஆகிய துறைசார் விடயங்கள் ஆங்காங்கு பேணப்பட்டன. இவற்றுள் மதக் கோட்பாடுகளும், நிர்வாகக் கோட்பாடுகளுமேமுதன்மை பெற்றிருந்ததுடன் எழுத்து நிலைப்படுத்தவும்பட்டன.

## நூல் உற்பத்தி முறையின் வளர்ச்சி

படி எழுதும் முறைமை (ஒருவர் ஏட்டை வாசிக்க, மற்றவர் அதனைக் கேட்டு எழுதும் முறைமை) புராணபடனம் ஓதுதல், கதாகாலாட்சேபம் முதலானவை தான் பிறக்குத் தகவல் வழங்கும் முறைமைகளாக இருந்தன. இந்த நூலகங்களின் பாரம்பரிய சேவை முறைமையில் தனிப்பட்ட வாசிப்போ, அல்லது ஒரு குறிப்பிட்ட நூலை (அதன் பிரதியை) எல்லோரும் பெற்றுக்கொள்ளக் கூடியதான தன்மையோ இருக்கவில்லை. அத்துடன் குறிப்பிட்ட சிறுதொகையினரே புலமைத்துறை சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.



நூலகத்தில் புதிய நூல்களைக் காட்சிப்படுத்தும் முறைகளில் கவரத்தக்க முறை ஒன்று.

ஒரு அல்லது சில பிரதிகள் மாத்திரமே ஒரு பாடம் சார்ந்து இருக்க வேண்டும். நூல்களின் பிரதிகள், நூல்களின் எண்ணிக்கைகள் என்பன மிகக் குறைவாகவே பாரம்பரிய சேவை முறையிற் காணப்பட்டிருக்கிறது. அதாவது இங்கு ஒரு விடயம் அல்லது பாடம் (Text) பல பிரதிகளைக் கொண்டிராத துடன், குறித்த அப்பாடங்களின் கையெழுத்துக்களும் எவ்வளவு காலம் பாதுகாப்பாக இருக்கக் கூடியன என்பதில் பாரிய பிரச்சினையும், இப் பேணுகை நிலையங்களுக்கு இருந்தன. இக்காலத்து எழுது கருவிகளின் பலவீனத்தன்மை காரணமாக சேகரிக்கப்பட்ட, பேணப்பட்ட நூல்களினுடைய பயன்பாடும் வாழ்க்கைக் காலமும் நிச்சயமற்றதாகவும், விரைவில் அழிந்து போகும் தன்மையுடையதாகவும் காணப்பட்டன.

ஆரம்பகால நூல் நிலையங்களுக்கு குறிப்பிடத்தக்களவு 'வாசகமூலம்' இருக்கவில்லை. எழுத்தறிவு வீதம் குறைவாகவே காணப்பட்ட அக்காலச் சமூக அமைப்பில் வாசிப்புப் பழக்கம் என்பது இல்லாமலே இருந்திருக்க வேண்டும்.

இவ்வாறாகக் காணப்பட்டு வந்த நூலகங்களின் சேவை முறைமை தொடர்ந்தும் அவ்வாறே இருக்கவில்லை. கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் மறுமலர்ச்சிக் காலத்தில் கல்வி நாட்டம், கைத்தொழிற் சிறப்பு முதலான மனித சமூகத்தின் நாகரிகத்தை நோக்கிய அடிப்படை உந்துதல்கள் முனைப்புறத் தொடங்கின. இந்த அடிப்படை உந்துதல்களில் மிக ஆழமாகக் கால் பதித்த விடயம் 15ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகத்தாலான 'அசையும் அச்சு' (Moveable Type) என்பதாகும்.

அச்சியந்திரத்தின் தோற்றம் முதல் அதன் வளர்ச்சி நிலை வரை பல படிப்படியான மாற்றங்களும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் ஏற்படலாயின. அச்சியந்திர வருகையென்பது பல சமூக விளைவுகளை ஏற்படுத்தினாலும் நூலகங்களின் சேவை வரலாற்றில் பிரதான திருப்பு மையமாக நின்று 'நூலகம்' என்பதன் வரைவிலக்கணத்தையே மாற்றியுள்ளது எனலாம்.

அச்சு முறைமை காரணமாக எந்தவொரு மொழியினது எழுத்திலும் ஒருசீர்த்தன்மை (Uniformity) பேணப்படலாயிற்று. அச்சுக்கு முந்திய காலத்தில் எழுத்துக்கள் காலப்போக்கில் பல்வேறு மாற்ற நியதிக்குட்பட வேண்டியிருந்த நிலைமை முற்றாக நீங்கியது. அச்சின் வருகை காரணமாக விடயங்களின் பராதீனப்பாடு மிகவும் இலகுவாகியது. எல்லோருக்கும் எல்லாமே கிடைக்கக்கூடிய நிலை ஏற்படலாயிற்று. தொலைத்தொடர்பு இலகுவாகியது.

மனித சிந்தனைகள், கருத்துக்கள் யாவற்றுக்கும் எழுத்து வடிவமும், கூடவே அச்சிட்டுப் பிரசுரிக்கும் இறைமையும், நவீன காலத்தில் இருந்தமை காரணமாக நூலுருக்களின் பெருக்கம் மிக அதிகமாயிற்று. விடயங்களைத் தாங்கிவரும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள் எனப் பலவாறாகவும், மிக அதிகமாகவும் வெளியீடுகள் வெளிவரத் தொடங்கலாயின. இவ்வாறு மிகப் பாரிய அளவிற் குவிந்து கிடக்கும் வெளியீடுகளைச் சேகரித்து, ஒழுங்குபடுத்தி, வாசகர்களுக்குத்

தேவையான அளவில் வழங்கும் ஒரு இன்றியமையாத சேவை முறை, அச்சின் வருகைக்குப் பிற்பட்ட நூலகங்களுக்கேயுரியவையாயின.

இத்தகைய ஒரு நிலைமை காரணமாக ஆரம்பகால நூல் நிலையங்கள் எழுத்து நிலைப்பட்ட ஆவணங்களைப் பேணுவதிலும் பார்க்க அச்சுக்குப் பிற்பட்ட காலத்திற் தொழிற்பட்ட நூல் நிலையங்கள் அச்சுநிலைப்பட்ட ஆவணங்களைப் பேணுவதிலும் பாரிய வேறுபாடுகள் ஏற்படலாயின. அச்சிற்குப் பிற்பட்ட நூல்கள் நூலுருச் சாதனங்களைப் பேண வேண்டியதுடன் நூலுருவற்ற சாதனங்களையும் பேண வேண்டிய ஒரு இன்றியமையாமை ஏற்படலாயிற்று. இந்நிலையில் நூலகங்களின் பாரம்பரிய சேவை முறையே மாற்றம் பெறலாயிற்று.

## நவீன நூலகங்களின் தன்மையும் சேவைகளும்:-

அச்சின் வருகையின் பின்னர் நூலகங்களின் செயற்பாடு என்பது 'தகவற் பரவாலாக்கம்' என்பதாக அமைந்தது. இங்கு நூலகங்களிற் சேகரிக்கப்பட்ட அறிவை இத்தேடல் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு வழங்குவதும் பிரதான இலக்காக இருக்கிறது.

நூலகங்களின் பாரம்பரிய சேவையைப் போல இன்றைய நூலகங்கள் நூற்சேகரிப்பை மேற்கொள்வது உண்மையெனினும், நூல்களுக்கு அப்பாற்பட்டு நூலுருவற்ற சாதனங்களையும் சேகரித்து வழங்கும் தன்மை இவற்றின் பாரம்பரிய சேவையிலிருந்து மாறுபட்ட விடயமாகும். ''நூலகம்'' பற்றிய கருத்து நிலை அச்சில் வந்த பின்னர், நூலகத் தகவல் விஞ்ஞானம், என்ற நிலைக்கு விரிவடையலாயிற்று.

நூலகங்கள் தமது சேவையில் பாரிய பரிணாம மாற்றத்தைப் பெற்ற நிலையிலே இவை உலகில் பொதுவாக "Information Centre" என்றே வகையீடு செய்யப்படுகின்றன.

எனவே இனறு நாம் நூலகம் என்பதனை ஆவணவாக்க நிலையம்; தகவற் தளம், தீர்வுகளின் தகவல் ஆராய்ச்சி மையம், ஆற்றுப்படுத்தல் நிலையம், தகவல் தரவு வங்கி என்றவாறாகக் குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

உண்மையில் மேற்குறித்த ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித்தனி அர்த்தமும் வெவ்வேறான வரையறைகளுக்கும் உட்பட்டன எனினும் தகவல் வழங்கும் அமைப்புக்கள் என்ற ரீதியில் ஒருமைப்பாடுடையனவாகக் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் நூலகச் செயற்பாட்டிலிருந்து விசேட தேவைகருதி உருவாக்கப் பட்டவையாகச் சுட்டிக்காட்டப்படத்தக்கன.

### முடிவுரை:

தொகுத்து நோக்குகின்ற போது நூலகங்களின் வரலாறு என்பது மிக நீண்டதெனினும் அவற்றின் நோக்கமும் சேவைமுறைமையும் ஒரே தொடர்ச்சியாக அமையவில்லை. நூலகங்களின் சேவை முறை அச்சின் வருகைக்கு முன்னர் ஒரு வகையிலும், அதன் பின்னர் இன்னொரு வகையிலும் அமையலாயிற்று. அச்சின் வருகையின் பின்னர் நூலகங்களின் வரைவிலக்கணமே மாற்றமடைந்ததுடன் நூலகர்களும் தகவல் விஞ்ஞானிகளாகவும், தகவல் ஆலோசகர்களாகவும், தகவல்களை அட்டவணைப்படுத்தல், சாரம்சப்படுத்தல் முதலான நுட்பவேலைகளைப் புரியும் நிபுணர்களாகவும் பரிணாமம் பெற்றனர். இவையாவும் அச்சின் வருகையினால் ஏற்பட்ட மிகப் பாரிய மாற்றங்களாகும்.

இத்தகைய நவீன தகவல் களஞ்சியமாக விளங்கும் நூலகங்கள் இன்று புதிய கல்விச் சீர்த்திருத்தத்தின் கீழ் சகல பாடசாலைகளிலும் முக்கியத்துவம் பெற்று வருவதனைக் காணலாம். அந்த வகையில் இன்றைய பாடசாலை நூலகங்கள் நூல்கள் சஞ்சிகைகளை மட்டும் கொண்டிராது கற்றல் கற்பித்தலுக்கு வேண்டிய உள்ளீடுகளையும் தகவல் தொடர்பு சாதனங்களையும் வழங்கும் வளநிலையங்களாகவும் இருப்பதால் அவை ''நூலகமும் கற்றலுக்குமான வளநிலையம்'' என அழைக்கப்படுகின்றமை, நூலகம் என்ற எண்ணக்கருவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமையைக் காணலாம்.

## துணை நூல்கள்


01) இராமச்சந்திரன், மு. நூலகமும் நூலக அறிவியலும், 1990.
02) மாணிக்கவாசகன், ஞா, நூல் நூலகம் பதிப்பகம், 1989.
03) இலங்கையிற் கல்வி - நூற்றாண்டு விழா மலர், பகுதி 111. 1969.
04) Ishvari Corea - Roads to wisdom; 1980


## தீர்மானம் !!!!!

நிகழ்ச்சி நிரல்களில்
எழுத்துப் பிழைகள்
நேரத்தை
கொல்லும் காலம்
நெருடுகிறது..

புகழ்ச்சி மொழிகளின்
புழுக்களின் நெழிவுகள்
அழுக்குத் துணிகளில்
நெய்யினை ஊற்றி
நெருப்பை கனல்கின்றன.

மூக்குத் துவாரங்களில்
முணுமுணுக்கும்
காற்றுத் துளிகள்
வண்ணக் கனிகளால்
வாழ்வின் சுவாசத்தை
அடைகின்றன

அடைவு நகைகளை
ஏலத்தில் விற்கும் புடையன்களின்
நிமிர் வெளிகளில்
உப்புக் காற்று
ஓங்கி அடிக்கும்.
புரிதல் தொலைவுகள்

அழிபட, அழிபட
நம் பூமியின்
வாழ்நிலம் தோன்றிட, தோன்றிட
ஆழ்மனம் நாளும்
தியானம் நடத்தும்.........

பிழைகள் தவறிடாத
நிகழ்ச்சி நிரல்கள்
முடிவில்
சுமக்கும் தீர்மானம்
முதல் மதத்தை
மூச்சுக்குள்
தீர்மானிக்கும்..........

- பு. திலீப்காந்த்
பொறியியலாளர்
மொறட்டுவ
2004.04.25

# 'வள்ளுவர் நோக்கில் பெண்' ஓர் பெண்ணிய நோக்கு

திருமதி. ஆர். ராமதாஸ்
புனித லூசியா ம.வி.
பள்ளிமுனை, மன்னார்

"வள்ளுவர் செய் திருக்குறளை மறவற நன்னுணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி"
என்று வள்ளுவரின் குறள்நீதியை வானளாவப் புகழுகின்றார் ஒரு அறிஞர் இதற்கமைவாகவே,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"
என்ற வள்ளுவரின் சமூகச்சிந்தனை போற்றுதற்குரியது. ஆனால் இத்தகைய முற்போக்குச் சிந்தனை கொண்டிருந்த திருவள்ளுவர் பெண்கள் பற்றி எத்தகைய நோக்குநிலை கொண்டிருந்தார் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

முதலில் மக்கட்பேறு என்ற அதிகாரத்தில்
"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை
அறிவு அறிந்த மக்கட்பேறு பிற" என்ற குறளில் வள்ளுவர் அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற என்ற தொடரில் ஆண்மக்களையே சுட்டுகின்றார்.இதற்கு ஆதாரமாக 'அறிவறிந்த என்பது பெண்ணொழித்து நின்றது' என்ற பரிமேலழகரின் விளக்கத்தினை ஆதாரமாகக் கொள்ளலாம்.

'ஈன்ற பொழுதினும் தன்மகனைச் சான்றோர்' எனக் கேட்டபோது தான் ஒரு தாய் மிகுந்த மகிழ்ச்சியடைவாள் என்று கூறும் போதிலும் கூட ஆண்மக்கட்பேறே சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது இவ்வியலின் இறுதிக் குறளிலும் கூட மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி பற்றியும் அவன் தந்தைக்குப் பெருமை தருவதும் பற்றியே பேசப்பட்டுள்ளது.

அடுத்து காதலி என்ற நிலையில் ஒரு பெண் வள்ளுவரால் எவ்வாறு நோக்கப்பட்டாள் என்பதை காமத்துப்பாலில், களவியலில் அமைந்த குறட்பாக்களின் மூலம் அறிய முடிகின்றது.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ ........." என்றுதொடங்கும் குறளில் ஒரு இளம் பெண்ணைக் கண்ட ஆடவன் அவள் புறவழகில் மயங்கி நிற்கும் நிலை சித்திரிக்கப்படுகின்றது. இது போன்ற பல குறட்பாக்களில் ஒரு பெண்ணின் புறத்தோற்ற அழகுகள் மட்டுமே காதலி என்ற நிலையில் ஒரு பெண்ணை நோக்குதற்குரிய விடயங்களாக வள்ளுவரால் கூறப்பட்டுள்ளன.

அதற்குப் புறம்பான அகவழகுகள் எவையும் பெண்ணின் சிறப்பான தன்மைகளாக எடுத்துத் தரப்படவில்லை. அத்துடன் அவளின் உறுப்பழகுகள் மிகையாகக் கூறப்படுவதுடன் பெண்ணின் இளமையான பார்வையும் நாணமும் அவளுக்குச் சிறந்த அணிகலன்களாகச் சுட்டப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லின், ஐம்புலன் நுகர்ச்சிக்குரிய ஒரு பண்டமாகவே பெண் நோக்கப்பட்டுள்ளாள். ஆடவன் தன் காதலியிடம் பெற்றுக் கொண்ட இன்பத்தைப் புகழ்வதாகவே சுமார் மூன்று அதிகாரங்களின் இருபத்தைந்து பாடல்கள் எடுத்துத் தருகின்றன.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்"

என்று கூறவதனூடாக மென்மையே பெண்மைக்கு அணிகலனாக்கப்பட்டுள்ளது. எந்த நிலையிலும் ஆணுக்குப் பெண் அடங்கிவாழ வேண்டுமென்ற இலட்சியத்திற்கேற்பவே அக்காலச் சமுதாயம் பெண்ணை உடலியல் ரீதியாகவும் உருவாக்கியிருந்தது. காதற் சிறப்புரைக்கும் பகுதியிலும் காதலன் கூற்றாக இருபத்தைந்து பாடல்கள் தமிழ் நாட்டுப் பெண்களின் அடக்கம், காதல் உணர்வுகளை வெளிப்படுத்தாமை போன்ற சில கட்டுப்பாடுகள் இக்குறட் பாக்கள் மூலம் வெளிப்படுகின்றன.

இத்தகைய காமநோயினால் வருந்தி உயிரை மாய்த்துக் கொள்ளும் சுதந்திரம் கூட அக்காலப் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. காம் நோயினால் வருந்தும் தலைவன் மடலேறி உயிரை மாய்க்கலாம். ஆனால் எத்தகைய காமநோயினைக் கூட அடக்கி, ஒழுக்கம் தவறாது உயிர்வாழுவதே பெண்ணுக்குப் பெருமை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

காதலி என்ற நிலையில் பெண்ணைக், காமக்கடும்புனல் வாழ்வார்க்கு வானம் என்றவாறாக வர்ணிப்பது அவளைப் போகப்பொருளாக நோக்கினார் என்பதையே புலப்படுத்துகின்றது. "மதிஆய குவளை மலர் போன்ற கண்களை உடைய எனது காதலியின் முகம் போல நீயும் பொலிவுடன் விளங்க வேண்டுமாயின் பலர் காணத்தோன்றாதே" என்ற கருத்துடைய குறள் காதலன் கூற்றாக அமைந்துள்ளது. இதன் மூலம் ஒரு பெண் தனக்கு மட்டுமே உரியவள். அவளது அழகு தன்னை மட்டுமே மகிழ்விக்க வேண்டும் என்ற அக்கால சமூகத்தின் ஆணாதிக்க நோக்கினை வள்ளுவர் எடுத்துத் தருகின்றார். இது தவிர காதல் உணர்வுக்கு அடிமையாகும் அக்காலப் பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாகவும், தன்னிச்சையாக செயற்பட முடியாதவர்களாகவும் விளங்கியுள்ளனர்.

மேலும் "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற குறட்பாவும் இங்கு நுணுகி நோக்கற்பாலது. செல்வம் முதலான சடப்பொருட்கள் போன்று பெண்ணும் ஒருவனுக்கு உடைமைப் பொருளானமை வருந்தத்தக்கது. இவ்வாறு பெண் ஆணுக்காகத் தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் இழக்க வேண்டும் என்ற ஒருபக்க நியாயம் உலகப் பொதுமறையில் உரைக்கப்படுக்கப்படுகிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறிய வள்ளுவரால் ஏன் கற்பென்னும் ஒழுக்க வரையறையை ஆண்களுக்கு வழங்க முடியவில்லை? பிறன்மனை நயவாமை என்ற அதிகரத்தில் ஆணுக்கும் ஒழுக்க வரையறை வழங்கப்பட்டது என்று கூறுவதன் மூலம் இதற்கான நியாயத்தைக் கற்பித்துக் கொள்ளமுடியுமா? மேலும் பெண்வழிச் சேறலில் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் மனைவி என்ற நிலையில் ஒரு பெண்ணை இழிவுபடுத்துவனவாகவே உள்ளன இப்பகுதியில் கூறப்படும் கருத்துக்கள் பெண்களுக்கு ஏவல் செய்யும் ஆண்களைப் பழிப்பனபோலத் தோன்றினும் மறைமுகமாகப் பெண்ணின் தலைமைத்துவமே இங்கு இழித்துரைக்கப்படுகின்றது. அரசியல் முதலான பொது விடயங்களில் ஆலோசனை கூறத் தகுதியில்லாத் தன்மை பற்றி வள்ளுவரால் நோக்கப்பட்டுள்ளது.

தாய் என்ற நிலையில் வள்ளுவர் பெண்ணை எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார் என்பது ஈண்டு நோக்குதற்குரியது ஒரு தாய்க்குத் தன் குழந்தையைப் பெற்று வளர்க்கும் போது இருக்கும் உரிமை பின்னர் அப்பிள்ளை வளர்ந்து பெரியவராகித் தனது திறமைகளை வெளிப்படுத்தும் போது இருப்பதில்லை. இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தானோ? என்று கூறுவதன் மூலம் பிள்ளையின் அருமை பெருமைகள் யாவும்

தந்தையைச் சென்றடைந்து விடுகின்றமை புலனாகின்றது.

வள்ளுவர் சுட்டும் பெண்களில் பதியிலார் என்றொரு பிரிவினைக் காணலாம். இவர்கள் வரைவின் மகளிர். கணிகையர், பொது மகளிர் என்ற பலபெயர்களால் அழைக்கப்பட்டிருந்தனர் தனக்கென ஒரு நாயகன் இல்லாது பலருடன் கூடிப் பழகும் பெண்களே இவ்வாறு அழைக்கப்பட்டனர் இவர்களைப் பற்றிக் கூறுவதற்கு வள்ளுவர் வரைவின்மகளிர் என்ற ஒரு அதிகாரத்தையே அமைத்துள்ளார். பொருளீட்டுதலையே நோக்கமாகக் கொண்டு ஆண்களை மயக்கி அவர்களிடம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் கீழ்தரமானவர்களாகவே இவர்கள் நோக்கப்பட்டனர். மேலும் ஆண்களுக்காகவே ஒரு பகுதிப் பெண்களைக் கணிகையராக்கிய சமுதாயத்தினை வள்ளுவர் தனது நூலில் சாடுகின்றாரா இல்லை; இத்தகைய கேட்டினை உருவாக்கிய சமுதாயத்தையோ, ஆண்களையோ கண்டிக்காது மாறாகக் கணிகையரையே சாடுகின்றார்.

ஒரு காலத்தில் கலைகளை வளர்த்தவர்களும், அதையே தமது வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்களுமான பெண்கள் பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மற்றும் கலாச்சார மாற்றங்கள் காரணமாகச் சமூகத்தில் இழிந்த வகுப்பினராக ஒதுக்கப்பட்டனர். கலைகள் புறக்கணிப்புக்குள்ளான ஒரு காலத்தில் கலைமகளிரும் புறக்கணிக்கப்பட்டனர். தமக்கு வாழ்வாக அமைந்த கலையே தமது தாழ்வுக்கும் காரணமாக அமைந்தமையால் திகைப்புற்ற அவர்கள் அதனையே ஒரு கருவியாகக் கொண்டு கலைத்தொழிலாற்ற முயன்றனர். அவர்களைப் புறந்தள்ளிய ஆணாதிக்க சமுதாயமே அவர்களின் காலடியில் விழுந்தது. இதனால் ஆண், பெண், குடும்பம், காதல், கற்பு என்ற அடிப்படைச் சமூக அமைப்பே ஆட்டங்காண நேரிட்டது. எனவே, இத்தகைய நிலை ஏற்படுவதற்கும் முழுமையான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டியவளாகப் பெண்ணே சுட்டப்படுகின்றாள்.

பெண்ணிய நோக்கில், மேற்குறித்த கருத்தானது ஆணாதிக்க சமூதாயத்தின் உச்சநிலை அடக்குமுறையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. திறமையென்பது ஆண்,பெண் இருபாலாருக்கும் பொதுவானது. கவியெழுதிப் பரிசு பெற்றால் அவன் கவிஞன். ஆடல் நிகழ்த்திப் பரிசு பெற்றால் அவள் கணிகையா? சமுதாயத்தில் ஒரு பெண் பரத்தமையைத் தானாகவே விரும்பி மேற்கொள்ளுகின்றாளா? அல்லது சமுதாய மாற்றம், சூழ்நிலை போன்றன இத்தகைய நிலைக்கு பெண்களை நிர்பந்தித்தனவா? இவ்வாறான அடிப்படைச் சிக்கல்களை நோக்காது அவளின் பரத்தமை வாழ்வினைக் கண்டிப்பது எவ்விதத்தில் நியாயமாகும்?

அக்கால சமூகத்தில் போரில் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்கள் மன்னர்களின் ஆடம்பரப் பொருளாகவும் கொள்ளப்பட்டனர். சில சந்தர்ப்பங்களில் இவர்களில் ஒரு பகுதியினர் ஆண்களின் பாலியல் தேவைகளை நிறைவேற்றப் பரத்தையராக வாழ்ந்துள்ளனர் இதே சமயம் ஒரு ஆடவனைச் சார்ந்து மனைவியாக வாழும் வாய்ப்புக்கிடைக்காத பல பெண்கள் செல்வந்தர்களை நாடி வாழ்ந்துள்ளனர். இவ்வாறு ஆதரிப்போர் யாருமற்ற நிலையிலும் ஒரு பெண் பரத்தமை வாழ்வினுள் தள்ளப்பட்டிருக்கின்றாள் இவ்வாறு அவளை பரத்தமை வாழ்வினுள் தள்ளிய ஆணின் ஒழுக்கக் கேட்டினைக் கண்டிக்காது அபலைகளே மேலும் கண்டிக்கப்பட்டுள்ளனர் என்பது இதனால் தெளிவாகின்றது. ஒரு சில இடங்களில் ஆண்கள் கண்டிக்கப்பட்டாலும் அது ஆண்களின் நலனில் கொண்ட அக்கறையாகத் தெரிகின்றதேயன்றி, பெண்களின் நலனின் கொண்ட அக்கறையன்று. பரத்தையரை நாடுவதால் தலைவனுக்கு ஏற்படும் தீங்குகளை எடுத்துக்காட்டுவதன் மூலம், அவனை தடுத்தி நிறுத்தியுள்ளார்; அன்றி, அப்பெண்ணுக்கு அதனால் ஏற்படக்கூடிய தீங்குகள் இவையெனக் கூறி அவளிடம் கழிவிரக்கம் காட்டப்படவில்லை. சுருங்கக் கூறின், அக்கால சமூதாயத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனம்

சார்ந்த கருத்துக்களே வள்ளுவரின் எழுத்துக்களிலும் பிரதிபலித்துள்ளன இதனைப் புரிந்து கொள்ளாது வள்ளுவன் ஒரு யுகத்துக்கு மட்டும் உரியவனல்லன் என்று பொதுப்படையாகக் கூறுவது அவர், கூறும் பெண்ணின் இழிதகைமைகளையும் சேர்த்து ஒப்புக் கொள்வதாகவே அமையும்.

குடும்ப வாழ்விற்குப் புறம்பான பொது வாழ்வில் பெண்களின் பங்களிப்பு மிகவும் அருமையாகவே வள்ளுவரால் எடுத்துத்தரப்பட்டடுள்ளது. கடவுள் வாழ்த்து முதலாக விருந்தோம்பல், ஈகை,தவம்,துறவு,கல்வி, அரசு, அமைச்சு என அமையும் பகுதிகள் யாவற்றிலும் பெண்களின் பங்களிப்பு இடம் பெற்றதாகக் கூறவில்லை இவ்வாறு வாழ்வின் சில இன்றியமையாத விடயங்களில் பெண்களின் பங்களிப்பினைக் குறிப்பிடாது விட்டமை ஆணாதிக்க மேலாண்மையையே சுட்டிநிற்கின்றது. சமூகத்திற்கு பெண்ணால் தீங்கு ஏற்படலாம் என்ற நிலையில் மட்டும் பிறனில் விழையாமை வரைவின் மகளிர், பெண்வழி சேறல் ஆகிய பகுதிகளில் பெண்ணினத்தைச் சாடுகின்றார். நட்பு, மானம், நாணம், பேதமை என்ற மனிதப்பண்புகளைக் கூறும்போதிலும் கூட ஆணுக்கும் பொண்ணுக்கும் வெவ்வேறான விதிகளை வகுத்துள்ளார் என்றுதான் கூறவேண்டியுள்ளது. குறிப்பாக ஆனுக்கு நாணம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் வேறு; அதன் தன்மையும் வேறு பெண்ணுக்கு நாணம் ஏற்படும் செயல்கள் வேறு. அது தோன்றும் சந்தர்ப்பங்களும் வேறு.

மேலும் மனைவி மக்களை விட்டு இல்லத்திலிருந்து நீங்கி, துறவினை மேற்கொண்டு விரதங்களால் உடலை வருத்தி, வீடுபேறு எய்தும் அறம், ஆண்களுக்கு மட்டுமே உரிமையாக்கப்பட்டுள்ளது. பெண்ணாசையை விட்டால்தான் வீடுபேறு எய்தலாம் என்று கூறப்படுகின்றதேயன்றி ஆண்களைத் துறந்து பெண்களும் வீடுபேறு எய்தலாம் என்று கூறப்படவில்லை. பெண்ணின் வீடுபேற்றுக்குத் தடையாக ஆண்கள் விளங்குவதாக எவ்விடத்தும் கூறப்படவில்லை. அவ்வாறாயின் ஆண் பிறவி எடுத்தால் மட்டும்தான் வீடுபேறு அடையமுடியும்? வள்ளுவர் பெண் என்ற பிறவிக்கு உணர்வுகளை விட உடற்கூற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளமை புலனாகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக,

"கல்லாதான் ஒருவன் கற்றோரவையிலே ஒன்றினைச் சொல்ல விரும்புவது முலையிரண்டும் இல்லாதாள்பெண் தன்மையினை அவாவியமை போன்றது" என்ற கருத்தமைந்த குறளை நோக்கலாம் உடற்குறையினால் உணர்வுகள் மங்கிப்போக வேண்டுமென்று கூறமுடியுமா? மேலும் கல்லாதான் ஒருவன் சபையிலே சொல்லாட முற்பட்டமையைக் குறிப்பிட விரும்பிய அவர் ஏன் இவ்வுதாரணத்தை எடுத்துக்கொண்டார்? இவ்வாறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் பெரும்பாலான இடங்களில் பெண்களையும், அவளின் உறுப்புகளையும் எடுத்தாள்வது பெண்ணின் இழிதகைமையினைச் சுட்டும் ஒரு பக்க நியாயயம் சார்ந்ததே.

எனவே வரலாற்றுப்பார்வையில் பெண்ணை இலக்கியத்தில் நிலைநிறுத்த முற்பட்ட வள்ளுவர், இல்லறத்துக்கு வேண்டிய மாண்புடன் வாழும் பெண்களை "மனைத்தக்க மாண்புடையாள்", "பெண்ணிற் பொருந்தக்கயாவுள" என்று பெருமையுடன் பாடுகிறார் சமுதாயக் கடமைகளுக்கு இடையூறாக நிற்கும் போது மட்டும் பண்பில் மகளிர் எனச் சாடுகின்றார். நல்லவரைப் போற்றுவதும் தீயவரைத் தூற்றுவதும் உலக நியதி ஆனால் ஒரு பாலாருக்கென அவரால் வகுக்கப்பட்ட குறளறங்கள் தான் சற்றே நெருடலை ஏற்படுத்துகின்றன. உலகநியதிப்படி நல்லியலாரான மெல்லியலாரைப் போற்றி நின்ற வள்ளுவர் அவரை வல்லவராக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டமைதான் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

# இன்னுமேன் மௌனிகளாக

கூடிக் குலவி
கூட்டுக் குடும்பமாய்
தரணியில் தனித்துவமாய்
தலைநிமிர்ந்து வாழ்ந்தவர்
தமிழர் - இன்று
தனித்தனி குடும்பமாய் - அதிலும்
தலைவன் ஒரு நாடு
தலைவி மற்றும் பிள்ளைகள்
ஒரு நாடு
அண்ணன் ஓர் நாடு
தம்பி வேறோர் நாடு - என்ற
துர்ப்பாக்கிய நிலையில்
பண்பாடு, கலாச்சாரம்
பண்டு தொட்டு பிறப்பில்
செந்நீரில் ஊறுவது - இன்று
அதனை மேடை போட்டு
அளாவும் நிலை!
தாய்மொழி பேச வெட்கம்
இடையே ஆங்கிலம் கலந்து
புதுமொழி பறைவா நம்மவர்,
கோவிலில்லா ஊரில் குடியிருப்போ?
இன்று, கோவிலில் பதவி போட்டி,
ஒலிபெருக்கி அலறும் இடமாய்..................!
மாணவர் படிப்புக்குத் தடையாய்
இடுகட்டை நோக்கிப்
பிணம் போகும் போது
ஊரில் தொற்றின்றி இருக்க
வெடி கொழுத்தும் வழமை
இன்று அதே வெடியை
பெண்கள் முதியோர் கால்களுள்
கொழுத்தும் காவலாலிக் கூட்டம்.
இப்படிப் பல கொடுமையால் எம்
இனம் அழிவது கண்டு
இன்னுமேன் மௌனிகளாய்.............!

DR. தி. சுதர்மன்
மானிப்பாய்

வரலாற்றுத் தகவல்

# பண்டைய இலங்கையின் ஆட்சிப் பிரிப்பு

பண்டைய இலங்கையில் இருந்த ஆட்சிமுறைகள், இங்கு வாழ்ந்த இரு தேசிய இனங்களினதும் ஆள்புல எல்லைகள் தொடர்பான வரைபடங்களும், குறிப்புக்களும், பல்வேறு வெளிநாட்டு ஆய்வாளர்களினால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவர்களுள் கி.பி. 150 ஆம் ஆண்டில் கிரேக்க புவியியலாளரான தொலமியினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் வரைபடத்தின் படி வடக்கு கிழக்கு மற்றும் வடமேற்கு, தென்மாகாணங்களில் சில பகுதிகளை உள்ளடக்கியதான தமிழ் இராட்சியம் ஒன்று இருந்ததாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

*1799* இல் எழுதப்பட்ட லண்டனைச் சேர்ந்த கிளேகோர்ண் தனது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

''இலங்கைத் தீவின் ஆட்சியை இரு வெவ்வேறான தேசிய இனங்கள் மிகப்பழைய காலத்தில் இருந்தே தங்களுக்குள் பிரித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. முதலாவதாக சிங்களவர்கள் வளவை ஆற்றில் இருந்து சிலாபம் வரை உள்ள நாட்டின் தெற்கு மேற்குப் பகுதிகளிலும், அவற்றுடன் கூடிய உட்பகுதிகளிலும் வாழ்கின்றார்கள். இரண்டாவதாக மலபார்கள் இவர்கள், வடக்குக் கிழக்கு பிராந்தியங்களை ஆட்சி செய்கிறார்கள். இவ்விரு தேசிய இனங்களும் தங்களின் மதம், மொழி மற்றும் பழக்க வழக்கங்களில் முற்றாக வேறுபட்டு இருக்கின்றார்கள்'' (மலபார்கள் என்பது தமிழர்களைக் குறிக்கும் சொல்)

# நாட்டார் பழமொழிகள்

ரிஸ்லா அஹமத்
நிந்தவூர்

பரம்பரை பரம்பரையாக பாதுகாக்கப்பட்டுவரும் நாட்டார் இலக்கியத்துள் பழமொழிகள் குறிப்பிட்டு நோக்கக்கூடியனவாகும். பழமொழிகள் ஒரு சமூகத்தின் தொன்மையை, கலாச்சார பாரம்பரியத்தை உணர்த்துவதில் முன்னிற்கின்றன.

மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ள இவை, அவர்களின் வாழ்வில் ஒருமுறைக்குப்பலமுறை பட்டறிந்தபின், தினம்தினம் நிகழும் நிகழ்ச்சிகளை அவதானித்தபின் அனுபவவாயிலாகத் தோன்றுவனவாகும். பேச்சுமொழியில் காணப்படும் இவை, கேலியும் அறிவுரையும் ஆழ்ந்த தத்துவமும் உள்ளவையாக காணப்படுகின்றன. பழமொழிகள் பொருளை நேரடியாக உணர்த்துவதாய் அல்லது உருவகப்பாங்குடையதாய் அல்லது நேர்ப்பொருளும் உருவகப்பொருளும் உணர்த்துவதாய் சுருங்கிய வடிவுடன் காணப்படுகின்றன.

தொன்மை இலக்கிய நூலாகிய தொல்காப்பியத்தில் பழமொழயைப் பற்றி குறிப்பிடும்பொழுது, அது திட்பநுட்பம் உடையதாய், சொற்சுருக்கத்தோடு ஓர் உண்மைக் கருத்தை அல்லது நீதியை உணர்த்துவதாய், குறித்தபொருளை முடிப்பதற்குக் காரணமாய் அமைவது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பழிமொழிகள் பற்றி சு.சண்முகசுந்தரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "பழமொழி என்பது பொருட்செறிவுள்ள வாக்கியம்.
> அனுபவமிக்க உண்மையை அது சுருக்கமாக வெளியிடுகின்றது.
> உண்மையானது அரைகுறையாக இருந்தாலும் உயர்வு படுத்தப்பட்டு உருவக வாயிலாக வெளிப்படுகின்றது."

இப்பழமொழிகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நாம் நோக்குவோமாயின் அறிவுள்ள சான்றோரின் வாழ்க்கையில் இருந்து அனுபவத்தின் மூலம் பெற்ற பொன்னான மொழிகள் மக்களிடையே மிக நீண்டகாலமாக இருந்து வருகின்றன. மொழி தோற்றம் பெற்றபோதே தன் கருத்தை, தன் அனுபவத்தைமனிதன் மொழிவாயிலாக வெளிப்படுத்திய போது, இப் பழமொழிகள் தோன்றியிருக்கலாம். சான்றோர்களில் யாரோ ஒருவர் ஒரு நிகழ்வை அல்லது அனுபவத்தின் மூலம் கருத்தினை வடிக்கும்போது அதன் கவர்ச்சியும் வடிவும் பிறரை ஈர்த்ததன் காரணமாக அச்சொற்றொடர் நிலைத்து நிற்கலாயிற்று. இவ்வாறே பழமொழிகள் உருப்பெற்றன.

பழமொழிகள் குறித்து தொன்மை இலக்கணநூலான 'தொல்காப்பியம்' குறிப்பிடுகின்றது. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்பற்கேற்ப 'தொல்காப்பியம்' தோன்றும் முன்பே பழமொழிகள் தோன்றியிருக்கலாம். முற்பட்ட காலத்து மனிதனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் புதைபொருள், கல்வெட்டு நாடோடிப்பாட்டு, விடுகதை, பழமொழி முதலியனவே ஆதாரங்களாக அமைகின்றன. இவைகளில் சிறந்து விளங்குவது பழமொழிகளே என்பது நாட்டுப்பபுற ஆய்வாளர்களின் கருத்து. ஏனெனில் உயிர்த்துடிப்புடையவை. நன்றாக விளக்கம் தருபவை. பழங்கால மக்களின் பழக்க வழக்கங்களை அப்படியே நம் கண்முன்னே நிறுத்தக்கூடியன. இவ்வாறு பழமொழி தொன்றுதொட்டு மக்கள் வாழ்க்கையில் இணைந்தும், பிணைந்தும் வருவதனை மாமூலனார் அகம்(101)இல்

"................இம்மை
நன்று செய்மருங்கில் தீதில் என்னும்
தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்று"
என்று 'தொன்றுபடு' என்ற அடைமொழியால் குறிப்பிடுகின்றார்.

உலகத்தில் எந்த மொழியை எடுத்துக்கொண்டாலும் ஆரம்பகாலத்தில் பழமொழிக்கு ஒரு நூல் இல்லை என்பர். பல இலக்கியத்துறைகள் ஐரோப்பியரின் வருகையின் பின்னே தான் சிறந்த உருவமைப்பைப் பெற்று உருப்பெற்றன. ஆனால் சங்கமருவிய காலத்திலே 'பழமொழி நானூறு' என்ற நூல்தோன்றியிருப்பதைக் காணலாம். மக்களால் வாய்மொழியாக இன்னும் இப்பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. உ+ம்:- 'நிறைகுடம் நீர் தழும்பல் இல்லை' இதனை இன்று 'நிறைகுடம் தழும்பாது' என்பர். இவ்வாறு வாய்மொழி இலக்கியங்களின் திரிபடையும் பண்பைக்கொண்டு இப்பழமொழிகளும் சிற்சில மாற்றத்திற்குள்ளாகியபோதும் அவை தொன்றுதொட்டு வாய்மொழியாக வந்தவையாகும்.

காலம் செல்லச்செல்ல மனிதனது சூழல் மாறுபடுகின்றன. இதனால் அவன் மேலும் பலஅனுபவங்களைப் பெற்றுக் கொள்கின்றான். இவ்வாறு அவனுக்கு பலதுறைகளிலும் ஏற்பட்ட அனுபவங்களின் வாயிலாக மேலும் மேலும் பழமொழிகள் தோன்றி வளர்ச்சிபெற்றன. அன்றாடம் மனிதன் பல அனுபவங்களைப்பெற்று ஒரு முடிவினைப்பெறுகின்றான். இவை நாளுக்குநாள் பழமொழிகள் தோன்றக் காரணமாயிற்று. பொதுவாக, நாளாந்தம் பழ மொழிகளைச் சொல்வார்கள். அல்லது சொல்வதை கேட்கக்கூடியதாய் இருப்பது, அதனது வளர்ச்சியை தெட்டத் தெளிவாக காட்டுகின்றது. பழமொழிகள் புதிய சந்தர்ப்பத்திற்கும், அனுபவத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப மாறுபட்டும் பெருகியும் காணப்படுகின்றன. இவ்வளர்ச்சியின் காரணமாக பழமொழி முக்கியத்துவம் பெற்று, 19ம் நூற்றாண்டிலிருந்து அவை நூல்களாக உருப்பெற்றுள்ளன.

எந்த ஒரு நாட்டிற்கோ, மொழிக்கோ, இனத்திற்கோ மட்டும் இவை சொந்தமானதாக இல்லாது எல்லாவற்றிற்கும் உரியவை; இவை ஒரு நாட்டின் பண்பாட்டை பிரதிபலிக்கும் கண்ணாடிகள்; மனவளர்ச்சியின் எல்லைக்கோடுகள்; மரபுகளை விளக்கும் அரிச்சுவடுகள். மொழியின் வளத்தை புலப்படுத்தும் சொற்பயிர்கள்; கற்றவர்களும் கல்லாதவர்களும் போற்றிக் கையாளும் தன்மை கொண்டவை; பழமொழிகள் வாழ்வின் அனுபவ முத்திரைகள்; மக்களின் மொழியிலேயே காணக்கூடியன; இவை சாதாரண மொழிநடையிலே அமைந்து யதார்த்த வாழ்வை புலப்படுத்துவன; இவை பல்வேறு அமைப்பை, தன்மையைக் கொண்டன.

இவற்றில் சில உதாரணங்களை பின்வருமாறு நோக்கலாம். பழமொழிகள் பல்வேறு பொருள் அடிப்படையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு விடயம்பற்றியும் பல்வேறு பழமொழிகள் காணப்படுகின்றன.

* **விலங்குகள் பற்றி**

உ+ம் i. 'புலி பசித்தாலும் புல் தின்னாது'
ii. 'கழுதை கெட்டால் குட்டிச்சுவர்'

* **பெண்களைப்பற்றி**

i. 'நூலைப்போல சேலை தாயைப்போல பிள்ளை'
ii. 'தாய் எட்டடி பாய்ந்தால் மகள் பதினாறடி பாய்வாள்'

* **கடவுள் பற்றி**

i. 'கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார்'

* **சோதிடம் பற்றி**

i. 'ஒரு புத்திரன் ஆனாலும் குருபுத்திரன் நல்லது'

* **இயற்கை நிகழ்வுகள் பற்றி**

i. 'தவளை கத்தினால் தானே மழைவரும்'

* **உயிரினங்கள் பற்றி**

i. 'எறும்பூர கல்லும் தேயும்'

* **உளவியல் பற்றி**

i. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'

ii. 'தன் நெஞ்சே தன்னைச் சுடும்'

* **கல்வி பற்றி**

i. 'கண்டது கற்க பண்டிதன் ஆவான்'

ii. 'கல்வி அழகே அழகு'

* **நகைச்சுவையானவை**

i. 'இஞ்சி என்றால் தெரியாதா எழுமிச்சம் பழம் போல இருக்கும்'

ii. 'கடல் வற்றினால் கருவாடு தின்னலாம் என்று வயிறு வற்றிச் செத்ததாம் கொக்கு'

* **மெய்ஞானம் பற்றி**

i. 'வியாதிக்கு மருந்துண்டு விதிக்கு மருந்துண்டா?'

ii. 'ஊத்தை போனாலும் ஊழ்வினை போகாது'

* **ஊரும் பேரும் உள்ளவை**

i 'ஏழைக்கேற்ற இராமேஸ்வரம்'

ii. 'சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்கு திருவாசகம் சொல்லித்தர வேண்டுமா?'

* **பொருளாதாரம் பற்றி**

i. 'மலிந்த சரக்கு சந்தைக்குத்தானே வரும்'

ii. 'உறங்கின நரிக்கு உணவு கிடைக்காது'

* **உலகியல் பற்றி**

i. 'உள்ளது சொல்ல ஊருமில்லை நல்லது சொல்ல நாடுமில்லை'

ii. 'விளையாட்டு வினையாகும்'

* **பண்பாடுபற்றி**

i. 'ஒழுக்கம் உயர்வுதரும்'

* **மருத்துவம், நோய்பற்றி**

i. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

* **வேளாண்மை, உள்வுத்தொழில் பற்றி**

i. 'அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்'

* **இலக்கியம் பற்றி**

i. 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'

* **கலாச்சாரம் பற்றி**

i. 'வாயெல்லாம் ஓதல் இருந்தால் ஊரெல்லாம் சோறு'

இப்பழமொழிகள் இவ்வாறு பல்வேறு பொருள் அடிப்படையில் காணப்படுகின்றன. எனினும் இவை நேரடியாகக் கருத்தை உணர்த்துவதில்லை. கூர்மையாக அமைந்து, நுட்பமாகத் தான் சொல்லவந்த கருத்தை எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளன.

உதாரணமாக, முரடன் ஒருவன் என்ன சொன்னாலும் செவிசாய்க்காமல், தன் குணத்தை மாற்றாமல் இருப்பதை உணர்த்த 'நாய் வாலை நிமிர்த்த முடியுமா?' என்ற பழமொழி பயன்படுத்தப்படுகின்றது.

பழமொழிகள் அளவு, அமைப்பு, அகரவரிசை போன்ற தன்மைகள் அடிப்படையிலும் பல்வேறாகக் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை பின்வருமாறு காணலாம்.

* அளவு அடிப்படையில்

01) இரு சொற்களில் அமையும் பழமொழிகள்

உ+ம் I 'எம்மதமும் சம்மதம்'

II 'பேராசை பெருநட்டம்'

02) மூன்று சொற்களில் அமைந்த பழமொழிகள்

உ+ம் I 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு'

II 'பூனைக்கு யார் மணிகட்டுவது'

03) நான்கு சொற்களில் அமைந்த பழமொழிகள்

உ+ம் I 'திரைகடலோடியும் திரவியம் தேடு'

II 'மனம் எஇருந்தால் மலையும் சாயும்'

04) பல சொற்களில் அமைந்த பழமொழிகள்

உ+ம் I 'தாயைச் சந்தையில் கண்டால் மகளை வீட்டில் பார்க்கத்தேவையில்லை'

05) ஈரடிப் பழமொழிகள்

உ+ம் I 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை'

II 'பொம்பள சிரிச்சாப் போச்சு, போயில விரிச்சாப் போச்சு'

* வினா அமைப்புடையவை

உ+ம் I 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?'

II 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?'

* ஏவல் தன்மை கொண்டவை

உ+ம் I 'ஆழந்தெரியாமல் காலை விடாதே'

II 'பருவத்தை அறிந்து பயிர் செய்'

* இரட்டை இரட்டையாகக் காணப்படும் பழமொழிகள்

இவை இரண்டும் விளக்கக் கூறுகளுடைய பழமொழிகள் அதாவது, இரண்டும் வெவ்வேறு பொருள் ஆனால் அரண்டிற்குமிடையே சமநிலை காணப்படும்.

உ+ம் I ' நல்ல மாட்டுக்கு ஒரு சூடு
நல்ல பொண்டாட்டிக்கு ஒரு வார்த்தை'

* காரணச் சமநிலைப் பழமொழிகள்.

உ+ம்:- 'மனமிருந்தால் இடமுண்டு'

* முரணுடைய பழமொழிகள்.

உ+ம்:- 'பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்'

* சுருக்கமான, எளிமைத்தன்மை கொண்ட பழமொழிகள்

உ+ம்:- I 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'

உ+ம்:- II 'விரலுக்கு ஏற்ற வீக்கம்'

உ+ம்:- III 'ஆபத்துக்கு பாவமில்லை'

* எதுகை அமைப்பைக் கொண்ட பழமொழிகள்

உ+ம்:- 'வினை விதைத்தவன் வினை அறுப்பான
தினை விதைத்தவன் தினை அறுப்பான்'

* மோனை அமைப்பைக் கொண்ட பழமொழிகள்

உ+ம்:- 'அருமை அற்ற வீட்டில் எருமையும் குடியிராது'
'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'

* ஒரு கருத்தை வலியுறுத்தும் பலவாறான அமைப்பைக் கொண்டவை
உ+ம்:- 'அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசம் எல்லாம் பேய்'
'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'

* மாற்றம் பெறும் அமைப்பைக் கொண்டவை அதாவது நெடில் குறிலாக, சொற்கள் மாற்றம், கருத்தில் மாற்றம் எனப் பலவாறு மாற்றம் அடைபவை.
உ+ம்:- 'திருமண அவசரத்தில் தாலி கட்ட மறந்து போல'
'திருமண அவசரத்தில் தாலி கட்ட மறந்தது போல'
'களவும் கற்று மற'
'களவகற்றி மற'

இவ்வாறு பழமொழிகள் பல்வேறு அமைப்புக்களில் மனிதனின் அன்றாட வாழ்வில் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதான பொருள் அமைப்பிலும் காணப்படுகின்றன. இவை அன்று தொட்டு இன்று வரை காலச்சூழலுக்கேற்ப மனிதனின் அனுபவத்தின் பால் பிறந்து, வாய்மொழியாக நிலைத்து நிற்பவையாகும்.

**வரலாற்றுச் சான்று**

## பொலநறுவையின் சிவன் ஆலயம்

1ஆம் இராஜராஜன் (993-1014) சோழ அரசர்களுள் முதன்மையான பேரரசனாக விளங்கியவன். அவன் இலங்கையை வெற்றிகொண்டு பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்தான். சோழப் பேரரசின் ஆதிக்கம் இலங்கையில் நிலை கொண்டபோது, அவர்களின் அரசியல் முறையும், சமயமும், சிற்பமுறைகளும் இலங்கையில் பரவத் தொடங்கின.

இராஜராஜ சோழன், ''வானவன் மாதேவி ஈசுவரமுடையார்'' எனப் பெயர் கொண்ட ஒரு சிவாலயத்தைப் பொலநறுவையில் கருங்கற் திருப்பணியாக அமைத்தான். இராஜராஜ சோழனால் தொடக்கப்பட்ட இத் திருப்பணி பின்னர் அவனது மகன் 1ம் இராஜேந்திர சோழனால் முடித்து வைக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் இராஜேந்திர சோழனினதும் ஆதி இராஜேந்திர சோழனினதும் சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் முதலிய அங்கங்களையுடையதாகவும், கர்ப்பக்கிரகத்துக்கு மேல் அழகிய விமானத்தையுடையதாகவும் அமைந்திருந்தது.

வரலாற்றுப் புகழ்பெற்ற சிவாலயமான ''வானவன் மாதேவி ஈசுவர முடையான்'' என்ற இச் சிவாலயம் இன்று கவனிப்பாரற்று அழிந்து போய்க்கொண்டிருக்கின்றது.

# ஆக்கிரமிப்பு

இலைகளின் நிழல்களில்
வீழ்ந்திடும் எச்சங்கள்
மலைகளைப் பிளக்கும்,
மலைகளைப் பிளக்கும்.

குளவிகள் கூட்டில்
நுழைந்திடும் காற்றும்
குளவிகள் கூட்டில்
நுழைந்திடும் ஒளியும்
மழையின் வெளியில்
வலைகள் பின்னும்.

இடர்படும் தொடர் ஓலைகள்
துயர் விழும் காலைகள்
கடும் குளிர் நிலவில்
கனவுகள் மறக்கும்
கனவுகள் மறக்கும்.

அச்சங்கள்
தொலைந்த இருப்புகள்
அவலங்கள் கலந்த பொறுப்புகள்
அணுவைப் பிளக்கும்,
அணுவைப் பிளக்கும்.

வெய்யில் மழைக்குள்
நெய்யும் இதயம்
பொய்கள் அழிக்கும்
புகழ்கள் குவிக்கும்.

**நல்லை அமிழ்தன்**

# பிறவாமை

அருவி மணலில்
அகன்ற நதிகள்
குருவி பிடித்திட
கொடுமை நடந்திடும்.

துறவின் வாழ்வில்
தூரும் விழிகள்
அறிவை வருத்திட
அரசியல் பிழைத்திடும்.

வெறியின் வறுமையில்
வேதனை மொழிகள்
செழுமை எரித்திட
செருக்க முளைக்கும்.

நரபலி நெஞ்சில்
நாடோடிக் கழுகுகள்
பெருவலி நுழைந்திட
பிறப்பு மௌனிக்கும்.

நெல்லை அறுத்திடும்
நெருப்பு அறுகுகள்
புல்லாய் வளர்ந்து
புனிதம் இழுக்கின்றன!!!

**நெல்லை மகேஸ்வரி**
**கோட்டை தெரு**
**நெல்லியடி வடக்கு**
**நெல்லியடி**

# தம்பலகாமம் தந்த மாபெருங் கலைஞர், முதுபெரும் எழுத்தாளர், ஊடகவியலாளர் தம்பலகாமம் க. வேலாயுதம்

கலாவிநோதன், கலாபூஷனம்
த. சித்தி அமரசிங்கம்
தம்பலகாமம்



திருக்கோணமலை மாவட்டம் தன்னகத்தே கொண்ட பல கிராமங்களுள் ஒன்றான பழம் பெரும் கிராமமே தம்பலகாமம்.

திருக்கோணமலையில் இருந்து கண்டி நோக்கிச் செல்லும் பாதையில் பத்தாவது கல் தொலைவில் இடது பக்கமாகத் திரும்பி ஒன்றரைகல் சென்றால் வருவது தம்பலகாமம்

தம்பலகாமம் கிராமத்துள் கால் பதித்ததும், நம் கண்ணில் முதல் படுவது, பார்க்குமிடமெங்கும் வயல்வெளிகள், காலத்துக்குக் காலம் பசுமை நிறைந்து மரகதக் கம்பளம் விரித்தது போன்றும், செந்நெற்கதிர்கள் பூத்தும், நெற்கதிர்கள் மணிகள் நிறைந்து தலைசாய்ந்து காற்றினூடே அலை அலையாய் களனி நிரம்ப பொற்கதிர்கள் பரப்பும் எழிலும், தண்ணீர் தேங்கி நிற்கும்போது பெரும் குளமாகவும் காட்சிதரும்.

சற்றே தலை நிமிர்ந்து பார்வையை மேலே செலுத்து வோமேயானால், அங்கே ஆலயத்தின் வானுயர்ந்த கோபுரம் கண்ணிற் படும். அதுதான் ஆதி கோணைநாயகரின் ஆலயமாகும்.

கி.மு ஆறாயிரம் ஆண்டளவில் இராவணனால் வணங்கப் பெற்று, கால ஓட்டமாற்றத்தில் பல மன்னர்களின் திருப்பணியாலும், ஆலய புனருத்தாரணத்தாலும் பொலிவு பெற்று, பாரெல்லாம் கீர்த்தி பெற்று, திருமூலரால், ஞானசம்பந்தரால், அருணகிரிநாதரால் பாடல் பெற்று இருந்த திருக்கோணேஸ்வரம், 1624 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் முதலாம் நாளாகிய புதுவருடத்தன்று, போர்த்துக்கேயரால் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது. அவ்வேளையில் அங்கு திருத்தொண்டு செய்து கொண்டிருந்தவர்கள் புனிதத் திருவுருவச் சிலைகளை நாலாபக்கமும் கொண்டு சென்று மண்ணிலும், கிணற்றிலும், காட்டிலும் போட்டு மறைத்து வைத்தனர். சில விக்கிரகங்கள் தம்பலகாமத்திற்கு மேற்கேயுள்ள ''சுவாமிமலை'' என்று அழைக்கப்படும் இடத்தில் ஒழித்து வைத்து வழிபட்டனர். ''கோணமலைக் கிழங்கு'' பெற தம்பலகாமம் வாசிகள் 'சுவாமிமலைக்' காட்டிற்கு செல்வது வழக்கம். அப்படிச் சென்ற காலை ஒருநாள், சுவாமிமலையில் விக்கிரகத்தோடு செப்பேடொன்றையும் கண்டெடுத்தனர். உடனே எடுத்துச் சென்று சிவாலயத்தில் பிரதிஸ்டை செய்து வழிபடலாயினர். இவ்வாலயம் 340 ஆண்டுகட்கு முன்பு புதுப்பிக்கப்பட்டதென்றும், இவ்வாலயத்தில் இருக்கும் பழைய கோணேசர் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்றும், மாதுமையம்மை பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த, சோழர் காலம் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

தம்பலகாமத்தில் ஆதி கோணைநாயகரைப் பிரதிஸ்டை செய்து வைக்கப்பட்ட இவ்வாலயம், கி.மு பதினெட்டாம் ஆண்டளவில் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் நிறுவப்பட்டதென அறியக்கிடக்கிறது.

கோவில் குடிகொண்டிருப்பதன் காரணமாக இந்த இடத்தை ''கோவில் குடியிருப்பு'' என்று அழைப்பர். ஆதிகோணைநாயகரை வணங்கித் திரும்புவோமேயாகில் நேராகவும், இடமாகவும் இருபாதைகள் பிரிந்து தம்பலகாமம் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றன.

இடை இடையே தென்னை மரச் சோலைகளும் சூழ, சுற்றவர வயல்களைக் கொண்ட திடல் திடலாய்க் காட்சி அளிக்கும் குடியிருப்புக்களும், அழகுவிருந்தளித்து, வருபவர்களை அன்போடு வரவேற்கும் காட்சி காண்பதற்கினியதே.

இக்கிராமத்தில் உள்ளதிடல் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயருண்டு. பட்டிமேட்டுத்திடல், கள்ளிமேட்டுத்திடல், வர்ணமேட்டுத் திடல், நாயன்மார்த்திடல், கரச்சித்திடல், சிப்பித்திடல், கூட்டாம்புளி, பிரப்பந்திடல், குஞ்சடப்பான்திடல், முன்மாரித்திடல் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

இதன் இயற்கையமைப்பு இப்படிக் காணப்பட்ட போதிலும், இக்கிராம மக்கள், புராணரீதியாக குளக்கோட்டு மகாராஜாவின் வேண்டுகோளின் பேரில், கந்தளாய் குளத்தைக் கட்டிய பூதங்கள், மண் அள்ளிப்போட்ட கூடையைத் தட்டி விட்டதனாற்தான் இப்படித் திட்டுத் திட்டாக அமைந்துள்ளது என்று கருதுவர்.

இக்கிராமத்தை அண்டி ''கப்பற்றுறை'' என்று ஓர் இடமும் உண்டு. இது பண்டைய நாட்களில் பல நாட்டில் இருந்தும் வருகை தந்த கப்பல்கள் கட்டி, வணிகம் நடத்திய துறைமுகமாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. அஃது மட்டுமன்றி, இங்கு முத்தும் குளித்த இடமாகவும் கருதப்படுகின்றது. இதற்குச் சான்றாக, அங்கு சிப்பிகள் குவிந்து கிடப்பதை இன்றும் காணலாம். சுருங்கக் கூறின், இது ஒரு வணிகத் துறைமுகத்தைக் கொண்ட ஒரு பழம் பெரும் கிராமமென்றால் மிகையாகாது.

இக்கிராமம் இறைவழிபாட்டை மட்டும் கொண்ட கிராமமன்று. இங்கு ஆடல், பாடல், நாட்டுக்கூத்து, சிலம்பம், சீனடி போன்ற கலைகளும் சிறந்து விளங்கின.

நாட்டுக்கூத்திற் சிறந்த அண்ணாவிமாரான கணபதிப்பிள்ளை போன்றோரும், பண்டிதர்களான சரவணமுத்து, புலவர் சத்தியமூர்த்தி போன்றோரும் இந்த மண்ணின் மைந்தர்களே.

இந்த மண் பல சான்றோர்களைக் கொண்டிருக்க வேண்டும். அவர்களது விபரம் அறியக் கூடாமல் இருப்பது நமது துரதிஸ்டமே. இல்லையெனில் ''வெருகல் சித்திர வேலாயுத காதல்'' என்ற நூல் எப்படி பாடப்பட்டிருக்கும். இதனைப் பாடியவர் தம்பலகாமத்தின் வேளாளமரபிலுதித்த ஐயம் பெருமான் மகன் வீரக்கோன் முதலி என்பவராவர்.

இந்நூல் கண்டி நகராண்ட முதலாம் இராசசிங்கன் காலமான 16 ஆம் நூற்றான்டின் பிற்பகுதியில் பாடப்பட்டதென அறியக்கிடக்கிறது. (ஈழத் தமிழ் இலக்கியம் பக்கம் 35, 36, 37) இத்தகைய பெருமைமிகுந்த கிராமத்தில் குஞ்சர் அடப்பான் திடலில் முதுபெரும் எழுத்தாளரும், ஊடகவியலாளருமான க. வேலாயுதம் என்பவர் பிறந்தார்.

இக்கிராமத்தில் திடல்களின் பெயர்கள் அதன் காரணத்தில் பெயரிலேயே வைக்கப்பட்டன.

''ஆதிகோணேஸ்வர ஆலய கங்காணம் என்னும் அதிகாரப் பணியாளரின் உதவிப்பணியாளர் அடப்பன் வேலையை குஞ்சர் என்ற பெயரை உடையவர் செய்து வந்தார். குஞ்சர் மிகவும் செல்வாக்குடன் பிரசித்த நிலையில் விளங்கியதால், ஆதிகோணேஸ்வர ஆலயத்துக்கு சமீபமாக உள்ள குஞ்சர் வாழ்ந்த ஊர் பிரிவுக்கு, குஞ்சர் அடப்பன் திடல் என்ற பெயரே வழங்கலாயிற்று.''

இவ்வாறு ''என் இளமைக்கால நினைவுகள்'' என்ற கட்டுரையில் திரு வேலாயுதம் அவர்கள் எழுதியுள்ளார். தொடர்ந்தும் தன் பிறப்பைப்பற்றி எழுதும் போது ''இந்த ஊர்பிரிவில் கல்கியின், பொன்னியின் செல்வனின் தந்தை சுந்தரசோழரைப் போன்ற உருவ அமைப்பும் தேககாந்தியும் உள்ள வே. கனகசபைக்கும் பெரும் நிலச் சொந்தக்காரரான பெரிய வீர குட்டியாரின் நடுமகள் தங்கத்துக்கும் திருமண நிகழ்வால் 1917 ஆம் ஆண்டு நான் பிறந்தேன் என ஜாதகம் கூறுகிறது'' என்று எழுதியுள்ளார். இவரது தந்தையாரான கனகசபை எல்லாக் காரியங்களிலும் வல்லவராக இருந்தார்.

குறிதவறாமல் துப்பாக்கியால் சுடுவதிலும் வல்லவர்.

இவரது தாயாரின் மூத்தசகோதரி அபிராமிப்பிள்ளையின் கணவர் பத்தினியார். இவர் ஒரு பிரசித்த சுதேசவைத்தியர், பரியாரியார்.

சிறுவன் வேலாயுதம் தன் பாடசாலை தவிர்ந்த நேரமெல்லாம் நாயன்மார் திடலிலுள்ள இவனது பெரிய தாயார் வீட்டிலேயே தங்குவான். பெற்றோரைவிட, இவரது பெரிய தாய் தந்தையரே இவனை வளர்த்து வந்தார்கள் என்றால் மிகையாகாது, அந்த அளவிற்கு இவர் மேல் அன்பாகவும் பாசமாகவும் இருந்தார்கள். அதே போன்று வேலாயுதனும் தன் பெரிய தாய் தந்தையரோடு பிரியமாகவும், அன்பாகவும், பாசதோடும் இருந்தான்.

இவனது தாயாரின் தந்தை, இவன் தந்தை, மாமா எல்லோரும் இவனது பெரிய தாய் தந்தையோடுதான் வாழ்ந்தார்கள். இது ஒரு கூட்டுக் குடும்பமாகவே இருந்தது. வேலாயுதம் இவனது பெரியம்மா பெரியப்பா விருப்பப்படி வைத்தியமும் கற்று வந்தார்.

இந்தக் காலக்கட்டத்தில் தான் இந்தியாவில் இருந்து ஆர்மோனிய வித்துவான் சின்னையா சாய்வும், மிருதங்க வித்துவான் மதாறிசாவும், பிற்பாட்டுக்காரர் கறீம்பாயும், தம்பலகாமம் வந்து நாயன்மாதிடலில் தங்கினார்கள். இவர்கள் வேலாயுதத்தின் பெரியப்பா பெரியம்மா குடும்பத்தோடு நெருங்கிப் பழகியதன் காரணமாக, ஒரு குடும்ப உறவினராக மாறிவிட்டார்கள். இதன் காரணமாக உள்ளூர்காரர் சிலரையும் சேர்த்து ஒரு டிக்கட் டிராமா நடத்தினார்கள். திறமைசாலிகள் எனப் பெயரும் பெற்றார்கள். இதையடுத்து வேல்நாயக்கர், எஸ்.ஆர்.கமலம் ஆகியோர் வந்து சேரவே கோயில் குடியிருப்பில் தரமான பல டிராமாக்கள் நடைபெற்றன.

இந்தக்காலகட்டத்தில் தான் இவரது மாமா கதிர்காமத்தம்பி மதுரை நகரிலிருந்து வாங்கி வந்த ஆர்மோனியப் பெட்டியில் சின்னையா சாய்புகைக் குருவாகக் கொண்டு, வாசிக்கப் பழகினார். காலப்போக்கில் வேலாயுதமும் வாசித்துப் பழகுவதில் சேர்ந்து கொண்டு வாசித்தார். நல்ல தேர்ச்சியும் பெற்றார்.

வேலாயுதம் அவர்களின் குடும்பம் ஒரு சங்கீதக் குடும்பம், இவரது பெரிய தாயாரின் மகன் வேலுப்பிள்ளை, ஓர் சிறந்த ராஜபாட் நடிகன், ஒத்திகை இன்றி திடீரென்று நாடகம் நடிக்கும் ஆற்றல் கொண்டதன் காரணமாக, அனைவரும் அவரையே நாடி வருவர். இவர் நடிகர் மட்டுமன்றி ஒரு அண்ணாவியாருங் கூட. அத்தோடு ஆர்மோனியமும் வாசிப்பார். இவர் பழக்கிய கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமசிங்கன் என்ற சரித்திர நாடகத்தில் குமாரகாமியின் தங்கை ரஞ்சித பூஷணியாக வேலாயுதத்தை நடிக்க வைத்தார். இந்த நாடகத்தின் அனுபவத்தைப் பற்றி அவரது கட்டுரையின் வாயிலாகத் தருவதே சாலச்சிறந்தது.

''கள்ளிமேட்டு ஆலையடி அரங்கேற்றுக்களத்தில் நாடகம் அரங்கேறியபோது வந்து திரண்ட மகாசனத்திரள் எனக்கு மலைப்பாக இருந்தது. திருக்கோணமலை மற்றும் இடங்களிலிருந்து மோட்டார் வாகனங்கள் ஸ்ரேஜ் முன்னால் சனங்களைக் கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருந்தன'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இனிமையான குரல் வளமும், தந்தையரைப் போன்ற உருவ அமைப்பும் உடைய வேலாயுதம், ரஞ்சிதபூஷணி வேஷத்தில் சோபித்து பாராட்டுக்ளைப் பெற்றார்.

இவர்கள் நாடகம் பழக்கப்படும் போதும், அரங்கேறும் நடகத்துக்கு வருவதுது போல், ஆண், பெண் பார்வையாளர்கள் அதிகமாகவே வருவார்கள்.

அண்ணாவியர் வேலுப்பிள்ளையின் வேண்டுதலின் பேரில், அதிகமாக நாடகங்களுக்கு வேலாயுதம் அவர்களே ஆர்மோனியம் வாசிப்பார். ஆரம்பத்தில் சனத்திரளைக் கண்டு பயந்த போதும் நாளடைவில் பயம் நீங்கி ஆர்மோனியம் வாசிப்பதில் வல்லுனர் ஆனார்.

கிண்ணியாவில் நடைபெறும் கல்யாண வீட்டுச் சமாவுக்கு (பாட்டுக்கச்சேரி) இவர்களை வண்டியில் அழைத்துச் செல்வார்கள். அங்கும் வேலாயுதம் அவர்களே

ஆர்மோனியம் வாசிப்பார். அதையே அங்குள்ள முஸ்லீம் வாலிபர்களும் விரும்பினார்கள்.

இதைவிட, நளதமயந்தியில் தமயந்தியாகவும், மயில் இராவணனின் தங்கை தூரதண்டிகையாகவும் நடித்துள்ளார். அண்ணாவிமார்கள் திடீரென நடத்திய பவளக்கொடி நாடகத்தில், அர்ஜுனனின் மகனாக நடித்துள்ளார். எல்லா நாடகங்களிலும் வெற்றிகரமாகவே நடித்துள்ளார்.

இவரது ஆர்வம் நாடகத்திலும், இசையிலும் இருந்ததன் காரணமாக கூத்தாடித்திரிவதிலேயே காலம் கடந்ததேயன்றி, படிப்பில் கவனம் செல்லவில்லை. இவரால் ஐந்தாம் வகுப்புவரைதான் படிக்கமுடிந்தது. பெரும் பணக்காரரான இவரது மாமா கதிர்காமத்தம்பி, நன்றாகப் படிக்கும் ஆற்றல் உள்ள இவரை, இங்கிலாந்துக்கு அனுப்பிப் படிப்பிக்க எவ்வளவே பிரயத்தனம் செய்தார்.

மகனை பிரிய விரும்பாத இவரது அன்னையார், தன் சகோதரனின் அனைத்து முயற்சிகளையும் முறியடித்து, மகன் வேலாயுதத்தை தன்னுடனேயே தக்கவைத்துக் கொண்டார்.

அக்காலை, அவர் சந்தோசப்பட்ட போதும், பிற்காலத்தில் அதையிட்டு வேதனைப்பட்டார்.

திருவள்ளுவர், கம்பர் போன்ற மகான்கள் எத்தனை வகுப்புப் படித்தார்கள் என்று சொல்ல முடியுமா? என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு வகுப்பு ரீதியாக கற்காவிட்டாலும் முயன்று பார்க்கலாம் என்று எண்ணியே காலத்தைக் கழித்து விட்டார்.

கூத்துக்கலையின் ஆர்வத்தால் உந்தப்பட்டு கல்வியில் நாட்டம் குறைந்த போதும், இயல்பான இலக்கிய ஆற்றல் அவரை விட்டு மறையவில்லை. கலையில் தன் ஆற்றலால் எவ்வளவுக்கு மிளிர்ந்தாரோ அந்த அளவிற்கு இலக்கியத்திலும்,எழுத்து முயற்சியிலும் தன்னை வளர்த்துக் கொண்டார், உயர்த்திக் கொண்டார்.

‘‘மைந்தனைப் பறிகொடுத்து
மார்பினில் அறைந்தரற்றும்
பைந்தமிழ் அன்னைக் கிந்தப்
பாரினில் துணையுண்டோ
எந்தையே தமிழுக்காய்
இயன்றிடும் பாடுபட்ட
தந்தையே நின் பிரிவால்
தவிக்குதே தமிழர் நெஞ்சம்”

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வன்னிய சிங்கம் அவர்கள் மறைந்த போது அவர் நினைவாக எழுதிய இது போன்ற மூன்று கவிதைகள் சுதந்திரனில் வெளிவந்தன. இதுவே வேலாயுதம் அவர்களின் இலக்கிய பிரவேசத்தில் முதல் அடி-படி.

இவரது எழுத்துக்களுக்கு சுதந்திரன் முதற்கொண்டு, தினபதி சிந்தாமணிவரை களமமைத்துக் கொடுத்து அறிமுகப்படுத்தி வைத்து ஊக்கமளித்தவர், பத்திரிகைத்துறை மேதாவி அமரர் திரு.எஸ்.ரி.சிவநாயகம் என்பதை நன்றியோடு நினைவு கூர்ந்துள்ளார்.

இருந்தும் தனது அனேகமான கவிதை கட்டுரைகளை வெளிக்கொணர்ந்து தனது எழுத்தாற்றலை வளர்க்க உதவியது வீரகேசரி - மித்திரன் பத்திரிகைகளே என்பதை அவர் மறக்கவில்லை.

ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக வீரகேசரியில் தம்பலகாமம் பகுதி நிருபராகக் கடமையாற்றிய காலத்தில் ‘‘தம்பலகாமச்” செய்திகளுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது. வெறுமனே சுடச்சுட செய்திகளை மட்டும் எழுதாமல், கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளையும் அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்குரிய வழிவகைகளையும் கட்டுரைகள் மூலமாக தமிழ் கூறும் உலகிற்கு எடுத்துரைத்தார்.

தம்பலகாமம் மக்கள் அகதிகளாக சூரங்கல், கிண்ணியா போன்ற இடங்களில் அவலமாக வாழ்ந்த போது அதை வெளிச்சம் போட்டு வெளியுலகிற்குக் காட்டி உடனடியாக

நிவாரணம் கிடைக்க வழி செய்தார். தம்பலகாமம் பொது வைத்தியசாலையில் இந்திய அமைதிகாக்கும்படை முகாம் அமைத்திருந்த போது அதை எதிர்த்து எழுதி, அங்கிருந்த முகாமை உடன் அகற்றி ஆவன செய்தார். தொலைபேசி இணைப்பு தம்பலகாமத்திற்கு விரைந்து கிடைப்பதற்கும் இவரது எழுத்தே காரணமாக அமைந்தது. இவ்வாறு சமூக நோக்கோடு அவர் செயற்பட்ட காரணத்தால், இலங்கை இராணுவ விசாரணை ஒன்றிற்கும் முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தது.

இவரது முதலாவது கதை, குமுதம் சஞ்சிகையில் வெளிவந்தது. அதுமட்டுமன்றி இதற்கான சன்மானத்தை இவ்விதழின் இலங்கை ஏஜன்சி மூலம் இவருக்குக் கிடைக்கும் படி அனுப்பிவைத்தார்கள். அந்தக் கதை ''சொல்லும் செயலும்'' என்பதாகும்.

அதுமட்டுமன்றி குமுதம் பக்தி இதழ் இவர் அனுப்பிவைத்த ஆதிகோணேசர் ஆலயத் திருவுருவை அழகிய முறையில் அதன் அட்டையில் பிரசுரித்து வெளியிட்டுள்ளது. இவரது ''ஆடகசௌந்தரி'' என்ற கட்டுரையையும் குமுதம் வெளியிட்டுள்ளது.

திரு கரிகாலன் அவர்கள் ஆசிரியராக இருந்த காலச்சுடர் ''தூபவ உருவில் உத்தமிகள், ''சன்டியன் கதிராமர்'' போன்ற கதைகளையும், போட்டிக் கவிதைகளையும் பிரசுரித்திருந்தது.

ஆத்ம ஜோதி என்ற இதழில் இவரது ''உத்தமி'' என்ற கதையும், ஆன்மீகக் கட்டுரைகளும் வெளிவந்தன. இவரது ''பேய்கள் ஆடிய இராமாயணம்'' என்ற கதையை சிந்தாமணி படங்களுடன் வெளியிட்டிருந்தது.

''ஒரு பேயை நேருக்க நேர் கண்டவரால், பேயின் கோரமுகத்தை விபரிக்கமுடியவில்லை'' என்ற கதை, வீரகேசரியில் படங்களுடன் வெளிவந்த போது, உள்ளூர் வாசகர் மட்டுமன்றி, வெளியூர் வாசகர்களும் இது உண்மையான கதையென்றே நம்பினர். சிலர் இவரை சந்திக்கும் போதெல்லாம் அந்தக்கதையில் வந்த பாத்திரமான ''மாட்டுக்கார மாணிக்கம்'' இப்போதும் உயிருடன் இருக்கின்றானா? என்று வினாவியும் உள்ளார்கள்.

இவரது கவிதையாற்றல் அளப்பரியது. இயற்கையில் கண்ட காட்சிகளை தன்னை மறந்து ரசிப்பார். அந்த லயிப்பில் உலக வாழ்வின் நடைமுறை உண்மைகளைக் கலந்து அழகிய உரைநடை போன்று கவிதையில் தருவார். இயற்கை விநோதத்தில், இறைவனின் சிருஷ்டியை நினைத்து வியப்பார்.

இவர்களுக்கு நிறையப் பசுக்களும் எருதுகளும் உண்டு. வயல் அறுவடையானதும், இந்த மாட்டு மந்தைகளை, அந்த வயல் வெளிகளுக்கு மேச்சலுக்காக ஓட்டிச்செல்வார்கள். மேய்ப்பவர்களோடு இவரும் சென்று விடுவார். அப்படியான வயல் வெளிச் சூழலில் உதித்த கவிதைகள் அனேகம்.

ஒரு சமயம் இலுப்பையடி வெட்டுவான் களத்து மேட்டில் நின்ற வண்ணம், இயற்கையை ரசிக்கின்றார். ''இந்த பரந்த உலகத்தையும் உயிர்களையும் தோற்றுவித்து, எந்த வித ஊதியமும் இன்றி ஒருவன் அலுப்புச் சலிப்பின்றி செயல்படுகின்றானே'' என்று இறைவனின் அற்புதப் படைப்பை எண்ணி வியக்கிறார். அடுத்த கணம் அவர் உள்ளத்தில் கவிதை ஊற்றெடுத்தது.

''ஊதியம் இல்லாமல் ஒரு தொழில் நடக்கிது
ஆதியில் நடந்த அவனியின் தோற்றம்
வேதனை கஷ்டம் விம்மல்கள் மகிழ்ச்சி
சோதனை பலவாய் தோன்றியதுலகம்''

என்று முதல் பாடலாகக் கொண்டு ''அற்புத செயலே அவனியின் இயக்கம்'' என்ற தலைப்பில் பத்துப்பாடல்களை எழுதியுள்ளார். இப் பாடல்கள் மித்திரனில் வெளிவந்தது.

இவரது கவிதை உள்ளம் வெறுமனே இயற்கைக் காட்சிகளை மட்டும் ரசிக்கவில்லை. அன்றாட வாழ்க்கையில் நம்மைச் சுற்றிச் சூழவுள்ள உயிரினங்களின்

அசைவுகளிலும், ஒன்றை ஒன்று கொத்திக் குலாவி கொஞ்சிமகிழ்வதைக் காணும் போதும், கற்பனை ஊற்றுப் பெருக்கெடுத்து அற்புதக் கவிதைகளாக ஓடத் தயங்கவில்லை.

வீட்டு முற்றத்திலும், குப்பை மேட்டிலும், கொத்தி இரைதேடும் பேடும் சேவலும் இவர் பார்வையில் படுகிறது. பொழுது போனதும், நல்ல கணவன் மனைவி போல் கூட்டில் தங்கி, காலையில் ஜோடியாக வெளிவருவதைக் கண்டார். இந்த ஜீவன்களிடையே மறைந்து கிடக்கும் ஐக்கிய உறவு அவர் உள்ளத்தில் படுகின்றது. உலகத்து நடைமுறைச் செயற்பாடுகளும் அவர் கண்முன் தோன்றி மறைகின்றது. கவிதை சுரக்கின்றது அந்த ஜோடிகள் பேசுகின்றன.

பெண்கோழி
நெஞ்சடைக்கக் கொக்கரித்து
நீங்கள் இடும் கூச்சலினால்
பஞ்சணைபோல் கூடுதனில்
படுத்துறங்கும் என் துயிலைக்
கொஞ்சமேனும் நோக்காது
குழப்புகிறீர் என் துரையே.

சேவல்
அஞ்சுகமே! என்னுடைய
அழகான பெண் மயிலே!
மிஞ்சி ஒளி வீசி வரும்
வெய்யோன் வரவுதனை,
வஞ்சனை எதுவுமின்றி
மாந்தர்க் குணர்த்துகிறேன்.

கோழி
கடமை கடமை என்று
கத்துகிறீர் கண்ணாளா!
மடமையால் மானிடர்கள்
மறந்துநம் உதவிகளை,
கடையர் போல் **நமைக்கொன்று**
கறிசமைத்து உண்பவர்காண்.

சேவல்
அவர் அவர் செய்வதற்கு
அதன் பலனைக் காண்பார்கள்.
கவனமாய் நம் கடமை
கழித்து விட்டால் கண்மணியே,
தவம்வேறு ஏன் நமக்குத்
தர்மம் தலை காக்கும்........

''தர்மம் தலை காக்கும்'' என்ற தலைப்பில் எழுதிய மேற்கண்ட கவிதைகள் வீரகேசரியில் பிரசுரமாகியது. இந்த தர்க்கக் கவிதைக்குப் பலர் பாராட்டுகள் தெரிவித்திருந் தார்கள்.

இது போன்று இன்னொரு சம்பவம்.

வட்டத்தனை வயல் பகுதி நெளிந்து வளைந்து கங்கை போல் ஓடிவரும் பேராறு, கண்ணையும் மனதையும் கொள்ளை கொள்ளும் சூழல். அங்கு கிளைபரப்பி நிற்கும் மருத மரங்கள், கூட்டம் கூட்டமாக வந்தமர்ந்து கொஞ்சு மொழி பேசும் பச்சைக் கிளிகள், மாலை ஆனதும் வயல்களில் உள்ள கதிர்களை இரவுச்சாப்பாட்டிற்காக அறுத்துக் கொண்டு சுவாமிமலைக்காட்டில் தங்கும் ஆலமரத்துக்குக் கொண்டு போவதையும், விடிந்ததும் கிளிகள் கதிர் கொய்ய வட்டத்தனை வயல்வெளிக்கு வருவதையும் கண்டார்.

உள்ளத்தில் கற்பனை ஊற்றெடுத்தது. அழகிய காதல் கதை பிறந்தது.

ஜோடிக் கிளிகளில் ஆண் கிளி காய்ச்சலால் வாடியது. பெண்கிளி அதனை மரத்திருத்தி வயலுக்கு வந்து கதிர் அறுத்துக் கொண்டு நின்றது. ''பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்'' என்ற பழமொழிக்கமைய, நெல் அறுத்துக் கொண்டிருந்த கிளியின் கண்ணில், நெல் கதிருடன் மறைந்திருந்த முள் தைத்துவிட்டது. தன் கணவன் நோயுற்றிருக்கும் இவ்வேளையில் தனக்கு இப்படி ஒரு கேடு வந்து விட்டதே, என்ற எண்ணிக் அலறித் துடித்தது.(கத்திக் கதறியது).

சற்றுத் தூரத்தில், தன் பேடையுடன் இரை பொறுக்கிக் கொண்டிருந்த ஆண் கிளி, பறந்து வந்து, முள் தைத்த பெண்கிளியின் கண்ணுக்கு மருந்திட்டு உபசாரம் செய்கிறது. இதைக்கண்ட அதன் பெண்கிளி கோபங்கொண்டு, சுவாமிமலைக் காட்டிற்குப் பறந்து சென்று, நோயுற்று மரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் ஆண்கிளியிடம், ''உமது பெண்ணும் எனது ஆணும் வயலில் நடத்தும் சல்லாபங்ளைப் பார்க்க முடியாமல் வந்து விட்டேன், என்று கோள் சொல்கின்றது.

மாலையானதும் எல்லாக் கிளிகளும் பறந்து வந்தன. முள் தைத்த கிளியும் தன் ஆண்கிளியிடம் வந்தது. இருவருக்கும் இடையே ஒரு ஊடல்

ஆண்கிளி : காய்ச்சலால் மரத்தினில் நான் படுத்திருக்க
கதிர் கொய்ய வயலுக்குப் போயிருந்தாய்
வாச்சது சந்தர்ப்பம் என்று மகிழ்ந்து
மாற்றானின் உறவில் மயங்கினாய் போ

பெண்கிளி : என்ன புதிர்போட்டுப் பேசுகிறீர் அன்பே
ஏற்குமோ இத்துயர் வார்த்தையெல்லாம்
என்னைச் சிறுமையாய் ஏசிட உங்கட்கு
எவர் செய்த போதனை கூறிடுங்கள்.

ஆண்கிளி : அந்தக் கிளியின் பெண் வந்து என்னிடம்
அறிவித்தாள் உங்கள் கொடுமைகளை.
சொந்தம் இனி இல்லை, இங்கே வராமல்
தூர எங்கேயேனும் சென்று விடு

பெண்கிளி கதிர் கொய்யும் போது
என் கண்ணிலே முள்பட்டுக்
கலங்கித் தவித்த வேளையில்
உதவிக் கோடிவந்து உபகாரம் செய்த
உத்தமரைப் பழி கூறலாமோ?

ஆண்கிளி அன்புள்ள மாதே நான் அறியாமல் பேசிவிட்டேன்.
பண்புள்ள ஆடவர் பழக்கத்தால் மாதர்க்கு
பழுதொன்றும் வாராதென்று இன்று
பக்குவமாக உணர்த்தி விட்டாய்.

இந்த உரையாடல் ''பண்புள்ள ஆடவர் பழக்கத்தால் மாதர்க்கு பழுதொன்றுமில்லை'' என்ற மகுடத்தில் வீரகேசரியில் வெளிவந்தது. இது மட்டுமன்றி தம்பலகாமம் ஆதிகோணை நாயகர் பெருமான் மீதும் அருட்பாக்களும் பாடியுள்ளார்.

ஆதிகோணேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் திருவிழா காலங்களிலும், விசேஷ தினங்களிலும், சுவாமி முன் நர்த்தனம் ஆடும் பழக்கம் பண்டு தொட்டு இருந்து வருகிற கிரியை. முன்பு மாணிக்கமென்பாள் இவ்வாடலை ஆடியதால், இவளுக்கு மானியமாக

நாலு ஏக்கர் வயல் வழங்கப்பட்டுள்ளது. இந்த வயற் காணியை ''மாணிக்கதாள் வயல்'' என்றே அழைப்பர். இந்த நிகழ்வின் போது பாடப்படும் பாடல், திருஞானசம்பந்த நாயனாரால் திருக்கோணமலையில் குடிகொண்ட கோணேஸ்வரர் மேல் பாடிய தேவாரமான ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே'' என முடியும் பதிகம் பாடப்படும். இந்தப் பாடலுக்கு தான் அந்த நர்த்தகி அபிநயிப்பாள்.

கோயில் குடியிருப்பில் கோயில் கொண்ட பெருமானுக்கு, கடலுடன் சூழ்ந்த கோணமாமலை எனும் பதியத்தை பண் இசைத்துப்பாடி நடனமாடுவது சரியாகுமா? அப்படிப் பாடுவதானால் ''கோயில் குடியிருப்பு அமர்ந்தாரே'' என்று பாடுவது தானே சரியாகும்? அவர் உள்ளம் இதற்கு விடைகாண விழைந்தது. தெய்வ அருளால் திருத்தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் கோயிலுக்கு புதிய பதிகத்தைப் பாடினார். அது......

**திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் பதிகம்**

காப்பு - வெண்பா

வேழ முகத்தோனே விக்கினங்கள் தீர்த்திடுமுன்
தாளை நினைத்து துதிசெய்வோரின் - கீழ்மையெல்லாம்
பொடியாய் உதிரப் புரிந்த கருணையைப்போல்
அடியேனுக் கிரங்கி அருள்

நீர்வளச் சிறப்பும் நிலவளச் சிறப்பும்
நிகரில்லாப் பெரு வளம் கொழிக்கும்
ஊரதன் பெயரே தம்பலகாமம்
உழவர்கள் வாழ்ந்திடும் பேரூர்
சீர்மிகு வயல்கள் ஆறுடன் சூழ்ந்த
கோயில் குடியிருப் பென்னும் பதியில்
சுடர்வளைப் பிறையும் கொன்றையும் அணிந்த
கோண நாயகர் அமர்ந்தாரே

தேவர்கள் துயரம் தீர்த்திட எண்ணி
தேரூர்ந்து சென்றவர் அங்கே
மூவர்கள் உறையும் முப்புரங்களையும்
முறுவலால் எரிபடச் செய்தார்
சேவலைக்கொடியாய்க் கொண்ட செவ்வேளை
செந்தமிழ்க் கடவுளாய் நல்கும்
காவலர் எங்கள் சிவபெருமானார்
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

பிரமனும் அரியும் பிழைபடத் தாமே
பெரியவர் என்றெண்ணும் சிறுமை
புரிபடச் செய்ய முடிவிலா மலையாகத்
தோன்றினார் பெரும் புகழாளர்
அரியயன் செருக்கு அடங்கிய பின்பு
அவர்கட்கும் நல்லருள் புரிந்தார்
கரிதனை உரித்துப் போர்த்திய நிர்மலர்
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

குளத்தினில் மூழ்கிய தந்தையைக் காணா
குழந்தையின் அழுகுரல் கேட்டு
அளப்பெரும் அன்போடு அம்மையாய் அப்பராய்
அச்சிறு குழவிமுன் தோன்றிக்
கிளர்ந்திடு ஞானப் பாலமுதூட்டிக்
கிருபையைப் புரிந்த கோணேசர்
வளத்தினில் சிறந்த வயல்வெளி சூழ்ந்த
கோயில்க் குடியிருப் `பமர்ந்தாரே

கல்லுடன் பிணித்து கடலினுள் எறிந்தும்
கஷ்டங்கள் எதுவுமே இன்றி
நல்லிசைப் பாடல் நாதனின் நாமம்
நவின்றிடும் நாவுக்கு அரசர்
வல்வினை அகற்றி வைத்தவரான
வானவர் போற்றிடும் தலைவர்
நெல்மணிப் போர்கள் நெருக்கமாய்த் தோன்றும்
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

தோழமை உணர்வை உலகினுக் உணர்த்த
சுந்தர மூர்த்தியின் மனையாள்
தீழ்விழி நங்கை பரவையாரிடத்தில்
கலந்துரையாடித் தன் அன்பர்
வாழ்வது சிறக்க வழிமுறை வகுத்த
வல்லவரான எம் பெருமான்
ஆழ்கடல் சூழ்ந்த இலங்கையிலுள்ள
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

மாதவ மிகுசெய் மணிவாசகரின்
மனத்துயர் அகற்றுவதற்காக
வேதத்தின் முடிவாய் விளங்கிடும் ஈசர்
விரைந்தனர் பரித்திரள் சூழ
பாதிநள்ளிரவில் பரியெல்லாம் நரியாய்
ஆக்கியோர் அற்புதம் புரிந்த
மாதுமை பங்கர் வயல்வெளி சூழ்ந்த
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

கானிடைச் சென்று வேட்டுவ வடிவில்
காண்டீப னுடன்சமர் விளைத்து
வானிடை எற்றி வரம்பல ஈந்த
மாபெரும் வானவர் தலைவர்
தானெனும் செருக்கு உடையவர்க் கென்றும்
தரிசிக்க முடியாத முதல்வன்
தேன்மலர்ச் சோலையும் வயல்களும் சூழ்ந்த
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

அம்மையை இடப்புறம் இருத்தி இவ்வுலகோர்
இல்லற வாழ்க்கையின் புனிதச்
செய்மையை உணர அம்மை அப்பராய்
சிறப்புற அவர் கொண்ட கோலம்
தம்மையே நினைத்து துதித்திடுவோரின்
தழைஎல்லாம் பொடிபடச் செய்து
இம்மையில் முத்தி அருளிடும் ஈசன்
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

மாயஇவ்வுலக வாழ்க்கையில் சிக்கி
வருந்திடும் அடியவர் தமக்கு
நோய்தனை அகற்றும் மருத்துவர் போல
நோக்கினால் திருவருள் புரிவார்
தாயினும் பிரிவு கொண்டு இவ்வுலகத்
தலைமையைத் தாங்கும் பேரிறைவன்
கோயிலும் வயலும் ஆறுடன் சூழ்ந்த
கோயில்க் குடியிருப் பமர்ந்தாரே

மேற்காண்ட பதிகங்களைத் தொகுத்து ஒரு நூலாக அச்சிட்டு வெளியிட்டிருந்தார் ஆதிகோணேஸ்வர ஆலய கணக்கப் பிள்ளை திரு.கோ.சண்முகலிங்கம்.

எழுத்துத் துறையில், என்று கால்பதித்தாரோ, அன்றில் இருந்து இன்று வரை, தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள். இவருடைய கட்டுரைகள் தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன் போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்தும் வெளிவந்தன. வந்து கொண்டுமிருக்கின்றன. தன் மனதிற்குச் சரியென்ற கருத்துக்களை சொல்லத்தயங்கியதே கிடையாது. ''அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ் அல்ல'' என்ற கட்டுரையை தினகரனில் எழுதியிருந்தார்.

ஈடு இணையற்ற ஈழவேந்தன் இராவணன் மேல் மாறாபற்றும் பாசமும், குன்றாத மதிப்பும் கொண்டவர் வேலாயுதம் அவர்கள். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் நேயமுடன் கற்ற மாவீரன். தன் மனவைராக்கியத்தாலும், அசைக்க முடியாத பக்தியாலும், இறைவனையே நேரில் கண்டு, பல வரங்களும், வீரவாளும் நீண்ட ஆயுளும் பெற்றவன் இராவணன் - மனம் பொறுக்க முடியாதோர் அவன் மீது மாசு கற்பித்த போது பொறுக்கமுடியாமல், மனம் பெங்கி எழ தர்க்கமுடன் பல கட்டுரைகள் எழுதித்தள்ளியவர் வேலாயுதம். வித்தைக்கதிபதி இராவணன், எனவே அவனை வித்தியாதரன் என அழைப்பார் என்றும் ''தமிழன் வீரம் கண்டு காழ்ப்புணர்வு கொண்டோர்கள் தமிழனுக்கு வைத்த பெயர் அரக்கன்'' என்று வீரவேசமாக கட்டுரை புனைந்தார் பத்திரிகையில். அண்மையில் வெளிவந்த கட்டுரைகளாவன

''இனிய தமிழைக் கேட்க, எழுத இறையனார் சிவனுக்கு விருப்பம்'', ''திருமலை இராஜ்ய மன்னராக்கப்பட்டவரின் பெயர் தனி உண்ணாப் பூபாலன்'', ''பொன்னி நதிக்கரையில் அனுமார் பூசித்த ஒரெயொரு சிவஸ்தலம்,'' ''கடவுள் மனிதனைப் படைத்தது தன்னை வணங்குவதற்காக?,'' ''இராவனேஸ்வரனைப் பற்றி அவதூறு பேசுவது கூடாது. ''

இவை தினக்குரல் வீரகேசரி பத்திரிகைகளில் வெளிவந்தன.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் உருவப்படம் ஒரு புறம், மகாகவி பாரதியாரின் படம் இன்னொரு புறமாக வீரகேசரி பத்திரிகையாளர் உவந்து வெளியிட்டு வந்த கட்டுரைகளும், திருக்கோணமலைக் கோவில் படத்துடன் வீரகேசரியில் வெளிவந்த வென்னீரூற்றுப் பற்றிய கட்டுரை, சிவனை வழிபடும் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் ஈழம் என்பதை

உறுதிப்படுத்துவதாக அமைந்த இக்கட்டுரையும் இவர் மனதை பெரிதும் கவர்ந்தாகக் குறிப்பிட்டுள்ளார்.



திரு. க. வேலாயுதத்துடன் கட்டுரையாசிரியர்

வீரகேசரியின் பிரதான ஆசிரியர், திரு.வேலாயுதம் அவர்களைப்பற்றிக் குறிப்பிடும் போது, ''தம்பலகாமத்தில் ஒரு பெரிய பொக்கிசம் உண்டு. அதைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுடையது. நான் குறிப்பிடுவது எங்கள் வேலாயுத்தை'' எனப் பாசமாகக் குறிப்பிடுவார்.

இதே போல் இந்தியாவில் கேரளப் பல்கலைக் கழகப் பேராசிரியராக இருந்த, தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புலவர் சத்தியமூர்த்தி அவர்கள் பல்நாட்டு அறிஞர்கள் கூடியிருந்த சபையில் பேசும் போது, தம்பலகாமத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய பொக்கிசம் வேலாயுதம் தான், எனக்குறிப்பிட்டதை, அங்கு சமூகமாயிருந்த தொண்டர் சண்முகராசா ஐயா அடிக்கடி நினைவு கூருவார்.

தம்பலகாமத்தின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட அவரது ''இரங்க நாயகியின் காதலன்'' ஆலங்கேணியைக் புலமாகக் கொண்ட ''அவள் ஒரு காவியம்'' ஆகிய இவரது நாவல்கள் வெகு விரைவில் வெளிவர இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

2004ஆம் ஆண்டில் கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மண்டபத்தில் திருக் கோணமலை முத்தமிழ் வளர்கலை மன்றம் மூன்று துறைசார்ந்த கலைஞர்களைக் கௌரவித்தபோது, முதுபெரும் எழுத்தாளரும், இலக்கியவாதியும் ஊடகவியலாளருமான இவர், பாராளுமன்ற உறுப்பினர் திரு.துரைரெட்டினசிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பல்துறைப்பட்ட எண்ணற்ற கட்டுரைகளை பல பத்திரிகையில் எழுதிய தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் உள்ளத்தில் உள்ள ஒரே ஏக்கம் ''இக் கட்டுரைகளை எல்லாம் ஒருங்கிணைத்துப் பயனுள்ள கட்டுரை மலர் ஒன்றை வெளிக் கொணர முடியவில்லையே'' என்பதே.


ஆதாரம் ''என் இளமைக்கால நினைவுகள்'' கட்டுரை - க. வேலாயுதம்

''எனது தந்கை பற்றிய நினைவுகள்'' - வே. தங்கராசு

வரலாற்றுத்தகவல்:

## ஆலங்கேணியின் தமிழ் - முஸ்லிம் உறவு

போர்த்துக்கேயர் ஆட்சியின்போது, தளபதியாக இருந்த கொன்ஸ்ரன்ரையின் டி.சாபு நோறேனா (Constantine de sa de Noronna) இலங்கையின் கோட்டே பகுதியிலும் மற்றும் கரையோரப் பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம்களை வெளியேற்றினான் என்பது ஒரு வரலாற்றுத் தரவு போர்த்துக்கல் அரசனின் உத்தரவுப் படியே அவன் இந்த முடிவை எடுத்து முஸ்லிம்களுடன் மிகக் கடுமையாக நடந்து கொண்டான்.

இந்த நெருக்கடியினால் முஸ்லிம்கள் கண்டி நோக்கிக் குடிபெயரத் தொடங்கினார்கள். கண்டியை நோக்கி முஸ்லிம்கள் நகர்வதனை அப்போதைய கண்டி மன்னன் செனரத் (கி.பி. 1604 - 1635) ஆதரித்தான். அதேவேளை மிகப் பெருமளவில் இடம்பெயர்ந்ததால் அவர்களில் 4000 பேரை மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியேற்றினான். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியேறியதைத் தொடர்ந்து முஸ்லிம்களின் குடிசனப் பரம்பல் திருகோணமலை மாவட்டத்திற்கும் பரவத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்து மூதூர் கிண்ணியா போன்ற கிராமங்களை நோக்கிக் குடியேறத் தொடங்கின. இக்காலப்பகுதியில் ஆலங்கேணி, ஈச்சந்தீவு பகுதிகள் குளக்கோட்ட மன்னன் காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்த தமிழர்கள், இவ்வாறு இடம் பெயர்ந்து வந்த முஸ்லிம்களை வரவேற்று ஆதரித்து தமது பகுதிகளிலேயே, அவர்கள் தங்குவதற்கும் விவசாயம் செய்வதற்கும் நிலங்களை வழங்கினார்கள்.

அந்த சகோதர உறவு ஆலங்கேணி, கிண்ணியா பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இன்றும் நிலவுகின்றது.



**போர்த்துக்கேயரால் கோணேஸ்வரர் ஆலயம் இடித்து அழிக்கப்பட்டு அதில் இருந்து பெயர்தெடுத்த கற்களைக் கொண்டு முகப்பில் உள்ள பிரெட்றிக் கோட்டை வாயிலைக் கட்டினார்கள்.**

**போர்த்துக்கேயர், கோணேசர் ஆலயத்தை இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்ட போது, தற்செயலாக விடுபட்ட கற்றூண் ஒன்று மலை உச்சியில் ஆலயம் அமைந்திருந்த இடத்தை நினைவு கூர்வதற்காக ஆலய முகப்பில் இன்றும் இது வைக்கப் பட்டுள்ளது.**

**2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட கோணேசர் ஆலயத்தின் கற்றூண் இங்கே படமாக உள்ளது.**



# மாணவர் பக்கம்



**வடக்குக் கிழக்கு மாகாண எழுத்தாக்கப் போட்டிகளில் முதல் இடம் பெற்ற மாணவர்களின் ஆக்கங்களில் இருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

**கவிதை** **பிரிவு - 4**

# எண்ணத் தடாகத்தில்.........

எண்ணத் தடாகத்தில் ஆயிரம் ஓடம் - அவை
தாக்க இடமளிக்கும் என் அக மாடம்.
இன்பங்களே அவை கற்பித்த பாடம் - அதில்
நீளுவதோ எந்தன் கற்பனைச் சேடம்.

புதைகுழி என்புகள் உயிர்பெற வேண்டும் அதில்
புதையுண்ட உண்மைகள் வெளிவர வேண்டும்
படுகொலை புரிந்தோர்க்குத் தண்டனை வேண்டும் - அவர்
படும்பாடு மற்றோர்க்குப் பாடமாக வேண்டும்.

சமாதானம் என்பது நிலையாக வேண்டும் - அதில்
சமாதானம் என்பது பொதுவாக வேண்டும்
உலகிலே அமைதி நிலைபெற வேண்டும் - அதில்
உலகினர் அனைவரும் உண்மையாய் வேண்டும்.

துப்பாக்கி ஏந்தாத புனிதர்கள் வேண்டும் - அதில்
பழிவாங்க எண்ணாத மனிதர்கள் வேண்டும்.
உண்மையாய் இருக்கின்ற பாங்கர்கள் வேண்டும். - இன்னும்
உண்மைக்காய் வாழ்கின்ற உத்தமர்கள் வேண்டும்.

கல்வியில் அனைவரும் உயிர்த்திட வேண்டும் - அது
கல்மேல் செதுக்கிய எழுத்தாக வேண்டும்.
பட்டதாரி இதழ்களில் புன்னகை வேண்டும் - அவர்
பட்டுப்போன வாழ்விற்கு நீரூற்ற வேண்டும்.

சிறுவரின் உரிமைகள் பேணப்பட வேண்டும் - அவர்
சிறுமனம் ஆல்போல தழைத்திட வேண்டும்
சேவை செய்தேயவர் வாழ்ந்திட வேண்டும். - பெற்றோர்
சேவடி சென்னியிற் றாங்கிட வேண்டும்.

ஹிட்லர்கள் பாரினில் அழிந்திட வேண்டும் - இன
புஷ்ஷுகள் உலகில் தோன்றாதிருக்க வேண்டும்
சிலுவை சுமக்காத இயேசுக்கள் வேண்டும் - அவரில்
சிலுவை சுமத்தாத ஏராதுக்கள் வேண்டும்.

அன்பு ஆறாகப் பெருகிட வேண்டும் - அதில்
வன்பு நசியுண்டு கொலையாக வேண்டும்
மனிதம் வற்றாத நதியாக வேண்டும் - அங்கு
மனிதர் யாவருமே நீராட வேண்டும்.

மெல்லத் தமிழுக்குச் சுவையளிக்க வேண்டும் - அதை
மெல்லும் தமிழர்கள் எந்நாளும் வேண்டும்
தீஞ்சுவைத் தமிழென்றும் உலகிற்கு வேண்டும் - அதன்
தேன்சுவை உலகெங்கும் பாய்ந்திட வேண்டும்.

ஊடகச் சுதந்திரம் நிலைபெற வேண்டும் - அதில்
ஊமையான உண்மைகள் துலங்கிட வேண்டும்
பேனா முனைகளும் உயிர்பெற வேண்டும் - அவை
கத்தி முனையிலும் வலிமையாய் வேண்டும்.

எண்ணிய எண்ணங்கள் ஈடேற வேண்டும் - சிறு
கண்ணனாய் எல்லோரும் பூரிக்க வேண்டும்
இன்பங்கள் தாமரைச் செண்டாக வேண்டும் - அதில்
மானிடர் எல்லோரும் வண்டாட வேண்டும்.

எண்ணத்தில் தூய்மை; வாக்கினில் இனிமை - நல்
எழுத்தினில் திறமை; பேச்சினில் வன்மை
வாழ்வினில் உண்மை; கற்பினில் பெண்மை - இவை
என்றும் தமிழனின் சொத்தாக வேண்டும்.

எண்ணத் தடாகத்தில் ஆயிரம் பூக்கள் - அதை
அனைவரும் காண எழுந்தன பாக்கள்
நீக்கியே பாருங்கள் காண்கின்ற வழுக்கள் - என்
எண்ணங்கள் ஈடேற வாழ்த்துங்கள் நீங்கள்

எண்ணிய சிந்தையும் எழுதிய கரங்களும் என்றும் தூங்காது - என்
எண்ணம் ஈடேற உதவிகள் புரிகின்ற தருக்களைப் பாடாது - என்
அன்னை, தந்தை, ஆசான், தெய்வம் உங்களைப் பாடுகின்றேன் - என்னைக்
கண்மணியாய் எண்ணி நலம் சேர்த்ததற்காய் நன்றிகள் சேர்க்கின்றேன்.

**பிரிவு-4 கவிதைப் போட்டியில்**
**முதலாம் இடம்பெற்ற கவிதை**
**செல்வி. க. அனுஷானி**
**யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

கட்டுரை பிரிவு - 4

# சமூக முன்னேற்றத்தில் ஊடகவியலாளர்களின் பங்கு

இருபத்தோராம் நூற்றாண்டிலே தடம் பதித்து எமது வாழ்க்கைப் பயணத்திலே இன்பங்களையும், துன்பங்களையும் மாறிமாறி அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இன்றைய எமது சமூகத்திலே பல்வேறுபட்ட சமூக, கலாசார மாற்றங்களை எம் கண்களூடாகப் பார்த்துவிட்டு சமூகத்தை நினைத்து எமது உள்ளத்தினுள்ளே வேதனைப்படுகிறோம். எமது உள்ளத்தினுள்ளே எழுகின்ற உணர்ச்சிகளை சமூகத்தாரிடம் வெளிக்காட்டுவதற்குத் தயங்குகிறோம். இதனால், எமது கருத்துக்களை சமூகத்தாரிடம் முன்வந்து வெளியிடுவதற்கும், அக் கருத்துக்களால் சமூகத்தவரையும், சமூகத்தையும் முன்னேற்றுவதற்கு எம்மிடம் துணிச்சல் இல்லை. அவ்வாறு ஒரு சில மனித உள்ளங்களிற்குத் துணிச்சல் இல்லை. அவ்வாறு ஒரு சில மனித உள்ளங்களிற்குத் துணிச்சல் ஏற்பட்டாலும் கூட, அத் துணிச்சலை சமூகமே மழுங்கடிக்கச் செய்து வருகிறது. அன்று, எமது முன்னோர்களால் கூறப்பட்ட, "ஊரோடு ஒத்து வாழ்" என்ற முதுமொழியைக் கூறி அவர்களுக்கு ஏற்பட்ட துணிச்சலை மண்ணோடு மண்ணாகப் புதைத்து விடுகிறார்கள். இவ்வாறு துணிச்சலற்ற கோழைத்தனமான சமுதாயத்தினருக்காகக் குரல் கொடுக்கின்ற வல்லமை கொண்டவர்கள் தான் ஊடகவியலாளர்கள். இத்தகைய வல்லமையும், துணிச்சலும், திடகாத்திரமான மன பலத்தையும் கொண்ட ஊடகவியலாளர்களின் பங்களிப்பு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஆணிவேராக அமைந்து வருகிறது.

இன்று நாம் எமது உரிமைகளைப் பெற்று சமூகத்திலே நிலையானதொரு அந்தஸ்தைப் பெறுவதற்குக் காரணம் ஊடகவியலாளர்களின் பரந்த நோக்குடைய அவர்களின் சிந்தனைகளே. இன்றைய சமூகத்திலே பல்வேறு ஊடகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும், இன்றும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஊடகமாகப் பத்திரிகை விளங்குகிறது. இப் பத்திரிகையானது மக்களின் மனதில் நிலையான இடத்தைப் பெறுவதற்குக் காரணம் அப் பத்திரிகையாளனின் எழுத்தாற்றலே ஆகும். சமூகத்திலே காணப்படுகின்ற நிறைகளை எடுத்துக் காட்டுவதோடு மட்டுமல்லாது, அச் சமூகத்திலே காணப்படுகின்ற குறைகளை மக்களின் மனம் புண்படாத வகையில் மறைமுகமாக எடுத்தக் காட்டக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள் தான் ஊடகவியலாளர்கள் என்ற வட்டத்தினுள் மக்கள் மனதைக் கவர்ந்த பத்திரிகையாளர்கள். ஒருவருக்கும் அஞ்சாத மன வலிமையும், உள்ளதை உள்ளபடி எழுதும் ஆற்றல் கொண்டோனும், எளிமையான எழுத்தாற்றலைக் கொண்டோனுமாக இப்பத்திரிகையாளன் விளங்குகின்றான்.

இன்றைய எமது சமூகமானது, வெளிநாட்டவர்களின் வருகையினால், பல கலாசார சீரழிவுகளை எதிர்நோக்கி வருகிறது. பாடசாலை செல்லவேண்டிய சிறுவர்கள், இன்று வீதிக்கு நிற்கிறார்கள். இன்றைய இளைஞர்களது சேட்டைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இந்த இளைஞர் சமுதாயமானது இன்று வன்முறை கொண்ட சமுதாயத்தினராக வளர்ந்து வருகிறார்கள். இன்று நீதிமன்றத்திலே நாம் கூடுதலாகக் காணக்கூடிய வழக்காக கலாசார சீரழிவு காணப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும் என்று எமது சமூகத்தவர்கள் ஏன் விரும்புகிறார்கள் இல்லை? அவ்வாறு விரும்பினாலும் கூட அதை ஏன் செயற்படுத்த முன் வருகிறார்களில்லை? அவர்களுக்குத் தமது சமூக முன்னேற்றம் தொடர்பான அக்கறையில்லையா? என்ற வினாக்களிற்கு ஒரேயொரு பதில் தான் உண்டு. துணிச்சலற்ற சமூகத்தவரே இன்று வளர்ந்து வருகிறார்கள். தமது துணிச்சலற்ற நிலையினை வெளிக்காட்ட விரும்பாதவர்களாக, "காலம் நன்றாக மாறி விட்டது; உலகம் கெட்டு விட்டது" என்று

காலத்தின் மேலும், உலகத்தின் மேலும் குற்றச்சாட்டுக்களைக் கூறித் தப்பித்து விடுகின்றனர். ஆனால் எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த ஒருவன் தான் ஒரு ஊடகவியலாளன் என்ற ரீதியில் அச் சமூகத்தில் நடக்கின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்க முன்வருகிறான். ஒரு பத்திரிகையாளன், சமூகத்திலே நடக்கின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்பதோடு மட்டுமல்லாது தன் பேனா முனையால் அவ் அநீதிகளுக்கான தீர்வு கிடைக்கும் வரை போராடுகிறான். ஒரு சிறந்த ஊடகவியலாளராகத் திகழ்கின்ற பத்திரிகையாளன் கத்தி முனைக்கு ஒரு போதும் அஞ்சி ஓடியது கிடையாது. அவன், தன் வாழ்நாளின் மூச்சாகக் கொள்கின்ற பேனா முனைக்கே அஞ்சுகின்றான். இத்தகைய துணிச்சலும் ஆளுமையும் கொண்ட பத்திரிகையாளன் போன்ற ஊடகவியலாளர்களின் கைகளிலேயே சமூகத்தின் முன்னேற்றமானது தங்கியுள்ளது.

இன்றைய நவீன தொழில்நுட்ப சூழலிலே பல இலத்திரனியல் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, அச் சாதனங்களினால் பல இலக்குகளை அடைந்து வருகின்ற நிலையிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வானொலி, தொலைக்காட்சி போன்றவையும் சிறந்த தகவல்களைப் பெறும் ஊடகங்களாகக் காணப்படுகின்றன. ஆனாலும் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை விட பத்திரிகையாளனது மக்களால் நம்பப்படுகின்ற ஊடகமாகக் கருதப்படுகின்றது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை என்பவை ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து தொடர்புபட்ட வகையிலேயே செய்திகளையும், தகவல்களையும் பெற்றுத் தருகின்ற போதிலும்கூட, பத்திரிகையாளனின் பேனா முனையால் எழுதப்படுகின்ற தகவல்களையே மக்கள் ஏற்றுக் கொள்கின்ற நிலை காணப்படுகின்றது. சமூகத்திலே நிகழ்கின்ற ஒழுக்க சீர்கேடுகளைக் கண்டித்து, அவ்வாறான சீர்கேடுகளில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்கின்ற ஆற்றல் ஊடகவியலாளர்களுக்கே காணப்படும். இவ்வாறு சமூகத்திலே காணப்படுகின்ற குறைகளையும் நிறைகளையும் தெட்டத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டக்கூடிய வல்லமை ஊடகவியலாளர்களிடமே பரந்து காணப்படும். இவ்வாறு, ஒவ்வொரு சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கும் ஏதோவொரு வகையில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

நாம், போர்வெறி கொண்ட போர்ச்சூழலிலும் வாழ்ந்துள்ளோம். அன்று, எமக்காக ஒரு அரசியல் தலைவர்களும் குரல் கொடுக்கவில்லை. எமது உரிமைகளையும், உடமைகளையும் இழந்து அனாதைகளாக நாம் கையேந்தி நின்றபோது, எமக்காகக் குரல் கொடுத்தவர்கள் ஊடகவியலாளர்களே. இராணுவ கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்த வேளையில்கூட, தமது உயிரைப் பெரிதாக எண்ணாது, எமக்காக, நாம் இழந்த உடமைகளை மீட்டுத்தருவதற்காக, அப்போர்ச்சூழலினுள் உட்பிரவேசித்து பல புகைப்படங்களையும், செய்திகளையும் சேகரித்து மக்கள் பார்வையில் கொண்டுவரும்படி செய்தவர்கள் இந்த ஊடகவியலாளர்கள். இவ்வாறு, சமூகத்தின் முன்னேற்றத்தையே தமது இலக்காகக் கொண்டு அர்ப்பணிப்புடன் பணி புரிந்தவர்கள் ஊடகவியலாளர்களே. சிறந்த கலைஞனுக்கு அழகு, தான் கற்ற கலையை வெளிப்படுத்துவது. அதேபோல், ஒரு சிறந்த ஊடகவியலாளனுக்கு அழகு, உண்மைத் தகவல்களை உண்மையான முறையில் வெளிப்படுத்துவது ஆகும். இவ்வாறு துணிச்சல் கொண்ட திடகாத்திர மனமும், பேனா முனையினால் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட, இன்றும் பாடுபட்டு வருகின்ற ஊடகவியலாளர்கள் சமூக முன்னேற்றத்திற்கு ஆணிவேராகத் திகழ்கிறார்கள் என்றால் அது மிகையாகாது!

**பிரிவு-4 கட்டுரைப் போட்டியில்**
**முதலாம் இடம்பெற்ற கட்டுரை**
**செல்வி. வா. தர்மிஷா**
**யா/ யூனியன் கல்லூரி,**
**தெல்லிப்பளை**

# மரணிக்கும் மனித நேயங்கள்

பிணக்கும்பலின்
மணம் நுகர்ந்து
இதம் காண
இவ்வையகம் புறப்பட்டு விட்டது.

நானே உயர்ந்தவன் - என்ற
நரக வாசமிங்கு நிதம் நிதம்
நரர் மாமிசமிங்கு இதம் இதம்
நாளடைவில் இது பிணபூமியே

தாய்களின் இரத்தமருந்தியதால்
தண்ணீர் குடிக்க மறுக்கிறோம் - பல
தங்கைகளின் கற்பை திருடியதால்
தாரகை ரசிக்க மறுக்கிறோம் - பல

பச்சிளம் பாலகர் - எம்
பாவ நெஞ்சறிவதில்லை
படையொடு பதற வைக்கிறோம்
பால்வற்றி, நாவற்றவும் வைக்கிறோம்

மொட்டாய் முந்தானைக்குள்
முடங்கி மூச்சிடும்
சோதரிகள் - எம்
சோகைக் கண்ணுக்கெங்கே தெரியும்!

மானுடத்தை
மடுவெட்டி புதைத்திட்டோமென
மார் தட்டுவதே - எம்
மகத்தான வெற்றியாயிற்று

வீடு எரிப்பதும்
வீரம் பேசுவதும்
ஊரை பிரிப்பதும்
உதிரம் கொட்டுவதுமே எம் இலக்கு

மொட்டுக்களை கருகவிட்டு
முகர்ந்து கொள்வதிலொரு அலாதி
இதழ்களை கடலிலிட்டு
இதம் காணுவதிலொரு அமைதி
இன்னுமொரு ஹிட்லரென
மீண்டுமொரு முசொலினியென

உலகை ஆள பிறப்பெடுத்தோம்
உறுதியாய் பலமிழக்கிறோம்

குங்குமப் பொட்டுக்களை
கும்பலாய் அழிப்பதெம் விருப்பு
விதவை வியர்வையில்
விடியலில், இதம்காணலெம் உவப்பு

நெற்றிப் பொட்டிலொரு வெடி
நேர்மையாயிதை செய்தோம்
புன்னகைக்கக் கூட மறந்திட்டோம்
புதைகுழி வெட்டி நின்றதால்

சுடலைகளே எமக்கு
சுவர்க்கமாயிருந்தது
சூன்ய உலகில் - முடி
சூடிய வேந்தர் யாம்

வண்டுக் கூட்டமாய்
வடி கட்டி அலைகிறோம்
வாழ்வழிக்க - நல்
வசந்தமழிக்க

காலங்களை யாவும்
கண்ணி வெடிகளாய் ஆக்கினோம்
கனிவு நிறை மானிடரழிக்க
காசுக்கட்டுக்கள் சுமக்க

இறகு தட்டி பறக்கும் வானை
இரத்த முகில்களால் நிரப்பி வைத்தோம்
கண்ணீர் ஆற்றில்
கால் கழுவி வந்தோம்

இத்தனை நாளாய்
இருட்டு குகைக்குள் பதுங்கினோம்
இனிக்கும் தேனை சுவைக்க மறுத்தோம்
இடிகளாய் ஏதும் வெடிகள் இருக்குமென்று

எத்தனை பெண்களை ருசித்திட்டும்
ஏனெம் வெறி தீரவில்லை
ஏக்கங்கள் பல கொடுத்திட்டும்
ஏனிந்த இருட்டு வழி மூடவில்லை

மானுடனே! நாமழித்தது மனிதனையல்ல
மனசாட்சியையும் எம்மையுமல்லவா
அழித்தோம்
மண்ணில் எத்தனை சுகம் கூடியிருந்தது
மனம் திறந்தொருமுறை யோசனை
செய்வோம்

நாம் கொன்றுவிட்டது மனிதனையல்ல
நீங்கா செல்வமாகிய மனிதத்தை
நிதம் கனாக்காணும் மானிடத்தை
நிராசையாய் தோன்றும் மனித நேயத்தை

ஏனிந்த அவலம்
எதிரியெனும் வலைவீசி எம்
கண்ணிருப்பதால்
எல்லாமெனக்கென்ற மனமிருப்பதால்
ஏக இறையின் நாமம் மறப்பதால்

அற்பப் பணமே - எம்
அடங்கா வெறியைத் தூண்டிற்று
அதிகார ஆர்வமே - எம்
அகங்காரத்தை அரங்கேற்றியது.

காடு வெட்டி கட்டி வந்த
காசிம் பாவாவும்
தயிர் பெட்டி சுமந்து வந்த
தம்பிப்பிள்ளையும் எமக்கு வேறு வேறு

இயேசுவை தரிசித்த டேவிட்டும்
இவ்வழி வரும் பண்டாரவும்
விறகுக் காசிமும் - தயிர்
விற்றிடும் தம்பிப்பிள்ளையும்
ஒன்றென்பதை உணரவில்லையே!

இவற்றிலெவை மனித நேய மீறல்?
இவையெல்லாமேதான்
இதயத்திலிதை இனியாகிலும்
இருத்தி வைப்போம்

நாம் அழிக்க நினைப்பது
நம் சகோதரங்களையே
எம் உறவுகளையே
எம் நண்பர்களையே!

மானுடனே! - நாம் மனிதர்கள்
மாற்றானென்ற மனம் வேண்டா
மத இரத்தம் எங்கு விலைக்குண்டு?
மகிழ்வை தொலைத்ததொன்றே மீதம்

ஓலைக்குடிசையின்
ஓலம் கேட்கிறது இன்னும் - அது
கரை காணா கண்ணீர் மாலை - எம்மிடம்
கனிவாயில்லையே பூமாலை

இறந்தவை போகட்டும்
இருப்பவை நோக்குவோம்
இதழ்களைத் தடவி
இதம் மிக காண்போம்

மான் கூட்டமாய்
